[illegible]

[illegible]

[illegible]

[illegible]

Q7
N15
[illegible]

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

1915
MADRAS
207
3-15

# MIFTHA HUSSALAH
## FEE
# EILAHINNIKKAH.

## மிபுத்தாஹுஸ் ஸலாஹ்,
## பீ. யிலாஹின்னிக்காஹ்.

இஃது

மதராஸ் திருவல்லிக்கேணி

**மொ. அ. ஷாஹுல் ஹமீது**
**லெப்பை**

அவர்களால் அறபுத்தமிழில் அச்சிட்டிருந்ததைத்
தமிழில் வழுவற எழுதப்பட்டு

தமது
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர
சாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1915.

*Registered Copy Right.*

பிஸ்மில்லாஹி.

# முக்கிய கவனிப்பு.

## மதறுஸ் ஷொஹறுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில் தயாராயிருக்கும் புத்தகங்கள்.

நம்முடைய ஷாப்பில் பற்பல அறபுத்தமிழ் கிதாபுகளும், குர்ஆன்களும், ஜுஸு வகைறாக்களும், தமிழ் புத்தகங்களில் இஸ்லாமிய்யா மார்க்க ஒழுக்க புத்தகங்கள், பாட்டிப்பதப் புத்தகங்கள், ஞான புத்தகங்கள், கதை புத்தகங்கள், அகராதிகள், பாடசாலை புத்தகங்கள், வைத்திய புத்தகங்கள், சோதிடப் புத்தகங்கள், நாடகவிலாச புத்தகங்கள் முதலான பற்பல புத்தகங்களும், வாசனைத் திரவியங்களில் அத்தர், ஜவாது, புனுகு, வத்தி முதலானவைகளும் தயாராயிருக்கின்றன. தேவையான கனவான்கள் ரொக்கமாகவும், வி. பி. போஸ்ட் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். 8 அணா கிரயத்திற் குட்பட்டவைகளை வி. பி. போஸ்டில் அனுப்பப்படமாட்டாது. இஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

கேட்லாக் தேவையானவர்களுக்கு இனாமாயனுப்பிக் கொடுக்கப்படும். எல்லா விஷயமும் அதில் விரிவாய் பார்த்துக்கொள்ளலாம்.

இங்ஙனம்:

எம். எ. ஷொஹறுல் ஹமீது அண்ட் ஸன்ஸ்,
ஷொஹறுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 93, பள்ளப்பன் தெருவு,
திருவல்லிக்கேணி,
மதறாஸ்.

பிஸ்மில்லாஹி.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

(*)

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் இந்த **மிபுத்தாஹுல்ஸலாத்து -பீ- மிலாதில்னபிக்காத்து** கிதாப் யாவருக்கும் உபயோகமாகும்பொருட்டு நம்மால் எழுதப்பட்டு நமது ஷொஹறுல் ஹமீதிய்யா பிரஸ்ஸில் பதிபிக்கப்பட்டுள்ளது. இக்கிதாபை என் அனுமதியின்றி எவரேனும் முழுதுமாவது அல்லது சிலதையாவது எவ்விதப் பாஷையிலும் அச்சிடக்கூடாதபடி கவர்ன்மெண்டு சட்டப்படி (ரிஜிஸ்டர் காப்பிரைட்) செய்யப் பட்டிருக்கின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| இதன் விலை | ரூபா | 1 | 0 | 0 |
| வி. பி. போஸ்டு சார்ஜ் | ரூபா | 0 | 3 | 0 |

வியாபாரிகளின விலை பிரத்தியேகம்.

ஒரே முறை 5 கிதாபு வாங்குபவர்களுக்கு 1-கிதாபு கமிஷன் கொடுக்கப்படும்.

ஷை இக்கிதாபு தமிழிலும், அறபுத்தமிழிலும் இருப்பதால் தமிழென்றும், அறபுத்தமிழென்றும் பிரித்தெழுதுவதுடன் தங்கள் விலாசத்தையும் தெளிவாய் எழுதவேண்டியது.

இங்ஙனம்:

மௌ. அ. ஷொஹறுல் ஹமீது லெப்பை,
ஷொஹறுல் ஹமீதிய்யா அச்சியந்திரசாலை,
நெ. 93, பள்ளப்பன் தெருவு, திருவல்லிக்கேணி, மதறாஸ்.

## நிறையளவுகள்.

உளுந்து 2-க்குக் குன்றி 1, குன்றி 4-க்குப் பணஎடை 1.
குன்றி 8-க்கு மாஷா 1, குன்றி 32-க்கு விராகனெடை 1.
குன்றி 40-க்கு களஞ்சி 1, பணஎடை 2-க்கு மாஷா 1.
மாஷா 4-க்கு விராகனெடை 1, விராகனெடை 1¼-க்குக் களஞ்சி 1
களஞ்சி 8-க்குப் பலம் 1, தோலா 3-க்குப் பலம் 1.
பலம் 8-க்கு சேர் 1, பலம் 40-க்கு வீசை 1.
வீசை 8-க்கு மணங்கு 1, மணங்கு 20-க்கு பாரம் 1.

தோலா என்று சொல்வது 1 ரூபாயெடை.

பலம் 1-க்கு தோலா 3, பலம் 1-க்கு களஞ்சி 8.
பலம் 1-க்கு விராகனெடை 10, பலம் 1-க்கு மாஷா 40.
பலம் 1-க்கு பணஎடை 80, பலம் 1-க்குக் குன்றிஎடை 320.
பலம் 5-க்கு ஆழாக்கு 1, பலம் 10-க்கு உழக்கு 1.
ஆழாக்கு 8-க்குப்படி 1, உழக்கு 4-க்குப் படி 1.
படி 1-க்கு வீசை 1, படி 8-க்குமரக்கால் 1.
களஞ்சி 1-க்கு காலே அரைக்கால் ரூபாஎடை, விராகன் 1-க்கு காலே மாகாணி ரூபாஎடை.
மாஷா 1-க்கு 1⅜மா ரூபாஎடை, பணஎடை 1-க்கு ¾ மாரூபாஎடை.
குன்றி 1-க்கு உளுந்தெடை 2, குன்றி என்றால் சிகப்புக் குன்றிமணி

(இங்கிலீஷ் கணக்கு)

கிரேன் 20-க்கு ஸ்குரூப் 1, ஸ்குரூப் 3-க்கு திராம் 1.
திராம் 8-க்கு அவுன்சு 1. அவுன்சு 16-க்கு பவுன் 1.
பவுன் 1-க்கு ராத்தல் 1, பவுன் மூன்றே அரைக்காலுக்கு வீசை 1,

(சுமார்)

1 கிரேன் 1 குன்றிஎடை அல்லது 2 நெல்எடை.
1 திராம் 1 விராகனெடை அல்லது 2 தம்படி எடை.
1 அவுன்சு முக்காலே அரைக்கால் பலமெடை அல்லது இரண்டரையரைக்கால் ரூபாயெடை.
1 பவுன் 13 பலமெடை அல்லது 39 ரூபாயெடை.

பிஸ்மில்லாஹி.

# மிபுத்தார்ஹு-ஸ்ஸலாஹ்-பீ. யிலா ஹின்னிக்காஹ். கிதாபின் அட்டவணை.


| பக்கம். | விஷயங்கள். | பக்கம். | விஷயங்கள். |
|---|---|---|---|
| 1 | முகவுரை | 32 | பெண்மாப்பிள்ளையில் நின்றும் ஒருவருக்கு மற்றவர் பேரிலிருக்கும் ஹக்கு |
| 3 | நிக்காஹின் வரிசைகள் | 34 | பாத்திமா நாயகத்தை அலிரலியல்லாஹு அன்ஹு பெண்பேசிய செய்தி |
| 5 | நிக்காஹை விடும் கெடுதி | 36 | பாத்திமா நாயகத்தை அப்துர்றஹ்மான் பெண் பேசிய செய்தி |
| 7 | நிக்காஹுக்கு சிறப்பான பெண்கள் | 37 | பாத்திமா நாயகத்தின் கலியாணத்தைப் பற்றியுள்ளது |
| 11 | புகழப்பட்ட அழகையுடைய பெண்கள் | 39 | பாத்திமா நாயகத்திற்கு சொர்க்கத்தினின்றும் பட்டுப்புடவை ஹதியா வந்தது |
| 13 | நிக்காஹுக்குப்பின் கைசேதம் வருந்தும் பெண்கள் | 41 | பாத்திமா நாயகத்தின் சீதனத்தைப் பற்றியது |
| 16 | நிக்காஹுக்கு மக்ரூஹான பெண்கள் | 43 | புருஷன் பெண்ணுக்கிடையில் நடந்த செய்திகளை வெளியில் பேசும் கெடுதிகள். |
| 17 | பேரின்ப சிற்றின்பத்தைப் பற்றியது | 44 | பெண்பிள்ளைகள் வீட்டைவிட்டும் வெளிப் புறப்படுகிறதை விலக்குகிறது. |
| 19 | நிக்காஹுக்கு விதியானவனையும் ஒழுக்கத்தையும் பற்றி யுள்ளது | 46 | இல்முல்கியாபா, இல்முல் பறுசத்தின் பயான். |
| 21 | நிக்காஹை பிரசித்தஞ் செய்வதும், நாட்களும் | | |
| 22 | வலீமா என்னும் கலியாண விருந்து | | |
| 23 | பெண்சாதிக்கு நபகாகிஸ்வத்து | | |
| 25 | பெண்சாதிமார்களோடு கலந்துறவாடுவது | | |
| 28 | நபிநாயகம் பெண்சாதிமார்களுடன் மஹப்பத்தாயிருந்தது | | |

# அட்டவணை.


| பக்கம். | விஷயங்கள். |
|---|---|
| 47 | தலைநெற்றியின் குறிகள். |
| 48 | புருவம் கண்ணின் குறிகள் |
| 49 | காது, மூக்கின் குறிகள் |
| 50 | உதடு, வாய் பல்களின் குறி |
| 51 | நாவு, அண்ணம், கீழ்வாய், கழுத்து, முகத்தின் குறிகள் |
| ,, | தோள், அக்குள், பின்னங்கை, மார்பு இவைகளின் குறிகள் |
| 52 | முலை, வயறு, தொப்புள், முதுகு இவைகளின் குறிகள் |
| 53 | நிறம், உடல், ரோமம் இவைகளின் குறிகள் |
| 54 | குரல், சிரிப்பு, சரீரபரிமாணம், நடை இவைகளின் குறிகள் |
| 55 | உள்ளங்கை, விரல், நகம் இவைகளின் குறிகள் |
| 56 | தொடை, கெண்டைக்கால், கணுக்கால், குதிக்கால் இவைகளின் குறிகள் |
| 57 | கால்படம், உள்ளங்கால், விரல்களின் குறிகள் |
| 58 | பலவிதக் குறிகள் |
| 60 | முதல் வகுப்பு பெண்லக்ஷணம் |
| 61 | 2-ம் வகுப்பு |
| 62 | 3-ம் வகுப்பு |
| ,, | 4-ம் வகுப்பு |
| 63 | முதல் வகுப்பு ஆண் லக்ஷணம் |
| ,, | 2-ம் வகுப்பு |
| 64 | 3-ம் வகுப்பு |
| ,, | 4-ம் வகுப்பு |

| பக்கம். | விஷயங்கள். |
|---|---|
| 65 | ஷருபத்துடைய பெண்களையும் கோபத்துடைய பெண்களையும் வம்புத்தனமான பெண்களையும் பற்றிக் கூறுவது |
| 67 | ஜாதி பொருத்தங்கள் |
| 68 | புருஷன் பெண்சாதியுடன் கலந்துறவாடுவதின் முஸ்த்தஹப் பாத்துகள் |
| 69 | ஷை மக்ரூஹ்கள் |
| 70 | ஆண்பெண்ணுடைய விகற்பம் |
| 71 | புருஷன் பெண்ணுக்கிடையில் வேண்டுமான கருமங்களும், விலக்கலான கருமங்களும் |
| 72 | ஷஹ்வத்துண்டான நேரம், ஜிமாஉ விடும் கெடுதி |
| ,, | வயதுக்குப் போதுமான வரை ஜிமாயின் திட்டம் |
| 74 | ஜிமாயின் பாயிதாக்கள் |
| 75 | பெண் பிள்ளையின் வயதறிந்து ஜிமாவு செய்யும் திட்டம் |
| 76 | ஜிமாஉ விடுவதின் வத்துகளும, மிகுப்பதால் வரும் கெடுதிகளும் |
| 77 | புருஷன் பெண்ணுக்கிடையில் மடைபடியும் விதம் |
| 79 | ஹமலுண்டாவதற்கு உதவியான செயல்களும மருந்துகளும் |
| 81 | புருஷன் நினைத்த பெண்ணை விவாகஞ் செய்கிறதற்குள்ள இஸ்முகள் |

| பக்கம். | விஷயங்கள். |
|---|---|
| 82 | பெண்பிள்ளை தான் நினைத்த புருடனை விவாகஞ் செய்கிறதற்குள்ள இஸ்முகள் |
| 83 | விவாகத்தைத் தடங்கல் செய்வதற்கும் அத்தடங்கலை முறிப்பதற்குமுள்ள இஸ்முகள் |
| 84 | புருஷன் பெண்சாதிக்கிடையில் மக்பத்தை உண்டாக்கும் இஸ்முகள் |
| 88 | புருஷன் பெண்சாதி பேரில் மக்பத் வைப்பதற்குள்ள இஸ்முகள் |
| 89 | மனைவியானவள் அன்னியனை இச்சிக்காதிருக்கும்படி செய்யும் இஸ்முகள் |
| 93 | ஆண் ஆனாலும் பெண்ணானாலும் தான் செய்த செயலை நித்திரையில் தானாக சொல்லுகிறதற்குள்ள இஸ்முகள் |
| 95 | ஆண்பிள்ளைகள் நாக்கத்து பெறுவதற்குள்ள இஸ்முகள் |
| 97 | கெர்ப்பம் உண்டாவதற்குள்ள இஸ்முகள் |
| 102 | கர்ப்பமானவளையும் சிசுவையும்காப்பதற்குள்ள இஸ்முகள் |
| 106 | பேறுகாலம் சலாமத்தாகிறதற்கும் எளிதாகிறதற்குமுள்ள இஸ்முகள் |
| 110 | ஆண்பிள்ளை வேண்டியவர்களுக்குள்ள இஸ்முகளும் சிசு ஆண் பெண்ணாவதின் காரணங்களும் |
| 113 | அமலுடைய நாளின் கணக்கும், ஒரு சூலில் பெறும் பிள்ளையின் கணக்கும் |

| பக்கம். | விஷயங்கள். |
|---|---|
| 114 | நபிநாயகம் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு செய்த வசிய்யத்து |
| 118 | புருடர் பெண்ணுக்கிடையில் வரும் பிணக்கத்தின்பாடம் |
| 119 | பெண்ணுக்கு வழிப்படாதிருக்கல் |
| 121 | தலாக்கின் கெடுதி |
| 122 | ஹைளுநிபாசின் விபரம் |
| 123 | முழுக்கைவிதியாக்குங்க்ருமம் |
| 124 | முழுக்கிலுண்டான பறுலு முஸ்த்தஹபாத்து |
| 125 | ஜனாபத்துக்குளியின் வரிசை |
| 127 | ஜனாபத்துக்குளியை தொழுகையுடைய வக்த்தைவிட்டும் பிற்படுத்துகிறதிலுண்டான வேதனை |
| 130 | ஜினாவுடைய கெடுதி |
| 132 | கைகண்ணுடைய ஜினாவின் கெடுதி |
| 134 | சுக்கிலத்தை நஷ்டப்படுத்துகிற வியாதிகள் |
| ,, | மேகரோகம், பிரமேகரோகத்தின் குணமும், நிவர்த்தியும் |
| 136 | முக்கிய கவனிப்பு |
| 137 | லெகுபேதி அவிழ்தங்கள் |
| ,, | நீர்கடுப்பு எரிவிற்கு நிவர்த்தி |
| 138 | இரத்தம்போல நீரிறங்குவதற்கு நிவர்த்தி |
| ,, | வெள்ளை நிவர்த்தின் சூரணம், லேகியம் |
| 140 | வெள்ளைக் கண்டவர்களின் மூத்திரசுருக்கிற்கு நிவர்த்தி |
| 141 | பிரமேக வாதரோகத்தின் குணமும், நிவர்த்தியும் |

## அட்டவணை.


| பக்கம். | விஷயங்கள். | பக்கம். | விஷயங்கள். |
|---|---|---|---|
| 144 | கைகால் பிடிப்பு, முடக்கு வாதத்திற்குப் பற்று | | மலடு இவைகளின் குணமும் நிவர்த்தியும் |
| 145 | பிரமேகத்திரகுமிரோகத்தின் குணமும், நிவர்த்தியும் | 179 | கோஷத்தின் மெலிவு தளர்ச்சிக்குப் பூசும் முலாம்கள் |
| 147 | அரையாப்புகட்டி கரைவதற்கு பற்று | 182 | பெண்களுக்கு சூதகக் கட்டுண்டாவதின் குணம் |
| 148 | அரையாப்பு கட்டி பழுத்துடைவதற்கு | 183 | 30 வயதுவரை ருதுவாகாமலுண்டாகும் சூதகக்கட்டின் காரணமும், குணமும், நிவர்த்தியும் |
| 149 | உடைந்த அரையாப்பு ரணத்தை ஆற்றும் களிம்பு | 186 | சூட்டினா லுண்டாகும் சூதகக்கட்டு, மலடு இவைகளின் குணமும் நிவர்த்தியும் |
| 150 | மேகவிரணரோகத்தின்குணமும், நிவர்த்தியும் | 188 | குளிர்ச்சியா லுண்டாகும் சூதகக்கட்டு, மலடு இவைகளின் குணமும், நிவர்த்தியும் |
| 153 | மேகப்படை, மேகப்புண்வகைக்குமேல் பூசுங்களிம்பு | 189 | வாதத்தாலுண்டாகும் சூதகம், மலடு இவைகளின் குணமும், நிவர்த்தியும் |
| 154 | பலவீனத்தினுண்டாகும் இந்திரியநஷ்டங்களின் காரணமும் குணமும் | 191 | பித்தத்தா லுண்டாகும் சூதகம், மலடு இவைகளின் குணமும், நிவர்த்தியும். |
| 155 | ஷை இல்லத்துகளுக்குத் தாதுவிர்த்தி லேகியம் | 193 | சிலேத்துமத்தா லுண்டாகும் சூதகம், மலடு இவைகளின் குணமும் நிவர்த்தியும் |
| 160 | முக்கிய கவனிப்பு | 194 | பெரும்பாடு ரோகத்தின் குணம் |
| 161 | அஜீரணத்தா லுண்டாகும் தாதுநஷ்டங்களின் காரணமும் குணமும் | 195 | ஷை வியாதிக்கு நிவர்த்தி |
| 162 | ஷை வியாதிகளுக்குத் தாது புஷ்டி முறைகள் | 197 | பெண்பிள்ளைகள் மலடாய் விடும் காரணம் |
| 168 | மூத்திர பிண்டங்களின் சீர்கேட்டா லுண்டாகும் தாது நஷ்டங்களின் காரணமும், குணமும், நிவர்த்தியும் | 198 | ஷை வியாதிக்கு அடையாளமும், பரிகாரமும் |
| 170 | சூடு மிகுப்பதா லுண்டாகும் தாதுநஷ்டம், மலடு இவைகளின் குணமும், நிவர்த்தியும் | 200 | வைத்திய பரிபாஷைகள் |
| 174 | குளிர்ச்சி மிகுப்பதா லுண்டாகும் தாது நஷ்டம், | | |


அட்டவணை முற்றிற்று.

யாபத்தாஹ்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

# மிபுத்தாஹுஸ் ஸலாஹ், பீ. யீலாஹின் னிகாஹ்.

## முகவுரை.

### ஆண்டவன் துதி.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் வல் ஆகிபத்து லில் முத்தகீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றஸூலிஹி ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்.

### அம்மாபஃது.

எல்லாப்புகழும் அல்லாகுத் தஆலாவுக்கே உரியது. அவன் எப்படிப்பட்ட கிருபையுடைய ஆண்டவனென்றால், நிகாஹை ஹலாலாக்கிவைத்தவன், ஸினாவை ஹறாமாக்கிவைத்தவன். புருடன் மனைவியிருவரும் கலந்துறவாடியிருப்பதை ஸாலிஹ்தனத்திற்குத் திறவுகோலாகவும், ஜெயம் பெறுவதற்கு அநுகூலமாகவும் ஆக்கினவன்.

இன்னும் ஸலவாத்தில் மிகவும் வருமையானதும், சலாமில் மிகவும் பூரணமானதும், நமக்கு நாயகமாகிய இஸ்லாமுக்குச் சுத்தமாகிய ஷபீஇல் முதுனிபீன் வஹபீபிறப்பில் ஆலமீன் ஸையிதினா முஹம்மதின் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பேரில் உண்டாவதாகவும். அவர்கள் "நீங்கள் மிகுந்து நிகாஹ்செய்யுங்கள் மிகுந்து பிள்ளை பெறுங்கள். ஏனெனில், நான் திட்டமாக கியாமத்து நாளையில் உங்களைப்பற்றி மற்ற உம்மத்துகளோடு பெருமை பேசுவேன். கட்டி விழுந்த பிள்ளையைக் கொண்டாலும் சரி" என்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அப்படிப்பட்ட கருணையாளருடைய அப்புரவான தோத்திரத்தார்கள் பேரிலும், அவர்களைத் தங்கள் ஹயாத்தில் சந்தித்த சஹாபாக்கள் பேரிலும் சலவாத்தும், ஸலாமுமுண்டாவதாகவும்.

## பின்பு

களில் மிகவும் பகிறுயவனும், பூலோகத்திலுள்ளவர் மிகவும் அஷணிப்பானவனுமாகிய ஐதுரூசுடைய குமாரனு ய ஷாஹுல் ஹமீது என்பவன் சொல்லுகிறான், சகோதரர்களிற் நிகாஹுடைய இல்மை அரபுத்தமிழ் பாஷையில் விவரிப்பதில் தேவையான பொழுது நான் கைறின்பேரிலறிவிக்கிறவன். அதைச்செய்தவனைப் போலாயிருக்கும் என்ற ஹதீதுக்கு வழிப்பட்டவனாகவும், உபகாரம் செய்கிற நாயனுடைய றஹ்மத்திலும் அவனுடைய வருஷையிலும் புகுதுகிறதை ஆதரவு வைத்தவனாகவும் இருக்கிறஹாலில்வ இப்படியானவர்களாகிய சங்கைவான்களான பெரிய பெரிய ஆண்பிள்ளைச் சிங்கங்களுக்குள்ள வனென்றுதல் பிடிக்கப்பட்ட முஃதபறான கித்தாபுகளில் நின்றும் சேகரிக்கப்பட்டு இக்கிதாபு எழுதப்பட்டது.

அதன் நாமமாவது

மிபுத்தாஹுஸ்ஸலாஹ் பீ ஈலாஹின்னிகாஹ்.

(நிகாஹை விவரிப்பதில் சாலிஹ் தனத்துக்குத்திறவுகோல்) என்று பெயர் வைத்து அரபுத்தமிழில் அச்சடித்திருந்த கிதாபை, அரபுத்தமிழ் அறியாத முஸ்லிமான கனவான்கள் சுத்தத்தமிழிலும் அச்சிடும்படி கேட்டுக்கொண்டபடியால் நாம் இதில் முயற்சியெடுத்துக்கொள்ள நேர்ந்தது. இதில் ஏதேனும் சொற்பிழையெழுத்துப் பிழைகளிருப்பின், அதைக்கவனிப்போர் அப்பிழையைத்திருத்துவதோடு, அதற்காக என்னை மன்னிக்கும்படி அல்லாகுத் தஆலாவிடம் துஆ கேட்கும்படி பிரார்த்திக்கிறோம். இந்தக்கிதாபால் நமக்கும், நமது நேசர்களான முஃமினானவர்கள் அனைவர்க்கும் பிரயோஜனமுண்டாகச்செய்யும்படி அல்லாகுத் தஆலாவிடத்தும் சிறப்பாகிய அவனுடைய நபிறசூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களிடத்தும் வேண்டிக்கொள்ளுகிறோம். நமக்கு வக்கீலாகிய நாயகன் தன்னுடைய திருவுளப்பொருத்தத்தை நம்மனைவர்க்கும் தந்தருள்வானாகவும். ஆமீன் ஆமீன்.



# 1-ம் பஸல்.

## இது நிகாஹினுடைய வருஷையைப் பற்றி கூறும்.

அல்லாஹு சுபுஹானஹு வதஆலா குர்ஆனிலே திருவுளம் பற்றியிருக்கிறான். பெண்களில் நின்றும் பிரியமானவர்களை இரண்டிரண்டு, மும்மூன்று, நவ்வாலு முடித்துக்கொள்ளுங்களென்றும், இன்னும், நாம் பல றசூல்மார்களையும் அனுப்பியிருந்தோம், அவர்களுக்குப் பெண்சாதிமார்களும், பிள்ளைகளும் தந்திருந்தோமென்றும் திருவுளம் பற்றினன்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளம் பற்றியிருக்கிறார்கள். ஆராகிலுமொருவன் நிகாஹ் செய்தானே யானால் மார்க்கத்தில் மூன்றிலிருபங்கை பிறுத்தான். சொச்சத்தில் அவன் அல்லாஹுத் தஆலாவைத் தக்வாச் செய்து கொள்ளவுமென்றும். நீங்கள் கலியாண முடித்துப் பெற்றுப் பெருகுங்கள். நான் கியாமத்திலுங்களைப்பற்றி மற்ற உம்மத்துகளோடு பெருமை பேசுவேன். கட்டிவிழுந்த பிள்ளையைச் சொண்டாலுஞ் சரியென்று திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளம் பற்றினார்கள். ஓ வாலிபர்களே! உங்களில் யாராகிலுமொருவன ஜிமாவுக்கு சக்தி பெற்றால், அவன் கலியாண முடித்துக்கொள்ளட்டும். கலியாண முடிக்கிறது அபத்துக்கு மெத்த காவலாகவும், பார்வையை மெத்த மூடுகிறதாகவுமிருக்கும். அதில் தரிக்கும் ஒவ்வொருபிள்ளையும் தானியாகிலும், அதிலுண்டானவன் தானிலும் எனக்கு மெத்த உவப்பாயிருக்குமென்று திருவுளமானார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள். ஆராகிலுமொருவன் என்னுடைய மார்க்கத்தை உவந்தால் அவன் கலியாணம் முடிக்கவும். கலியாணம் முடிப்பது என்னுடைய மார்க்கத்தில் நின்றுமாயிருக்கும். கலியாணம் முடிக்காதவனுடைய தொழுகையைவிட கலியாணம் முடித்தவனுடைய தொழுகை நாற்பது தறஜா ஏற்றமாயிருக்குமென்று திருவுளமானார்கள்.

இன்னும் யாராகிலுமொருவன் வாலிபத்தில் கலியாணம் முடித்தால் அவனுடைய ஷைத்தான், "எனக்கென்னக் கேடு, இந்த வாலிபன் என்னைவிட்டும் தீனைக் காத்துக்கொண்டானே" என்று சப்தமிடுவானென்று திருவுளம் பற்றினார்கள்.

இப்னு அப்பாஸ் றளியல்லாஹு அன்ஹுமா சொன்னார்கள், "கலியாணம் முடியுங்கள். கலியாணத்துடன் ஒருநாள் ஆயிரம் வருடத்து இபாதத்திலும் ஏற்றமாயிருக்கும்" என்று சொன்னார்கள்.

இப்னு மஸ்ஊது றளியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், என்னுடைய வாழ்நாளில் நின்றும், பத்து நாளொழிய பாக்கியில்லையென்றிருந்தாலும், நான் கலியாணமில்லாமல் அல்லாவைச் சந்திக்கிறதைக்காண முடித்துச் சந்திக்கிறதைத் தான் உவப்பேனென்று சொன்னார்கள்.

இப்றுஹீம் முப்னு அத்ஹம் றளியல்லாஹு அன்ஹுவை ஒரு மனிதன் காட்டிற் கண்டு "உமக்கே சோபனம், கலியாணம் முடியாமல் அல்லாஹுத் தஆலாவுக்கு இபாதத்துச் செய்கிறதைக் கொண்டு பறுக்காயிட்டீர் என்று சொன்னான். அவர்கள் சொன்னார்கள், "நீ உன்னுடைய பிள்ளைக்குட்டிகளுடைய சபபினால் ஒரு விடுத்தம் துக்கப்படுவாயே அதுவாகிறது, நான் இப்போ இருக்கிறேனே அதையெல்லாம் விட மெத்த வருசையாயிருக்கும்" என்று சொன்னார்கள். நீங்கள் ஏன் கலியாணம் முடிக்கவில்லை என்று கேட்கப்பட்டதற்கு "பெண்ணாளில் ஹாஜத்துமில்லை, என்



னுடைய நப்ஸைக்கொண்டு பெண்பிள்ளைகளை மருட்ட நாடவுமில்லை" யென்று சொன்னார்கள்.

### றிவாயத்து.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் மேலேக்கி பூமியிலிறங்கிக் கலியாணம் முடித்து பிள்ளையும் பெறுவார்களென்றும் எஹ்யா அலைஹிஸ்ஸலாம் நிகாஹுடைய வருசையைப் பெறுவதற்காகவும், சுன்னத்தைத் தரிப்படுத்துவதற்காகவும் கலியாணம் முடித்திருந்தார்கள். ஜிமாவு செய்யவில்லை. என்றும் வந்திருக்கிறது.

### பாயிதா.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள். ஒரு பெண்பிள்ளையை ஒரு ஆண்பிள்ளைக்குக் கலியாணமுடித்து அவர்களுக்கிடையில் சேர்த்துவிட ஒருவன் நடந்தால், அவனுக்கு ஆண்டவன் கியாமத்திற் ஹூறுல் ஈன்களில் நின்றும் ஆயிரம் பெண்களைக் கலியாணம் முடித்துக் கொடுப்பான். ஒவ்வொரு பெண்ணும் முத்து மாணிக்க மாளிகையிலிருப்பாள். இன்னும் அந்தக் கருமத்தில் நடந்தவனுக்கு, அல்லது, அதற்காக ஒரு பேச்சுப் பேசினவனுக்கு ஒவ்வொரு அடிக்கும் சொல்லுக்கும் இரவெல்லாம் வணக்கமும், பகலெல்லாம் நோன்புமாகவுமிருந்த ஒரு வருடத்து இபாதத்து எழுதப்படுமென்று திருவுளம் பற்றினார்கள்.

## 2-ம் பஸ்ல்.

### இது நிகாஹை விடுவதாலுண்டாகும் கெடுதியைப்பற்றி கூறும்.

அல்லாஹுத் தஆலா குறுஆனிலே திருவுளம் பற்றியிருக்கிறான், பெண்பிள்ளைகளை அவர்கள் புருஷர்களோடு விவாகஞ் செய்து கொள்ளுவதைத் தடுத்துவிடவேண்டாம் என்று.

### ஹதீது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள், நிகாஹாகிறது என்னுடைய சுன்னத்தாயிருக்கும், ஆராகிலு

மொருவன் என்னுடைய சுன்னத்தை விட்டும் பிறக்கணித்தால் திட்டமாக என்னை விட்டும் பிறக்கணித்தானென்று.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஒரு அஸ்ஹாபியிடத்தில் உமக்குப் பெண்ணுண்டா வென்று கேட்டார்கள். அதற்கவர் இல்லை யென்றார். பணமுண்டா வென்றார்கள். ஓமென்றார். "அப்போது நீர் ஷைத்தானுடைய உடன்பிறப்பில் நின்றுமாயிருக்கும். நீர் நஸாறாக்களுடைய கூட்டத்திலிருப்பீரா கில் அவர்களுடைய பாதிரிமாரில் சேர்ந்தவராயிருப்பீர். என்னுடைய மார்க்கத்தில் நின்றுமுள்ளது கலியாண முடிப்பதா யிருக்கும்" என்று திருவுளமானார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள், ஆராகிலு மொருவன் பிள்ளைக்குட்டி உண்டாய் விடு மென்று பயந்து கலியாண முடிப்பதை விட்டால், அவன் நம்மில் நின்று முண்டானவனல்ல. அவனை அல்லாஹுத் தஆலா இரண்டு மலக்கைக் கொண்டு சாட்டுவான். அவர், அவனுடைய இரு புருவத்துக்கிடையில் இவன் அல்லாவுடைய சுன்னத்தைப் பழுதாக்கினவனாகஇருக்கும். ஆகையால், நிஸ்கல் தரித்திரத்தைக்கொண்டு சோபனம் பெற்றுக்கொள்ளென்று எழுதி விடுவாரென்று திருவுளம் பற்றினார்கள்.

### ஹிக்காயத்து.

பிஷ்றுல் ஹாபீறஹியல்லாஹு அன்ஹுவை மனாமில் கண்ட ஒருவன் அல்லாஹுத் தஆலா உங்களை என்ன செய்தானென்று கேட்டதற்கு "என்னுடைய மாளிகை கலியாண முடித்தவர்களுடைய மாளிகைக்குக் கீழிருக்குதென்று சொன்னார்கள்" என்றார்.

### ஹிக்காயத்து.

சாலிஹீங்களில் ஒருவருண்டா யிருந்தார்கள். அவர்கள் கலியாண முடிக்கமாட்டேனென்றிருந்தார்கள். ஒருநாள் நித்திரையிலிருந்து விழித்து கலியாண முடித்துத் தாருங்கள், கலியாண முடித்துத் தாருங்களென்று பதறிச் சொன்னார்கள். கலி



யாணை முடித்துக் கொடுத்துச் சங்கதியைக் கேட்டதற்கு "நியாமமுடிய கனவு கண்டேன். அப்போது பஹுஷரில் சகலரும் கூடியிருக்கிறார்கள். எனக்குத் தாகம் வந்து கழுத்து முறிய முடிக்கொண்டது. குழந்தைகள் தங்கத்தாம்பாளங்களும், செண்டிகளும், பிரகாசமான துணிகளும் கொண்டு அந்தக் கூட்டத்தில் நுழைந்து பார்த்து பார்த்துத் தண்ணீர் கொடுக்கிறார்கள். நானும் கைநீட்டி தண்ணீர் கேட்டதற்கு எங்களில் உமது மக்கள் யாருமில்லை. நாங்கள் எங்கள் தகப்பன்மார்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறோமென்று சொன்னார்கள். நீங்களாரென்று கேட்டதற்கு, முஸ்லீமானவர்களுடைய குழந்தைகளென்று சொன்னார்கள்" என்று கூறினார்.

## 3-ம் பஸல்.

### இது நிகாஹுக்கு சிறப்பான பெண்களைப் பற்றி கூறுவது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள், கன்னிஸ்திரிகளைக் கலியாண முடியுங்கள், அவர்கள் எப்படிக்கொத்த கன்னிஸ்திரீயானால் வாய்களால் மணமானவர்கள், குவளைகளால் வெடிப்பானவர்கள், பிள்ளையால் அதிகமானவர்கள், கொஞ்சத்தைக்கொண்டு திருப்தி யடைகிறவர்கள் என்று.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள். நாலு கருமத்திற்காக ஒரு பெண் கலியாண முடிக்கப் படும். அதாவது அவளுடைய பொருளிற்காகவும், அவளுடைய குல கோத்திரத்திற்காகவும், அவளுடைய அழகு வடிவிற்காகவும், அவளுடைய தீனுக்காகவும். ஆகையால் நீ தீனுடையவளைக் கொண்டு ஜெயம் பெற்றுக்கொள் என்று திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள். ஒரு முஃமீன அல்லாவுடைய தக்வாவுக்குப் பின்னாலே பாயிதாத் தேடுகிறதில்லை. சாலிஹான பெண்ணைக் காணைகளனதை எந்தப் பெண்ணானால் ஏவினால் வழிப்படுவாள், பார்த்

தால் சந்தோஷப்படுவாள், புருஷன் அவள்பேரில் சத்தியஞ்செய்தால் நிறைவேற்றுவாள், அவன் மறைந்தால் தன்னையும், அவனுடைய முதலையும் பேணுவாளே அந்தப் பெண்ணென்று சொன்னார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம்பற்றினார்கள், புருஷன்மீது அதிக உவப்பாயிருப்பாளே, அதிக பிள்ளை பெறுவாளே அவளைக் கலியாண முடியுங்களென்று திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள். அழகான மலடியினும், அதிக பிள்ளை பெறும் அழகற்றவள் நன்றாயிருக்குமென்றும், இன்னும் துனியாவுடைய இன்பசுகத்தில் மேலானது சாலிஹான பெண்ணாயிருக்குமென்றும் திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள், ஆராகிலுமொருவன் துப்புரவானவனாக அல்லாஹுத்தஆலாவைச் சந்திக்க நாடினால், அவன் நாட்டாமகளைக் கலியாண முடிக்கவுமென்று திருவுளமானார்கள். ஜாபிர் றலியல்லாஹு அன்ஹு கன்னியழிந்த பெண்ணைக் கலியாண முடித்தபோது, நீர் கன்னியஸ்திரீயோடு கூடிவிளையாட வேண்டாமாவென்று சொன்னார்கள்.

இன்னும் அலி றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள் கருப்பினைத்தலாக்கு சொன்னால் அந்த மஹர் நான் கொடுப்பே னென்றார்கள். கருத்தாவது வெள்ளைப்பெண்ணை முடியென்பதாம்.

## ரிவாயத்து.

ஸையிதினா மூசல்காளிம் றலியல்லாஹு அன்ஹு நைசாபூருக்குப் போயிருந்தார்கள். அவர்கள் கொஞ்சங் கறுப்பாயிருப்பார்கள். ஒருநாள் அவர்கள் ஹம்மாமுக்குப்போனார்கள். ஹம்மாம்காரன், தண்ணீர்முதலியதை ஹாஸிறாக்கிவைத்துவிட்டு, அவனொரு ஹாஜத்திற் போயிருந்தான். அதனிடையில் ஒருவன் ஹம்மா



முக்கு வந்தவனிவர்களைப் பார்த்துவிட்டு தனக்குமேற் தேய்க்கச் சொன்னான். நாயகம் தேய்த்துக்கொண்டிருக்கையில் ஹம்மாமுக்காரன் வந்து நாயகம்மேற் தேய்த்துக்கொண் டிருக்கிறதைக் கண்டு பதறி அவனை ஏசினான். அவன் பதறி நாயகத்துடைய காலில் விழுந்தான். அப்போது நாயகமவர்கள் சொன்னார்கள், அவனை வம்பித்தென்னசெய்ய? நம்முடைய நுத்துபாவை கருத்த வெள்ளாட்டியில் வைத்தாரே அவரைச் சொல்லவேண்டு மென்று சொன்னார்கள்.

இன்னும் ஹுகமாக்களில் ஒருவர் சொன்னார்கள், பிள்ளை ஏழுவயது மட்டில் றைஹான், ஒன்பது வயது மட்டில் காதிம், பதினைந்து வயது மட்டில் மந்திரி, அதற்கப்பால் தகப்பனுக்குப் பகைவன் அல்லது தோழனென்று சொன்னார்கள்.

ஹஸன் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அல்லாவை பயந்தவனுக்கு மக்களைக் கொடுங்கள், உவந்தால் சங்கை கொடுப்பான், கோபித்தால் அநியாயஞ் செய்ய மாட்டான். ஹுகமாக்கள் சொன்னார்கள், வாகனத்தில் சுகண்டி ஏறப்படாதது, முத்தில் அழகு புதைப்போடப் படாதென்று சொன்னார்கள், அதற்கொரு கன்னியழிந்த பெண் ஜவாபு சொன்னாள், வாகனமாகிறது, மூக்கணத்தால் வசக்கியேருமளவும் அதில் ஏறுவது சுகங்கொடாது. முத்தாகிறது புதையிட்டு வடத்தில் கோர்க்குமளவும் முத்துக்காரனுக்கு இலாபத்தைக் கொடாதென்று சொன்னாள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம்பற்றினார்கள், உங்களுடைய நுத்துபாவுக்கு நல்லதைத் தேடுங்களென்று திருவுளம்பற்றினார்கள்.

## ரிவாயத்து.

ஒரு மனிதன் மூசா அலைஹிஸ்ஸலாமிடம் எனக்கு சொர்க்கத்தை தத்திரமாக்கும்படி நாயனிடம் கேளுங்களென்று சொன்னார். அவர்கள் அவ்வாறே கேட்டார்கள். அதற்கு அல்லாஹுத்தஆலா

அந்தப்படி செய்து விட்டேன். அவனுடைய மனதுக்கு இணங்கின வடிவான பெண்ணை நான் அவனுக்குக் கொடுத்தேனென்று சொன்னான்.

### பாயிதா.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள். ஆராகிலுமொருவன் முஸ்லிமானவர்களுடைய கடைகளில் ஒரு கடைக்குப்போய் ஒரு வஸ்துவை வாங்கிச் சுமந்துகொண்டு வீட்டிற்கு வந்து ஆண்மக்களன்றி பெண்மக்களுக்குச் சொந்தமாகக் கொடுத்தால் அவனளவில் அல்லாஹுத் தஆலா கிருபைக்கண் கொண்டு பார்ப்பான். அல்லாஹுத் தஆலா ஒருவனளவில் கிருபைக்கண்கொண்டு பார்த்தால் அவனை அதாபு செய்ய மாட்டானென்று திருவுளம்பற்றினார்கள்.

கிதாபுன் னூறைன் என்ற கிதாபில் வருகிறது, றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள், பெண்மக்கள் உண்டாயிருக்கும் வீடாகிறது, அதில் வானத்தில் நின்றும் தினம் பனிரண்டு றஹ்மத்திறங்கும், மலாயிகத்துகள் அந்த வீட்டை ஸியாறத்துச் செய்கிறது பத்தருது. இன்னும் அந்தப் பெண்மக்களுடைய தாய்தகப்பன்மாருக்குத் தினந்தோறும் ஒரு வருடத்து இபாதத்தை எழுதப்படுமென்று திருவுளமானார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள். ஆராகிலுமொருவன் மூன்று பெண்மக்களை ஆதரித்து செலவுகொடுத்து வருகிறதில்லை யானால் அந்த மக்கள் அவனுக்குத் திரையா யிருந்தொழியவென்று திருவுளம் பற்றினார்கள்.

### ஹிக்காயத்து.

யாபிச இமாம் பேசி வந்தார்கள், குர்து தேசத்தில் நின்றும் ஒரு மனிதன் எனக்குச் சொன்னார், அந்த ஊரிலொரு மனிதன் பெண்சாதி அடுக்க அடுக்க மூன்று பெண்ணைப் பெற்றாள். அப்



போதவன் இனி, நீ பெண்குழந்தை பெற்றால் தலாக்கென்று சொன்னான். அப்படிச் சொல்லி விட்டு அவன் வெளியூருக்குப் போய் விட்டான். அவன் வரவே அவள் தலாகை பயந்து தான் பெற்ற பெண் குழந்தையை ஒரு மலைப்பொதும்பில் எறிந்துவிட்டு என்னுடைய ஹமல் காத்தாய்ப் போய்விட்டதென்று சொல்லிவிட்டாள். அப்பால் ஒரு மாதம் சென்று அவளும், புருஷனும், சிலரும் சபர் போகும்போது அந்தப் பெண்பிள்ளை அந்த மலைப்பொதும் புக்குப் போனாள். தன் பிள்ளை ஒரு மானிடம் பால் குடித்துக்கொண்டிருக்கக் கண்டு மனது சகிக்காமல் புருஷனுக்குச் சொன்னாள், புருஷன் போய் பிள்ளையை எடுத்துக்கொண்டான். பிள்ளையை யெடுக்கவே மான் தூர நின்று பிள்ளையைப் பார்த்து அழுதழுது மாலை மாலையாய் கண்ணீர் வடித்தது.

## 4-ம் பஸல்.

### நான்காம் பஸலாவது பெண்களுடைய அழகில் நப்சுகள் உவக்கப்பட்டதில் புகழப்பட்ட அழகு வடிவுகளைக் கூறல்.

அதாவது கூர்மைக்காரரும், பரிசோதனைக்காரரும் சொல்லியிருக்கிறார்கள். பெண்களுடைய அழகில் புகழப்பட்டவை பின் வருமாறு என்று நான்கு வஸ்துக்கள் கருப்பாயிருக்கவேண்டும். அதில் முதலாவது கூந்தல். இரண்டாவது இருகண் புருவத்தின் ரோமங்கள், மூன்றாவது இருகண் இமையின் ரோமங்கள், நான்காவது கண்ணின் கருவிழிகள்.

நான்கு வஸ்துக்கள் வெளிறாயிருக்கவேண்டும். அதில் முதலாவது திரேகமும், இரண்டாவது கண்ணின் வெள் விழியும், மூன்றாவது பற்களும், நான்காவது தலைமயிர் வாங்கிவிடுவதின் வரியுமாம்.

நான்கு வஸ்துக்கள் சிவந்ததா யிருக்கவேண்டும். அதில் முதலாவது நாவும், இரண்டாவது இரு இதழும், மூன்றாவது இரு கன்னமும், நான்காவது மேல்வாயுமாம்

நான்கு வஸ்துக்கள் நீண்டதா யிருக்கவேண்டும். அதில் முதலாவது தலைமயிரும், இரண்டாவது கழுத்தும், மூன்றாவது இருபுருவமும், நான்காவது சரீர பரியானங்களுமாம்.

நான்கு வஸ்துக்கள் சதையுள்ளதா யிருக்கவேண்டும். அதில் முதலாவது இருதனங்களும், இரண்டாவது இருதுடையும், மூன்றாவது இருபிருப்பும், நான்காவது பெண்மைத்தலமுமாம்.

நான்கு வஸ்துக்கள் விசாலித் திருக்கவேண்டும். அதில் முதலாவது நெற்றியும், இரண்டாவது இருகண்களும், மூன்றாவது இருமார்பும், நான்காவது இருதுடைகளுமாம்.

நான்கு வஸ்துக்கள் ஒடுக்கமாயிருக்கவேண்டும். அதில் முதலாவது தொப்புளும், இரண்டாவது அபமும், மூன்றாவது இருநாசித்துவாரமும், நான்காவது இருகாதின் துவாரமுமாம்.

நான்கு வஸ்துக்கள் குறுகலா யிருக்கவேண்டும். அதில் முதலாவது வாயின் விரிவும், இரண்டாவது கையின் நீட்டமும், மூன்றாவது கணுக்காலின் உயரமும், நான்காவது காலடி படத்தின் நீளமுமாம.

நான்கு வஸ்துக்கள் மெல்லிதா யிருக்கவேண்டும், அதில் முதலாவது நாவும், இரண்டாவது மூக்கும், மூன்றாவது இரு இதழும், நான்காவது விரல்களுமாம்.

இன்னும் முடி வட்டமிட்டதாகவும், சரூபம் சமமானதாகவும், வடுவில்லா மேனியும், ஆக இவ்விதமாகிய அலங்கிர்த ரூபலக்ஷணங்கள் யாவத்தும் பின்னால் எழுதும் பதுமினி யென்னும் மாதுக்கு உண்டு. அதை வகை விபரமாய் விளங்கிக் கண்டு பிடித்துக் கொள்க.



## 5-ம் பஸல்.

### இது நிகாஹுக்குப் பின் கைசேதம் வருத்தி வைக்கத்தகுந்த பெண்களைப்பற்றி கூறுவது.

---

அல்லாஹுத் தஆலா குர்ஆனிலே திருவுளமானன், ரகசியத்தில் மாப்பிள்ளைக் கொண்டவளல்லா திருக்கிற ஹாலிலும் பார்த்து கலியாண முடியுங்களென்று திருவுளமானன்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானர்கள், அல்லாஹுத் தஆலா மிகுதியாய் பிணத்தும் வாயாடிப் பெண்களின் பேரில் பகை வைத்திருக்கிறனென்று திருவுளமானர்கள்.

#### ஹிக்காயத்து.

ஷெய்கு முஸ்லிஹுத்தீனி சஃதிய்புல் ஷீறாஸீ றஹ்மத்துலாஹி அலைஹி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். துர்க்குணசாலியாகிய மனைவி நற்குணசாலியாகிய மனிதன் வீட்டிலிருப்பாளாகில், அவனுக்கு துனியாவே நரகமா யிருப்பது உண்மையெனச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஹுக்கமாக்களால் சொல்லப்பட்டிருக்கிறது, தண்ணீரில் வருங்கெடுதி மண்ணினாலும், மனிதனில் வருங்கெடுதி பெண்ணினாலுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சுலைமான் அலைஹிஸ்ஸலாமுடைய ஹிக்மத்தில் வருகிறது, புத்தியுடைய பெண்பிள்ளை காட்டை வீடாக்குவாள், மடப்பெண் வீட்டைக் காடாக்குவாள்.

#### ஹிக்காயத்து.

சரித்திரக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள், சய்யாஹ் அதுநீ யென்பவர்கள், தன் யாத்திரையில் ஹலாத் இஸ்யாஸ் அலை

ஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டு தெரிசித்துக் கொண்டார்கள். அப்போது நபி அவர்கள் அதிதியை நிகாஹு செய்யும்படிக்கும், விவாகமில்லாமல் தனித்திருக்க வேண்டா மென்றும் உத்திரவு செய்ததில், நாலுவகைப் பெண்களை நிகாஹு முடிக்கவேண்டா மென்று விரித்துரைத்தார்கள். அந்நான்கு வகையாவது:—

முதலாவது, (த்தாலிபுல்குல்உ) யென்னும் அதிகமாய்ப் பொருள் கொடுத்து புருஷனை நிஹாஹில் நின்றும் நீங்கிப்போகவிடங்கொடாமல் எப்போதும் தான் கொடுத்த பொருளினதிகாரத்தி லிருப்பவளையும்.

இரண்டாவது (முத்நபக்கிரு) வென்னும் கருவமுள்ள வீம்புப் பேச்சுக்காரி, அதாவது தன்னுடைய அழகைக்கொண்டும், தன் வாட்கையைக்கொண்டும் பெருமை அடிக்கிறவளையும்.

மூன்றுவது, (பாஸிகா) வென்னும் கள்ளபுருஷனைக் கைக்கொள்ளுகிறவளையும்.

நான்காவது, புருஷனுக்கு மீறி நடக்கிறவளையும், ஆக இந்நால் வரையும் கலியாணமுடிக்கக்கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் சிறப்புற்றோங்கும் மேன்மையும், மகிமையும் பொருந்திய அரபுநாட்டிலுள்ள ஒரு அரபியானவருடைய கௌலாவது ஆறுவகைப்பெண்களை விவாகஞ் செய்யக்கூடாதென்று வந்திருக்கிறது. அதாவது,

முதலாவது (ஹன்னனு), இரண்டாவது (மன்னனு), மூன்றுவது (ஹன்னனு) நான்காவது (ஹத்தாகா) ஐந்தாவது (பர்றுகா) ஆறுவது (ஷத்தாகா) இவற்றில்:—

முதலாவது (ஹன்னனு) யென்பவள் என்னேரமும் இரைச்சலுடன் பெருமூச்செறிந்து கொண்டு, இடைவிடாமல் தலைவலி கால்வலி யென்று ஓயாத நோயாளியைப்போல் தொட்டாச்சினிங்கியா யிருக்கும் மாயக்கள்ளியையும்.



இரண்டாவது, (மன்னனு) யென்பவள் புருஷன் எவ்வளவு நன்றி செய்திருந்தபோதிலும், உன்னைத்தொட்டது முதல் நான் கெட்டேனென்று எப்போதும் இடைவிடாமல் குத்துப்பாடு சொல்லிக்கொண்டிருக்கத் தகுந்தவளையும்.

மூன்றுவது, (ஹன்னனு) யென்பவள் தனக்கு முன்னுண்டாயிருந்த புருஷன்மீது தானே மையல் கொண்டவளாய், அல்லது முன் புருஷனுக்கு உண்டாயிருந்த மக்களின்மேல் கவலைப்பட்டு மயக்கம் கொண்டவளா யிருப்பவளையும்.

நான்காவது, (ஹத்தாகா) யென்பவள் கண்ட வஸ்துக்கள் ஒன்றையும் தப்பிவிடாமல் கேட்டு புருஷனைப் பித்தனுக்கி விடுபவளையும்,

ஐந்தாவது, (பர்றுகா) யென்பவள் தெருவீதிகளில் யாவர்களும் பார்க்கத்தக்க விதமாய் முகத்தை மினுக்கி வாசனை அணிந்து தனத்தைக் குலுக்கி கூச்சமற்று நடப்பவளையும்.

ஆறுவது, (ஷத்தாகா) யென்பவள் அதிகமாய்ப் பிணத்தும் வாயாடிப் பெண்ணையும் விவாகஞ் செய்யக்கூடாதென்று கூறப்பட்டிருக்கிறது.

## ஹதீது.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களிடத்தில் ஒரு மனிதன் வந்து அல்லாவுடைய றசூலே, என்னுடைய பெண்சாதியானவள் தொட்டவன் கையைத் தட்டுகிறதில்லையென்று சொன்னார், அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தலாக்கு சொல்லிப் போடென்றார்கள். அப்போது அம்மனிதன் சொன்னார், யாறசூலல்லா நான் அந்த மாயக்கள்ளியின்மேல் காதல்கொண்டவனுமாய் மனமுள்ளவனுமா யிருக்கின்றேன். அவள் ஏது செய்தாலும் என்னால் கேட்க மனங்கொள்ள வில்லையென்று சொன்னார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அவளை தலாக்குச் சொல்லவேண்டாமென்று விடை கொடுத்தார்கள். கருத்தாவது,

பிரியமிருந்தால் வைத்துக்கொள், இல்லாவிடில் தலாக்குச் சொல் லிப்போடு மென்பதாம்.

ஹுக்கமாக்கள் சொல்லி யிருக்கிறார்கள், மிகு சமீபமாகிய பந்து ஜனங்களில் நின்றும் நிகாஹ் முடிக்கக்கூடாதென்றும், அத னால் மோகமும் காமமும் மீறி புணர்ச்சையின் இச்சையானது மேலோங்கிக் கிளம்பாதென்றும், இமாம் ஹஸன் ஹுஸைன் றலி யல்லாஹு அன்ஹுமா இருவரும் செய்த சம்பந்தங்கொண்டு இது மக்ரூஹல்லவென்று சொல்லக் கூடாதென்றும் அதனால் பிள்ளைகள் மெலிந்ததாகவும், குல்வந்துக் குறைந்ததாகவும் பிறக்கு மென்று சொல்லியிருக்கிறார்கள்.

---

## 6-ம் பஸல்.

### இது நிகாஹுக்கு மக்ரூஹான பெண்களைப்பற்றி கூறுவது.

அதில் முதலாவது மெலிந்த நெட்டச்சியும், இரண்டாவது செம்பட்ட முடியாளும், மூன்றாவது பூனைக்கண்ணுடையாளும், நான்காவது முந்தின மாப்பிள்ளையில் பிள்ளை யுண்டாகி அந்தப் பிள்ளைகளுடன் இருக்கிறவளையும், ஐந்தாவது மிகுந்த முனக்க முடையாளும், ஆறாவது செய்த நன்றியைச் சொல்லிக் காட்டுத லுடையாளும், ஏழாவது முந்தின புருஷன்மேல் மிகுதி ஆசை யுடையவளும், எட்டாவது துன்யாவில் மிகுந்த ஆவேட்கை யுடையவளும், ஒன்பதாவது ஏறின மஹருள்ளவளும், பத்தாவது விஞவில் பிறந்தவளும், பதினொராவது பாசிகுடைய மகளும், ஆக இவ்வளவு பேரையும் விவாகஞ்செய்வது மக்ரூஹாயிருக்கும். ஆனால் இப்போது குறித்த பெண்களிலொருத்தி யிடம் இவன் ஆசைகொண்டு மையலாகி அவளை மண முடிப்பதில் அவளுடைய பத்தினி தனம் பொருந்திருந்தால் அவளை முடிப்பது ஏற்றம்.

---



## 7-ம் பஸல்.

### பேரின்பம் சிற்றின்பம் யாது?

அல்லாகுத் தஆலாவால் சிருஷ்டிக்கப்பட்ட மானிடவர்க்கம் அடையக்கூடிய இன்பம் இருவகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை பேரின்பம், சிற்றின்பம் என்ற இரண்டே. இவற்றில் பேரின்பம் ஆண்டவன் அருள்பெற்றோர் மறுமையில் அடையும் அழியாததும் குறையாததுமாகிய இன்பம். சிற்றின்பம் இவ்வுல கில் அநுபவிக்கும் முக்கிய இன்பம்.

பேரின்பம் எளிதில் யாவரும் அடையக்கூடிய இன்பமல்ல. இவ்வுலகில் பாவம் செய்வதை யொழித்து புண்ணியத்தைத்தரும் நல்அமலைச் செய்து அந்தத் தருமத்தால் நாயனுடைய அருளைப் பெற்று அவன் மூலமாய்ப் பேரின்பமாகிய மோக்ஷத்தைப் பெற வேண்டும். இதனால் நாம் மோக்ஷம் பெறுவதற்குச் சாதகமாகவே ஆண்டவன் நமக்கு தநு, கரணம், புவனம், போகம் ஆகிய நான் கையும் கிருபையோ டளித்திருக்கிறார். தநு என்பது தேகம். கர ணம் என்பது மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் ஆகிய அந்தக் கரணங்களும், மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய புறக்கரணங்களுமாம். புவனம் என்பது உலகம். போகம் என்பது இவ்வுலகில் நாம் அநுபவிக்கும் வஸ்துக்கள். ஆகவே மோக்ஷத்தை யடைய அறம் செய்யவேண்டும். அவ்வறம் இல்லறம் துறவறம் என இருவகைப்படும்.

### இல்லறம் துறவறம்

1. இல்லறம் என்பது ஒரு ஸ்திரீயை மார்க்க விதிப்படி மணம் புரிந்து உலகில் வாழ்ந்து பிதுர்க்கடன், விருந்தோம்பல், சுற்றத் தாரையுபசரித்தல், ஆதுலர்க்கன்னமிடல் முதலிய தரும ஒழுக்கங் களை வழுவாது செய்தல்.

2. துறவறம் என்பது உலகம் அநித்தியம் ஆண்டவன் ஒருவனே நித்தியமாயுள்ள அழியாப்பொருள். என்பதை யுணர்ந்து உலகையும் அதிலுள்ள போகபாக்கியங்களையும் மனப்பூர்வமாய் வெறுத்து ஆண்டவன் ஒருவனிடமே மனநாட்டத்தை வைத்து அவனை யடைதலான மோக்ஷத்தைப் பெறவேண்டிய முயற்சியிலேயே யிருப்பது.

இல்லறத்திலிருந்து கொண்டே உள்ளத்தில் துறவடைந்து புளியம்பழமும் ஓடும், தாமரையிலை நீரும்போல் உலகப்பற்றில்லாமலே செய்யவேண்டிய் கடமைகளைச் செய்துகொண்டே யிருந்து நற்பதவி பெறுவோருமுண்டு. அப்படி முடியாதார் இல்லறக்கடனை செய்து முடித்தபின் துறவறம் பூண்டொழுகுவார்கள்.

## இல்லறச் சிறப்பு

உலகில் இந்த இல்லறம் நடத்துவதே மிக்க சிறப்பானதருமமென்று நூல்களிலும் பெரியோராலும் கூறப்பட்டிருக்கிறது. உலகம் நடைபெறுவதற்கு இந்த இல்லறமே ஆதாரமானதாயிருக்கிறது துறவறத்திலிருப்பவன் முதற்கொண்டு யாவர்க்கும் உதவிபுரிபவன் இல்லறத்தானே. இல்லறமல்லது நல்லறமன்று என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். இல்லறமென்பது ஒரு வண்டி போன்றது. அந்த வண்டியை யிழுத்துச்செல்லும் இரண்டு மாடுகள் போன்றவர்கள், புருடனும் மனைவியும். ஆதலால் இவர்கள் இருவரும் மனமொத்து நடத்தினால்தான் இல்லறமாகிய வண்டி செல்லும். ஆதலால் ஒருவன் இல்லறத்தைக் குறைவற நடத்துவதற்கு அவனுக்குச் சரியான மனைவி வேண்டுவதே யின்றியமையாத சாதனமாகும். இல்லறத்தில் இல்லாதவனுக்கு உலகில் மதிப்பு கிடையாது. புருடனும் மனைவியுமாய் வாழ்வதென்பது இவ்வுலகிலுள்ள எல்லாவித மனித ஜாதிகளுக்கும் ஆண்டவனால் இயற்கையிலேயே யமைக்கப்பட்டிருக்கிறது. மனிதன் அவ்வாறு நடப்பதே ஆண்டவனுக்



குப் பிரியமென்று சகல் வேதங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. பெரியோரும் அவ்வாறே அருளியிருக்கின்றனர்.

புருடன் மனைவி இருவரும் கலந்துறவாடியிருப்பதை சாவிஷ்தனத்துக்குத் திறவுகோலாகவும், ஜெயம் பெறுதற்குச் சாதகமாகவும் ஆண்டவன் செய்திருக்கிறான். நமக்கு நாயகமாகிய இஸ்லாமுக்கு சுத்தமாகிய ஷபீஇல் முதுனிபீன் வஹபீபிறப்பில் ஆலமீன் சைபிதினா முகம்மதின் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் திருவுளம் பற்றி யிருக்கிறார்கள், நீங்கள் மிகுந்து நிகாஹ் செய்யுங்கள், மிகுந்து பிள்ளைகளைப் பெறுங்கள். ஏனென்றால் நான்; திட்டமாகக் கியாமத்து நாளையில் உங்களைப்பற்றி மற்றும் உம்மத்துகளோடு பெருமை பேசுவேன்.

இவ்வாறு நிகாஹு செய்துக் கொள்வதின் பெருமையைப் பற்றியும் நன்மைகளைப்பற்றியும் பலவாறு நூல்களில் புகழ்ந்து கூறப்பட்டிருக்கிறது.

---

# 8-ம் பஸல்.

## இது நிகாஹுக்கு விதியானவனையும், ஒழுக்கத்தையும் பற்றிக் கூறுவது.

ஆதம் அலைஹிஸ்ஸலாமுதல் கியாமத்தளவும், பல் சொர்க்கத்திலும் நிகாஹை ஷறஆக்கப்பட்டிருக்கிறது. ஜிமாயில் ஹாஜத்தாகி ஷஹ்வத்தை யடக்கிக்கொள்ள ஏலுமானவனுக்கும், மஹர் நபஹாகிஸ்வத்துக்கொடுக்க ஏலுமானவனுக்கும், நிகாஹுசெய்வது சுன்னத்து. ஷஹ்வத்தை யடக்கிக்கொள்ள ஏலாதவனுக்கு நிகாஹு செய்வது வாஜிபு. ஷாபிஈமதுஹபில் சில இமாம்களிடத்திலும், ஹனபீ, மாலிகீ, ஹன்பலீ இவர்களிடத்திலும், நபகாகொடுக்க ஏலுமானவன் ஜிமாயில் ஹாஜத்தானால் நிகாஹு செய்வது வாஜிபு.

விஞவைப்பயந்தால் எல்லாரிடத்திலும் வாஜிபு. நபகாக்கொடுக்க ஏலாதவர்க்கும், ஷஹ்வத்தில்லாதவனுக்கும் நிகாஹு மக்றூஹ்.

பெண்களில் தீன் ஒழுக்கமும், நல்ல வங்கிஷமும், அழகும், தாய் தந்தையுடன் பிறந்த மாமா, சாச்சா, மாமி, சாச்சி இவர்களின் முந்தின தறஜாவிலுள்ள மக்களல்லாமலிருப்பதும், சர்க்குணமும், புத்தியும், பத்தினித்தனமும், இனத்தில் பலுக்கமும், கன்னித்தனமும், உண்டாயிருப்பது சுன்னத்து. மாப்பிள்ளையிலும் இவ்விதமுண்டாயிருப்பதைப் பெண் தேடிக்கொள்வது சுன்னத்து.

### நிகாஹுவின் பொது விவரங்கள்.

நிகாஹு முடிக்கக்கருதிய ஆடவன் ஸ்திரீயாகிய இருவரில் ஒருவர் மற்றவரை நிக்காஹு முடிக்குமுன் பார்க்கவிரும்பினால், ஆடவர்களுக்கும் வெள்ளாட்டிகளுக்கும் முழுந்தாளுக்கும் தொப்புளுக்கு மிடையிலுள்ள மேனியடங்கலும் தவிர மற்றதையும், நாட்டான் மகளாகிய பெண்களுக்கு மணிக்கட்டு வரைக்கும் இரண்டுகையும் முகமுமல்லாத மேனியடங்கலும் தவிர மற்றதையும் பார்ப்பது சுன்னத்து. அப்படிப் பார்க்கும்போது ஓர் மஹ்றமைக் (மணமுடிக்கத்தகாத சகோதரி முதலியவரைப் போன்றவர்கள்) கூடவைத்துக்கொண்டு பார்க்கவேண்டும்.

ஆடவன் ஸ்திரீயாகிய இருவரில் ஒருவர் மற்றவரைப்பார்க்க வசதிப்படாவிட்டால் தனக்குச்சொந்தமான ஒரு ஸ்திரீயைப்பார்த்து வரும்படி செய்து ஆராய்ந்து கொள்ளுதல் சுன்னத்து. பாலிகாகிய ஆடவன் அஜ்னபிய்யத்து ஆகிய (மணமுடிக்கத்தகுந்தது) ஸ்திரீயைப் பார்ப்பதும் அவள் தொனியை ஆசையுடன் கேட்பதும் ஹறாம்.

மாதர்கள் பாலிகாகிய ஆடவனையும் காபிறத்து ஆகிய ஸ்திரீயையும் விலைமகளையும் பார்ப்பதும் அவர்களுடன் தனித்திருப்பதும் ஹறாம்.

அஜ்னபிய்யாகிய ஆடவன் அஜ்னபிய்யத்தாகிய ஸ்திரீ இவர்களிருவரில் ஒருவர் மற்றவருடைய தேகத்தின் வெளியுருப்புகளைப்



பார்ப்பதும் ஹறாம். உரோமம் நகம் முதலியவற்றைப் பார்ப்பதும் ஹறாம்.

ஸ்திரீ ஆடவனைப்பார்ப்பதைப் பார்க்கிலும் ஆடவன் ஸ்திரீயைப்பார்ப்பது கொடிய ஹறாம்.

இரண்டு ஆடவர் அல்லது இரண்டு ஸ்திரீகள் ஒரு படுக்கையிலுறங்குதலும் ஒரு ஆடையிற் படுத்தலும் ஹறாம்.

பத்து வயதாய்விட்ட சிறுவர்களைப் பெற்றோர் சகோதர சகோதரிகளோடு படுக்கவொட்டாமற் பிரித்தல் வாஜிபு.

விவாகப்பொருத்தம் பேசுகிறவர்கள் செய்யவேண்டியவைகளாவன:—

நிகாஹுவைப்பற்றிய பேச்சை நடத்துமுன் மாப்பிள்ளை அல்லது மாப்பிள்ளையின் வகீல் ஒருகுதுபா ஓதி தன் கருத்தை வெளிப்படுத்தியவுடன் ஸ்திரீயின் வலிகாரன் சம்மதித்து வாக்குச் சொல்லுமுன் அவன் அல்லது அவன் வகீல் ஒரு குதுபா ஓதி வாக்குச்சொல்லுதல் வேண்டும்.

ஒருவருக்குப்பேசி சம்மதங்கொடுக்கப்பட்ட பெண்ணை, அச்சங்கதியையறிந்த மற்றொருவன் தனக்குப்பேச முயலுதல் ஹறாம்.

---

## 9-ம் பஸல்.

### இது நிகாஹை பிரசித்தஞ் செய்வதையும் நாட்களையும் பற்றிக் கூறுவது.

நிகாஹை பிரசித்தமாக்கி வையுங்களென்று ஏவல் வந்திருப்பதால், பிரசித்தஞ்செய்வது சுன்னத்து. ஆனபோதே ஒடுக்குபோல் கொற்றதைத்தவிர மற்ற நக்காருபோல் கொற்றதை யடிக்கிறது சுன்னத்து. எவ்விதத்தாலும் குழல்போல் கொற்றதை யூதுவது ஹறாமாயிருக்கும்.

ஷவ்வால்மாதம் முந்தினவெள்ளிக்கிழமை காலைநேரம் ஜும்ஆ பள்ளியிலிருந்து சாலிஹான கூட்டத்தில் நிகாஹு செய்வது சுன்னத்து.

நிகாஹ் முடிப்பதால் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய சுன்னத்தை நிறைவேற்றலையும், பத்தினித்தனத்தையும், சாலிஹான பிச்சள முண்டாவதையும் நிய்யத்து வைப்பது சுன்னத்து. அதனாலிருவரும் அந்த நிகாஹிலிருக்குங் காலமெல்லாம் தவாபு கொடுக்கப்பட்டுக்கொண்டே யிருப்பார்கள். இன்னும் நிகாஹின் சபையில் ஹாலிறான சகலரும் நிகாஹ் முடிந்தவுடன் (பாறகல்லாஹுலக்க வபாறக்க் அலைஹு வஜமஅ பைனகுமா பீகைரின் வஆபியா என்று) துஆச்செய்வதும், சோபனஞ் சொல்லுவதும் சுன்னத்து. இன்னும் பெண், மாப்பிள்ளை யிருவரும் நிகாஹ்செய்ய இஸ்தகாறுதொழுகை தொழுது நிகாஹ் முடிந்தபிறகு, இருவரும் துனியாவுடைய பேச்சைப் பேசாமல் தொழுகையைக்கொண்டு சேர்வார்களாகில் அல்லாஹுத் தஆலா அவர்களை இருபதியிலும் சிநேகித்தனத்திற் கூட்டுறவாக்கி வாழ்வையுங் கொடுப்பான். இது சோதிக்கப்பட்டதென் றொருவர் சொல்லியிருக்கிறார்கள்.

இனி நிகாஹுடைய அஹ்க்காம்களை விரிவாய்ப் பார்க்க நாடுகிறவர்கள் பெரிய கிதாபுகளில் பார்த்து தெரிந்துக்கொள்ளவும்.

---

## 10-ம் பஸல்.

### இது வலீமா யென்னும் கலியாண விருந்தைப்பற்றி கூறுவது.

அதாவது கலியாணத்துக்கு விருந்துகொடுப்பது பலவந்தமான சுன்னத்தாயிருக்கும். கலியாணத்துக்கும், சுத்னசெய்வதற்கும், கருமாரி சலாமத்தாகிறதற்கும், பிள்ளை பிறந்ததற்கும், சபறால் முன்னேக்கி வந்ததற்கும், வீடு குடிபுகுகிறதற்கும், குறுஆன் ஹிப்லாகிறதற்கும் கூடியதுகொண்டு விருந்துகொடுப்பதும், அதற்காக அழைக்கப்படுகிறவர்கள் ஹாலிறாகிறதும் சுன்னத்து. கலியாணத்துக்காக நிகாஹுக்குப்பின் செய்யும் விருந்துக்கு அழைக்கப்பட்டால் ஹாலிறாகிறது வாஜிபு. (யெஃனீ) விருந்து கொடுப்பவன் தானாக அல்லது தன்னுடைய விசுவாசியான நாயிபானவன் அல்லது அவனுடைய விசுவாசமான பிரிவெத்தின பிள்ளைகள் வந்து அழைத்தால் மாத்திரந்தான். இன்னும், கலியாணவிருந்தைஜிமாவு செய்தபிறகு செய்வது அப்லலாகயிருக்கும். நிகாஹுக்கு முன்னாலே செய்தால் அதனாலே அசலு சுன்னத்துண்டாகும். அதற்கு ஹாலிறாகுதல் வாஜிபில்லை என்கிலும் சுன்னத்து.



---

## 11-ம் பஸல்.

### இது பெண்சாதிக்கி நபகா கிஸ்வத்து கொடுப்பதைப்பற்றி கூறுவது.

அதாவது பெண்ஜாதிக்கி நபகா விதிப்பதெல்லாம் தனக்கு யாதொரு சங்கடமில்லாதபோது ஜிமாவுச்கும், மற்றும் எவ்வகை சுகம் பாருட்டுதலுக்கும், அவன் நாடியதலத்திற்கு அவன் அழைத்து கொண்டுபோக யிடம் பாடாக்கி கொடுப்பது கொண்டும் விதியாகும்.

#### நபகா

அவளிருக்கும் ஊரில் மிகுதியாய்ப் புழங்கும் ஒஜீவனத்தில் நின்றும், நிதகாலம் சுபுஹு நேரத்தில் ஏழையானவன் இரண்டுகை நிறம்பிய ஒஜீவணம் சிறங்கை ஒன்றும், நடுத்தரமானவன் சிறங்கை ஒண்ணலரயும், சீமானனவன் சிறங்கை இரண்டும், விறகும், தண்ணீரும், வளமைப்படி கறியும், மசாலாவும், அவள் தன்

சொந்த வளமையைக் கவனிக்காமல், ஆணமும், நெய்யும் வனங்கள் முதலான புழங்கும் சாமான் அனைத்தும், விளக்கும், தலைக்கெண்ணெயும், தானாக வேலைசெய்வது வளமை யில்லாதிருந்தால் வேலைக்காரியும், அவளுக்கு நபகாகிஸ்வத்தும், பெண்ஜாதிக்கு வருடத்தில் இரண்டு சேலையும் சட்டையும், போர்த்திக்கொள்ள துப்பட்டியும், இன்னும் மிதியடியும், இராமாத்துப் பிடவையும், ஆதத்தாயிருந்தால் அவையிரண்டும், படுக்கப்பாயும், தலைக்கணையும் அவளுடைய சபபினால் அவளுக்கு விதித்த முழுக்குக்கு தண்ணீரும் இவன்பேரில் வாஜிபாகயிருக்கும்.

இன்னும் நபகாவும், கிஸ்வத்தும், வீடுங்கொடுத்து நடப்பிவிக்கும் புருடன் அவளை வீட்டைவிட்டு வெளிப்புறப்படாமல் விலக்கலாம். தாய் தகப்பன் மௌத்துக்காணுதலும் சரி. இன்னும் பற்லுஐனை இல்லை இவன் அவளுக்கு படித்துக் கொடுக்காவிட்டால் அதற்காக படிக்கப்போகிறதை விலக்கக்கூடாது, அவ்விதம் புறப்பட்டால் அதற்காக நபகாவை விலக்கவுங்கூடாது.

## ஹதீது

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஒருமனிதனுக்கு பாவத்தால் போதும், தான் நபகாகிஸ்வத்துக் கொடுக்கவேண்டியவர்களை பழுதாக்கியதென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், நீ பீஸபீலில் செலவுசெய்த ஒரு தீனாறும், அடிமை வாங்கி உரிமை விட்ட ஒரு தீனாறும், மிஸ்கீன்பேரில் ஸதகாசெய்த ஒரு தீனாறும் உன்னுடைய பெண்சாதி பிள்ளைகள் பேரில் செலவுசெய்த ஒரு தீனாறுமாகிறது. ஆக இதுகளின் கூலியால் வலுப்பமானது உன்னுடைய பெண்ஜாதி பிள்ளைகள் பேரில் செலவு செய்தாயே அந்த தீனாறாயிருக்கும் என்று திருவுளமானார்கள்.

அனஸ் றலியல்லாஹு அன்ஹு கேட்டார்கள், அல்லாவுடைய றசூலே! பிள்ளைக்குட்டிகளோடயிருக்கிறது ஏற்றமா? அல்



லது பள்ளியிலிருக்கிறது ஏற்றமா என்று கேட்டார்கள். அதற்கு நாயகம் என்னுடைய இந்த பள்ளியில் இஃதிகாபு இருக்கிறதைக் காண பிள்ளைக்குட்டிகளோடு இருக்கிறது எனக்கு உவப்பென்று சொன்னார்கள்.

அனஸ் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அல்லாஹுத் தஆலா அளவில் மெத்த உவப்பான வஸ்துவாகிறது, ஒரு முஃமீனை ஒஜிபனத்தில் அவன் பெண்ஜாதி பிள்ளைகளுடன் அல்லாஹுத் தஆலா காணுகிறதாயிருக்கும். அவர்கள் கூடித்தின்றால் அவர்களளவில் ஆண்டவன் றஹ்மத்தைக்கொண்டு பார்ப்பான். அவர்கள் பிரியுமுன் அவர்களுக்கு பிழைபொறுப்பான்.

## நபீஸா.

அல்லாஹுத் தஆலா ஆதம் அலைஹிஸ்ஸலாமை ஸறந்தீபு மலையிலும், ஹவ்வாவை ஜித்தாவிலும் இறக்கினான். ஒருவர் மற்றவரைத்தேடி அழுதார்கள். அதற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் ஆதம் அலைஹிஸ்ஸலாமிடம் ஏன் அழுகிறீரென்று கேட்டதற்கு ஹவ்வாவைத் தேடுகிறேன், அவள் ஹயாத்தா யிருக்கிறாளாவென்றார்கள். ஜிப்ரீல் ஓம் அவள் தினம் ஒருமீன் தின்றுக்கொண்டு உம்மிலும் இணக்கமாயிருக்கிறாளென்று சொன்னார்கள். அப்போது ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஹவ்வாவுக்கு என்னுடைய செய்தி தெரியுமாவென்று ஜிப்ரீலிடம் கேட்டதற்கு, ஓம் அவளை ஆண்டவன் உமக்காகப் பேணிவைத்திருக்கிறானென்று சொன்னார்கள். பின்பு ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு பசி அதிகப்படவே ஹவ்வாவை மறந்திட்டார்கள். பின்பு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் சொர்க்கத்திலிருந்து சிவந்த இரண்டு காளைமாடும், மூன்று கோதுமை வித்தும் கொண்டு வந்து உமக்கு வித்து 2, ஹவ்வாவுக்கு வித்து ஒன்றென்று சொன்னார்கள். அன்று முதல் ஆணுக்கிருபங்கு பெண்ணுக்கொருபங் கென்றாயிற்று. அந்த வித்தில் ஒவ்வொன்று இலக்ஷத்தி எண்ணூறு திர்ஹத்திடையிருந்தது. ஆதம் அலைஹிஸ்ஸலாம் நாலு ஸாஅத்தில்

விதைத்து, அறுத்து, சூடடித்துத் திரித்து ரொட்டிசுட்டுத் தின்றார்கள். இந்த வருத்தத்திற்காகத் தான் குர்ஆனில் சொர்க்கத்தை விட்டும் ஷைத்தான் உங்களிரண்டு பேரையும் வெளிப்படுத்த வேண்டாம். அப்போதிரண்டு பேரும் வருத்தப் படுவீர்களென்று சொல்லாமல் ஆதமே நீர் வருத்தப்படுவீரென்று அல்லாஹுத் தஆலா சொன்னான். ஆனபடியால் பெண்ணுக்கு நபகாவும் கிஸ்வத்தும் புருஷன்பேரி லுண்டாயிற்று. இன்னும் சொல்லப்பட்டிருக்கிறது, ஒருவித்தை முன்னூற்றி சொச்சம் வேலை செய்தாலல்லது வாயில் ரொட்டிபோய் புகுதப்போகிறதில்லையென்று.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஆராகிலுமொருவன் அவனிடத்தில் இரண்டு பெண்ணுண்டாயிருந்து அந்த இரண்டுபேரிடத்திலும் பட்சபாதமின்றி நடந்துகொள்ளாவிட்டால் அவன் கியாமத்தில் ஒருதோள் சரிந்தவனாக வருவானென்று திருவுளமானார்கள்.

---

## 12-ம் பஸல்.

### இது பெண்சாதிமார்களோடு கலந்துறவாடியிருப்பதைப்பற்றி கூறுவது.

அல்லாஹுத் தஆலா திருவுளமானான், நற்கருமத்தைக் கொண்டு நீங்கள் பெண்ஜாதிமார்களுடனே உறவாடியிருங்களென்று திருவுளமானான். இமாம் ஷாபிஈ றஹ்மஹுல்லா சொன்னார்கள், உறவாடுறதின் பொருளாவது, பொருத்தக்கேடான கருமங்களை விட்டும் விலக்கிக்கொள்ளுகிறதும், அதை வெளியாக்காமல் நபகா கிஸ்வத்து கொடுப்பதுமென்று சொன்னார்கள்.

### ஹதீது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், நானுங்களுக்கு பெண்பிள்ளைகளைக் கொண்டு நலவை வஸிய்யத்து



செய்கிறேன். நீங்கள் கபூல் செய்யுங்கள். ஏனென்றால் அவர்கள் விலாவெலும்புகளின் மேல்வெலும்பில் நின்றும் படைக்கப்பட்டார்கள். அந்த எலும்பு நேராயிராது. நீ பெண்ணில் அந்தகுணத்தைக் கண்டால் அந்த குணத்துடனே சுகித்தால் சுகித்தாய், அல்லது நீ திருத்தப்போனால் முறிப்பாய். முறிப்பதென்பது தலாக்கென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஆராகிலுமொருவன் தன் பெண்ஜாதியுடைய கெட்டகுணத்தின் பேரில் சபூர்செய்தால், அவனுக்கு அல்லாஹுத் தஆலா அய்யூபு அலைஹிஸ்ஸலாமுக்கு அவர்களுடைய பலாயின்பேரில் கொடுத்தானே அந்த கூலிபோற்கொற்ற கூலிகொடுப்பான். ஒருபெண் தன்னுடைய புருஷனுடைய கெட்ட குணத்தின்பேரில் சபூர்செய்தால், அவளுக்கு பிர்ஔனுடைய பெண்சாதி ஆஸியாவுடைய கூலிபோற்கொற்றதைக் கொடுப்பானென்று திருவுளமானார்கள்.

இஹ்யா உலூமுத்தீன் என்னுங் கிதாபில் வருகிறது. நபி நாயகம் கடைசியாக செய்த வஸிய்யத்து மூன்று கருமம், அவர்களுடைய பேச்சு ஒழுங்குமட்டும் அதைக்கொண்டு தான் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒன்றாவது தொழுகையை பத்திப்பிடியுங்கள் இரண்டாவது அடிமையை ஏலாத கருமத்தைக்கொண்டு வருத்தப் படுத்தாதேயுங்கள். மூன்றாவது பெண்கள் விஷயத்தில் அல்லாவுக்குப் பயப்படுங்கள். அவர்கள் உங்கள் கைகளில் சிறைகளாயிருக்கும். நீங்கள் அவர்களை அல்லாவுடைய அமானத்தைக்கொண்டு எடுத்தீர்கள். அவர்களுடைய பருஜுகளை அல்லாவுடைய கலிமாக்களைக் கொண்டு ஹலாலாக்கினீர்களென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். உங்களில் நல்லோர் உங்கள் பெண்களுக்கு நல்லோராயிருக்கும். நான் என்னுடைய பெண்களுக்கு உங்களிலும் நல்லவனாயிருக்கிறேன் என்று திருவுளமானார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், முஃமீனானவர்களில் ஈமானால் நிறப்பமானவன் பெண்ஜாதி பிள்ளைகளுடன் குணத்தாலும், கொஞ்சுதலாலும், அழகானவனென்று திருவுளமானார்கள்.

லுக்மான் ஹகீம் சொன்னார்கள், பெண்ஜாதி பிள்ளைகளுடனே குழந்தை போலிக்கிறது புத்திமானுக்கு வேண்டுமான கருமமாயிருக்கும்.

## 13-ம் பஸல்.

### இது நபிநாயகம் பெண்சாதி பிள்ளைகளுடன் மஹப்பத்தாயிருந்ததைப்பற்றி கூறுகிறது.

இஹ்யா உலூமுத்தீன் என்னும் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது. றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பெண்பிள்ளைகளைக்கொண்டும், குழந்தைகளைக் கொண்டும், மனிதரெல்லாம் மிக்க இரக்கமுடையவர்களாயிருந்தார்கள்.

### ரிவாயத்து.

ஒருநாள் பெண்பிள்ளைகள் றசூல்சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களிடம் பேசிக்கொண்டிருக்கையில் கூக்குரல்போட்டு பேசிக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்கையில உமர் றலியல்லாஹு அன்ஹு வருகிற சத்தங்கேட்டு பெண்பிள்ளைகள் ஓடிப்போய் ஒளித்தார்கள். ஆண்டவர்கள் உமர் றலியல்லாஹு அன்ஹு வரவே சிரித்தார்கள். அப்போது அவர்கள் அல்லாவுடைய றசூலே யேன் சிரிக்கிறீர்களென்று கேட்டார்கள். அப்போது நாயகம் சொன்னார்கள், என்னிடத்திருந்த இந்தப்பெண் பிள்ளைகளை நினைத்து சிரிக்கிறேன். உம்முடைய சத்தம் கேட்கவே ஓடிப்போய்



ஒளித்துக்கொண்டார்களென்று சொன்னார்கள். அப்போது, அவர் "அல்லாவுடைய றசூலே அவர்கள் பயப்படத் தாங்கள் தானே மெத்த பாத்தியம்" என்று சொல்லிவிட்டு, அப்பெண் பிள்ளைகளைப் பார்த்து, ஓய் பொல்லாத பெண்களே அல்லாவுடைய றசூலுக்குப் பயப்படாமல் எனக்குப் பயப்படுகிறீர்களோ வென்றார். அப்போதவர்கள் அப்படித்தான். நீர்பொல்லாதவர், இரக்கமில்லாதவர் அல்லாவுடைய றசூல் அப்படி அல்லவென்று சொன்னார்கள். அப்போது றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சொன்னார்கள், ஓய் கத்தாபுடைய மகனே, என்நபுசு எவன் கைவசமிருக்குதோ அவன் பேரில் சத்தியமாக ஷைத்தான் உம்மை ஒரு பாதையில் நடக்கக் காண்கிறதில்லை, அவன் பாதை சுத்தி மறுபாதை நடந்தேயொழிய வென்று சொன்னார்கள்.

தாரீகுல் கமீஸ் என்னும் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது, றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒரு பெண்ணைக் கலியாணமுடித்தார்கள். அந்தப் பெண் எல்லாப் பெண்களிலும் மெத்த அழகாயிருந்தாள். மற்றப் பெண்சாதிமார்கள் அவள் நம்மையெல்லாம் மிகைத்துக்கொள்வாளென்று பயந்து அவளை தலாக்கு சொல்லவைத்துப் போடவேண்டுமென்று யோசித்து ஒரு தந்திரம் செய்தார்கள். அதாவது அந்தப் பெண்பிள்ளையைக் கூப்பிட்டுவைத்து றசூலுல்லாவிடம் நீ மெத்த ஜெயம் பெற நாடினால் அவர்கள் உனக்கு முடுகும்போது நீ (அஊதுபில்லாஹிமின்க்க) அல்லாவைக்கொண்டு நான் உங்களைவிட்டும் காவல்தேடுகிறேன் என்று சொல்வதை பிரியப்படுவார்கள். நீ அப்படி சொல்லிக்கொள் என்று சொல்லிக்கொடுத்தார்கள். றசூலுல்லா அவளுக்குமுடுகவே, அந்த நாச்சியாள் (அஊது பில்லாஹி மின்க்க) என்று சொன்னாள். உடனே றசூலுல்லா முகத்தைத் திருப்பிக்கொண்டு நீ என்னை விட்டும்வேறே காவல்தேடிப்போட்டாய், ஆகையால் நீ தாய்பிள்ளைகளோடு போய்சேர்ந்துகொள்ளென்று சொல்லித் தலாக்கு சொல்லிவிட்டார்கள்.

## ரிவாயத்து.

உமர் றலியல்லாஹூ அன்ஹூவுடைய பெண்ஜாதி அவர்களுடனே எதிர்த்துப் பேசினார்கள். அவர்கள் எதிர்த்துப் பேசுகிறாயாவென்றதற்கு, நபிநாயகம் உம்மிலும் கைறாயிருக்க, அவர்களோடு அவர்களுடைய பெண்ஜாதியார் எதிர்த்துப் பேசுகிறார்களேயென்றார்கள். அப்போதவர்கள், ஹப்ஸா துலைந்தாளென்று சொல்லிவிட்டு, ஹப்ஸாவே ஆயிஷாவைக் கொண்டு நீ மருண்டிடாதே, அவள் றசூலுல்லாவுடைய ஹூப்பென்று சொன்னார்கள். றசூல் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் மற்றப் பெண்களைப் பார்த்து, ஆயிஷாவில் என்னை நீங்கள் நோவினை செய்யாதேயுங்கள், அல்லாவினுனை அவளைத்தவிர உங்களிலொருத்தியுடைய போர்வையிலிருக்கும்போது, என்பேரில் வஹீயிறங்கவில்லையென்று சொன்னார்கள்.

## ரிவாயத்து.

நபிநாயகத்துக்கும், ஆயிஷா றலியல்லாஹூ அன்ஹா அவர்களுக்கு மிடையில் ஏதோ ஒரு தர்க்கம் நடந்து, அபூபக்ரினிஸ்ஸித்தீக் றலியல்லாஹூ அன்ஹூ அவர்களை யிருவருக்கும் மத்தியஸ்தமாகக் கோறினார்கள். அப்போது நபிநாயகம் ஆயிஷா றலியல்லாஹூ அன்ஹா அவர்களைப்பார்த்து நீ பேசுகிறாயோ அல்லது நான் பேசவோவென்று கேட்டார்கள். அப்போதவர்கள் நீங்கள் தான் பேசுங்கள். உண்மையே அல்லாது சொல்லக்கூடாதென்று சொல்லவே, அபூபக்கர் றலியல்லாஹூ அன்ஹூ மகளாரை யேவி அவர்கள் உண்மை அல்லாததை சொல்வார்களோவென்று முகத்திற் குத்தினார்கள். வாயிலிருந்து இரத்தம் வந்துவிட்டது. ஆயிஷா றலியல்லாஹூ அன்ஹா அவர்கள் நபிநாயகத்துடைய முதுகுப்புறமேபோய் ஒண்டினார்கள். அப்போது நபிநாயகம் நாம் இதற்காக உம்மை அழைக்கவுமில்லை, இப்படிச் செய்யும்படி உம்மைக் கேட்கவு மில்லையென்றுசொன்னார்கள்.



## ரிவாயத்து.

ஆயிஷா றலியல்லாஹூ அன்ஹா அவர்கள் ஆண்டவர்கள் கிட்டயிருந்து பேசும்போது கோபத்தில் நீங்கள் அல்லாவுடைய நபியென்றும் சொல்லிக்கொள்ளுகிறீர்களாவென்று சொன்னார்கள் ஆண்டவர்கள் சிரித்துவிட்டு பொறுமையினாலும், சங்கையினாலும் அதைச் சுமந்துகொண்டார்கள்.

## ரிவாயத்து.

றசூல் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம், ஆயிஷா றலியல்லாஹூ அன்ஹா அவர்களைப் பார்த்து உன்னுடைய கோபமின்னது, குணமின்னதென்று எனக்குத் தெரியுமென்று சொன்னார்கள். அப்போதவர்கள் அதெப்படித் தெரியுமென்று கேட்டதற்கு, சொன்னார்கள், நீ குணத்தில் முஹம்மதுடைய நாயன்பேரில் சத்தியமாக இல்லையென்று சொல்வாய். கோபத்தில் இப்றாஹீமுடைய நாயன் பேரில் சத்தியமாக இல்லையென்று சொல்வாயென்று சொன்னார்கள். அப்போதவர்கள் உண்மை சொன்னீர்கள், உங்கள்பேர் சொல்லமாட்டேனென்று சொன்னார்கள்.

## அறிந்துகொள்.

றசூல் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் பெண்பிள்ளைகளுடனே பரியாசப்பேச்சுப் பேசுவார்கள், குணங்களிலும், வேலைகளிலும், அவர்களின் அக்லுடைய சத்றாளில் இறங்கிக்கொள்வார்கள்.

## ரிவாயத்து.

ஆயிஷா றலியல்லாஹூ அன்ஹா சொன்னார்கள், ஒருநாள் றசூல் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லமவர்களும் நானும் கைதட்டி ஓடிப்போனோம். நான் முந்திக்கொண்டேன், பின்பு நான் சதைத்தின் பிறகு ஒருநாள் ஓடினோம். அவர்கள் முந்திக்கொண்டு இது அதற்குச் சரியென்று சொன்னார்கள்.

# 14-ம் பஸல்.

## இது பெண் மாப்பிள்ளையில் நின்றும் ஒருவருக்கு மற்றவர்பேரி லிருக்கும் ஹக்கைப்பற்றி கூறுவது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினார்கள். புருஷன்பேரில் பெண்ணுடைய ஹக்காகிறது, அவன் தின்றால் அவளுக்குக் கொடுக்கவேண்டும், அவன் உடுத்தால் அவளுக்கு உடுத்தவேண்டும். அவளுடைய முகத்தில் அவன் அடிக்கக்கூடாது, அவளை அவன் ஏசக்கூடாது, வெறுத்தால் அவளை வீட்டிலொழிய வெறுக்கக்கூடாதென்று திருவுளமானார்கள். இதற்காக அல்லாஹுத் தஆலா குர்ஆனிலே சொன்னான். அந்தப் பெண்கள் பேரில் புருஷமார்க்குச் செய்யவேண்டிய ஹக்குண்டாயிருப்பதுபோல், புருஷமார்பேரிலும் பெண்களுக்குச் செய்ய வேண்டிய ஹக்குண்டென்று சொன்னான். இதற்காக இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா சொன்னார்கள், பெண்சாதி புருஷனுக்கு எப்படி ஸீனத்தாயிருக்கிறார்களோ அதுபோல் புருஷனும் அவளுக்குக் கொஞ்சம் ஸீனத்தாயிருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், புருஷன் பெண்சாதியளவிலும், பெண்சாதி புருஷனளவிலும் பார்த்தால் அல்லாஹுத் தஆலா இரண்டு பேரளவிலும் கிருபைக் கண்கொண்டு பார்த்திடுவான். இனி அவன் அவளுடைய கையைப் பிடித்தால் இரண்டு பேருடைய விரல்களுக்கிடையிலிருந்து இரண்டு பேருடைய பாவமும் உதிர்ந்து போமென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். புருஷன் தன்னுடைய பெண்சாதியைத் தன்னுடைய ஹாஜத்துக்கு அழைத்தால், அவள் அடுப்பின் பேரிலிருந்தாலும் அவனிடம்



அவள் வரவேண்டும். கருத்தாவது ரொட்டி கரிந்தாலும் சரி என்பது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், புருஷனுக்குப் பெண்சாதி பேரிலுள்ள ஹக்காவது, அவள் ஒட்டகைவிரியின் பேரிலிருந்தாலும், அவனுடைய ஹக்கை அவளை விட்டும் விலக்கக்கூடாது, அவள் பருவைத்தவிர ஒருநாளும் அவனுத்திரவன்றி நோன்பு பிடிக்கக்கூடாது. பிடித்தால் குற்றக்காரியாவாள். அவளுடைய நோன்பும் கபூலாகாது. இன்னும் அவனுடைய உத்திரவன்றி அவனுடைய வீட்டில் நின்றும் ஒருவருக்கும் ஒரு வஸ்துவைக் கொடுக்கக்கூடாது. அப்படிச் செய்தால் அவனுக்குக் கூலியுண்டு. அவளுக்கும் பாவமுண்டு என்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஒரு பெண்பிள்ளை தன் புருஷனுக்கு ஏழுநாள் கிதுமத்துச் செய்தால், நரகத்து ஏழுவாயிலும் அவள்பேரில் அடைக்கப்பட்டுப் போம், சொர்க்கத்து எட்டு வாயிலும் அவளுக்காகத் திறக்கப்படும். அவள் கேள்வி கணக்கின்றி நாடின வாயிலால் சொர்க்கம் புகுதுவாளென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், புருஷனுடைய உச்சிதொடுத்து உள்ளங்கால்வரை ஊனமாய் வடிந்து பெண்சாதி அதை நாவால் நக்கினாலும், அவள் அவனுடைய ஹக்கை யிருத்தவளல்ல. இன்னும் நான் மனிதரை மனிதருக்கு சுஜூது செய்ய ஏவுகிறதானால் புருஷனுக்குப் பெண்சாதியை சுஜூது செய்யும்படி ஏவுவேனென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஒரு பெண்பிள்ளை புருஷனுடைய ஹக்கை யிருக்குமளவும், அவள் அல்லாவுடைய ஹக்கை யிருக்கவில்லை யென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஒரு பெண்பிள்ளை தன்னுடைய புருஷனை துனியாவில் நோவினை

செய்கிறதானல், ஹூறுல்ஈனில் நின்றும் அவனுடைய பெண் அந்தப் பெண்ணைப் பார்த்து அல்லா உன்னைக் கொல்வான், அவனை நோவினை செய்யாதே, அவனெல்லாம் உன்னிடத்தில் தங்க வந்தவன், அவன் உன்னைவிட்டுப் பிரிந்து எங்களளவில் வர முடுக்கிக் கொண்டானென்று சொல்வார்களெனத் திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஒரு பெண்பிள்ளை புருஷனுடைய பிடவையைக் கழுவினல், அவனுக்கு ஆண்டவன் இரண்டாயிரம் நன்மையெழுதி, இரண்டாயிரம் துன்மையுமழித்து, இரண்டாயிரம் தறஜாவையும் உயர்த்துவான். இன்னம் சூரியன் பிரகாசத்திற்பட்ட வஸ்துவடங்கலும் அவளுக்குப் பிழை பொறுக்கத் தேடுமென்று திருவுளமானார்கள்.

---

## 15-ம் பஸல்.

### பாத்திமா நாயகத்தை அலி றலியல்லாஹு அன்ஹு பெண்பேசிய செய்தி.

அனஸ் றலியல்லாஹு அன்ஹுவிவத் தொட்டும் வந்திருக்கிறது, அபூபக்கர் உமர் றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் இரண்டு பேரும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவைப் பெண் பேசி நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மளவில் வந்தார்கள். அப்போது நாயகம் அவர்களுக்கு யாதொரு சங்கதியும் சொல்லாமல் வாய் மூடிக்கொண்டார்கள். இன்னும் பாத்திமாவைக்கொண்டும் ஹக்குடைய கற்பனையை வழி பார்க்கிறேன் என்று இருவரில் ஒவ்வொருவருக்கும் சொன்னார்களென்றும் ரிவாயத்து வந்திருக்கிறது. அப்போது அவர்களிரண்டுபேரும் அலி றலியல்லாஹு அன்ஹு அளவில் நடந்துபோய் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவை அலி றலியல்லாஹு அன்ஹு தங்களுக்கே பெண்பேசிக்கொள்ளும்படி ஏவினர்கள். அப்போது அலிறலியல்லாஹு அன்ஹு "நான் அதில் கியாபகமில்லாமல அதைவிட்டுப்பாராக்கா கவிட்டதற்காக அவர்களிரண்டு பேரும் என்னை உஷாராக்கினார்கள்" என்று சொல்லித் தன்னை உஷா



ராக்கியதைக்கொண்டு சந்தோஷமாகத் தன்மேல் வேட்டியை யிழுத்துக்கொண்டெழும்பி நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மிடத்தில்வந்து பாத்திமாவை யெனக்குக் கலியாணம் முடித்துக்கொடுங்கள் என்று கேட்டார். நாயகமவர்கள் அதற்கு உம்மிடத்தில் ஏது வஸ்து உண்டாயிருக்கிறது என்றார்கள். அதற்கு அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் என் குதிரையும் என் கவசமும் (இரும்புச்சட்டை) இருக்கிறதென்று சொன்னர்கள். உம்முடைய குதிரை உமக்கு வேண்டுமானது. உம்முடைய கவசத்தை விற்றும் என்றார்கள். அந்தக் கவசத்தை உஸ்மானிபுனு அப்பான் றலியல்லாஹு அன்ஹுவிற்கு 480 திர்ஹுக்கு விற்றார்கள். பின்பு உஸ்மான் றலியல்லாஹு அன்ஹு அக்கவசத்தை அலிறல்லாஹு அன்ஹு அவர்களுக்கே திருப்பிக்கொடுத்து விட்டார்கள். உடனே அலிறலியல்லாஹு அன்ஹு அந்தத் திர்ஹங்களையும் கவசத்தையும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களிடம் கொண்டுவந்து கவசம் விற்கப்பட்டதையும் அது மறுபடி திருப்பிக்கொடுக்கப் பட்டதையும் கூறினர்கள். அப்போது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் உஸ்மான் றலியல்லாஹு அன்ஹுவிற்கு துவாச் செய்தார்கள்.

அலிறலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள் "நான் அந்தத் திர்ஹங்களைக்கொண்டு வந்து நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய மடியின்மீது வைத்தேன். அவர்கள் அதில் ஒரு பிடியை யள்ளி பிலாலே! இதற்கு மணம் வாங்கிக்கொண்டு வாரும் என்றார்கள். அங்கிருந்த மற்றவர்களை பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவிற்கு சீதன சாமான் வாங்கிவரும்படி ஏவினர்கள் என்று.

(ஹதீது) அந்த ஒரு பிடியாகிறது மூன்றில் ஒரு பங்கு அல்லது கொஞ்சம் குறையவிருந்தது. அதை மூன்றில் ஒருபங்காக நிறப்பமாக்கி மணம் வாங்கச் சொன்னர்கள். மற்றதை சீதன சாமான் வாங்கச்சொன்னர்கள்.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது, நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அலி றலியல்லாஹு அன்ஹுவை நோக்கி திருவுளமானர்

கள். திடனாக அல்லாகுத் தஆலா பாத்திமாவை யுமக்குக்கலியாண முடித்துத் தரும்படி என்னை யேவினான். திடனாக அல்லாஹுத் தஆலா உமக்குப் பாத்திமாவை நானூறு கழஞ்சு வெள்ளியின் பேரில் கலியாணமுடித்துத் தரும்படி என்னை யேவினான். அப்போது யாரசூலல்லா பாத்திமாவைப் பொருந்திக்கொண்டேன் என்று அலி றலியல்லாஹு அன்ஹு சொல்லி, அல்லாஹுத் தஆலாவிற்கு சுக்ரு செய்ததற்காக சுஜூதில் விழுந்தார்கள். சுஜூதில் நின்றும் தலையை யுயர்த்தினபோது யாரகல்லாஹுலகுமா ஓபாரகா பீகுமா வஅ அஸ்ஸா ஜத்தகுமா வஅரக்ஜா மின்குமல் கதீரத்தையிப் (எஃனி) அல்லாஹுத் தஆலா உங்கள் இரண்டு பேருக்கும் பாகத்செய்வானாகவும். உங்களிலே பாகத்செய்வானாகவும். உங்கள்பேர் மர்த்தபாவைச் சிறப்பாக்குவானாகவும். உங்களில் நின்றும் மணமாகிய மிகுந்த பிச்சளத்தைப் புறப்படுத்துவானாகவும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் துவாஅ செய்தார்கள்.

---

## 16-ம் பஸல்.

### பாத்திமா நாயகத்தை அப்துர் றஹ்மான் பின் ஔப் பெண் பேசிய செய்தி.

ஒருநாள் அப்துர் றஹ்மான் பின் ஔப் ரலியல்லாஹு அன்ஹு பெருமைப்பாடாகிய உடுப்புகளை யணிந்துகொண்டு பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவைப் பெண்பேசுவதற்காக நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மிடம் வந்திருந்து பேசினார்கள். அப்போது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் யாதொன்றும் பேசவில்லை. அப்துர் ரஹ்மான் பின் ஔப் நாம் மஹர் இன்னதென்று சொல்லாததால் நாயகமவர்கள் பேசவில்லை யென்று எண்ணி பொன் வெள்ளி விலைமிகுந்த புடவைகள் முதலாவது நாற்பது ஒட்டகச்சுமை மஹர் தருகிறேன் என்று சொன்னார்கள். அதற்கும் நாயகம் அவர்கள் ஒரு பதிலும் சொல்லவில்லை. அப்போது மஹர் போதாதென்று ஜவாபு சொல்லவில்லை யென்றெண்ணி அதற்கு



இரட்டிப்பு தருகிறேன் என்று சொன்னார்கள். அதற்கும் பதில் சொல்லவில்லை. அப்போதும் அப்துர் ரஹ்மான் இன்னும் மஹர் பத்தாதென்றெண்ணி அதற்கு ஏழு பங்கு இரட்டிப்பு தருகிறேனென்று சொன்னார்கள். அப்போது நபிநாயகம் அவர்கள் இவர் இன்னும் அதிகமாய்ச் சொல்லுவார் என்றெண்ணி தங்கள் தலையை யுயர்த்தி "ரசூல் மகளை பணங்களைக்கொடுத்து எடுக்கலாமென்று அபேட்சை வைத்திருக்கிறீரோ? ஔபுடைய மகனே நீர் அறிந்திருக்கிறீரா? உமக்கு எவ்வளவு வேணும்? வேண்டியதை யெடுத்துக்கொள்ளும்" என்று சொல்லி தங்கள் முன்கையைப் பூமியிலடித்து உயர்த்தினபோது ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய விரல் இடைகளில் நின்றும் பூமியிலிருந்து இரத்தினங்கள் பொன் வெள்ளிகள் வெளியாகி நிரம்பின. அதைக்கண்ட அப்துர் ரஹ்மான் பின் ஔப் உடனே அவர்பாதங்களை முத்திமிட்டு நான் தெரியாமல் சொல்லி விட்டேன் என்று சொல்லி மன்னாப்பு கேட்டுக்கொண்டார்கள். அப்போது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் "நீர் இப்படி மன்னிப்புக்கேட்டா விடில் வானம் பூமி எங்கணும் இப்பொருள்கள் குவிந்து விடும்" என்று சொன்னார்கள். ஆகையால் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடைய மகர் ஒப்பின்பேரில் வைக்கப்பட்டதல்ல.

ஆனால், பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவிற்கு நானூறு கழஞ்சு வெள்ளி மஹர் வைத்தது அவர்களுக்கு மகர் மிஸ்லல்ல. ஏனெனில் யாரும் அவர்களுக்கு ஒப்புமில்லை உயர்வுமில்லை. ஆனதால் அது ஹக்குடைய உத்திரவின்படி வைத்த மகரல்லாது ஒப்பின்பேரில் வைத்த மகரல்ல.

---

## 17-ம் பஸல்.

### பாத்திமா நாயகத்தின் கலியாணத்தைக் கூறுவது.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குக் கலியாண முடிக்கிற இரவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பாத்திமா

நாயகி இடத்தில் கலியாணத்தைப்பற்றி கேட்டார்கள். அப்போது அவர்கள் "திடனாக நான் தனியாவை உவக்கமாட்டேன் என்று தாங்கள் அறிவீர்கள். என்கிலும் இந்த இரவில் என்னுடைய மிடிமையளவில் நோட்டமிடுகிறேன். அதாவது நீ என்ன கொண்டு வந்தாய் என்று அலி கேட்பாரென்று பயப்படுகிறேன்" என்றார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் உனக்குக் காரமானமுண்டாயிருக்கிறது. அலி பொருந்திக்கொண்டவராயும் பொருந்தப்பட்டவராயுமாகிவிட்டாரென்று சொன்னார்கள்.

அந்நாளில் மிகுந்த பணத்தையுடைய எஹூதியாகிய ஒரு பெண்பிள்ளையின் கலியாணத்திற்குப் பெண்பிள்ளைகள் அழைக்கப்பட்டார்கள். அப்போது அழைக்கப்பட்ட பெண்களெல்லாம் உயர்ந்த பெருமைப்பாடாகிய உடுப்புகளை அணிந்துகொண்டு போகும்போது முஹம்மதுடைய மகளையும் அவர்களுடைய மிடிமையையும் பார்க்கவேணுமென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு, பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டுக்கு வந்து அவர்களைப் பார்க்கக் கூப்பிட்டார்கள். உடனே ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் சொர்க்கத்தில் நின்றும் ஒரு உடுப்புகொண்டிறங்கினார்கள். அப்போது பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அதை அணிந்து மேல்போர்வை போர்த்துக்கொண்டு அந்தப் பெண்பிள்ளைகளுக்கிடையில் வந்திருந்து மேல்போர்வையை நீக்கினார்கள். உடனே அது ஒளிவிட்டு பிரகாசித்தது. அப்போது அந்தப் பெண்பிள்ளைகளெல்லாம் பாத்திமா இது எங்கே யிருந்து உங்களுக்கு வந்தது என்றார்கள். பாத்திமா என் தகப்பனில் நின்றும் வந்தது என்றார்கள். உங்கள் தகப்பனுக்கு எங்கே நின்றும் வந்தது என்று கேட்டதற்கு பாத்திமா ஜிப்ரீலில் நின்றும் வந்தது என்றார்கள். ஜிப்ரீலுக்கு எங்கே நின்றும்வந்தது என்றார்கள். பாத்திமா சொர்க்கத்தில் நின்றும் வந்தது என்றார்கள். உடனே அந்தப் பெண்பிள்ளைகளெல்லாம் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதர் றசூலுல்லா என்று கலிமா சொல்லி இஸ்லாமாகிவிட்டார்கள். அப்போது அவர்கள் புருஷர்களில் இஸ்லாமானவர்களோடு தரிபட்டார்கள். புருஷர்



இஸ்லாமாகாத பெண்டுகள் வேறே மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப் பட்டார்கள்.

---

## 18-ம் பஸல்.

### பாத்திமா நாயகத்துக்குச் சொர்க்கத்தில் நின்றும் பட்டுப் பிடவை ஹதியா வந்ததைக் கூறல்.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குக் கலியாண முடித்துக் கூட்டி அனுப்புகிற இரவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் புதிதாகிய ஒரு சட்டை தைத்துக் கொடுத்தார்கள். அதற்கு முன் அவர்களுக்கு அண்டைபோட்ட சட்டை ஒன்று உண்டாயிருந்தது. அந்நேரத்தில் ஒரு பகீர் வாசலில் வந்து நுபுவ்வத்துடைய வீட்டில் நின்றும் ஒரு பழஞ்சட்டை தேடுகிறேன் என்று சொன்னார். அப்போது பாத்திமா நாயகம் தங்களுடைய அண்டைபோட்ட சட்டையைக் கொடுக்க நாடினபோது அல்லாஹுத் தஆலா குர்ஆனில் நீங்கள் உவந்ததில் நின்றும் செலவு பண்ணுகிற வரையில் நலவைப்பெற்றுக்கொள்ளமாட்டீர்களென்று திருவுளமானதை நினைத்தார்கள். உடனே புதிதாகிய சட்டையை எடுத்து அந்த பகீருக்குக் கொடுத்துவிட்டார்கள். அப்போது பாத்திமா நாயகத்தைக் கூட்டி அனுப்புகிற வக்து நெருங்கிவிட்ட பொழுது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் சொர்க்கத்தினின்றும் இறங்கி முஹம்மதே திடமாக அல்லாஹுத் தஆலா உங்களுக்கு சலாம் ஓதிவைத்தான். பாத்திமாவின் பேரில் நான் சலாம் சொல்லும்படி எனக்கு ஏவினான். அவர்களுக்கு சொர்க்கத்துப் பிடவைகளில் மெல்லிய பச்சைப்பட்டில் ஹதியா என்னுடன் அனுப்பிவைத்தான் என்று சொல்லி ஸலாமையும் அவர்களுக்கு எத்திவைத்து தாங்கள் கொண்டுவந்த சட்டையும் அவர்களுக்கு உடுத்தாட்டினபொழுது சட்டையுடைய ஒளி கண் திறந்து பார்க்கவிடாதபடி பிரகாசித்ததால் நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் சட்டையின்மேலே கம்பளியை சுற்றினார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் தங்கள் சிறகு

களைக்கொண்டு சுற்றினார்கள். காபிரான பெண்பிள்ளைகளுக் கிடையில் அவர்களிருந்தபோது ஒவ்வொரு பெண்பிள்ளைகளுடனும் ஒவ்வொரு பந்தமும் உண்டா யிருந்தது. பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவுடனே ஒரு விளக்கும் உண்டா யிருந்தது. அப்போது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் தங்கள் சிறகையும் கம்பளியையும் நீக்கினார்கள். உடனே ஒளிகள் மஷ்ரிகு மக்ரிபெல்லாம் பிரகாசித்து எங்கும் ஒரே சோதிமயமாய்விட்டது. காபிராகிய பெண்பிள்ளைகளுடைய பார்வைகளின் பேரில் அப்பிரகாசம் விழுந்தபோது அவர்கள் கல்புகளில் நின்றும் குப்று நீங்கிவிட்டது. உடனே அவர்கள் கலிமா ஷஹாதத்து சொல்லி இஸ்லாமாகிவிட்டார்கள்.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது, நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹுக்கு பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவைக் கலியாண முடித்துக்கொடுத்தபோது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா யாரசூலல்லா என்னை பகீராகிய ஆண்பிள்ளைக்குக் கலியாண முடித்துக் கொடுத்தீர்கள் என்று சொன்னார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் "நீ பொருந்தவில்லையா, நிச்சயமாக அல்லாஹுத் தஆலா பூமியிலுள்ளவர்களில் நின்றும் இரண்டு ஆண்பிள்ளைகளைத் தெரிந்துகொண்டான். இரண்டிலொருவரை யுன்னுடைய தகப்பனாக்கினான். மற்றொருவரை யுன்னுடைய புருஷனாக்கினான்" என்று சொன்னார்கள்.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவிடம் வந்து அஸ்ஸலாமு அலைகி எப்னதாஹ் என்று சலாம் சொல்லி எப்படி யுங்களுக்குப் பொழுது விடிந்தது என்றார்கள். அப்போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அல்லாவினுடைய கொம்பலமாக விடிந்தேன். பசி என்னைத் தங்கடம் செய்துவிட்டது என்றார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அழுது "பயப்படாதிரும். அல்லாவின் ஆணை நான் மூன்று நாள் ஒஜீபனம் அருந்தவில்லை. நான் உம்மைக் காண அல்லாகுத் தஆலாவிடத்தில் கல்புகளில் நின்றும் மிகவும் நங்கை பெற்றவன். அல்லாஹுத் தஆலாவிடத்தில் நான்



கேட்டால் எனக்கு ஒஜீபனம் கொடுப்பான். என்றாலும் துனியாவைக் காண ஆகிரத்தைத் தெரிந்துகொண்டேன்" என்று சொல்லிப் பின்பு தங்கள் கையினால் அவர்கள் தோள் புயத்தில் தட்டி "நீ நல்மாராயம் பெற்றுக்கொள். உன்னைத் துனியாவிற்கும் ஆகிரத்திற்கும் நாயகமானவருக்குக் கலியாண முடித்தேன். உன்னுடைய பெரிய தகப்பன் மகன் அலியைக்கொண்டு போதுமாக்கிக்கொள். நீ சொர்க்கத்துடைய பெண்களுக்கெல்லாம் நாயகியா யிருக்கும்" என்றார்கள். அப்போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா பிர்ஒளனுடைய பெண்சாதியாகிய ஆசியா எங்கே, இம்றானுடைய மகள் மரியம் எங்கே யென்றார்கள். அதற்கு நாயகம் ஆசியாவாகிறது ஆசியாவுடைய ஆலத்துடைய பெண்டுகளுக்கெல்லாம் நாயகி. மரியமாகிறது மரியமுடைய ஆலத்துடைய பெண்டுகளுக்கெல்லாம் நாயகி. நீ உன்னுடைய ஆலத்துடைய பெண்டுகளுக்கெல்லாம் நாயகி" என்றார்கள்.

---

## 19-ம் பஸல்.

### பாத்திமா நாயகத்தின் சீதனத்தைப்பற்றிக் கூறுவது.

பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குக் கொடுத்த சீதனமாகிறது இரத்தினக் கம்பளமும் தண்ணீர் கிர்பாவும் (துருத்தி) ஈச்சம் ஓலையைத் திரித்துப் பின்னப்பட்ட கட்டிலும் உள்ளே ஈச்சம் சருகு வைக்கப்பட்ட தோல் தலையணையுமாம். இன்னம் இரண்டு கித்தான் பெத்தைகள்; ஒன்றுக்குள் ஈச்சம் சருகும் மற்றொன்றுக்குள் தோலறுந்த கூளமும் வைக்கப்பட்டதென்றும், நான்கு தலையணைகள் இரண்டில் ஈச்சம் சருகும் இரண்டில் ஆட்டு உரோமமும் வைக்கப்பட்டிருந்ததென்றும் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் சித்துகள் உள்ள புருதென்னும் இரண்டு ஜாமாவும், மஹம்மல் என்னும் வில்லூரும், சாய்மான திண்டும், தண்ணீர் சாலும், தண்ணீர்

குடிக்கிற கொடோராவும், மரக்குண்டாவும், கொடுங்கையில் கட்டு கிற வெள்ளி பாஜிபந்தும், இதுபோலொத்ததும் அனுப்பினார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதுகளெல்லாம் அவர்களுக்குச் சீதன மாயிருக்கும்.

அனஸ் றலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும் வந்திருக் கிறது, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்தில் யாரசூலல்லா திடனாக எனக் கும் என் பெரிய தகப்பன் மகனாகிய அலியாரவர்களுக்கும் ஆட்டுத் தோலைத் தவிர வேறே விரிப்பில்லை. இரவில் அதின்பேரில்தான் நாங் கள் நித்திரை செய்கிறோம். பகலில் அதன்பேரில்தான் எங்களுக் குத் தண்ணீர் சுமக்கிற ஒட்டகத்திற்குத் தீனிவைக்கிறோம் என் றார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அருமை மகளே சபூர் செய்துகொள். இம்ரானுடைய மகன் மூஸா அலை ஹிஸ்ஸலாம் தங்கள் பெண்சாதியுடனே பத்து வருடம் இருவர்க் கும் கட்டை கட்டையான சுணைபுள்ள ஒரு வெள்ளைக் கம்பளம் தவிர வேறொன்றுமில்லாமலே யிருந்தார்கள் என்று திருவுளமா னார்கள்.

இன்னும் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களைக் கலியாணமுடித்து அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களளவில் கூட்டியனுப்பிய பின் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மூன்று நாள் கழித்து நாலாம் நாள் குளிரான காலை நேரம் அவர்களிடம் போனார்கள். அப்போது இருவரும் ஒரே துப்பட்டியைப் போர்த் துக்கொண்டிருந்தார்கள். நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் கள் நீங்கள் அப்படியே யிருங்களென்று இருவருடைய தலைப்புறத் தில் போயிருந்து தங்களுடைய இரு பாதத்தையும் இரு கெண் டைக்காலையும் இருவருக்கிடையில் புகுதவைத்தார்கள். அப்போது அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு பாதத்தை யெடுத்து தங்கள் நெஞ்சின் பேரிலும் வயற்றின் பேரிலும் காலுக்குச் சூடுண் டாவதற்காக வைத்துக்கொண்டார்கள். பாத்திமா றலியல்லாஹு அன்ஹா மற்றொரு பாதத்தை யெடுத்து அம்மாதிரியே தங்கள்



நெஞ்சின்பேரிலும் வயற்றின்பேரிலும் வைத்துக்கொண்டார்கள். அப்போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா கிதமத்துக்கு ஒரு ஆள்வேண்டுமென்று பாவாபிடம் கேட்டார்கள். அதற்கு நாய கம் அவர்கள் தஸ்பீஹு (சுபுஹானல்லா) சொல்வது கொண்டும் தஹ்மீது (அல்ஹம்து லில்லா) சொல்வது கொண்டும், தக்பீர் (அல் லாஹு அக்பர்) சொல்வது கொண்டும் ஏவினார்கள்.

இன்னும் அலி றலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும் வந் திருக்கிறது, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா திரிகை திரித்து திரிகையுடைய அதர்ச்சியால் தாங்கள் அடைந்த வருத்தத்தைக் கூறியபோதும் நீங்கள் இருவரும் இரவில் நித்திரை செய்யத் தொடங்கினால் தக்பீர் 33, தஸ்பீஹ் 33, தஹ்மீது 33 சொல்லிக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு காதிமைக்கான (அடிமை) ஏத்த மாயிருக்கும் என்று சொன்னார்கள்.

---

## 20-ம் பஸல்.

### இது புருஷன் பெண்ணுக்கிடையில் நடந்த செய்திகளை வெளியில் பேசுவதனாலுண்டாகும் கெடுதியைக் கூறுவது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஜிமாவு செய்துவிட்டு, ஒருவர் மற்றொருவருடைய ஸிர்றை பேசும் புருஷனும் பெண்ணும் அல்லாஹுத் தஆலாவிடத்தில் கியாமத் தில் மனிதரில் மெத்த தீங்குடையவர்களா யிருப்பார்கள்.

அஸ்மா றலியல்லாஹு அன்ஹா சொன்னார்கள், ஒருநாள் ஆண்டவர்களிடம் ஆணும், பெண்ணும் கூடியிருக்கையில் சொன் னார்கள், ஒரு புருஷன் பெண்ணுடனே செய்ததையும், ஒரு பெண் புருஷனுடனே செய்ததையும் அவர்கள் வெளியில் பேசிக்கொண்டி ருக்கலாமென்று சொன்னார்கள். அப்போது ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. நான் அப்படி நடக்குதென்று சொன்னேன். அப்

போது ஆண்டவர்கள் நீங்களப்படிச் செய்யவேண்டாம், அப்படிப் பேசுகிறவர்கள் மனிதர் பார்த்திருக்க ஒன்றுக்கொன்று புணரும் ஷைத்தானைப்போலா யிருக்குமென்று சொன்னார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், உங்களில் ஒருவன் "நான் ஜிமாவில் மெத்த குவ்வத்துடையவன், மிகுநேரம் உட்கார்ந்தேன்" என்று சொல்வது அவன்பேரில் ஹறாமாயிருக்கும்.

## பாயிதா.

ஜிமாவு செய்த விபரத்தையும், சுசம் பாராட்டின கருமங்களையும், புருஷன் அல்லது பெண் வெளியில் சொல்வது ஹறாம், ஜிமாவு செய்ததை மாத்திரம் சொல்வது மக்றூஹ்.

---

# 21-ம் பஸல்.

## இது பெண்பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளிப் புறப்படுகிறதை விலக்குகிறதைப்பற்றிக் கூறுவது.

அல்லாஹுத் தஆலா குறாஆனிலே திருவுளமானான், பெண்களே நீங்கள் வீட்டடங்கியிருங்கள். முந்தின மடையர்களான கூட்டங்கள் வெளிப்புறப்பட்டதுபோல், நீங்களும் வெளிப்புறப்படாதேயுங்கள், தொழுங்கள், ஸக்காத்து கொடுங்கள், அல்லாவுக்கும் அவனுடைய றசூலுக்கும் வழிப்படுங்களென்று திருவுளமானான்.

## ஹதீது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். பெண்பிள்ளை ஔறத்தாயிருக்கும், அவள் வீட்டைவிட்டுப் புறப்பட்டால் ஷைத்தான் அவளை எட்டிப் பார்ப்பான். இன்னும், அவள் நாயனுக்கு மிகவும் முடுகுதலாயிருப்பது, அவள் வீட்டடங்கி யிருக்கும்போதிலா யிருக்குமென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஒரு பெண்பிள்ளை புருஷனுடைய பொருத்தமில்லாமல் வெளிப்



புறப்பட்டால், அவளை வானத்தில் உண்டாயிருக்கும் மலக்குகளெல்லாம் லஃனத்துச் செய்வார்கள். இன்னும் திருவுளமானார்கள், ஒரு பெண்பிள்ளை மணம் பூசிக்கொண்டு, அவளுடைய வாடையை யாவரும் காண்பதற்காக ஜனங்கள் எதிரில் நடந்தால் அவள் ஸினாச் செய்கிறவளா யிருக்குமென்று திருவுளமானார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். நான் நரகத்திலுதயமாகிப் பார்த்தேன். நரகத்திலுள்ளவர்களில் மிகுந்தவர்கள் பெண்பிள்ளைகளாகக் கண்டேன், ஏனெனில் அவர்கள் அல்லாவுக்கும், றசூலுக்கும் வழிப்படுவது குறைந்ததாகவும், வெளிப்புறப்படுவது மிகுதமாகவு மிருப்பதாலும், இன்னும் அவர்கள் வீட்டைவிட்டும் வெளிப்புறப்பட நாடினால் பெருமையான உடை யுடுத்தி, பகட்டி, சோடித்து மனிதரைப் பித்தனாக்கினவர்களாய்ப் புறப்படுவார்கள். அவர்கள் தங்களுடைய நடுவில் ஸலாமத்து பெற்றாலும், மனிதர் அவர்களை விட்டும் ஸலாமத்து பெறார்களென்று திருவுளமானார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், நான் சொர்க்கத்தைப் பார்த்தேன், அதிலுள்ளவர்களில் பெண்பிள்ளை குறைவா யிருப்பதைக்கண்டு கேட்டேன். அவர்களைப் பொய்யும், சாயங்காச்சின சேலையும் சொர்க்கத்தை விட்டும் பாறாக்காக்கி விட்டதென்று சொல்லப்பட்டது.

## ஹதீது.

பெண்பிள்ளை ஔறத்தாயிருக்கும். அவளை வீட்டில்தடுங்கள். அவளை வெளியில் கண்டு நீ எங்கே போகிறாயென்று கேட்டால், நஸலாளியை மினவ அல்லது மையத்து வீட்டுக்குப் போகிறேனென்பாள். நீங்காமல் அவள் தன்னுடைய கொடுங்கையை வெளியில் காட்டுமட்டும் ஷைத்தான் அவளுடனே யிருப்பானென்று கூறப்படுகிறது.

## ஹிக்காயத்து.

ஹாதில் குலுபென்னும் கித்தாபில் வருகின்றது, முந்தின சாலிஹீன்களில நின்று மொருவர் வெளியிலிருந்து வீட்டுக்கு வந்

தார்கள். பெண்ஜாதி உத்திரவன்றி வீட்டைவிட்டுப் வெளிப் புறப்பட்டிருக்கிறதைக் கண்டு அவளைத் தலாகு சொல்லிவிட்டார்கள். பின்பு அவள் வந்து கேட்டதற்கு சொன்னார்கள். எந்தப் பெண்பிள்ளையாவது புருஷனுடைய உத்திரவன்றி வீட்டை விட்டும் வெளிப்புறப்பட்டால் அவளை எழுபதினாயிரம் மலக்குகள் லஃனத்துச் செய்வார்களென்று வருகின்றது. ஒருத்திக்கு எழுபதினாயிரம் லஃனத்துப்பிடித்திருக்க அவள் என் வீட்டிலிருக்கிறதும், அந்த லஃனத்தில் சிலது என்னைத் தொடுவதும் தகாதென்று சொல்லிவிட்டார்கள்.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், எந்தப் பெண்பிள்ளையாவது விரிப்பில் தன்னுடைய புருஷனுக்கு சதிமானஞ்செய்தால் அவள்பேரில் இந்த உம்மத்துமாரில் பாதி பேருடைய பாவமுண்டென்று திருவுளமானார்கள்.

இன்னும் இதைச்சார்ந்த சில அஹ்க்காம் ஹதீதுகளும் ஹைஹு முஹுக்கின் அஹக்சாம் ஹதீதுகளும் பின்னால் எழுதப்படும்.

---

## 22-ம் பஸல்.

### இது இல்முல் கியாபா, இல்முல் பருசத்து என்னும் இல்முகளைப் பற்றிக் கூறுவது.

இந்த இல்முகள் மிகவும் சிறப்புள்ள இல்முகளாக விருக்கின்றன. அதாவது அங்கத்தின் உறுப்புகளின் குறிப்புகளைக்கொண்டு மனிதருடைய குணங்களை யறிவதைப்பற்றிக் கூறுவது. இந்த இல்மில் காமிலீன்களாகிய தேர்ந்த பெரியோர்கள் ஒருவர் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் நற்குணசாலி யென்றும், அல்லது துர்க்குண சாலி யென்றும் அறிந்துகொள்கின்றார்கள். நாமும் விரும்பில் திட்டமா யறியலாம்.

ஆகையால் ஷெ இல்மானது இரண்டு பலனைத் தருகின்றது. அதில் முதலாவது, தன்னிலுண்டாயிருக்கும் உறுப்பின் குறிப்பு



களைக்கண்டு அதனாலுண்டாகும் கெட்ட குணங்களா யிருப்பதை விட்டுவிடவும், இரண்டாவது, அன்னியர்களுடைய அங்கங்களின் அடையாளங்களைப் பார்த்து அவர்களுடைய கெடுதியில் நின்றும் விலகி யிருக்க உதவியாகின்றது.

இன்னும் இந்த இல்மின் உண்மைக்கு அத்தாட்சியாக இந்த ஹதீது சாட்சியாகின்றது. அதாவது நம்முடைய ஆண்டவர்கள் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள். செட்டையர்களில் அபூபக்ரினிஸ் ஸித்திக் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் மடையர்களென்றும், குட்டையர்களில் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் பித்துடையவர்களென்றும் திருவுளமா யிருக்கின்றார்கள். ஆகையால் ஹுகமா வென்னும் தத்துவ சாஸ்திரிகள் சொல்லியபடி இல்மின் கியாபாவை எழுதத் துடங்குகின்றோம்.

---

## 23-ம் பஸல்.

### இது தலை நெற்றியின் குறிகளைப்பற்றி கூறுவது.

தலையின் குறிகள் பெருந்தலையாகவும், உருண்டையாகவும், மயிர் அடர்த்தியாயுமிருப்பது, புத்திமதி, அறிவு, உணர்ச்சி, தைரியம், தர்மம் இவைகளின் அடையாளமாகும். சிறு தலையாகவும் அவலட்சணமானதாய் மயிர் பரவலாயு மிருப்பது மடத்தனம், மூடத்தனம், அறிவீனம் இவற்றி னடையாளமாகும்.

நெற்றி அதிக உயரமாய் சுருக்குமும், வரைகளும் இல்லாம லிருப்பது, துர்க்குணம், பெருமை, கர்வம், இதுகளி னடையாளமாகும். நெற்றி அகலத்திலும், உயரத்திலும், நடுத்தரமானதாயும் சுருக்கங்களும், வரைகளு முண்டா யிருப்பது, அன்பு, உண்மை, விவேகம், நல்லதிஷ்டம், யோஜனை, புத்தியி னடையாளங்களாகும்.

ஒடுக்கமாகிய அகலமற்ற நெற்றியாயிருப்பது வறுமையும், வறட்சியும், ஆண்மையற்ற வெட்கங்கெட்ட தன்மையி னடையாளமாகும். நெற்றி முழுமையும் வரையும், சுருக்கமுமுண்டா யிருப்பது, அதிக கோபமும், அகங்காரத்தின் அத்தாட்சியுமாகும். இன்னும் சிலர் நெற்றியில் வரை யுண்டா யிருப்பது நீண்ட வயதின் அடையாளமாகின்றது. (எஃனீ) ஒருவரை யுண்டாயிருந்தால் (10) வயதுக்கு சாக்ஷியென்றும், இரண்டுவரை யுண்டாயிருந்தால் (20) வயதுக்கு சாக்ஷியென்று ஆதற்குமேல் இதுபோல் ஒவ்வொருவரைக்குப் பத்துவயதாய் கணக்கிட்டு உத்தேசித்துக் கொள்ளவுமென்று சொல்லியிருக்கின்றது..

## 24-ம் பஸல்.

### இது புருவம், கண்ணின் குறிகளைப்பற்றியது.

அதாவது புருவங்கள் பருத்ததாயும் சவுக்கைப்போல் நீண்டதாயும், மயிர்கள் அடர்த்தியாயு மிருப்பது, துர்க்குணம், தானென்கிற அகங்காரம், மிடிமை, பெருமை இதுகளி னடையாளமாகும். புருவமிரண்டும் ஒன்றோடொன்று சேர்மானமா யிருக்குமானால் அன்பு, ஆசை, பிரியம் இதுகளி னடையாளமாகும். ஆண்பிள்ளையானால் பெண்கள் மீது அதிக பிரியமுள்ளவனும், பெண்பிள்ளையானால் புருஷர்கள் மீது அதிக இஷ்டமுள்ளவளாயு மிருப்பார்கள். இன்னும் மூக்கின் ஓரம் புருவத்தின் நுனி கூரா யிருந்தால் பகை வன்மத்தி னடையாளமாகும். இன்னும் புருவங்கள் உயரமாயிருப்பது மடத்தனமும், ஆணவமும், புருவத்தின் மயிர்கள் நீண்டதாயிருப்பது, வீரதத்துவமும், துர்க்குணமும் போர்செய்கிறதி னடையாளமுமாகும்.

(கண்ணின் குறிகள்) பெருங்கண்களாகவும், கறுப்பாயு மிருப்பது, சோம்பல், சோர்வு இதுகளி னடையாளமாகும். சிறுகண்ணாயிருப்பது அவமானம், மடத்தனம் இதுகளி னடையாளமாகும். நடுத்தரமான கண்ணாயிருப்பது நாணம், விசுவாசத்தி னடையாள



மாகும். உள்ளடங்கிய பதிந்த கண்ணாயிருப்பது, பெருமை, கெடுதி, எத்து, கள்ளத்தனமான துர்க்குணத்தி னடையாளமாகும். அகன்ற கண்களாகவும், தளதளப்பு இல்லாமல் மங்கலாயுமிருப்பது லோபித்தனம் அவமானத்தி னடையாளமாகும். அதிக சீக்கிரமாய் கண் சிமிட்டுவது கள்ளத்தனம், வஞ்சகம், சூது. இதுகளி னடையாளமாகும். பெருங்கண் செந்நிறமாயிருப்பது நீண்ட ஆயிசு, வீரதத்துவத்தி னடையாளமாகும். இன்னம் பூனைக்கண்ணாயிருப்பது அவமானம், பிசநாரித்தனம், ஈனங்கெட்ட தைரியமில்லாத் தன்மையி னடையாளங்களாகும். நீலவர்ணமுள்ள சிறுகண் துடிதுடிப்புள்ளதாகுமானால் வெப்புத்தனம், காமப்பயித்தியத்தி னடையாளமாகும். வட்டமான கண் மூதேவித்தனத்தி னடையாளமாகும். பெருப்பத்திலும், சிறுப்பத்திலும், சிவந்த கறுப்பிலும், நீட்டம் போக்கிலும், நடுத்தரமான கண்ணானது, சற்குணம், நல்லொழுக்கம், நல்லதிஷ்டத்தி னடையாளமாகும்.

## 25-ம் பஸல்.

### இது காது, மூக்கின் குறிகளைப்பற்றிக் கூறுவது.

பெருங்காதாயிருப்பது நல்லெண்ணம், ஞாபகசக்துவம், தீர்க்க ஆயுசு, சுறுசுறுப்பு இவைகளி னடையாளமாகும். இன்னும் சிறிய காதாயிருப்பது, மடத்தனம், தெம்மாடித்தனத்தி னடையாளமாகும். நடுத்தரமான காதாயிருப்பது புத்திமதி, அறிவு, நல்ல பாக்கியத்தி னடையாளமாகும். காதின் மடல்கள் சதை உள்ளதாயிருப்பது செல்வத்தி னடையாளமாகும்.

(மூக்கின் குறிகள்). மெல்லிய மூக்காயிருப்பது அல்பதனம், அறிவீனத்தி னடையாளமாகும். அகலமான மூக்காகவும், நாசித் துவாரம் பெரிதாகவுமிருப்பது அதிக காமத்தின் பெருங்கோபத்தி னடையாளமாகும். இன்னும் திருகலான மூக்கு, கள்ள ஆச்சாரம், குறும்புத்தனத்தி னடையாளமாகும். நீண்ட பெரு மூக்காயும், நுனி கிளிமூக்கைப்போல் வளைவாயு மிருப்பது பெரும்

பாக்கியத்தி னடையாளமாகும். மூக்கின் நடு தாழ்ந்திருப்பது வறுமை, கைவரக்ஷியி னடையாளமாகும்.

---

## 26-ம் பஸல்.

### இது உதடு, வாய் பல்களின் குறிகளைப்பற்றியது.

உதடு தடிப்பாயிருப்பதுபுத்திஹீனம், துராகிருதம், துரோகம் இவைகளின் குறிகளாகும். மெல்லிய இதழ் விவேகம், மதுரவாக்கியம், சற்குணத்தி னடையாளமாகும். சிவந்த இதழ் நல்லதிஷ்டத்துடன் சந்தோஷத்தி னடையாளமாகும். இன்னும் இதழ் நீலமாயும், கறுப்பாயுமிருப்பது துர்க்குணம், துஷ்டத்தனத்தினடையாளமாகும்.

(வாயின் குறிகள்) விசாலமாகிய வாய் ஆண்பிள்ளைகளுக்கு வீரதத்துவத்தின் குறியாகும். பெண்பிள்ளைகளுக்கு அதிக காமத்தின் குறியாகும். நெருக்கமாகிய வாய் அச்சம், பயம் இவைகளி னடையாளமாகும்.

(பற்களின் குறிகள்) பெரும்பற்களாகவும், நெருங்கினதாகவுமிருப்பது துஷ்டத்தனத்தி னடையாளமாகும். சிறுபற்களாகவும், பற்களுக்கிடையில் நீக்கலுமுண்டாயிருப்பது திரேக சவுக்கியம் உண்டாயிருப்பதி னடையாளமாகும். பற்கள் இருகலாயிருப்பது கபடம், சூதுவாதுகளி னடையாளமாகும். பெரிதிலும், சிறிதிலும் நடுத்தரமானதாயும், வரிசைபோல் அடுக்காயுமிருப்பது நல்லதிஷ்டம், நீதி விசுவாசத்தி னடையாள மாகும். பற்கள் முப்பதுக்குமேல் முப்பத்திரண்டு வரையிலுண்டாயிருப்பது பாக்கியம் புத்தியறிவினடையாள மாகும். முப்பதுக்குக் குறைவாயிருப்பது தரித்திரத்தி னடையாளமாகும்.

---



## 27-ம் பஸல்.

### இது நாவு, அண்ணம், கீழ்வாய், கழுத்து, முகத்தின் குறிகளைப்பற்றியது.

---

நாவும், அண்ணமெனும் மேல்வாயும், சிகப்பாயிருப்பது யோகசாலித்தன்மையி னடையாளமாகும். கருப்பாயும் மஞ்சளாயுமிருப்பது நிர்ப்பாக்கியத்தினடையாள மாகும்.

கீழ்த்தாவாயானது மெலியதாவாயாக விருப்பது மதுரவாக்கும், சதையுள்ளதாயிருப்பது தெம்மாடித்தனம், பெருமை பாராட்டு மடையாமாளம். நடுத்தரமானதாயிருப்பது யோகம், கைத்தொழில், வித்தை இவைகளினடையாள மாகும்.

கழுத்தாகிறது கட்டை கழுத்தானால் சூது, வாது, வஞ்சகம், திருட்டுத்தனமும், மெல்லிய நீண்ட கழுத்தானால் வீரதத்துவமில்லாத்தன்மையினடையாள மாகும். தடிப்பாகிய கழுத்து உண்மைநீதியினடையாளமாகும். கழுத்தில் ஒருவரை யுண்டாயிருப்பது நீண்ட ஆயுசும், இரண்டுவரை யுண்டாயிருப்பது கைத்தொழில் கூர்மையும், மூன்றுவரை யுண்டாயிருப்பது பெருஞ்செல்வத்தி னடையாளமு மாகும்.

முகம் சதையுள்ளதா யிருப்பது சோம்பல், ஞாபகமறதி, மடத்தனம் இவைகளினடையாள மாகும். சதையும் தளதளப்புமில்லாமல் வறட்சியுள்ள முகம் கபடத்தினடையாளமாகும், லக்ஷணமுள்ள முகமானால் நற்குணத்தி னடையாள மாகும்.

---

## 28-ம் பஸல்.

### இது தோள், அக்குள், பின்னங்கை, மார்பு இவைகளின் குறிகளைப்பற்றி கூறும்.

(தோளி னடையாளமானது) தோள் மெலிவாயிருப்பது கெட்ட அப்பியாசமும், அகன்றதோள் மடத்தனமும், தோளின்

மீது மயிர் முளைத்திருப்பது நிர்பாக்கியமும், நடுத்தரமான தோள் அறிவு, பாக்கியம், நல்லதிஷ்டம் இவைகளினடையாளமு மாகும்.

(அக்குள், பின்னங்கையின் குறிகள்) அக்குள் சதைபுள்ளதாயும், பின்னங்கை தண்டு நீளமாயுமிருப்பது யோகசாலித்தனத்தையும், தொழில் விர்த்தியையும், அக்குள் வறட்சியும், பின்னங்கை கட்டையாயு மிருப்பது செல்வ மில்லாத் தன்மையையும் குறிக்கும்.

மார்பு விசாலித்ததாயும், சதைபுள்ளதாயு மிருப்பது நற்பாக்கியத்தி னடையாளமும், குறுகிய மார்பும், சதையில்லாமலிருப்பதும், மிடிமைத்தனத்தி னடையாளமுமாகும்.

---

## 29-ம் பஸல்.

### இது ஸ்தனம், வயிறு, தொப்புள், முதுகு இவைகளைப்பற்றிக் கூறும்

இரு ஸ்தனமும் அதிகமாய் பெருத்திருப்பது பாக்கியமும், புத்திரசந்தான விர்த்தியும், இன்னும் ஒன்று பெருத்தும், ஒன்று சிறுத்து மிருப்பது ஈன அதிஷ்டமும் ஆகிய குறியாம்.

(வயிறு) பெரும் வயிறு மதிகேட்டையும், நடுத்தரமானவயிறு தெளிவான புத்தியையும், கூர்மையான அறிவையும், இன்னும் வயிற்றின்மேல் ஒருவரை யுண்டாயிருப்பது கத்தியால் வெட்டுப்பட்டு மௌத்தாவதி னடையாளத்தையும், இரண்டுவரை ஆண்பிள்ளையானால் பெண்போகத்தில் மிகுதி ஆசையுள்ளவனையும், பெண்பிள்ளையானால் ஆண்போகத்தில்மிகுதி ஆசையுள்ளவளாயும் இருப்பார்களென்பதையும், மூன்று அல்லது நான்கு ஐந்துவரை யுண்டாயிருந்தால் அறிவு கல்விகளி னடையாளங்களையும், வரை யில்லாமலிருப்பது அரசாட்சியி னடையாளத்தையும் குறிக்கும்.

தொப்புள் பெரிதாயிருப்பது நற்பாக்கியம் நல்லதிஷ்டத்தி னடையாளமாகும்.



(முதுகு) அகலமாகிய முதுகு பெருங்கோபமும் அதிக பெருமையும், வளைந்தமுதுகு கெட்ட ஆகத்தும், நீண்டமுதுகு மூதேவித்தனமும், நடுத்தரமான முதுகு நற்பாக்கியம் நல்லதிஷ்டமும் காட்டும் அடையாளங்களாகும்.

---

## 30-ம் பஸல்.

### இது நிறம் உடல் உரோமம் இவைகளைப்பற்றி கூறுவது.

(நிறம்) சிவந்தநிறம் படபடத்த பேச்சும், மனவருத்தமடையும் தன்மையுமாம். பசுமையான நிறம் நெஞ்சில் வஞ்சகமாம். சிவந்த வெண்மையான நிறம் சற்குணமாம். சிவந்த நிறம் கருப்பு கலந்ததாயிருந்தால் துர்க்குணமாம். கோதுமைப்போல் பழுத்த நிறம் அறிவு நற்பாக்கியம் இவைகளின் அடையாளங்களாகும்.

உடலின் குறியாவது, மெதுவான உடல், திறமானபுத்தியும் நாகரிகமான வார்த்தையுமாகும், உரமான பலத்த உடல் மதிகேட்டி னடையாளமாகும்.

உரோமத்தின் அடையாளமாவது, அதிக அழுத்தமான உரோமம் வீரத்துவத்தி னடையாளமாகும். அதிக மிருதுவான உரோமம் கோழைத்தனத்தி னடையாளமாகும். அதிக மிருதுவாயும் அழுத்தமாயுமிராத நடுத்தரமான உரோமம் வெளிரங்கமும் உள்ரங்கமும் உத்தமமாயிருப்பதற் கடையாளமாகும். மார்பின் மீதிலும் வயிற்றின்மீதிலும் உரோமமதிகமாயிருப்பது மதிகேட்டி னடையாளமாகும். உரோமம் கம்மியாயிருப்பது விவேகம் கூர்மை யிவைகளி னடையாளமாகும். சிவந்த உரோமம் வீரியம் நிதானமான புத்தியி னடையாளமாகும் இன்னும் ஒரு ரோமக்காலில் ஒன்றும் இரண்டுமாயிருண்டா யிருப்பது சாமார்த்தியத்தி னடையாளமாகும். மூன்று உரோமமுண்டாயிருப்பது தொழுகைவணக்கத்தி னடையாளமாகும். நாலுஉரோமம் ஒரேமொத்தமா யுண்டாயிருப்பது சமத்தில்லா எளியதனத்தி னடையாளமாகும்.

## 31-ம் பஸல்.

### இது குரல், சிரிப்பு, சரீரபரிமாணம், நடை இவைகளைப்பற்றிக் கூறுவது.

குரலின் அடையாளமாவது பெருங்குரலாகவும், வலுத்தசப்தமாகவு மிருப்பது ஆண்மைத்தனத்தி னடையாளமாகும். மெல்லிய மிருதுவாகிய குரல் சற்குணத்தி னடையாளமாகும். மூக்கினால் பேசுவது ஆணவம், செருவம் இவைகளி னடையாளமாகும். அர்த்தமில்லாத கெட்ட வண்ணம் மதிகேட்டி னடையாளமாகும், மிருதுவாயும் மதுரமாயும் பேசுவது புத்திமதியி னடையாளமாகும். பேசலிலே அதிக ஜல்தியுடன் படபடப்பாய் பேசுவது கெட்ட ஆதத்தி னடையாளமாகும். இன்னம் பேசும்போது கையாட்டி பேசுவது அறிவு உணர்ச்சியி னடையாளமாகும்.

(சிரிப்பு) கிளுகிளுவென சிரித்தல் வெட்கமில்லாத் தன்மையி னடையாளமாகும். புன்சிரிப்பாய் சிரிக்குதல் மானம், மேன்மை, கன்னியம் இவைகளி னடையாளமாம்.

(சரீரபரிமாணம்) நெட்டையா யிருப்பது மடத்தனத்தினடையாளமாகும். குட்டையா யிருப்பது தீங்கு கெடுதியி னடையாளமாகும். கூன்விழுந்தவ யிருப்பது பகைவன்மத்தி னடையாளமாகும். உயரம்நடுத்தரமா யிருப்பது அறிவுவிவேகத்தி னடையாளமாகும். அவரவர்களுடைய கை அங்குலத்திற்கு நாற்பியிருபது அங்குலம் உயரமாயிருப்பது அதிக நலமென்றும் அதற்கு எவ்வளவு கம்மியாயிருக்குமோ அவ்வளவு கெட்டதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

(நடை) மெதுவாய் நடப்பது பெரியோர்களின் குணமும், கெடுதி பேசுவதி னடையாளமுமாகும். நடக்கும்போது இடுப்பையு மிருப்பையும் அசைத்து நடப்பது இடுப்பு உளைவின் வியாதியாகும். இன்னும் கடிசான நடையாகிறது அகோரமாகிய கோபம் மடத்தனத்தினடையாளமாகும். மெதுவாகிய நடை துக்கத்தி னடையாள



மாகும். நடுத்தரமாகிய நடை உள்ரங்கம் வெளிரங்கம் நன்மையி னடையாளமாகும். நடக்கும்போது பூமியின்மீது கடிசாக காலடித்து நடப்பது துர்பாக்கியத்தி னடையாளமாகும். அடி தூர தூரமாய் வைத்து நடப்பது மடத்தனம் புத்தியீனத்தின் அடையாளமாகும்.

---

## 32-ம் பஸல்.

### இது உள்ளங்கை, விரல், நகம் இவைகளைப் பற்றி கூறுவது.

(உள்ளங்கை) உள்ளங்கை தடித்திருப்பது வாழ்க்கையினடையாளமாகும். சிவந்திருப்பது சிறந்த குணத்தி னடையாளமாகும்; மஞ்சள் நிறமாயிருப்பது அயோக்கியம், அவமானம் இவைகளி னடையாளமாகும். வெண்மையாகவும் கருப்பாயுமிருப்பது கெட்ட விதியினடையாளமாகும். அதிகமாய் வரைகளுண்டா யிருப்பது பெருங்கெடுதியி னடையாளமாகும். வரைகள் அதிகமாகாமலும் கம்மியாகாமலும் நடுத்தரமா யிருப்பது நல்லதிஷ்டம் நல்லொழுங்கி னடையாளமாகும்.

(கைவிரல்கள்) நீண்டவிரல்கள் நிறைந்த வயதி னடையாளமாகும். மெல்லிய மிருதுவாகிய விரல்கள் நல்லதிர்ஷ்டம், நற்பாக்கியம் இவைகளி னடையாளமாகும். தடித்த அழுத்தமாகிய கோணிய விரல்கள் பரிஷ்காரமாய் பொல்லா விதியி னடையாளமாகும். விரல்களைச்சேர்த்துப் பார்க்குமளவில் விரல்களுக்கிடையில் சந்து தோன்றினால் பாக்கிய மில்லாத்தன்மையும் வீண்செலவு செய்வதி னடையாளமாகும். சந்து தோற்றவிட்டால் பொருள் சேகரமாகிறதி னடையாளமாகும்.

(நகங்கள்) நகங்கள் சிவந்த நிறமா யிருப்பது கல்வி விவேகம் காசு பணமுண்டா யிருப்பதி னத்தாட்சியாகும். நகங்கள் கருத்தாயும் மஞ்சள் நிறமாயு மிருப்பது மிடிமை பொல்லாவித சஞ்சலம் இவைகளி னடையாளமாகும்.

## 33-ம் பஸல்.

### இது துடை, கெண்டைக்கால், கணுக்கால் குதிக்கா இவைகளைப்பற்றி கூறுவது.

(தொடை கெண்டைக்கால்) தொடை அதிக சதை யுள்ளதாயிருப்பது ஆண்பிள்ளை யானல் பெண்ணுடன் கூடிக் குலாவி சுகத்தை அனுபவிப்பான். பெண்பிள்ளையானல் புருடனுடன் மகிழ்வுடன் வாழ்ந்திருப்பாள் என்பதி னடையாளமாகும். தொடை மேல் மயிர்க ளுண்டாயிராமல் அழுத்தமாயிருந்தால் பாக்கியத்தி னடையாளமாகும்.

கெண்டைக்கால் தடிப்பாயும் ரோமங்களுண்டாகியுமிருப்பது ஏறுவாகனமில்லாமல் அதிகமாய் கால் நடைநடக்கும் தன்மையும் கைவறண்ட தன்மையி னடையாளமுமாகும். நீட்டிப்போக்காகிய கெண்டைக்கால் கெடுதி நினைக்கு மடையாளமாகும். அதிக சிறிதாகிய கெண்டைக்கால் வறுமையி னடையாளமாகும். நீட்டிலும் குறுக்கிலும் தடிப்பிலும் கெண்டைக்கால் சுத்தமானதாயிருப்பது வீரத்துவம், தருமம், சற்பாக்கியம், சற்குணம் இவைகளி னடையாளமாகும்.

(கணுக்கால்) கணுக்கால் சதையுள்ளதாயிருப்பது சுகவாழ்வி னடையாளமாகும். அதின்மேல் உரோமங்க ளுண்டாயிருப்பது அவலாது குறைவி னடையாளமாகும். கணுக்கால் ஒன்று சிறிதாயும் ஒன்று பெரிதாயுமிருப்பது பெரும்பாலும் சிறையிலகப்பட்டுப்போவதி னடையாளமாகும். கணுக்கால் சிறியதாகவும் உருண்டையாகவுமிருப்பது செல்வத்தினடையாளமாகும். உயரமாகவும் கோணலாகவுமிருப்பது பொல்லாவிதி தரித்திரத்தினடையாளமாகும்.

(குதிக்கால்) குதிக்கால் மெதுவானதாயும் சிறிதாயுமிருப்பது பாக்கியத்தினடையாளமாகும். பெரிதாயும் கோணினதாயுமிருப்பது துர்அதிஷ்டத்தி னடையாளமாகும். சதையுள்ள குதிக்



கால் நடக்கும்போது பிதுங்கி அகன்று போகும்படியானது முக்கியமாய் கள்ளத்தனத்தி னத்தாட்சியாகும்.

---

## 34-ம் பஸல்.

### இது கால்படம், உள்ளங்கால், விரல்கள் இவற்றைப் பற்றி கூறுவது.

(கால்படம்) எடுப்பாகிய படத்தில் உரோமங்கள் சொற்பமாயுண்டாயிருப்பது சுகவாழ்வி னடையாளமாகும். இதற்கு விரோதமாயிருப்பது நிர்ப்பாக்கியத்தினடையாளமாகும்.

(உள்ளங்கால்) உள்ளங்கால் கருப்பாயும் மஞ்சளாயுமிருப்பது அவலாதி, குறைவு, தீவினை, பொல்லாங்கினடையாளமாகும். வரைகளில்லாமல் காலிபாயிருப்பது பெரும்பாலும் ஏறுவாகனமில்லாமல் கால்நடையாக நடப்பதினடையாளமாகும். உள்ளங்கால் சிவப்பாயும் மிருதுவாயுமிருப்பது புத்திமதி பாக்கியத்தினடையாளமாகும் உள்ளங்காலில் சுழி அல்லது சங்குசக்கர முண்டாயிருப்பது பெரும் பாக்கியம் கண்ணியத்தி னடையாளமாகும். உள்ளங்கால் சதையுள்ளதாயும் பாதங்க ளொன்றோடொன்று வலபுறம் இடபுறம் திரும்பினதாயுமிருப்பது ஏறுவாகன மேறுவதி னடையாளமாகும்.

(கால் விரல்) கால்விரல் மெல்லியதாகவும் நீட்டமாகவுமிருப்பது புத்திசாலித்தன்மையின் அடையாளமாகும். சிறுவிரல்களாகவும் தடிப்பாயுமிருப்பது மட்டித்தனத்தினடையாளமாகும். இன்னம் ஒன்றோடொன்று சேர்மானமாயிராமல் வெவ்வேறாயிருப்பது மூதேவித்தனத்தி னடையாளமாகும். ஷை விரல் சேர்மானமாயிருப்பது நன்மையி னடையாளமாகும், காலின் பெருவிரலுக்கடுத்த விரல் ஷை விரலுக்கு, பெரிதாயிராவிட்டால் நல்ல திஷ்டம் நற்பாக்கியத்தி னடையாளமாகும். அதில் ஆண் பிள்ளையானல் அதிகமாய் நிக்காஹ் செய்வான். ஏனென்றால், அவனுடைய

பெண்சாதிமார் அவனுக்கு முன்னிறந்துவிடுவார்கள். அதற்கு மாற்றமாய் அவ்வாறு பெண்ணுக்கிருந்தால் அவளுக்கு முன்பாக புருஷனிறந்துபோவான். இனி எல்லா விரல்களும் சிறிதாயிருப்பது கெட்ட எண்ணம் பொல்லாத்தீங்கி னடையாளமாகும். பெரு விரல் அகலமாயிருந்தால் அநேக நாடு நகரங்களை சபரு செய்வான். கால்நகங்கள் கருத்ததாயு மஞ்சளாயு மிருப்பது அவமானத்தி னடையாளமாகும். தெளிவாயும் சிவப்பாயுமிருப்பது கல்வி வித்தை உபாயம் இவைகளி னடையாளமாகும்.

—०:०—

## 35-ம், பலவ்.

### இது பலவிதக்குறிகளைப்பற்றிக் கூறுவது.

நெற்றியில் கருத்த மச்சமுண்டாயிருப்பது நற்பாக்கியம் செல்வத்தினடையாளமாகும். பிடரி சதை யுள்ளதாயிருப்பது செல்வத்தி னடையாளமாகும். பிடரி சதையில்லாமல் குரங்கின் பிடரியைப்போல் அவலக்ஷணமானதாய் வறண்டிருப்பது தரித்திரம் கைவறகுறியி னடையாளமாகும். விலாவின் எலும்புகள் எட்டு உண்டாயிருப்பது இராஜத்திசையினடையாளமாகும். ஒன்பது எலும்புகளுடண்டா யிருப்பது பாக்கியத்தினடையாளமாகும். பத்தெலும்புகளுண்டா யிருப்பது வறுமையினடையாளமாகும். பதினேரெலும்புகளுண்டா யிருப்பது தன்னடக்கம், இச்சையடக்கம் என்ற சுஷ்ந்து தக்வாவி னடையாளமாகும். பனிரண்டுண்டாயிருப்பது துக்கம் துன்பத்தி னடையாளமாகும். பதிமூன்றுண்டாயிருப்பது பொருள் பாக்கியத்தி னடையாளமாகும். பதினான்குண்டாயிருப்பது கெட்ட நடவடிக்கை, பாபம், பழிச்சாட்டியத்தி னடையாளமாகும். விந்துமணி தண்ணீரில் மீனுடையவாசமுண்டாயிருப்பது பிள்ளைகள் அதிகமாய்ப் பெறுவதும், பொருள் மிகுப்பதும், ஆடுமாடு ஜீவன் அதிகமாய் பெறுவதி னடையாளமாகும். விந்தில் தேன்வாச முண்டாயிருப்பது பெண்ணாசை அதிகமாய் உண்டாயிருப்பதினடையாளமாகும். பெண்ணுயிருந்



தால் புருஷனுடைய இச்சை மிகுதி யுண்டாயிருப்பதி னடையாளமாகும். பால் அல்லது தயிர் வாசமுள்ள விந்து பாக்கியம் செல்வம் பணங்காசு உண்டாயிருப்பதி னடையாளமாகும். துர்நாற்றமாகிய விந்து தீங்கு பாவத்தி னத்தாசுயாகும். இதுவரை சொல்லிவந்த அடையாளங்கள் யாவற்றும் ஆண் பெண் இருதரத்தாருக்கும் சம்பந்தப்பட்டதாயிருக்கும்.

இனி சில அடையாளங்கள் ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரம் உரித்தான கூறுகிறோம். குச்சு தாடியாயிருப்பது அறிவு புத்திமதியி னடையாள மாகும். வட்டதாடி, மானம், கண்ணியம் இவைகளி னடையாளம். நீண்ட தாடி மடத்தனம், புத்தியீனத்தி னடையாளமாகும். அடர்ந்ததாடி சோம்பல் கூர்மையில்லாத் தன்மையி னடையாளமாகும். தகரி னடையாளமாவது தகர் கோணலாயிருப்பது கெட்டசெயல் துஷ்ட புத்தியின் அடையாளமாகும். தகர் நேராயிருப்பது நேர்மை இணக்கத்தி னடையாளமாகும் தகரின்மேல் நரம்புகள் அதிகமாய் தோற்றப்படுவது கையில் காசு தங்காத் தன்மையி னடையாளமாகும். பீசம் ஒன்று சிறிதாயும் ஒன்று பெரிதாயுமிருப்பது காமமும் மோகமும் அதிகமாயுண்டாயிருப்பதி னடையாளமாகும். வலது புறம் பீசம் சிறிதாயிருப்பது ஆண்பிள்ளை அதிகமாய் பெறுவதி னடையாளமாகும். இடதுபுறம் பீசம் சிறிதாயிருப்பது பெண்பிள்ளை அதிகமாய்ப் பெறுவதின் அடையாளமாகும். இன்னம் தகரின்மேல் கறுத்த மச்சம் எள்ளைப்போலுண்டாயிருப்பது பெண்போக யோகமும் அதிக புணர்ச்சியினிச்சையு முண்டாயிருப்பதினடையாளமாகும். இனி அறியவேண்டியதாவது மேற்சொல்லிய குறிகளில் நின்றும் யாராகிலுமொரு ஆண்பிள்ளை அல்லது பெண்பிள்ளையில் கெட்ட குறிகளதிகமாயும் நல்லகுறிகள் கம்மியாயு முண்டாயிருக்குமானல் அவ்விதமானவர்கள் கெட்டவர்களென்றும், இன்னும நல்ல குறிகள் அதிகமாயும் கெட்டகுறிகள் கம்மியாயுமிருக்குமானல் அவ்விதமானவர்கள் நல்லவர்களென்றும் நாம் உத்தேசித்துக் கொள்ளவேண்டும். இரண்டுவகை குறிகளும் கம்மிஜாஸ்தியாகாமல்

சமமாயிருக்குமானால் அவ்விதமானவர்கள் நன்மையிலும் துன்மையிலும் நடுத்தரமானவர்களா யிருப்பார்களென் றறியவேண்டும். (வல்லாகு அஃலம்). இனி இதுபோல் ஆண் பிள்ளைகளிலும் பெண்பிள்ளைகளிலும் பலவகைகளாயிருப்பதால் இதில் நின்றும் தெளிந்த பருசத்துக்காரர்களும் பரிசோதனைக்காரர்களும் பெண்பிள்ளைகளை நாலு வகைகளாகவும் புருஷர்களை நாலு வகைகளாகவும் பிரித்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகையால், அப்பெண்களுக்கு நிகரான புருஷனும் புருஷனுக்கு நிகரான பெண்ணும் கிடைத்துக்கொள்வதினால் அவர்களந்த நிக்காஹிலிருக்கும் காலமெல்லாம் இன்பத்தையும் சவுக்கியத்தையும் சந்தோஷத்தையும் அடைவதோடு அவுலாத்தென்னும் புத்திரசம்பத்தும் விர்த்தியாகும். இது மாறுபாடாகில் அதற்குத் தக்கபடி இன்பமும் சந்தோஷமும் சவுக்கியமும் அவுலாத்து விர்த்தியும் மாறுபாடாகும். ஆகையால், கூடியவரை நோட்டமிட்டு நிக்காஹ் செய்வது மிகு நலமாகும் (இல்ஷா அல்லா) இனிப்பெண் புருஷர்களை விரித்துரைக்கத்துடங்குகின்றேன்.

---

## 36-ம் பஸல்.

### இது முதலாவது வகுப்பு பதுமினியென்னும் பெண் லக்ஷணத்தைக் கூறுவது.

பதுமினி யென்னும் பெண்ணானவள் மிருதுவும் பிரகாசமுமான தேகமும், சுந்திரசுரூபமும் தகுமான சரீரப்பிமாணமும், நாகரீகமான நடையும் குயிலைப்போல் கூவும் அழகிய குரலும், உண்டி சுருக்குதல் பெண்டிர்க்கழகு என்பதுபோல் இனிய போஜனம் கம்மியாய் புசித்தலும், கண்டதைப்பொசிக்க நாடிடா உத்தம குணமும், அதிகமாய் வாய் பினத்துதலில்லாத பெருமையுள்ள வாக்கும், மதுரமான சொல்லும், பேச்சலங்கிர்தமுள்ள சம்பாஷணையும், மலர்ந்த முகமும், பேசும்போது சுளித்திடாத தெளிவான நெற்றியும், கம்மியாகிய ஷஹ்வத்திலிச்சையும், புருஷபோகம்



செய்வதில் அதிகமாய் வெகுநேரமட்டும் தாமதிக்க ஆசையில்லாத தன்மையும், புத்திமதி அறிவு விவேக உணர்ச்சியும், தருமம் தயாளம் இரக்கமும், பால், தேன் முதலான அதிரசமதுரமான தின்பண்டங்களின்பேரில் அதிகப்பிரியமும், அத்தர் சவ்வாது புனுகு புஷ்பம் முதலான வாசனைகள் மீது அதிக உவப்பும், வெண்மையான மெல்லிய உடைகளின்பேரில் வெகு இஷ்டமும், கொண்ட புருஷனுக்கு வணக்க இணக்கமாய்ப் பணிந்து நடக்குங்குணமும், கற்புள்ள பத்தினித்தனமும், துர்நடத்தை தடித்தனம் துன்மார்க்கம் துஷ்டத்தனம் இவற்றில் வெறுப்பும், இரண்டு சூலிக்குக் கம்மியில்லாமலும் நான்கு சூலிக்கு அதிகப்படாமலும் பிள்ளை பெறும் தன்மையும், மிகுதி தொழுகைவணக்கமுள்ள இபாதத்தின் தன்மையுமுள்ள மெல்லியாளாகும்.

---

## 37-ம் பஸல்.

### இது இரண்டாவது வகுப்பு சித்தினியென்னும் பெண் லக்ஷணத்தைப்பற்றிக் கூறுவது.

சித்தினியென்னும் பெண்ணானவள் அழகுவடிவிலும் குணலக்ஷணத்திலும் பதுமினிக்கு நிகரான யோக்கியமுள்ளவளாயிருப்பாள். ஆனால் பதுமினியைப் பார்க்கிலும் ஏறக்குறைய கொஞ்சம் தடித்தும் நெட்டையாகவுமிருப்பாள். அவளுடைய மேனியானது பொன்னிறம்போன்ற மஞ்சள்நிறம் கலப்பானமேனியும் ஒற்ற உயரமும் அழகியசரீரமும், பெருத்த கொங்கையும், வலம்புரிச்சங்கு பூண்டகழுத்தும், இனியவார்த்தையும், இராகசங்கீதத்தில் இச்சையும், எவரையுமாதரிக்கும் அன்பும் உயர்ந்த கிழதடும், விளைவின்பேரில் எண்ணமும், இன்னம் விதவிதமான நிறமுள்ள உடைகளின் பேரில் மிக்க இஷ்டமும், மதுரமானதேன் பலகாரங்களின் மேல் வெகு ஆசையும், பிடியானை போன்ற நடையுமுண்டாயிருக்கும்படியான சற்குணங்களுள்ள தேன்மொழியாளாகும்.

## 38-ம் பஸல்.

### மூன்றாவது வகுப்பு சங்கினி யென்னும் பெண் லக்ஷணத்தைப்பற்றியது.

சங்கினியென்னும் பெண்ணானவள் பனமரத்தைப்போல் நெட்டையாகவும், கைகால் நீட்டமாகவும், ஒல்லியாகவும், கடுநடையுள்ளவளாயும், வெட்கங்கெட்ட மானமிழிவுள்ளவளாயும், வெடுவெடுப்புள்ள முகமும், சுளித்த நெற்றியும், பெருந்தொண்டையும், சண்டைசச்சரவு செய்யுந் தன்மையும், கெட்ட குணமும், உயர்ந்த நரம்புகளுடைய நீண்டகால் படமும், நல்லொழுக்கமின்றி யாதொன்றிற்கும் பயப்படாத மனவலிமையும், சிவப்பாகிய உடைகளின் பேரில் மிகுந்த பிரியமும் புருஷபோகத்தில் மிகுதியாகிய இச்சையும், வஞ்சனையுடையமனமும், பொய்யும், கோளும் சமமாயுண்ணு மியல்பும், நகக்குறி யினிடத்தில் விருப்பமும் ஆக இவ்வித தன்மையுள்ள குணங்களுடைய மடந்தையாவாள்.

---

## 39-ம் பஸல்.

### இது நான்காவது வகுப்பு அத்தினி யென்னும் பெண் லக்ஷணத்தைப்பற்றியது.

அத்தினி யென்னும் பெண்ணானவள் ஒரு யானையைப்போல் பருத்தவளாயும், கன்னம் மூக்கு இதழ் பின்னங்கை தண்டு இடுப்பு துடை கெண்டைக்கால் இதுகள் சதையால் தடித்ததாயும், பருத்த நீண்டவிரலுடைய காலும் குறுகின கழுத்தும், நெருக்கமற்ற சிவந்த முடியுடைய சிரசும், நடக்கும் போது அடிமேலடிவைத்து மெதுவாய் நடப்பதில் இடுப்பை அசைத்து காலடிச்சத்தத்தோடு நடப்பவளாயும், அவளுடைய வியர்வையில் யானைமதத்தின் நாற்றமும் சரீரத்தில் நின்று எந்நேரமும் கத்தாழை வீச்சமும், மிகுதிரோமமுடைய சரீரமும், உயர்ந்த உதடும், ஆக இவ்வித தன்மையுள்ள ஸ்திரீயாவாள்.



## 40-ம் பஸல்

### இது முதலாவது வகுப்பு ஆண்முயல் ஜாதியைப் பற்றியது.

முதலாவது முயல்ஜாதியென்று குறிக்கப்படுகின்ற ஆடவன் அழகுடைவிலும் தக்க சரீர பரிமாணமும், திரேகசவுந்தரியமும், மான்போல் மருண்டகண்ணும், தோன்றும் பிறைபோல் வில்வளைவாகிய புருவமும், மானமும், நாணமும், நாகரிகமான யோகமும், சாதுவான தன்மையும், கல்விகலைஅறிவும், நற்குணம் நல்லொழுக்கம், பகுத்தறிவும், கம்மியான ஊணும், சுருக்கமான உறக்கமும், அல்பகோபமும், கம்மியாகிய போக சையோக இச்சையும், தித்திப்பான வஸ்துவின்பேரில் அதிக பிரியமும், சங்கீத மேளவாத்தியத்தின் மீது மிகுந்த இச்சையுமுண்டா யிருக்கும் சுந்திரனாகும். இவ்விதமாகிய புருஷஜாதி ஆடவன் பதுமினியென்னும் கன்னிக்குத்தகுந்த புருடனாம்.

---

## 41-ம் பஸல்.

### இது இரண்டாவது வகுப்பு ஆண்மான் ஜாதியைப் பற்றியது.

இரண்டாவது மான்ஜாதியென்று குறிக்கப்பட்ட ஆடவன் முயல் ஜாதி ஆடவனுக்கு நிகராயிருப்பான். என்றாலுங் கொஞ்சம் தடிப்பாயும் சத்துவமுள்ளவனும் அதிரூபமுள்ளவனும், அழகிய முகமும், இனிய வார்த்தையுள்ள மதுரவாக்கும், நல்லொழுக்கம், நற்குணம் களிமுள்ள தன்மையும், மணங்களிப்புள்ள பிரகிருதியும், சுந்திரமுள்ள கன்னியரைக் கையாளும்படியான கவனமும், சுருசுருப்பு ஜாக்கிரதையும், இரஞ்சிதமாகிய வஸ்துவின்பேரி லிச்சையும், பூங்காவனத்திலுலாவித்திரிவதில் அதிக விருப்பமும், இராகசங்கீதத்தின்மீது வெகுஆசையும், போகம்செய்வதில் மிகுதி மோகமு முண்டாயிருக்கும்படியான சவுந்திரியனாகும். இவ்வித

மாகிய புருஷ ஜாதி ஆடவன் சித்தினியென்னும் மங்கைக்குத் தகுந்த மணவாளனாகும்.

---

## 42-ம் பஸல்.

### இது மூன்றாவது வகுப்பு ஆண் ரிஷப ஜாதியைப்பற்றியது.

அதாவது மூன்றாவது ஆண் ரிஷப ஜாதியென்று குறிக்கப்பட்ட ஆடவன் ஒருபெரும்படைப்பாயும், சதைவளர்த்தியாயும், பெருந்தீனும் அதிக காமமும் தன் காரியத்தைமாத்திரம் நிறைவேற்றிக்கொள்ளுவதில் கவலையும், வெட்கங்கெட்ட மானமில்லாத்தன்மையும், சூதுவாது பித்தலாட்டமாயமும், பெருந்தொண்டையும், கெட்ட குணமும், வெடுவெடுப்பான வார்த்தை, பின்னங்கை தண்டு தொடை இவைகள் தடித்ததாயும் இருக்கின்றவனாகும். இவ்விதமான புருஷஜாதி ஆடவன் சங்கினி என்பவளுக்குத் தகுந்த மணவாளனாகும்.

---

## 43-ம் பஸல்.

### இது நான்காவது வகுப்பு ஆண் குதிரை ஜாதியைப்பற்றியது.

நான்காவது குதிரை ஜாதியென்று குறிக்கப்பட்ட ஆடவன் பெரும்படைப்பாயும் கெட்டை யுருப்பாயும், கைகால் நீட்டமாயும், பெருந்தீனும் பெருந்தூக்கமும், துர் நடத்தையும் கெட்ட குணமும், சம்போகத்தில் உபயவர்களுடைய காமமும்மோகமும் தீர்க்கும்படியான தன்மையை கவனிக்காமல் தன்னாசையை மாத்திரம் தீர்த்துக் கொள்ளும்படியான குணமுடையவனாகும். இவ்விதமாகிய புருஷ ஜாதி ஆடவன் அத்தினி யென்னும் பெண்ணுக்குத் தகுந்த மணவாளனாகும்.

---



## 44-ம் பஸல்.

### இது ஷஹ்வத்துடைய பெண்களையும் கோபத்துடைய பெண்களையும், வம்புத்தனமான பெண்களையும்பற்றிக் கூறுவது.

ஜவாஹிருல் கம்ஸாவில் சொல்லப்படுகிறது:—

இஷ்குடைய பெண்களாவது அர்சதாதாலீச சொல்லியிருக்கின்றார்கள், பெண்பிள்ளைகளுடைய வெளிக்கழுத்து வட்டமானதாயும், இரு புயமும் மிருபருப்பமானதாயும், பாதமிரண்டும் பசித்துயிருந்தால் அவள் புருஷர்கள்மீது அதிகப் பிரியமாயிருப்பாள்.

இன்னும் இரண்டு கெண்டைக்காலும் தடித்தும், அரணித்துயிருந்தால் கடின ஷஹ்வத்தும் ஜிமாவில் விருப்பமுமுடையவளாயிருப்பாள்.

இன்னும் எப்போதும் சூடான இரேகமும், நாவு சிவந்தும், சிறுத்தும், தனமிரண்டும் அரணித்துயிருந்தால் ஜிமாஐ யுவந்திருப்பாள்.

இன்னும் சிவந்த நிறமும், சுழற்சி கண்ணுமுடையாள் மிகுந்த போகமும் கடின ஷஹ்வத்துடையவளாயுமிருப்பாள்.

இன்னும் சருமா கண்ணாகவும், மிகுந்த சிரிப்புள்ளவளாகவும், இலேசான உசும்புதலுடையவளாகவும், இராக கீதங்களைக்கேட்க உவந்தவளாகவுமிருந்தால் அதிக மோகமுடையவளாயிருப்பாள்.

இன்னும் கூரிய மூக்குள்ளவளாயிருப்பாளாகில் குறைந்த மோகமுடையாளாயிருப்பாள். மூக்கந்தண்டில் மருவுடையாளாயிருக்கில் அர்க்கஜிமாஐ யுவப்புடையாளாயிருப்பாள். உயர்ந்த மூக்குடையாளாயிருக்கில் ஜிமாவில் கடின வேட்கையுடையாளாயிருப்பாள்.

இன்னும் காதின் மடல் பெருப்பமுடையாளாயிருக்கில் காமத்திச்சை மிகுதியுடையாளாயிருப்பாள். புறங்கால் சதை மிகுதியுடையாள் பருத்திருந்தாலும், புருஷனை யுவந்திருப்பாள், அதல

மான தடித்த பாதமுடையாள் வினையில் மிகுதி உவப்புடையாள், கெடியாள் விரைந்த இன்சாலுடையாள். கட்டைச்சியும், தடிச்சியும், இன்சால் தாமிதமுடையவர்க ளென்றறியவும்.

இனி இஷ்க்குடையவள் புருஷன் ஒரு வஸ்துவைக் கேட்டால் அதல்லாதவைக்கொண்டு வருகிறவளாகவும், தன்னுடைய அழகை அவனை நாடியே பிரத்தியேகமாய் வெளியாக்குகிறவளாகவும், அவனைபுவந்தவர்களுக்கு சங்கை செய்கிறவளாகவும், அவனுக்கெதிரியை விரோதம் பாராட்டுகிறவளாகவும், பணிவிடை செய்ய விரைகிறவளாகவும், அவனைப்பார்ப்பதில் மிகுந்த பிரியமுள்ளவளாகவும், அவன் தன்னுடைய வருத்தத்தை அறிவித்தால் அவனுக்குச் சந்தோஷமுண்டாக்கி வைக்கிறவளாகவும். அவனை மனதில் கண்டதாயறிவித்து ஆசை யூட்டுகிறவளாகவும், கடைக்கண் போட்டுப் பார்க்கிறவளாகவும், அவனைக் காணுகபோது களைக்கிறவளாகவும், குறிகாட்டுதல் மிகுத்தவளாகவும், சோம்பல் கொட்டாவி சலிப்பு மிகுத்தவளாகவும், ஒரு சபையில் சிறுபிள்ளை யிருந்தால் அதனோடு விளையாடுகிறவளாகவும், முடிகளை நீட்டி விளையாட்டுக் காட்டுகிறவளாகவும், தன் உதட்டைக் கடிக்கிறவளாகவும், முகம் வியர்த்தவளாயும், இரு கண்ணிலும் கண்ணீர் வடிந்தவளாகவும், மணமான வாசத்தை புவந்தவளாகவும், கொஞ்சத்தின்பேரிலும், மிகுதத்தின் பேரிலும் சுக்று செய்கிறவளாகவுமா யிருப்பாள்.

இனி கோபமுடைய பெண்ணாவது, புருஷன்பேரில் குணங்கெட்டிருக்கிறவளாகவும், தன்னபுசை பார்க்கவிடாமல் விலக்கிறவளாகவும், அவனுடைய கேழ்விக்கு மறுமொழி சொல்லாதவளாகவும், அவனுக்குரித்தானவர்களோடு கலகம் செய்கிறவளாகவும், அவனுக் கெதிரிகளோடு உறவாடுகிறவளாகவும், அவன் ஆசையுடன் நெருங்கினல் முழங்கையால் தட்டுகிறவளாகவும், பிடவையால் மூடுகிறவளாகவும், அவன் அன்பு பாராட்டும்போது திரேகத்தி லுபத்திரவமுண்டா யிருக்கிறதென்று பொய்ச்சத்தியம் செய்கிறவளாகவும், அவன் படுக்கைக்கு வருமுன்பாகத் தான் போய் நித்திரை செய்கிறவளாகவும், படுக்கையில் பிரியமின்றியே கவிழ்



ந்து படுக்கிறவளாகவும், அவன் பார்க்கும்போது கவிழ்ந்துகொள்கிறவளாகவும், அவன் பிரிந்தபோது சந்தோஷமா யிருக்கிறவளாகவும், அவனை அவள் பார்க்கும்போது விரோதியைப்போல் பார்க்கிறவளாகவும், குற்றமில்லா திருக்கும்போது குற்றஞ் சாட்டி அழுது பெருமூச்சிடுகிறவளாகவுமா யிருப்பாள்.

இனி வம்புத்தனமான பெண்ணாவது, முரட்டுப் பேச்சுடையவளாகவும், குலத்திற்கீனமான செய்கைகளைச் செய்கிறவளாகவும், தனியே கூட்டங்களிற்போய் வேடிக்கை பார்க்கிறவர்களாகவும், தாய் விட்டிலேயே யெந்நாளுமிருக்கிறவளாகவும், அன்னிய புருஷரின் குணலட்சணங்களை விசாரிக்கிறவளாகவு மிருப்பாள்.

---

## 45-ம் பஸல்.

### இது ஜாதி பொருத்தங்களைப்பற்றியது.

அதாவது முப்பத்தாராம் பஸல் முதல் சொல்லப்பட்ட ஜாதி வகையில் ஆண்ஜாதி பனிரண்டு, பெண்ஜாதி பனிரண்டா யிருப்பதால் அவர்களுடைய இன்பமும் பனிரெண்டு வகையா யிருக்கும். ஆகையால் அதற்குத் தக்கபடி பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் கிடைத்து விடுவார்களாகில் ஒருவரை மற்றொருவர் ஒரு நொடி நேரமாவது மறக்கார்கள். அவர்களுக் கிடையில் வரும் எவ்விதப் பிணக்கிலும் பிரியார்கள்.

அதாவது முயல்ஜாதி ஆண்கிடாவுக்கு பதுமினிஜாதிப் பெண்ணேடும், முயல்ஜாதி ஆண்குதிரைக்குப் பதுமினிஜாதிப் பெண்குதிரையும், முயல்ஜாதி ஆண்யானைக்கு பதுமினி ஜாதிப் பெண்யானையும், மான்ஜாதி ஆண் கிடாவுக்குச் சித்தினிஜாதிப் பெண் ஆடும், மான்ஜாதி ஆண் குதிரைக்குச் சித்தினிஜாதிப் பெண் குதிரையும், மான்ஜாதி ஆண் யானைக்குச் சித்தினிஜாதி பெண் யானையும், ரிஷபசாதி ஆண் கிடாவுக்குச் சங்கினிசாதிப் பெண் ஆடும், ரிஷபசாதி ஆண் குதிரைக்குச் சங்கினிசாதிப் பெண் குதிரையும், ரிஷபசாதி ஆண்யானைக்கு சங்கினிசாதி பெண்யானையும், குதிரைசாதி ஆண்

கிடாவுக்கு அத்தினிசாதி பெண் ஆடும், குதிரைசாதி ஆண் குதிரைக்கு அத்தினிசாதிப் பெண்குதிரையும், குதிரைசாதி ஆண்யானைக்கு அத்தினிசாதிப் பெண்யானையும், ஆக இவ்விதம் அததற்குத் தகுந்ததாயும், சேர்த்துவிடுவது நேர்பாடாகில் அவர்களுடைய இன்பமும், சந்தோஷமும், பொருத்தமும் நேர்பாடாயிருக்கலாம் இவ்விதம் சேர்வது மார்பாடாகில் அதற்குத்தக்கபடி இன்பமும் சந்தோஷமும் மார்பாடாயிருக்கும்.

---

## 46-ம் பஸல்.

### இது புருஷன் பெண்ஜாதிக்கிடையில் கலந்துறவாடுவதின் முஸ்தஹப் பாதுகளைப் பற்றிக் கூறுவது.

அதாவது புதுப்பெண்ணைச் சந்திக்குந் துவக்கத்தில் அவளுடைய முன்னெற்றி ரோமத்தைப் பிடித்து இருவரும் பாறகல்லாஹு லிகுல்லிமின்னா பீஸாஹிபிஹி யென்று சொல்லுவதும் யாதொரு பேச்சும் பேசுமுதல் இருவரும் ஷுக்றையும், இஸ்த்தகாறுவையும் நாடி யிரண்டு றகஅத்து தொழுவதும் சுன்னத்து.

ஒரு விரிப்பி லிருவருமுறங்குவதும், ஒரு துப்பட்டிப்போல் கொற்றதாலிருவரு மூடிக்கொள்வதும், ஜிமாஉ நாடினால் மணம் பூசிக்கொள்வதும், ஆமானமுனேதமும், கொஞ்சிக் குலாவி மதுரம் பொருந்திய வார்த்தைகள் பேசிக்கொள்வதும், மறுஜிமாஉ அல்லது ஊண்குடிப்பை நாடினால் கழுகுவதும், வெள்ளிக்கிழமை பகல் ஜுமுஆவுக்குமுன் ஜிமாவுசெய்வதும், சபறுல் முன்னேக்கி வந்தவுடனும், ஸஹர் வக்கத்திலும், ஜிமாவு செய்வதும் சுன்னத்தாகயிருக்கும்.

இன்னும் ஜிமாயின் ஊஷாட்டம் மற்றவர்களுக்கு ஏற்றுக் கொள்ளாதவிடம் தேடிக்கொள்வதும், ஜிமாவுக்கு உதவியான வேண்டிய மருந்துகளைப் பரிமாறுவதும், ஒரு பெண்ணைக் கண்டு



அவள் வடிவினால் மயங்கி புதுமையான நேரம் தன் ஹலாலைச் சேர்ந்து ஜிமாவு செய்வதும், முஸ்தஹப்பா யிருக்கும்.

### ஹதீது.

ஜாபிறு றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருநாள் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு பெண்ணைக் கண்டு ஹலறத் உம்முல் முஃமினீன் ஸைனபு றலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் வந்து சேர்க்கை செய்து வெளியில் வந்து திருவுளமானார்கள், பெண்ணாய்ப் பிறந்தவள் முன்னாக வரும்போது ஷைத்தானுடைய சொரூபத்திலே வருகிறாள். ஆகையால், யாராகிலு மொருவன் ஒரு பாஸ்திரீ முகத்தைப் பார்க்க அது லக்ஷணமாய் கண்டு அவள்மீது விருப்பமுண்டானால் உடனே தன் பெண்சாதியிடம் போய் சேர்க்கை செய்து கொள்ளுங்களென்று திருவுளமானார்கள்.

---

## 47-ம் பஸல்.

### இது புருஷன் பெண்சாதிக் கிடையில் கலந்துறவாடுவதின் மக்ரூஹ்களைப்பற்றிக் கூறுவது.

புத்ஹுத்தையான் என்னும் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதாவது ஜிமாயின் வேளையில் பேசுகிறதும், ஹமலை பயந்து நுத்துபாவை வெளியாக்குகிறதும், ஜிமாஉல் தங்கடமுடைய ஹமல் காறி பால் தாச்சியை ஜிமாவு செய்கிறதும், பகலில் ஜிமாவு செய்கிறதும் இரவின் துவக்கத்தில் ஜிமாவு செய்கிறதும், மக்ருஹாக இருக்கும்.

இன்னும் மாதத்துவக்கத்திலும், நடுவிலும், கடைசியிலும், ஜிமாவு மக்ரூஹென்றும், அந்த நாட்களில் ஷைத்தான் ஜிமாவு செய்யுமென்றும், இவனுடைய ஜிமாயில் ஷைதான் ஹாஸிருகுமென்றும், இமாமலு அலீ முஆவியா அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹும் இவர்களைத் தொட்டுப் பேசி வரப்பட்டதென்றும், இமாம் கஸ்ஸாலீ றஹிமஹுல்லாஹு சொல்லுகின்றார்கள். என்

கிலும், இப்னுஹஜர் றஹிமஹுல்லா துஹ்பாவில் இந்த ஹதீதுக்கு அஸ்லில்லையென்று சொல்லி யிருக்கின்றார்கள்.

இன்னும் பொழுதுபிறை எதுப்பிலும், முகடில்லாத தலத்திலும், ஜிமாவு மக்றூஹல்ல கிப்லாவி னெதுப்பில் ஜிமாவு மக்றூஹென்று இஹ்யாவில் வருகின்றது.

ஒரு பெண்சாதியை மறு பெண்சாதியிடம் ஒரு ஸூர்ரியத்தை மறுஸூர்ரியத்திடம் வைத்து ஜிமாவு செய்வதும், ஒருத்தி சமாச்சாரத்தை யொருத்தியிடஞ் சொல்லுவதும் மக்றூஹ்.

இன்னும் ஆண்பெண்ணிருவரும் குறியை தேவையன்றிப் பார்ப்பதும் மக்றூஹ் தன்னுடைய குறியாயிருக்கினு மொக்கும், அதனால் கண்குருடாய்ப் போவதைப் பயப்படப்படுமென்று சொல்லப்பட்டிருப்பதால், சுபுகீ றஹிமஹுல்லா சொன்னார்கள், குறிகளைப் பார்த்தால் கண்பார்வை மங்கிப் போகுமென்பதற்காய் மக்றூ ஹாக்கப்பட்டபடியால் தொடுவது மக்றூஹல்லவென்று சொன்னார்கள்.

---

## 48-ம் பஸல்.

### இது ஆண் பெண்ணுடைய விகற்பத்தை கூறுவது

பிரத்தியேகமான ஆண்பிள்ளை பெண்பிள்ளையைப் பார்ப்பதும், தொடுவதும் இச்சையோடு அவள் சத்தத்தைக் கேட்பதும் ஹறாம். பெண்பிள்ளை காபிறத்தான பெண்பிள்ளையையும் வேசியையும் பார்ப்பதும் ஹறாம்.

### ஆண்பெண்ணுடைய விகற்பமாவது.

ஹூகமாக்களென்னும் தத்துவ சாஸ்திரிகள் சொல்லி யிருக்கின்றார்கள். பெண்பிள்ளையாகிறது எல்லாக் கருமங்களிலும் ஆண்பிள்ளைகளுக்கு மாற்றமானவளாம், அவளவனைக் கோபமானால் அவனுடைய மனதை கலக்கமாக்குவாள். அவனுடைய வாழ்நாளைப்



போக்கிவிடுவாள், அவனைப் பிரியம் வைத்தால் தின்றுவிடுவாள், இன்பத்தால் தரித்துவிடுவாள், குடும்பத்தாரை யகற்றிவிடுவாள்.

இனி ஆண்பிள்ளை அதிக வயதெத்தினால் வெட்கம் நிறப்பமானவனாகவும், புத்தி யதிகமானவனாகவும் இச்சை குறைந்தவனாகவுமாகி விடுவான்.

இனி பெண்பிள்ளை யதிக வயதெத்தினால் வெட்கமும் புத்தியும் குறைந்தவளாகவும், இச்சை யதிகமானவளாகவு மாகிவிடுவாள்.

இன்னும் ஆண்பிள்ளை ஜிமாவால்பலக்கேடானவனாகவும் பெண்பிள்ளை ஜிமாவால் பலமுள்ளவளாகவு மாகுவார்கள்.

ஹகீம் அப்லாத்தூன் சொல்லி யிருக்கின்றார்கள். ஆண் பிள்ளைக்கு முற்போகம் துரிதமாயும் பிற்போகம் நீடித்து மிருக்கும். பெண்பிள்ளைகளுக்கு முற்போகம் நீடித்தும் பிற்போகம் துரிதமாயுமிருக்குமென்று சொல்லி யிருக்கின்றார்கள்.

---

## 49-ம் பஸல்.

### இது புருஷன் பெண்சாதிக்கிடையில் வேண்டுமான கருமங்களையும் விலக்கலான கருமங்களையும் கூறுவது.

இதில் வேண்டுமான கருமங்கள் பத்தாயிருக்கும். முதலாவது இருவருக்கும் சுவாத்தியம், இரண்டாவது பொருத்தம், மூன்றாவது சந்தோஷம், நாலாவது குவ்வத்து, ஐந்தாவது ஆடவனுக்கு மணி அடர்ந்தேறிய துடன் உசும்புதலா யிருக்கவேண்டும் ஆறாவது, ஆடவனுக்கு ஊறுதலுண்டா யிருக்கவேண்டும். ஏழாவது, இரவாயிருக்கவேண்டும். எட்டாவது, தர்த்தீபாய் செய்யவேண்டும். ஒன்பதாவது, நெறிகேடு பண்ணாமல் தந்திரமாய் செய்து முடித்துக் கொள்ளவேண்டும். பத்தாவது ஹறாம் வந்தணுகாமல் பேணிக்கொள்ளவேண்டும்.

இன்னும் ஹறாமான கருமங்களாவது, ஹைலா யிருக்கும் போது ஜிமாவு செய்வதும், ஹைலு தீர்ந்து முழுகுமுன் ஜிமாவு செய்வதும் வியாதிக்காரியை வருத்தப்படுத்தி ஜிமாவு செய்வதும் ஹறாமாயிருக்கும்.

இன்னும் ஜிமாயில் நடந்ததை பிரிவுதலாக வெளியில் பேசுவதும், இனி பிரத்தியா னொன்றென்னி தன் பெண்சாதியை ஜிமாவு செய்வானே யாகில் பாவியாவான். ஹத்தில்லை. என்கிலும், ஆகிறத்தில் ஷினுவுடைய அதாபுக்குத் தாழ்ந்த அதாபுண்டும் கள்ளொன்றென்னி தண்ணீரைக் குடிப்பது போலாயிருக்கும்.

---

## 50-ம் பஸல்.

### இது ஆண்பிள்ளைகளுக்கு ஷஹ்வத்துண்டான நேரம் ஜிமாஉ விடுவதின் கெடுதியும் வயதுக்குப் போதுமானவரை ஜிமாயின் திட்டமும் கூறுவது.

அதாவது யாதாமொருவன் ஜிமாஉ வெழுப்பி வைக்கிற வஸ்தளவில் புராமல் ஜிமாயின் பேரில் ஆசையாய் உசும்புதலானால் உடனே ஜிமாவு செய்வது வேண்டுமானதா யிருக்கும். அல்லது ஜிமாஉ எழுப்பி வைக்கிற வஸ்தளவில் பார்த்து இச்சைக் கொண்டு ஹாஜத்தானாலும் உடனே ஜிமாவு செய்யவேண்டும். அப்படிச் செய்யாதவரையில் பித்தம் சிரசிலேறி காமப்பைத்தியமுண்டாகும். இன்னும் மணி அதிகமாகிய வர்ஷிபர் ஜிமாவு செய்யாதிருந்தால் அவர்களின் தவப்பருத்து இச்சை குறைந்துபோம். விரதக்கடங்களுண்டாகும். இன்னும் ஆகத்தாய் ஜிமாவு செய்து கொண்டிருந்து பின்பதை விட்டால் ஜிமனத்தின்பேரில் மனம் கொள்ளாமல் தகர் வீங்கி அதனால் வேதனை யதிகமாகும்.

இன்னமிதுபோல் பெண்பிள்ளைகளுக்கும் ஜிமாவு இல்லாத வரையில் இந்த வருத்தங்களெல்லா முண்டாகிறது. ன் நீரடைப்புமுண்டாகுமென்றும் வளமைப்படி ஜிமாவு செய்துவந்தால் இவ்



வித வருத்தங்களெல்லாம் தீர்ந்து சரீரம் சுகமாயிருக்குமென்றும் ஹகீம் ஜாலீநூஸ் சொல்லியிருக்கின்றார்கள்.

### வயதுக்குப் போதுமானவரை ஜிமாவு செய்வதின் திட்டம்.

அதாவது ஒரு வாலிபன் புலூகுக்கும் 22-வயதுக்கு மிடையில்ஜிமாஉ மிகுதமாக்குகிறது தங்கடஞ்செய்யும். திரேகமெலிவை வருத்தும்.

இனி 22-வயது தொடுத்து 30-வயது வரையில் இரவிலொரு விடுத்தமும் பகலிலொரு விடுத்தமும் ஆக 2-விடுத்தம் ஜிமாவு செய்கிறது வேண்டுமாகும். அதில் தீர்ச்சையானது மூன்றுவிடுத்தமாயிருக்கும். அதுவும் மஃஷூகாகிய மஹ்பூபைக் கொண்டுண்டாயிருக்கிறதின் ஷர்தைக்கொண்டா யிருக்கும்.

இனி 30-வயது முதல் 40-வயது வரையில் இரவிலும் பகலிலும் ஒரு தடவையைக் காண அதிகஞ் செய்வது இணக்கமானதல்ல. ஆனால் தங்கடத்தினையுடையாளங்களைக் கண்டால் சுருக்கிக் கொள்ளவும்.

இனி 40-வயது தொடுத்து 50-வயது வரையில் மூன்று நாளைக்கிரண்டு தடவையிலும் அதிகஞ் செய்வது திருத்தமான கருமமல்ல.

இனி 50 வயது தொடுத்து 60.வயது வரையில் ஐந்தாறு நாளைக்கொரு தடவை ஜிமாவு செய்வதழகு.

இனி 60 முதல் 70 வயது வரை நல்ல சுவாத்தியமும் பலமுமுண்டா யிருந்தால் ஒரு மாதத்திற்கு மூன்றுவிடுத்தஞ் செய்வான்.

இனி 70-க்கும் 75-துக்கு மிடையில் குவ்வத்தின் விர்த்திக் கொண்டு ஆறுமாதத்திற்கோர் விடுத்தம் அல்லது இரண்டு விடுத்தஞ் செய்வான்.

இனி 80-வயதை எத்தினவன் வருடத்திலொரு விடுத்தம் அல்லதிரண்டு விடுத்தத்துக்குமேல் செய்யான். என்பதை கடந்

தவன் அறவே ஜிமாவு செய்யக்கூடாதென்று திடனாக சொல்லப் பட்டிருக்கின்றது. இப்படிச் சொல்லிய கணக்கு மிஸாஜ் சரிசயான முள்ளவனுக்காக யிருக்கும்.

---

## 51-ம் பஸல்.

### இது ஜிமாயின் பாயிதாக்களைக் கூறுவது.

அதாவது மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஆசையடங்கலும் அவனுடைய கல்பை அன் தெந்சாக்கும். ஜிமாவு செய்வது அவனுடைய கல்பைத் தெளிவாக்கும். இதற்காகத்தான் நபிமார்கள் நிக்காஹையும் ஜிமாஉவையும் உவந்தவர்களா யிருந்தார்கள். நபி சுலேமான் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு எழுநூறு பெண்சாதியும் முன்னூறு சர்நியத்துமுண்டா யிருந்தது. நபிதாவூது அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு நூறு பெண்சாதி யுண்டா யிருந்தார்கள். நம்முடைய ஆண்டவர்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் தங்கள் பெண்சாதிமார்கள் பதினொருபேர்க ளிடத்திலும் ஓரிரவில் ஜிமாவு செய்கிறவர்களா யிருந்தார்கள். அவர்களுக்கு நாற்பதுவாலிபர்களுடைய குவ்வத்தைக் கொடுக்கப்பட்டிருந்தது.

இன்னும் ஹலறத்து உமறிபுனின் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு றமலான் மாதத்தில் நோன்பு திறப்பது பெண் சேர்க்கையினால் திறப்பார்கள். பின்னால் ஒஜ்பனம் பொசிப்பார்கள். மற்ற நோங்களிர் சில சமயம் மக்றிபு தொழுவதற்கு சேர்க்கை செய்து குளித்து தொழுவார்களென்றும், றமலான் இஷாவுக்கு முன் மூன்று அடிமை பெண்களுடன் சேர்க்கை செய்துகொள்வார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஜிமாஉ அதிகப்படுத்தினால் மனதிலுண்டான ஷைத்தானுடைய சோதிப்புகள் கலைந்து அதின் சிக்ககன்று அல்லாஹுத் தஆலாவுடைய இபாதத்துக்கு மனங்காலியா யிருக்குமென்றும் சொல்லப்பட்டி



ருக்கின்றது. இன்னும் ஜிமாவு செய்வது கல்பு ஹறுமை கொழுத்திருந்தால் அது அவனை விட்டும் நீங்கிப்போம். மனதின் துக்கம் குறைந்து போம். கல்பின் வஸ்வாசு நீங்கிப்போமென்று சொல்லப்பட்டிருக்கின்றன.

நபி சல்லல்லாஹு அலைஹி வசல்லம் திருவுளமானார்கள். ஒரு மனிதன் தன் பெண்சாதியை ஜிமாவு செய்வானேயாகில் ஜிமாவு செய்தது கொண்டு அல்லாஹுத் தஆலாவுடைய பாதையில் ஜிஹாதில் செய்து வெட்டுப்பட்டுப்போன ஆண்பிள்ளையுடைய கூலியை யிவனுக்கு எழுதப்படுமென்று திருவுளமானார்கள்.

---

## 52-ம் பஸல்.

### இது பெண்பிள்ளையின் வயதறிந்து ஜிமாவு செய்வதைப்பற்றி கூறுவது.

அதாவது பெண்பிள்ளைக்கு 12-வயது சென்று 13-வயது தொடுத்தபின் புருஷன் ஜிமாவு செய்வது நலமேதவிர அதற்கு முன் ஜிமாவு செய்வது வேண்டுமானதல்ல அதனாலிருவருக்கும் தங்கடமுண்டாம். அப்பால், அதுமுதல் 16-வயது எற்றுமளவும் அது போலாம், அதை எற்றிவிட்டால் அவனுடைய நாட்டத்திற்கு இச்சையானவளாகவும் ஹபாவும் நேர்பாடும் திறப்பமானவளாகவு மிருப்பாள். 55-வயதை யெற்றுமளவு மது போலாம். எத்தி விட்டால் சதிரக் கட்டவிழ்ந்துவிடும், நரை படர்ந்துவிடும், முக தளதளப்பு மாறிவிடும், ஹைலு நின்றுபோம், ஹைலு பற்றற்றவளை ஜிமாவு செய்வது மக்றூஹாகஇருக்கும்.

இன்னும் சில நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது, பதினாறு வயதுக்குட்பட்ட வாலையைக் கூடுவது வலுவென்றும், முப்பது வயதுக்குட்பட்ட தருணியைக் கூடுவது இன்பமென்றும், ஐம்பத்தைந்து வயதுக்குட்பட்ட பிறவிடையைக் கூடுவது சுகமென்றும், ஐம்பத்தைந்துக்கு மேற்பட்ட விருத்தையைக் கூடுவது வியாதியென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இன்னும் புஸ்தானுல் ஆரிபீனில் சொல்லப்பட்டிருக்கின்றனை ஒரு புலவன் பைத்தாக சொன்னான். அதாவது, கிழவியை ஜிமாவு செய்வதைக் குறித்து நானுனக்கிரண்டு தடவை யச்சம் மூட்டுகிறேன். அவளை ஜிமாவு செய்வது பாம்புடைய நஞ்சைப்போலவே யல்லாது பின்னொன்று மில்லையென்று சொன்னான்.

---

## 53-ம் பஸல்.

### இது ஜிமாஇ விடுவதின் வக்துகளும் ஜிமா ஆல் வருங் கெடுதிகளைப்பற்றியும் கூறுவது.

அதில் ஜிமாஇ விடுவதின் வக்துகளாகிறது, சரீரம் இளைத்திருக்கும்போதும், ஆண்பிள்ளைக்குத் தலைநோய், கண்நோய், இருமல் காஷம், பேதிக்குக் குடிக்கபோதும், இரத்தங்குத்தி வாங்கின போனதும், நரம்பு குத்தி வாங்கினபோதும், மலஞ்ஜலம் முட்டிக் கொண்டிருக்கும் போதும், வயறு நிறம்பி யிருக்கும்போதும், பசித்துக்கொண்டிருக்கும்போதும், வறண்ட சரீரமுடையவன் சூடான ஊர்களில் கோடைகாலத்திலும், குளிர்ந்த சரீரமுடையவன் குளிர்ச்சியான ஊர்களில் மாரிகாலத்திலும், ஜிமாவு அதிகமாகச் செய்யலாகாது. இன்னும் வாந்திபேதி காலத்திலும், கெட்ட காற்று ஆர்வியாதிகள் நடக்கும்போதும், ஜிமாவு செய்யலாகாது.

இனி ஜிமா ஆல் வருங் கெடுதிகளாவது, ஹதீ ஸ வக்தில் முதலாவது ஜிமாவு அவனுடைய ஷஹ்வத்தை நிறைவேற்றும், இரண்டாவது ஜிமாவு இன்பத்தைக் கொடுக்கும், மூன்றாவது ஜிமாவு பிலக்குறைவை யுண்டாக்கும், நாலாவது ஜிமாவு நசலை வருத்தும், ஐந்தாவது ஜிமாவு அவனை ஹலாக்காக்கு மென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், முதல் ஜிமாயில் அவனின் மனிவித்தானது வெண்மையான உறைந்த வித்தாய் வெளிப்படும் இரண்டாம் ஜிமாயில் மங்கலான வெண்மையிலும் இளகலான வித்தாய் வெளிப்படும், மூன்றாவது ஜிமாயில் வித்தானது இரத்தக்



கலப்பானதாய் வெளிப்படும், நாலாவது ஜிமாயில் சுத்தமாகிய இரத்தமாய் வெளிப்படும், ஐந்தாவது ஜிமாயில் அவனை ஹலாக்காக்கும்படியான இரத்தம் வெளிப்படும். ஆகையால் யாதொருவனுக்கும் ஜிமாயில் ஹாஜத்தானால் ஒரு விடுத்தஞ் செய்வான். ஷஹ்வத்துங் குவ்வத்தும் அதிகமாயிருக்கில் கொஞ்சந் தாமதித்து மறுவிடுத்தமுஞ் செய்வான். அதைவிட அதிகஞ் செய்வது மூடத்தனமாகும்.

இன்னும் சொல்லப்பட்டிருக்கிறது ஜிமாவு மிகுதஞ் செய்வதும், முந்தின ஒஜீபனம் சீரணிக்காமல் வயற்றிலிருக்கும்போது மறு ஒஜீபனத்தைச் செலுத்துவதும், ஹனியாவின் கருமத்தில் சனமடைவதும் இம்மூன்றும் மனிதரை ஹலாக்காக்கும்.

இன்னும் புஸ்தானுல் ஆரிபீனில் வருகின்றது நாலு கருமம் வாணாளைக் குறைக்கும், ஒருவேளை உயிரளவில் நிற்கும். அதில் ஒன்றாவது, வயறு நிறம்பி யிருக்கையில் குளிக்கிறதும், இரண்டாவது உப்புக்கண்டந் தின்னுகிறதும், மூன்றாவது வயறு நிரம்பி யிருக்கையில் ஜிமாவு செய்வதும், நாலாவது கிழவியை ஜிமாவு செய்வதும் ஆக இந்நாலுமாம்.

ஜிமாவு அதிகஞ்செய்வதை வளமையாக்கிக்கொண்டால் சரீரத்திற் சொறிச்சலையும் பார்வையிலும் குவ்வத்திலும் பிலக்கேட்டையும் வருத்திவிக்கும். ஜல்தியில் முடிநரைக்கும், எரும்பயேலாமையை யுண்டாக்கும், நீர் பாண்டம் பிலங்கெட்டு வீங்கிவிடும், நீர்ச்சுருக்கு, கல்லடைப்பு முதலிய பல ரோகங்களுண்டாம்.

---

## 54-ம் பஸல்.

### இது புருஷன் பெண்ணுக் கிடையில் மலடறிவதைக் கூறுவது

ஓர் பெண்பிள்ளையை மலடியா அல்லவா வென்றறிய நாடினால் அவள் வயற்றுள் போஜனமில்லா திருக்கும்போது தூளையுள்ள

ஓர்பிரம்பு நாற்காலியின் பேரிலவளை யபத்தைத்திறந்து உட்கார வைத்து அந்த நாற்காலியின் தாளில் நெருப்புச் சட்டியை வைத்து சாம்பிறாணி கஸ்தூரி பரிமளக்குச்சி போலான அதிக வாசமுள்ள வஸ்துவை யதிற்போட்டு கீழே புகைப்பிடிக்கும் பொழுது புகை வெளிக்கிடாமல் அவளின் கீழ்வஸ்திரத்தை நீக்கி விட்டு துப்பட்டிபோற் கொற்றனைக்கொண்டு சுற்றியும் மறைத்துக்கொண்டும், அவளினது வாயையுமிரண்டு நாசியையும் பொற்றிக்கொண்டும் புகைப்பிடிக்கவும். அப்பால், அவள் வாய் நாசியில் நின்றும் அப்புகை புறப்பட்டால் அவள் மலடியல்லை அவ்வாசம் வாயில் காணவிட்டால் மலடியாகும்.

இனி இந்த மலடியான பெண்பிள்ளைக்கு கெர்ப்பம் தரிக்குமா அல்லவா வென்றறிய நாடினால் வெள்ளைப்பூண்டிலொரு பூண்டை எடுத்துரித்து ஆட்டு முடியின் கம்பளி துண்டில் வைத்து சுருட்டி அவள் அபத்துக்குள் வைத்து இரவில் படுத்து நித்திரை செய்து விழித்தபோது அவள் வாயை முகந்துப்பார்க்கவும் அதில் வெள்ளைப் பூண்டின் வீச்சங் கண்டால் கெர்ப்பமாவாள். அந்த வீச்சமில்லா விட்டால் மலடியாகும்.

இனி மலடாயிருப்பது ஆணோ பெண்ணோ வென்றறிய நாடினால் ஏழு தொலிகோதுமையும் ஏழு மொச்சக்கொட்டையு மெடுத்து சூளையில் வையாத பச்சைவெட்டு பாத்திரத்தில் போட்டு அவளை யதில் சிறுநீர் விடச்செய்து பின்பு இன்னொரு பாத்திரத்தில் இது போல் வைத்து அவனை சிறுநீர் விடச்செய்து ஏழு நாளைக்கு அப்படியே வைத்திருந்து எட்டாம் நாள் பார்க்கவும் அவ்வித்துகள் முளைத்திருந்த பாத்திரமுடையார் மலடல்ல வென்றும், அவ்வித்துகள் முளையாத பாத்திரமுடையார் மலடரென்றும் அறிந்துக்கொள்க. அல்லது இருவருடைய மனியையுமெடுத்து தண்ணீரில் விடவும் மிதந்த மனியர் மலடரென்றும் தாழ்ந்த மனியர் மலடல்ல வென்றும் அறிந்துக் கொள்ளலாம்.



# 55-ம் பஸல்.

## இது கெர்ப்பந் தரிப்பதற்குதவியான செயல்களையும் மருந்துகளையும் கூறுவது.

ஜிமாவைக் கொண்டுள்ள நாட்டமானது பிச்சளமுண்டாகிறதற்காகவா யிருப்பதால் ஜிமாவு செய்பவர்கள் ஹமலுக்குரிய கால நேரங்களையும் செயல்களையும் மருந்துகளையும் தெரிந்து செய்வது அவசியமானதாயிருக்கிறது. ஆனதால் மனைவி ஹைலைவிட்டும் துப்பரவான பின்னடியில் ஜிமாவை நாடுவான். இன்னும் இருவருடைய இன்ஸாலும் ஒரே நேரத்தில் இறங்குவதையும் கவனித்துக் கொள்வான். ஸ்திரீயின் இன்ஸால் வெளியாகுதல் நீடித்த விளையாட்டைக் கொண்டென்று அறிந்திருக்கவேண்டும். இன்னும் இன்ஸாலிறங்கும்போது ஆடவன் தன் வலபுறம் கொஞ்சம் சாய்ந்துக்கொள்வதும் இருவரும் சுமுகமாயிருப்பதும் கெர்ப்பம் தரிப்பதற்கு அனுகூலமாகும்.

ஆட்டு விட்டையைப் பன்னீர்ப்பூ எண்ணெயில் குழப்பி ஆண்பிள்ளை பூசிக்கொண்டு கூடுவது ஹமலுக் குதவியாயிருக்கும். யானை விட்டையை யவளறியாதபடி கரைத்து ஸ்திரீக்குக் குடிப்பாட்டிக் கூடினால் அப்போதே கெர்ப்பம் தரிக்கும்.

பிறந்த பிள்ளையின் அறுபட்ட கொப்பூழில் பருப்பளவு எடுத்து ஜெயித்தூன் எண்ணெயில் ஒரு இரவுபகல் முங்கவிட்டு வைத்தெடுத்து அதை நிதம்பத்தில் பொருந்தி ஒரு நாழிகைமட்டும் பொறுத்திருந்து ஜிமாவு செய்வதும், ஜிமாவுக்குப்பின் நித்திரை செய்வதும், ஜிமாவுக்கு முன் கெர்ப்பப்பை கீழிறங்குவதற்காக ஸ்திரீயைப் பத்துமுறை யுலாவச் செய்வதும், அவளுக்குக் கோபமுண்டாக்கிக் கூடுவதும் ஆகிய இவ்வித செய்கைகள் ஹமலுண்டாவதற்கு அனுகூலமானவை.

குதிரைப்பாலே ஸ்திரீக்கு அறியப்படுத்தாமல் குடிப்பித்து பின்பு கூடுவதும், ஆற்றிலுள்ள உயிர்த்தவளையைப் பிடித்து வந்து ஸ்திரீயை அதன் வாயில் உமிழச்செய்து தவளையை ஆற்றில் விட்டு விட்டு பின்பு கூடுவதும், கற்பூரவள்ளியை யவள் பொதிந்துக் கொள்வதும், துப்புறவிற்குப்பின் வெண்ணையை யருந்தச்செய்து கூடுவதும், கெர்ப்பப்பையைச் சூடாக்கும் வஸ்துக்களை அவள் உண்ணச்செய்வதும், ஹமலுண்டாவதற் குதவியாகும்.

ஒட்டகைக்கோசத்தின் கொழுப்பும், தர்ராவின் கொழுப்பும் கிராம்பு, குங்குமப்பூ, தேன் இதுகளை ஒன்றுபறைத்துப் பஞ்சில் ஊட்டி ஜிமாவுக்குப் பின் பொருந்திச் சுமந்துக் கொள்வாளாகில் கெர்ப்பமாவாள்.

ஒட்டகைக் கொண்டைக்கால் மூளையைப் பஞ்சிலாவது ஆட்டு முடியிலாவது ஊட்டி மாதவிடாய் துப்புறவானவுடன் மூன்று நாள் அபத்தில் வைத்திருந்து பிறகு கூடினால் மலடியும் கெர்ப்பமாவாள்.

முயல் மூளையைத்தின்றும் பெண்குறியில் தேய்த்துக் கூடினாலும், ஆடவன் வாத்தின் விரையைச்சுட்டுத்தின்றவுடன் கூடினாலும் ஹமலுண்டாகும்.

இராஜாளியின் எச்சத்தை தண்ணீரிற் கலக்கி யருந்துவாளாகில் மலடியாயிருந்தாலும் கெர்ப்பந்தரிக்கும்.

கெர்ப்பந்தரியாதவள் மாதவிடாய் காலத்தில் துப்புறவாவதற்கு மூன்றுநாளைக்குமுன் சாவலின் இரண்டு விரைக் கொட்டையும் சுட்டுத்தின்று புருடனைக் கூடினாள் கெர்ப்பமாவாள்.

யானைத்தந்தப் பொடியை தேனில் அல்லது ஜலத்தில் கலந்து ஏழு நாள் தொடராய்க்குடித்து பிறகு புருடனைக் கூடினால் மலடியாயினும் கெர்ப்பமாவாள்.

---



## 56-ம் பஸ்ல்.

### புருஷன் நினைத்த பெண்ணை விவாகம் செய்கிறதற்குவேண்டிய இஸ்முகளைக் கூறல்.

இமாம் யாபியீ றஹிமஹுல்லா சொல்லியிருக்கிறார்கள், யாராகிலுமொருவன் ஒரு பெண்ணின்பேரில் ஆசைவைத்து விவாகம் செய்ய முயன்றபோது அவள் இவனுக்கு சம்மதம் கொடுக்காவிட்டால்,

قُلْ إِنَّ الْفَضْلَ بِيَدِ اللّٰهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ

என்ற இந்த ஆயத்தையும் அவள்பேரும் அவள் தாய் தகப்பன் பேரும் வியாழக்கிழமை சுஹராவென்ற சாஅத்திலாவது முஷ்தரி என்ற சாஅத்திலாவது அதாரிதென்ற சாஅத்திலாவது துப்புரவாகிய ஒரு சடிதத்தில் எழுதி அவன் தன்னுடைய குதிதாதுண்டில் பொதிந்து தான் சுமந்துக் கொண்டானேயானால் அவளுக்கு இவன்பேரில் சம்மதம் உண்டாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் யாபியீ றஹிமஹுல்லா சொல்லியிருக்கிறார்கள்.

وَلَا تَمُدَّنَّ عَيْنَيْكَ إِلَىٰ مَا مَتَّعْنَا بِهِ أَزْوَاجًا مِنْهُمْ زَهْرَةَ الْحَيَاةِ الدُّنْيَا
لِنَفْتِنَهُمْ فِيهِ وَرِزْقُ رَبِّكَ خَيْرٌ وَأَبْقَىٰ وَأْمُرْ أَهْلَكَ بِالصَّلَاةِ وَ
اصْطَبِرْ عَلَيْهَا لَا نَسْأَلُكَ رِزْقًا نَحْنُ نَرْزُقُكَ
وَالْعَاقِبَةُ لِلتَّقْوَىٰ

என்னும் ஆயத்தை எழுதி அதுடன் அவள்பேரும் அவள் தாய்

பேரும், இவன்பேரும் இவன் தாய்பேரும் எழுதி தாவீது முடிந்து இவள் கட்டிக்கொண்டாளே யானால் (இன்ஷா அல்லா) இவனல்லவனை ...... அவன் பொருந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

## 57-ம் பஸல்.

### பெண்பிள்ளை தான் நினைந்த புருஷனை விவாகம் செய்வதற்குள்ள இஸ்முகளைக் கூறல்.

தனக்கு இஷ்டமான மாப்பிள்ளையை தேடும் பெண்ணானவள்

نهش نهش كهلكهل ساس سس مس هوش

هوش نوش نواش انخلت عقدة فلانة بنت فلانة

بحق هذه الاسماء ولا حول ولا قوة الا بالله العلي العظيم

என்னும் இஸ்மை எழுதி குங்கிலியம் கொண்டு தூபம்காட்டி தன் வலது தோளின் பேரில் கட்டிக்கொண்டாளே யானால் அவளல்லாதவளை அவன் நினைக்கவே மாட்டான்.

இன்னும் கீழ்க்குறித்த இஸ்மை எழுதி அவளுடைய முடியில் கட்டிக் கொண்டாளே யானால் அவன் இவளைத்தவிர மற்றவளை பொருந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்மு:—

اهوش مهوش شلهوش

---

* பலானத்த பிந்தி பாலனத்த என்னும் தலத்தில் அவள் பேரும் அவள் தகப்பன்பேரும் எழுதவும், பலானிப்னிபலான் என்று தலத்தில் அவன் பேரும் அவன் தாய்பேரும் எழுதவேண்டும். இது போலவே எந்தெந்த தலத்தில் வந்தாலும் அவ்விடத்திலும் இதுபோலவே பெயர்களை ....... வேண்டும்.



யாராகிலுமொரு பெண்பிள்ளை பின்வரும் ஆயத்தைப் பச்சைத்துண்டிலெழுதி அவள் கையில் கட்டிக்கொண்டாளேயானால் அவள் நாடியவன் அவள்பேரில் ஆசையாகி விடுவான் என்று இமாம் தைாபீ றஹிமஹுல்லா சொல்லி இருக்கிறார்கள். இஸ்மு:—

ووو وَأَذِّنْ فِي النَّاسِ بِالْحَجِّ يَأْتُوكَ رِجَالًا وَعَلَىٰ كُلِّ ضَامِرٍ

يَأْتِينَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيقٍ ۝ لِيَشْهَدُوا مَنَافِعَ لَهُمْ

யாராகிலுமொரு கன்னிஸ்திரீ விவாகத்தை நாடி (வகத்ஜர் ஆகும்) என்ற ஆயத்தை சூறகடைசிவரை எழுதி கட்டிக்கமக்காளே யானால் அதே மாசத்தில் அவள் கட்டுப்படுவாள் என்று இமாம் திலிம்சானீ சொல்லி இருக்கிறார்கள்.

---

## 58-ம் பஸல்.

### இது விவாகத்தைத் தடங்கல் செய்வதற்கும் அத்தடங்கலே முறிப்பதற்குமுள்ள இஸ்முகளைக் கூறல்.

யாராகிலுமொரு பெண்பிள்ளையை கலியாண முடிக்கிறதை விட்டும் தடங்கள் செய்வதற்கு நாடினால் மாதம் கடைசியில் தேய்வு பிறையில் அதிஜெளி மங்கியநாளில் அல்லாஹுத் தஆலாவுடைய காபிழு என்ற இஸ்மை காரீயத்தகட்டில் ருபா இய்யான வக்பில் நஸ்படைத்து கப்ருஸ்தானத்தில் அந்த தகட்டைப் புதைக்கும் போது,

يَا قَابِضُ اقْبِضْ عَلَىٰ قُلُوبِ الرِّجَالِ عَنْ فُلَانَةٍ

தடங்கல் செய்பவனை ஆண்பிள்ளைகளுடைய சவ்புகள்பேரில் இன்ஞானவிட்டும் * தடங்கல் செய்தானை யென்று சொல்வானே அவனை ஒருவனும் நினைக்கவே மாட்டான்.

இன்னும் இமாமுல் யூனி றழியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், என்னிடத்தில் ஒருபெண்பிள்ளை கொண்டு வரப்பட்டது. அந்தப்பெண் பிள்ளையின் ஊரில் அவளைக்கான அழகானவளில்லை. அப்படிப்பட்ட பெண்பிள்ளையை ஒருவனும் பெண்பேசாமல் 5-வருஷகாலமாக தடைபட்டிருந்தாள் அப்போதவளை

يَامُجِيبُ யாமுஜீபு.

என்று திக்று செய்யதற் கேவினேன். அதுபோலவே அவளும் யாமுஜீபென்ற இஸ்மை நக்றாக மிருதமாக திக்று செய்தாள். அப்போதவளை அப்புறத்தில் நின்று மொருமனிதன் பெண் பேசினான். அந்த மனிதன்தான் அல்லாஹுத் தஆலாவுடைய காபி லென்னும் இஸ்மில் நின்று மவளை கலியாணம் முடிக்கவிடாமல் தடங்கல் செய்தவரா யிருந்தார். இன்னுமவர் இஸ்முடைய ஹர்புகளில் தப்ஸீலக்கொண்டு மிகவும் அறிந்தவரா யிருந்தார். அவர் அந்தப்பெண்ணை காபிலென்ற இஸ்மில் நின்றும் தடுத்திருந்தார். அவளந்த தடங்கலை முஜீபென்ற இஸ்மைக்கொண்டு இரகசித்து காப்பாத்திரத் தளவில் அவன் திருப்பி அந்த இஸ்மை திக்று செய்வதை தாயிமாக்கிய பொழுது அவளைக்கொட்டும் அல்லாஹுத் தஆலா தன்னுடைய உதவியைக் கொண்டும் அவனுடைய சங்கையைக்கொண்டும் சந்தோஷமாக்கி வைத்தான். இன்ஷா அல்லா.

## 59-ம் பஸல்.

### புருஷன் பெண்சாதிக்கிடையில் மஹப்பத் துண்டாகும் இஸ்முகளைக் கூறுவது.

புருஷன் பெண்சாதி இருவரும் மஹப்பத்திற்காகவேண்டி மஞ்சமெழுகுகொண்டு இருவரையும் ரூபமுண்டாக்கி புருஷனு

* இந்த விடத்தில் அவன் பெயரைக் கூறவேண்டும்.



டைய ரூபத்தின் நெஞ்சளவில் செப்பு ஊசி கொண்டு பெண்சாதி பேரும் அவள் தாய்பேரையும் கீறி பெண்சாதியுடைய ரூபத்தின் நெஞ்சளவில் புருஷனுடைய பேரும் அவன் தாய்பேரும் கீறி எழுதி.

[illegible]

[illegible]

[illegible]

என்று ஒரு கடிதத்துண்டிலெழுதி அதை அந்த இரண்டு ரூபத்தின் நடுவிலாக்கி அந்த ரூபங்களை முகத்தோடு முகமும் நெஞ்சோடு நெஞ்சும் ஒன்றாய் சேர்த்துக்கொண்டு பழம் காய்த்துக்கொண்டிருக்கின்ற மரத்தின்கீழ் புதைத்து வைத்தால் பிரியாத மஹப்பத்தா யிருப்பார்கள். இன்ஷா அல்லா.

(வேறு) புருஷனும் பெண்சாதியும் குங்குமம் கஸ்தூரிகொண்டு

[illegible]

என்று வெள்ளைப்பீங்கானில் எழுதி சோலை தண்ணீர்கொண்டு கரைத்து குடித்தார்களாகில் பிணக்கமல்லாமல் இணக்கமாகவும், சந்தோஷமாகவும், மஹப்பத்தாகவு மிருப்பார்கள். இன்ஷா அல்லா.

(வேறு.) இன்னும் கபீர் என்னும் இஸ்மை

يَاكَبِيرُ யாகபீர் என்று

வழிபணத்தாளில் ஓதி யூதி அதை இருவரும் பொசித்தால் இணக்கமும், மஹப்பத்து முண்டாகுமென்று ஷப்றாவி றழியல்லாஹு அன்ஹு சொல்லி யிருக்கிறார்கள். இன்ஷா அல்லா.

# 60-ம் பஸ்ல்.

## பெண்சாதிக்கு புருஷன்பேரில் மஹப்பத்தை யுண்டாக்கும் இஸ்முகளைக் கூறல்.

யாராகிலுமொரு பெண்பிள்ளை புருஷனை மஹப்பத்துவைக்காம லிருப்பாளேயாகில் கீழ்க்கண்ட இஸ்மை அவன் முன் கையிலெழுதி அந்தக்கை கொண்டு அவள் முன்கையில் அடிக்கவும். அதுகொண்டு அவளால் சபூர் செய்ய லேலாத மஹப்பத்தாயிருப்பாள். (இன்ஷா அல்லா) இதற்கு இஸ்மு:—

ومروفه فة ق ح ع كسلسم اللهم هيج قلب فلانة بنت

فلانة الى فلان بن فلانة بحرمة اسم الله العظيم وبحرمة اسرا

فيل وميكائيل برحمتك يا ارحم الراحمين

(வேறு.) கீழ்க்கண்ட இஸ்மை எழுதி திரியாக்கி விளக்கில்கொளுத்தினால் அவள் அவன்மேல் மிகவும் பிரியம் வைப்பாள். இஸ்மு:—



لحب فلان ابن فلان على حب فلانة بنت فلانة

(வேறு.) யாராகிலுமொரு பெண்பிள்ளை புருஷனுக்கு வழிப்படாமல் தாய் வீட்டிலிருந்து வம்புபேசிக் கொண்டிருப்பாளாகில் இந்த 3 இஸ்மையும் எழுதி திரியாக்கி இரவைக்கி விளக்கெரிக்கவும் விளக்கின் பார்வையை அவள் வீட்டுப் புறமாய் திருப்பிவைக்கவும் இதுபோல் 3 இரவு தொடராக செய்யவும்.

முதல் இரவுக்கு இஸ்மு



لحب فلان ابن فلان على حب فلانة بنت فلانة



2-ம் இரவுக்கு இஸ்மு



لحب فلان ابن فلان على حب فلانة بنت فلانة

3-ம் இரவுக்கு இஸ்மு



لحب فلان ابن فلان على حب فلانة بنت فلانة

(வேறு.) இன்னும் பின்வரும் பலீதாவை எழுதி அவளுடைய தலை முடியை பொதிந்து எரிக்கவும். அப்போதே மஹப்பத்தாகி விடுவாள் பலீதா:—



لحب فلان ابن فلان على حب فلانة بنت فلانة

(வேறு.) பின் வரும் இஸ்மை எழுதி அவளாவில்கட்டினால் உடனே புருஷன்மீதில் பிரியாத மஹப்பத்தாவாள். இன்ஷா அல்லா இஸ்மு:—



لحب فلان ابن فلان على حب فلانة بنت فلانة

(வேறு.) இன்னும் இந்த நக்ஷ் சூறத்துல் இக்லாசை ஒரு கடிதத்தில் எழுதி மரத்தின் பேரில் தூக்கி வைத்தால் அந்த மரம் காத்தில் அசைவுகொடுக்க கொடுக்க மஃஷூகு நப்ஸின் பேரில் ஆஷிகாகி விடுவாள்.

நக்ஷ்

| | | | |
|---|---|---|---|
| احد | الله | هو | قل |
| يلد | لم | الصمد | الله |
| ولم | لد | يو | ولم |
| احد | كفوا | له | يكن |

(வேறு) இந்த நக்ஷை மஹப்பத்திற்காக பீங்கானில் எழுதி ஷர்பத்தில் கரைத்து குடிப்பாட்டவும் நீங்காத மஹப்பத்தாயிருப்பான். (இன்ஷா அல்லா) நக்ஷ்:—

| | | | |
|---|---|---|---|
| ٩ | ١٢ | ١٥ | ٢ |
| ١٤ | ٣ | ٨ | ١٣ |
| ٤ | ١٧ | ١٠ | ٧ |
| ١١ | ٦ | ٥ | ١٦ |

## 61-ம் பஸல்.

### புருஷன் பெண்சாதிபேரில் மஹப்பத்து வைக்கும் இஸ்முகளைக் கூறல்.

பெண்சாதிக்கு புருஷன் வழிப்படுகிற தற்காக வேண்டி இந்த நக்ஷை எழுதி அவள் கையில் கட்டவும் அவன் மஹப்பத்தாகி விடுவான் முஜர்றப் நக்ஷ் இதுவாகும்:—

| | | | |
|---|---|---|---|
| ٢٩٧ | ١ | ٢٩٥ | ٧ |
| ٢٩٣ | ٨ | ٢٩٦ | ٢ |
| ٥ | ٢٩٣ | ٣ | ٢٩٩ |
| ٢ | ٢٩٨ | ٦ | ٢٩٢ |

(வேறு) இந்த நக்ஷை மதுரமாகிய வஸ்த்துவில் எழுதி எவர்களுக்கு கொடுக்கப்பட்டு புசிப்பார்களோ அவர்களெல்லாம் மஹப்பத்தாவார்கள். நக்ஷ் இது:—

| | | | |
|---|---|---|---|
| ٣ | ٦ | ٣ | ٦ |
| ٦ | ٣ | ٦ | ٣ |
| ٣ | ٦ | ٣ | ٦ |
| ٦ | ٣ | ٦ | ٣ |

(வேறு.) இந்த இஸ்மை மஹப்பத்திற்காக இரும்புத் துண்டிலெழுதி அடுப்பில் உடனே வேகவைக்கவும் இஸ்மு இது.



المحبة احرقت قلب وفؤاد ونفس وجسم وجوارح

فلان ابن فلانة الى كل فلانة بنت فلانة بحق

الاسم ١١٩١ ...

## 62-ம் பஸல்.

### மனைவியானவள் அன்னியனை இச்சிக்காதிருக்கும்படி செய்யும் இஸ்முகளைக் கூறல்.

மனைவியானவள் அன்னியனை இச்சிக்காதிருக்கிறதற்கு இந்த காத்திமை எழுதி அவள் சமத்கள்ளுக சனிக்கிழமை அவளைசேர்வானே யானால் அவள் அன்னியனை ஒருபோதும் நினையாள் என்று இமாம் கிஸ்லி ஸானீ றஹிமஹுல்லா சொல்லியிருக்கிறார்கள். காதிமா இது:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| فلانة | ر | د | ت | ق | م |
| ر | د | ت | ق | م | فلانة |
| د | ت | ق | م | فلانة | ر |
| ت | ق | م | فلانة | ر | د |
| ق | م | فلانة | ر | د | ت |
| م | فلانة | ر | د | ت | ق |

(வேறு.) பின்வரும் இஸ்மை எழுதி அவளுடைய வலது தொடைமேல் கட்டியபின் புருஷன் சேர்ந்தானே யானால் அவள் அன்னியனை ஒருபோதும் நினையாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது இஸ்மு:— (மறுபுறம்)

قيّدت موسى ... وعقدت الكلام ... فيقيم حللت ذكر

فلان بن فلان ة من فرج فلانة بنت فلانة من كل عقدة في حرير

ومن كل عقدة عقدت ومن كل عقدة في رصاص ومن كل

عقدة في نحاس ومن كل عقدة في حجر ومن كل عقدة في

حلول ومن كل عقدة في معقول ومن كل عقدة في ثوب

ومن كل عقدة في عجين ومن كل عقدة في مسجد ومن

كل عقدة في سبيكة ومن كل عقدة في بال

ومن كل عقدة في خيط ومن كل عقدة في ذهب

ومن كل عقدة في فضة ومن كل عقدة في قرطاس و

من كل عقدة في شجر ومن كل عقدة في وسادة بيّنة

كن فيكون انما امره اذا اراد شيئا ان يقول له كن فيكون

فسبحان الذي بيده ملكوت كل شيء واليه ترجعون

كتب الله لاغلبن انا ورسلي ان الله قوي عزيز



بيت مكي

(வேறு.) கீழ் குறிக்கப்படும் இந்த ஹர்புகளை புதுப்பாத்திரத்தில் எழுதி ஸெய்த்தூன் எண்ணெய்கொண்டு கரைத்து புருஷன் பெண்சாதி இருவருடைய முக்கியஸ்தலத்திலும் பூசிக்கொண்டு சேர்ந்தால் ஒருபோதும் இவனை மறவாள் மற்றவனை நினையாள். என்று இமாம் ஷைறபீ றழியல்லாஹு சொல்லி யிருக்கின்றார்கள் இன்ஷா அல்லா. ஹர்பு:—

ف ج ش ث ظ ز ظ خ ز ق ج ش ج ش ث ظ خ ز ف ج ش ث ظ ث

خ ق ز ق ج ظ ث ج ظ خ ز ف ج ش ث ش ظ ث خ ظ خ ز ف ج

ش ث ش ث ظ خ ز

(வேறு.) கீழ்வரும் ஆயத்துகளையும் துஆவையும் எழுதி புருஷன் கட்டிக்கொண்டானே யானால் அவன் பெண்சாதி ஒருபோதும் அன்னியனை நினையாள் என்று இமாம் ஷுர்ஜீ றழியல்லாஹு சொல்லி யிருக்கின்றார்கள். துஆ:—

أَوَلَمْ يَرَ الَّذِينَ كَفَرُوا أَنَّ السَّمٰوٰتِ وَالْأَرْضَ كَانَتَا رَتْقًا فَفَتَقْنٰهُمَا وَجَعَلْنَا مِنَ

الْمَاءِ كُلَّ شَيْءٍ حَيٍّ أَفَلَا يُؤْمِنُونَ ۝ باطل باطل باطل ما كانوا يعملون ۝

فَغُلِبُوا هُنَالِكَ وَانْقَلَبُوا صَاغِرِينَ ۝ قَالَ مُوسَىٰ مَا جِئْتُمْ بِهِ السِّحْرُ إِنَّ اللّٰهَ

سَيُبْطِلُهُ إِنَّ اللّٰهَ لَا يُصْلِحُ عَمَلَ الْمُفْسِدِينَ ۝ وَقُلْ جَاءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ

اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوقًا فَنَبْ فَعَوَّذَتَيْنِ فَنَبْ

اللهم انى فككت حبس فلان بن فلانة

بكهيعص وبطه وبيس وبحم وبا

بآيات الله التامات التي لا يجاوزهن

بر ولا فاجر تبارك

(வேறு.) 3. கோழிமுட்டையை அவித்து உரித்து அதில் ஒன்றுவதில் 1-வது ஆயத்தையும் இரண்டாவதில் 2-வது ஆயத்தையும் மூன்றுவதில் 3-வது ஆயத்தையும் எழுதி ஒழுங்கு போல் ஒன்றுவதை முதலாவதும் இரண்டாவதை அதற்கு பிறகும் மூன்றுவதை அதற்கு பிறகும் தின்றால், இன்ஷா அல்லா அவனை அவள் மறவாள் மற்றவனையும் நினையாள் என்று இமாம் ஷர்ஜீ றஹிமஹுல்லா சொல்லியிருக்கிறார்கள். ஆயத்து:—

1-வது ஆயத்து

قَالَ مُوسَىٰ مَا جِئْتُمْ بِهِ السِّحْرُ إِنَّ اللَّهَ سَيُبْطِلُهُ
إِنَّ اللَّهَ لَا يُصْلِحُ عَمَلَ الْمُفْسِدِينَ

2-வது ஆயத்து

أَوَلَمْ يَرَ الَّذِينَ كَفَرُوا أَنَّ السَّمَاوَاتِ وَالْأَرْضَ كَانَتَا رَتْقًا
فَفَتَقْنَاهُمَا وَجَعَلْنَا مِنَ الْمَاءِ كُلَّ شَيْءٍ حَيٍّ أَفَلَا يُؤْمِنُونَ

3-வது ஆயத்து

وَقَدِمْنَا إِلَىٰ مَا عَمِلُوا مِنْ عَمَلٍ
فَجَعَلْنَاهُ هَبَاءً مَنْثُورًا



## 63-ம் பஸ்ல்.

### ஆணையும் பெண்ணையும் தான்செய்த செயலை நித்திரையில் தானாக சொல்லும் படியான இஸ்முகளைக் கூறல்.

எந்த ஆண்பிள்ளையாவது பெண்பிள்ளையாவது ஒரு செயலை செய்துவிட்டு அச்செயல் வெளியாகாமல் இருக்குமேயாயின் வெளியாகும்படி தானாக நித்திரையில் சொல்லுகிறதற்கு இந்த ஆயத்துகளை.

يَا بَنِي إِسْرَائِيلَ اذْكُرُوا نِعْمَتِيَ الَّتِي أَنْعَمْتُ عَلَيْكُمْ وَأَوْفُوا
بِعَهْدِي أُوفِ بِعَهْدِكُمْ وَإِيَّايَ فَارْهَبُونِ وَآمِنُوا بِمَا أَنْزَلْتُ
مُصَدِّقًا لِمَا مَعَكُمْ وَلَا تَكُونُوا أَوَّلَ كَافِرٍ بِهِ وَلَا تَشْتَرُوا بِآيَاتِي
ثَمَنًا قَلِيلًا وَإِيَّايَ فَاتَّقُونِ وَلَا تَلْبِسُوا الْحَقَّ بِالْبَاطِلِ وَتَكْتُمُوا
الْحَقَّ وَأَنْتُمْ تَعْلَمُونَ

திங்கட்கிழமை இரவில் 5-சாஅத்து சென்றதின் பின் இந்த ஆயத்துகளை பாலிகில்லாத சிறுபிள்ளையுடைய உமிழ்நீரையில் தின்று பொரு துண்டுப்பிடவையில் எழுதி, பின்பு அந்த பிடவைத் துண்டை நித்திரை செய்யும் பெண்பிள்ளையுடைய நெஞ்சில் வைத்தானேயாகில் அந்த பெண்பிள்ளை செய்த செயலெல்லாத்தவற்றையும் அறிவிப்பாள்.

(வேறு.) இன்னும் அதுபோல்

[illegible]

என்னும் ஆயத்தை தங்கத்தகட்டில் அல்லது கொண்டைக்காரத்தி பறவையின் இரத்தங்கொண்டு அவனுடைய வலது கையிலெழுதி நித்திரை செய்யும் பெண்பிள்ளையுடைய நெஞ்சின் மீதில் வைத்தானேயானால் அவளில் நின்றும் உண்டானதெல்லாவற்றையும் யாதொரு சந்தேகமன்னியில் அறிவிப்பாள்.

(வேறு.) இன்னும் ஆராகிலு மொருவன் அதுபோல்

[illegible]

لَهُ الْحَمْدُ فِي الْأُولَىٰ وَالْآخِرَةِ وَلَهُ الْحُكْمُ وَإِلَيْهِ تُرْجَعُونَ

என்ற ஆயத்தை பறவையின் இரைப்பையின் தோலின்மீதும் குங்குமப்பூவுங் கொண்டு, பஞ்சில் நின்று முண்டான வஸ்திரம் உடுத்தவனை, இந்த ஆயத்தை எழுதி நித்திரை செய்யும் ஆண் பிள்ளை அல்லது பெண்பிள்ளையின் நெஞ்சின் பேரில் வைத்தானேயானால் அவர்கள் செய்த செயலைக் கொண்டறிவிப்பார்கள்.

(வேறு.) இன்னும் அதுபோல் யாராகிலு மொருவன் மறைக்கப்பட்டதை அறிய நாடினால்

[illegible]

என்ற ஆயத்தை நித்திரை செய்கிறவன் மீதில் ஓதவும் அவன் மறைக்கப்பட்டதை வெளியாக்குவான். இன்ஷா அல்லா



(வேறு.) இன்னும் அதுபோல்

[illegible]

ஆறத்து இக்காதில்நிலத் என்னும் ஆறத்தை ஒரு இன்ஸானுடைய பிடவையில் நின்றும் துண்டுப்பிடவையில் எழுதி, அவன் பெயரையும் அவன் தாய்பெயரையும் குங்குமப்பூவுந் தண்ணீருங்கொண் டெழுதி மடித்து கொண்டைக்காரத்திப் பறவையின் தோல் கொண்டு அதைப்பொதிந்து, அந்தப்பெயருடைய ஆண் பெண்கள் எவராகிலும் உறங்கும்போது அவர் மீதில் வைத்தால் அவர்கள் செய்த செயலை வாயாற்கூறி விடுவார்கள். இன்ஷா அல்லா.

## 64-ம் பஸல்.

### இது ஆண்பிள்ளைகள் தாகத்து பெறுவதற் குள்ள இஸ்முகளைக் கூறுவது.

ஹஸன் பஸரி றஹிமஹுல்லா அவர்களைக்கொண்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது, அவர்களிடத்தில் கேட்கப்பட்டதாவது, ஒரு மனிதன் ஒரு பெண்ணைக்கலியாணம் முடித்திருக்கிறார். அவர் அவளுடன் சுடி கூடுகிறதற்கு மாட்டாதவரா யிருக்கிறார். அதற்கென்ன பரிகாரம் என்று கேட்டபோது அவர்கள் சொன்னார்கள், சிட்டுக்குருவி முட்டை இரண்டைக் கொண்டு வாருங்கள் என்றார்கள். அது போலவே கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. அந்த இரண்டு முட்டையையும் அவித்துரித்து

[illegible]

என்று ஒரு முட்டையின் பேரில் எழுதி புருஷனுக்கும், இன்னொரு முட்டையின் பேரில்

وَالْأَرْضَ فَرَشْنَاهَا فَنِعْمَ الْمَاهِدُونَ

என்றெழுதிப் பெண்சாதிக்கும் கொடுத்து அவர்களிரண்டு பேரையும் அம்முட்டைகளிரண்டையும் தின்னும்படி ஏவி, நீங்கள் இரண்டு பேரும் போய்உங்கள் ஹாஜத்துகளைத் தேடிக் கொள்ளுங்கள் என்ற போது, அவர்களிரண்டு பேரும் சந்தோஷமாய்ப்போய் அவர் அவருடன் கூடி அவருடைய பிரியோஜனத்தைப் பெற்றுக் கொண்டார்.

(வேறு) பாராமெலும்பொருவனுக்கு போகத்தில் ஆசையில்லாமல் உடம்பும் சோர்ந்திருக்குமேயானால், அவன் மூன்றுநாள் நோன்பு பிடித்து, பின்பு பாதி இரவில் எழும்பி குங்குமப்பூவும் பன்னீரும் கூட்டி தாம்பிர கலம் கொண்டு அடியிற் கண்ட ஆயத்தை

إِنَّمَا يَسْتَجِيبُ الَّذِينَ يَسْمَعُونَ وَالْمَوْتَىٰ يَبْعَثُهُمُ اللَّهُ ثُمَّ إِلَيْهِ يُرْجَعُونَ

வலது கையில் எழுதி கரைத்துக் குடிக்கவும். இந்தப்படி மூன்று தினம் செய்யவும். அல்லாகுத் தஆலா உதவி கொண்டு அவன் முறையிட்டது அவனை விட்டும் விலகிப்போம்.

(வேறு) உலமாக்கள் சிலருடைய எழுத்தில் கண்டிருக்கிறது. ஜிமாவு செய்தால் மனிமிறாதிருப்பதற்கு முந்திரிகைபிலையில் பின்வரும் அஸிமாவை யெழுதி இடது தொடையிற் கட்டிக்கொண்டால் மனிமிறாது. அந்த அஸிமாவாவது:—

أبجد هوز حطي كلمن سعفص قرشت ثخذ ضظغ و

وَقِيلَ يَا أَرْضُ ابْلَعِي مَاءَكِ وَيَا سَمَاءُ أَقْلِعِي وَغِيضَ الْمَاءُ

وَقُضِيَ الْأَمْرُ وَاسْتَوَتْ عَلَى الْجُودِيِّ وَقِيلَ بُعْدًا لِلْقَوْمِ

الظَّالِمِينَ كُلَّمَا أَوْقَدُوا نَارًا لِلْحَرْبِ أَطْفَأَهَا اللَّهُ



[illegible]

## 65—பஸ்ல்.

### இது கர்ப்பமுண்டாவதற்குள்ள இஸ்முகளைக் கூறுவது.

ஒரு பெண் பிள்ளைக்கு ஹமலுண்டாக வேண்டுமானால் அவள் ஹைலில் நின்றும் முழுகிய அன்றையில் ஒரு கொழுத்து வளர்ந்த செம்மறியாட்டுக் குட்டியையறுத்து துப்புரவுசெய்து இரும்புச்சட்டியில் கொஞ்சமாகத் தண்ணீர் வார்த்து அதடங்களையும் போட்டவித்து தண்ணீரிறுத்து அன்றுபகல் குடித்து, ஒரு துப்புரவான பாத்திரத்தில் அடியிற்கண்ட சிறப்பான ஆயத்துகளை ஒரு ஹர்பும் அழியாமலும் குறுடாகாமலும் எழுதி தண்ணீர்கொண்டு கரைத்து தன்னுடைய புருஷனுடன் வீடுகூடமுடிகும் நேரம் குடித்தால் அல்லாகுத் தஆலா உதவிகொண்டு ஹமலாவாள். இது சோதிக்கப்பட்டதாயிருக்கும்.

அந்த ஆயத்துகளாகிறது மூறத்து பாத்திஹாவும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்மீதில் ஸலவாத்தும் எழுதிபின்பு அத்துடன் கீழ்கண்ட அஸிமாவையும் எழுதுவதாயிருக்கும்.

أبجد هوز حطي كلمن سعفص قرشت ثخذ ضظغ ل ا

إِنَّمَا أَنَا رَسُولُ رَبِّكِ لِأَهَبَ لَكِ غُلَامًا زَكِيًّا قَالَتْ أَنَّىٰ يَكُونُ

لِي غُلَامٌ وَلَمْ يَمْسَسْنِي بَشَرٌ وَلَمْ أَكُ بَغِيًّا قَالَ كَذَٰلِكِ

قَالَ رَبُّكِ هُوَ عَلَيَّ هَيِّنٌ وَلِنَجْعَلَهُ آيَةً لِلنَّاسِ وَرَحْمَةً مِنَّا

وَكَانَ أَمْرًا مَقْضِيًّا فَحَمَلَتْهُ بِإِذْنِ اللهِ تَعَالَى فَحَمَلَتْهُ بِحَوْلِ اللهِ تَعَالَى
وَقُوَّتِهِ بِالْحَوْلِ وَلَا قُوَّةَ إِلَّا بِاللهِ فَحَمَلَتْهُ فَانْتَبَذَتْ بِهِ مَكَانًا
قَصِيًّا إِنَّمَا أَمْرُهُ إِذَا أَرَادَ شَيْئًا أَنْ يَقُولَ لَهُ كُنْ فَيَكُونُ فَسُبْحَانَ الَّذِي
بِيَدِهِ مَلَكُوتُ كُلِّ شَيْءٍ وَإِلَيْهِ تُرْجَعُونَ سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ
عَمَّا يَصِفُونَ وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِينَ
وَالْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

(வேறு.) பின்வரும் தல்ஸமை பிள்ளையுண்டாகாத பெண்பிள்ளைக்குப் பிள்ளை யுண்டாகிறதற்கும் பழமில்லாதமரத்தில் பழமுண்டாகிறதற்கும் எழுதி கட்டினால் உண்டாகுமென்று முஜ்தெளஜிபுல் மஹாமிது என்னும் கிதாபில் சொல்லி யிருக்கிறார்கள். இது சோதிக்கப் பட்டதென்றும் சஹீஹானதென்றும் சொல்லியிருக்கிறார்கள். மேலும் இந்த தல்ஸம் மூஸா அலைஹிஸ்ஸலாமுடைய அஸாவின் பேரில் எழுதப்பட்டதா யிருக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.



(வேறு) ஹமலுண்டாகாத மலட்டுப்பெண்களுக்கும், மலட்டுத் தனமுள்ள ஆண்பிள்ளைகளுக்கும் அடியிற கண்ட ஆயத்துகளை, அதாவது

هُنَالِكَ دَعَا زَكَرِيَّا رَبَّهُ قَالَ رَبِّ هَبْ لِي مِنْ لَدُنْكَ ذُرِّيَّةً طَيِّبَةً إِنَّكَ



سَمِيعُ الدُّعَاءِ فَنَادَتْهُ الْمَلَائِكَةُ وَهُوَ قَائِمٌ يُصَلِّي فِي الْمِحْرَابِ
أَنَّ اللَّهَ يُبَشِّرُكَ بِيَحْيَىٰ مُصَدِّقًا بِكَلِمَةٍ مِنَ اللَّهِ وَسَيِّدًا وَحَصُورًا
وَنَبِيًّا مِنَ الصَّالِحِينَ قَالَ رَبِّ أَنَّىٰ يَكُونُ لِي غُلَامٌ وَقَدْ بَلَغَنِيَ الْكِبَرُ
وَامْرَأَتِي عَاقِرٌ قَالَ كَذَٰلِكَ اللَّهُ يَفْعَلُ مَا يَشَاءُ

கஸ்தூரி குங்குமப்பூ பன்னீர் கொண்டுகிளாஸ் பாத்திரத்தில் அல்லது பளிங்குப்பாத்திரத்தில் ஒளுவுடன் துப்புறவா யிருந்தெழுதி, துப்புறவான தண்ணீர் கொண்டழித்து புருடனும் ஸ்திரீயும் மூன்றுநாள் குடிப்பார்களாகில் அல்லா வுதவிகொண்டு ஹமலுண்டாகும். இன்னம் அதுபோல் மேல்படி ஆயத்துகளைக் கடிதத்தில் எழுதி பட்டுநூற் கயிறுகொண்டு ஆண்பிள்ளை யல்லது பெண்பிள்ளையின் கொடுக்கையில் கட்டவேண்டும். நித்திரைசெய்யும் விரிப்பளவில் புகுந்தால் கட்டியிருக்கிற துவாலை யவிழ்த்து வைத்துவிட்டு, இருவரும் துப்புறவானபின் அதைஎடுத்துக்கட்டிக் கொள்ளவேண்டும். அவர்களப்படி யிருந்து அவள் ஹைலாகிற பெண்ணாயிருப்பாளாகில் அவள் ஹைலைவிட்டும் துப்புறவான இரவில் அல்லது இரண்டாம் இரவில் அல்லது மூன்றும் இரவில் அல்லாஹுத் தஆலா உதவிகொண்டு கெர்ப்பமாவாள்.

(வேறு.) இன்னும் யாராகிலு மொருவன் ஹமலிக்காத வேண்டி. இந்த கீழ்கண்ட ஆயத்தை

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا
زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللَّهَ الَّذِي تَسَاءَلُونَ
بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

என்று வெள்ளிக்கிழமை பாதி இரவில் ஒருவரும் காணுதபடி ஒரு தனித்த வீட்டிலிருந்து ஹல்வா துண்டில் எழுதி பிள்ளையில்லாத ஆண்பிள்ளையும் அவனுடைய ஸ்திரியும் ஷை ஹல்வாவைத் தின்று விடு கூடவும். அல்லாஹுத் தஆலா உதவிகொண்டு ஹமுலுண்டா வாள். இந்தப்படி ஒரு விடுத்தம் அல்லது இரண்டு விடுத்தம் அல்லது மூன்று விடுத்தம் செய்யவும்

(வேறு.) இன்னும் அதுபோல் கீழ்வரும்

[illegible]

[illegible]

என்னும் ஆயத்தை வெள்ளித் தகட்டில் நக்ஷமடைத்து பெண்பிள்ளையின் கழுத்தில் வைத்தானேயானுல், அவள் ஹமலை விட்டும் ஒழிந்தவளாயிருந்தபோதிலும் அல்லாஹுத் தஆலா உதவிகொண்டு ஹமலாவாள். -

(வேறு.) கீழ்க்கண்ட தல்ஸமை அவளுடைய இடது கையில் கட்டி அவளுடன் சேரவும். அல்லா வுதவிகொண்டு கர்ப்பமாவாள் என்று அர்ஸகு றஹிமஹுல்லா சொல்லியிருக்கிறார்கள். தல்ஸம்:—

[illegible]

(வேறு.) மலடியான பெண்பிள்ளைக்கு கீழ்வரும் தல்ஸமை எழுதிக் கட்டினுல் ஹமலுண்டாகும். பழமில்லாத மரத்தில் எழுதிக்கட்டினுல் பழமுண்டாகுமென்று அர்ஸகு றஹிமஹுல்லா சொல்லியிருக்கிறார்கள். தல்ஸம்:—

[illegible]



(வேறு) இன்னும் பின்வரும் இஸ்மை எழுதி அவனுடைய நாவின் கீழ் வைத்துக்கொண்டு ஜிமாவு செய்தால் அல்லா வுதவி கொண்டு ஹமலாவாள். இஸ்மு:—

| | | |
|---|---|---|
| [illegible] | | [illegible] |
| | | |
| [illegible] | | [illegible] |

(வேறு.) இன்னும் ஹமலை நாடியவர்கள் நாளொன்றுக்கு 70-தரம் செமகட்டளையாக நாற்பது நாளைக்கு கீழ்கண்ட இஸ்மை ஓதிவந்தால் அல்லாஹுத் தஆலா உதவிகொண்டு ஹமலுண்டாகும். இன்ஷா அல்லா இஸ்மு இது அதாவது.

[illegible]

றப்பி லாத்தற்னி பர்தன் வஅந்த கைருல் வாரிதீன். வஜஅல்லீ

[illegible]

மின்லதுன்து வலிய்யன் யரிதுனீ பீஹயாத்தீ வயஸ்தக்பிறலீ

[illegible]

பஃது வபாதீ வஜ்அல்ஹு கல்தன் சவிய்யன் வலாதஜ்அல்

[illegible]

லிஷ்ஷைத்தானி பீஹி நஸீபன் அல்லாஹும்ம இன்னி அஸ்தக் பிறக்க

[illegible]

வஅதூபு இலைக்க இன்னக அந்தல் கபூருர்ரஹீம் என்பதாயிருக்கும்

## 66-ம் பஸல்.

### இது ஹமலுண்டானவளையும் சிசுவையும் காக்கிறதற்குள்ள இஸ்முகளைக்கூறுவது.

ஹமலுண்டான பெண்பிள்ளையையும், அவளுடைய குழந்தையையும் பேணிக்காக்கிறதற்கு இந்த ஆயத்துகளை

وَالَّتِي أَحْصَنَتْ فَرْجَهَا فَنَفَخْنَا فِيهَا مِن رُّوحِنَا وَجَعَلْنَاهَا وَ
ابْنَهَا آيَةً لِّلْعَالَمِينَ إِنَّ هَٰذِهِ أُمَّتُكُمْ أُمَّةً وَاحِدَةً وَأَنَا رَبُّكُمْ
فَاعْبُدُونِ وَتَقَطَّعُوا أَمْرَهُم بَيْنَهُمْ كُلٌّ إِلَيْنَا رَاجِعُونَ ۝

எழுதி பிள்ளை உண்டான துவக்கம் 40 நாள் ஆயிருக்குமென்ற நாளில் அவளுக்கு கட்டவும். பிறகு பிள்ளை பிறந்தால் அந்தப் பிள்ளையின் பேரில் கட்டவும். இந்தப்படி கட்டினால் அல்லா உதவிகொண்டு பிள்ளை உண்டாயிருக்கிறவளுக்கு காரமானமும், பிள்ளை பேறுக்கு உதவியாகவும், பிள்ளைக்கு காரமானமாகவும், தத்துவமான பிள்ளையாயிருக்கிறதின்பேரில் உதவியாகவுமிருக்கும்.

(வேறு) ஹமலை காக்கிறதற்கு இமாம் கைறபீ றஹிமஹுல்லா சொல்லியிருக்கிறார்கள் இதன் கீழ் குறிக்கப்பட்ட அமலைத்தை அதாவது

سُورَةُ الْمُؤْمِنُونَ وَلَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ مِن سُلَالَةٍ مِّن طِينٍ ثُمَّ جَعَلْنَاهُ
نُطْفَةً فِي قَرَارٍ مَّكِينٍ ثُمَّ خَلَقْنَا النُّطْفَةَ عَلَقَةً فَخَلَقْنَا الْعَلَقَةَ مُضْغَةً
فَخَلَقْنَا الْمُضْغَةَ عِظَامًا فَكَسَوْنَا الْعِظَامَ لَحْمًا ثُمَّ أَنشَأْنَاهُ خَلْقًا



اللهم تبارك الله احسن الخالقين اسكن ولدكا في بطن
امه الى يوم وضعه بالله الذي يمسك السماء ان تقع على
الارض الا باذنه وبالله الذي يمسك السموات
والارض ان تزولا ولئن زالتا ان
امسكهما من احد
من بعده

என்று காகிதத்தில் எழுதி ஹமலுக்காரி மீதில் கட்டினால் அல்லா ஹுத்தஆலா உதவிகொண்டு திறப்பமான குழந்தை பெறுவாள்.

(வேறு.) இன்னும் அதுபோல் கீழ்கண்ட ஆயத்தை

إِن كُلُّ نَفْسٍ لَّمَّا عَلَيْهَا حَافِظٌ فَلْيَنظُرِ الْإِنسَانُ مِمَّ خُلِقَ خُلِقَ مِن
مَّاءٍ دَافِقٍ يَخْرُجُ مِن بَيْنِ الصُّلْبِ وَالتَّرَائِبِ

என்றெழுதி அவளுடைய அரையில் கட்டினால் ஹமலானது காக்கப்படுமென்று உலமாக்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

(வேறு.) ஹமலையும் தாயையும் காக்கிறதற்கு இந்த நக்ஷை எழுதி அவளுடைய கழுத்தில் கட்டவும். முஜர்றப் இன்ஷா அல்லா. நக்ஷ் இது:—





(வேறு.) இந்தத்தாவீதை ஸாபரான் கொண்டெழுதி அவளுடைய இடுப்பில் கட்டவும். பிறகு பிங்கானிலெழுதி கரைத்துக் குடிப்பிக்கவும். ஹமலேயும் தாயையும் காக்கும். நக்ஷ் இது:—

(வேறு) இந்தப் பறக்கத்தான நக்ஷை ஸாப்ரான் கொண்டெழுதி அவளுடைய கழுத்தில்போடவும். அல்லாகுத் தஆலா உதவி கொண்டு அவளும் ஹமலும் காக்கப்பட்டு, சிறப்பமான பிள்ளையாய்ப் பிறக்குமென்று சொல்லப் பட்டிருக்கிறது. நக்ஷ்:—

| | | | |
|---|---|---|---|
| ٥ | ٨ | ١٥ | ٢ |
| ١٤ | ٣ | ٩ | ٥ |
| ١٢ | ١٣ | ١٧ | ١٠ |
| ١١ | ٧ | ١ | [illegible] |

(வேறு) இந்த நக்ஷை யெழுதி ஹமலின் முதல் மாதத்தில் அல்லது இரண்டாம் மாதத்தில் அவளுக்குக் கட்டவும் அல்லாகுத் தஆலா உதவிகொண்டு அவளும், பிள்ளையும் காக்கப் படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நக்ஷ்:—

| | | | |
|---|---|---|---|
| ٨ | ١٢ | ١٥ | ٥ |
| ١٤ | ٢ | ٩ | ١٣ |
| ٥ | ٧ | ١١ | ٤ |
| ١١ | ٧ | ٣ | ٥ |

(வேறு) தாயையும் பிள்ளையையும் காக்கிறதற்கு கெர்ப்ப ஸ்திரீயின் மூன்றாவது மாதத்திலாவது, ஐந்தாம் மாதத்திலாவது, ஏழாம் மாதத்திலாவது ஒருவன் அப்புறவுள்ளவனாய் ஒழுவுச் செய்துக் கொண்டு இந்த ஹைகலே ஹர்புகளுடைய கண்ணடையாமல் எழுதித் தோலில் பொதிந்து அவளுக்குக் கட்டினால், இன்ஷா அல்லா ஷைத்தான், ஜின்னு, முதலான அணவுகளை விட்டும் மற்றும் தங்கடங்களை விட்டும் காக்கப் படுவார்களென்று இமாம் தைரபி றஹிமஹுல்லா சொல்லியிருக்கின்றார்கள். ஹைகலாவது:—





பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம் (என்று 57-தரம்)



ஒஸல்லல்லாஹு அலா ஸையிதினா முஹம்மதின் (என்று 40-தரம்)



லாயிலாஹ இல்லல்லாஹு (என்று 40-தரம்)



முஹம்மதுர் றசூலுல்லாஹி (என்று 47-தரம்)



ஆமன்து பில்லாஹி (என்று 50-தரம்)



வஃதஸம்து பில்லாஹி (என்று 53-தரம்)



ஹஸ்பியல்லாஹு (என்று 70-தரம்)



தவக்கல்து அலல் ஹையில்லதீ லாயமூத்து (என்று 43-தரம்)

لا حول ولا قوة إلا بالله

லாஹௌல வலா குவ்வத இல்லா பில்லாஹி (என்று 10தரம்)

(آية الكرسي) خالدون (لله ما في السموات) الى آخر السورة

ஆயதுல் குர்ஸீ (காலிதூன்வரை) லில்லாஹி மாபிஸ்ஸமா வாதி ஒமாபில் அர்லி (ஆறுகடைசிவரை) எழுதிமுடிக்கவும்.

---

## 67-ம் பஸல்.

### இது பேறுகாலம் சலாமத்தாகிறதற்கும் இலேசாகிறதற்கு முள்ள இஸ்மு களைக் கூறல்.

பேறுகாலம் சலாமத்தாகிறதற்காக வேண்டி ஒருதஸ்லீமாவை இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் ரிவாய த்து செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தஸ்லீமாவை யெழுதி அவள் பேரில் கட்டினாலும் அல்லது சுப்புறவான பாத்திரத்திலெழுதி மழைத்தண்ணீர் அல்லது வேறே சுப்புறவான தண்ணீர்கொண் டழித்துக் கரைத்து பேறுகாலம் சமீபித்த பெண்ணுக்கு குடிப்பா ட்டினாலும் அல்லாஹுத் தஆலா உதவிகொண்டு சுகமாக பிரசவ மடைவாள். தஸ்லீமா இது:—

بسم الله الرحمن الرحيم لا اله الا الله الحليم الكريم لا اله الا الله

العلي العظيم لا اله الا الله رب السموات والارض

ورب العرش العظيم كأنهم يوم يرون ما يوعدون لم يلبثوا



إلا ساعة من نهار كأنهم يوم يرونها لم يلبثوا إلا عشية

أو ضحاها

(வேறு.) இந்த தஸ்லீமாவாகிறது பரிட்சிக்கப்பட்டது. இதை யெழுதி பெண்பிள்ளையின் முகத்திற் கெதிராகப் பிடிக்க சலாமத் தாய்ப் பிரசவிப்பாள். இந்த பக்கத்துள்ள தஸ்லீமா இது:—

[illegible]

(வேறு.) அதுபோல் துரைதியான இந்த வக்கை ஒரு வஸ்திரத்துண்டில் எழுதி நஜீஸு படாமல் பெண்பிள்ளைபேரிற் கட் டினால் அல்லாஹுத் தஆலா உதவி கொண்டு சலாமத்தாய்ப் பிரசவிப்பாள்.

بسم الله الرحمن الرحيم

| | | |
|---|---|---|
| ٤ | ٩ | ٢ |
| ٣ | ٥ | ٧ |
| ٨ | ١ | ٦ |

وصلى الله عليه وسلم

(வேறு) இந்த ஆயத்து பிரசவகாலத்தில் அதிகமாய் வேதனை படுகிறவர்களுக்குப் பிரயோசனம் தரக்கூடியது. அதாவது இந்த ஆயத்தை

إذا السماء انشقت وأذنت لربها وحقت وإذا الأرض مدت وألقت ما فيها وتخلت

بسم الله الرحمن الرحيم

என்று ஒரு சுப்புறவான பிடவையில் எழுதி நஜீஸுபடாமல் அவ ளுடைய இடையின் மீது கட்டினால் மிகவும் எளிதாய் சலாமத் தாய் பிரசவமாவாள். இன்ஷா அல்லா.

(வேறு) இப்னு ஜௌஸி தன்னுடைய தஸ்னீபுகளில் சில இல் லிக்கு செய்தார், ஒரு பெண்பிள்ளை பிள்ளை பெறவருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் வேறொரு பாலிகில்லாத சிறு பெண்பிள்ளை

வந்து அவள் பேரைச் சொல்லிக் கூப்பிட்டு “ஓ பெண்பிள்ளையே நான் பாவியில்லாத சிறு வயதாயிருந்தும் பிள்ளை பெற்றேனே நீ பெறவில்லையே” யென்று சொன்னவுடன், அல்லாஹுத் தஆலா உதவி கொண்டு உடனே தீவிரமாய்ப்பிள்ளை பெறுவாள் என்று வருகிறது.



(வேறு) இமாம்ஷர்ஜீ ரஹிமஹுல்லா சொல்லி யிருக்கிறார்கள். பேறுகாலம் சலாமத்தாகிறதற்கு கீழ்கண்ட அஜீமத்தை யெழுதி நஜீஸ்படாத விடத்தில் அவளுக்குக்கட்டவும். இன்ஷா அல்லா உடனே சலாமத்தாய்ப் பிள்ளை பெறுவாளென்று கூறியிருக்கிறார்.

(வேறு) தப்ரஸீ ரஹிமஹுல்லா சொல்லி யிருக்கிறார்கள். இந்த பறகத்தான நக்ஷை இரண்டு வஸ்திரத் துண்டிலெழுதி இரண்டு தொடைக்குக் கீழ் நஜீஸ் தண்ணீர் படாத விடத்தில் வைக்கவும். அல்லாஹுத் தஆலா உதவிகொண்டு உடனே பிரசவிப்பாள் நக்ஷ:—



(வேறு) இன்னும் தப்ரஸீ ரஹிமஹுல்லா சொல்லியிருக்கிறார்கள், பேறுகாலம் சலாமத்தாகிறதற்கு இந்த நக்ஷை உட்காருகிற விரிப்பின் பேரிலெழுதி பிரசவிக்காமல் வருத்தப்படுகிற பெண்பிள்ளையை யந்த விரிப்பின்பேரில் உட்காரவைத்தால் உடனே பிள்ளை பெறுமென்று சொல்லியிருக்கிறார்கள் நக்ஷ:-



(வேறு.) பிரசவிக்காத பெண்பிள்ளையினருகில் இந்த துஆவை ஓதவும் அதாவது





அல்லாஹும்ம அந்த உத்தத்தி இந்த குருபதி வஅந்தஸாஹிபீ



இந்த சித்ததி வஅன்த வலிப்யெஸ்யதி என்று ஓதினால் உடனே பிரசவமாகுமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

(வேறு.) பேறுகாலம் சலாமத்தாகிறதற்கு இந்த மூன்று இஸ்மையும் எழுதி அவளுக்குக் கட்டவும். உடனே பிரசவிப்பாள். பிரசவித்தவுடன் அவிழ்த்து விடவும்.

| | | |
|---|---|---|
| ٥ | ١٠ | ٢ |
| ٣ | ٦ | ٨ |
| ٩ | ١ | ٧ |

| | | |
|---|---|---|
| ٤ | ٩ | ٢ |
| ٣ | ٥ | ٧ |
| ٨ | ١ | ٦ |

| | | | | |
|---|---|---|---|---|
| [illegible] | ٨ | ٣ | ٧ | ٢ |
| ال | ه | ٢ | ٣ | ه |
| ال | ه | ٣ | ٢ | ٣ |
| ١٣ | ع | ع | م | ٣ |
| ٢ | ر | ٢ | ٣ | و |

(வேறு.) இந்த அஸீமத்தைப் புறப்பானை யோட்டி லெழுதி அவளுடைய வயற்றில் வைக்கவும் அஸீமத்து இது:—



(வேறு.) பிரசவகாலத்தில் இடுப்பு வலியுண்டாகா திருந்தால் இந்த தல்ஸமை யெழுதி அவளுடைய வயற்றில் கட்டவும் அல்லாஹுத் தஆலா உதவிகொண்டு உடனே இடுப்புவலி யுண்டாகி குழந்தை பிறக்கும் தல்ஸம் இது:—





(வேறு) வயற்றில் மரித்த பிள்ளைவெ ளிப்படுகிறதற்கு இந்த நக்ஷை வெத்தி லையிலெழுதி அவளுக்குத்தின்ன கொடு க்கவும் அல்லாஹுத்தஆலா உதவிகொ ண்டு உடனே குழந்தை வெளிப்படும் நக்ஷ இது:—



(வேறு.) வயற்றில் மரித்தபிள்ளை வெளி யாகிறதற்கு இந்தஇர ண்டு நக்ஷையும் எழு தி அவளுடைய வயற் றில்கட்டவும் உடனே மரித்தபிள்ளை வெளி யாகிவிடும். இன்ஷா அல்லா





## 68—ம் பஸல்.

### இது கெர்ப்பம் ஆணுவதற்கும் ஆண் பெண்ணு வதின் விவரங்களைக் கூறுவது.

அதாவது, யாதாமொருவன் பெண்சாதி ஆண்பிள்ளை பெற காடினல் பெண்சாதியுடன் ஜிமாவுசெய்து முடிந்தவுடன் கட்டமே



எழும்பாதபடி அப்படியே வலதுபுறமாய் சாய்ந்து ஒருசணிக்குப் படுத்துக்கொள். அப்படி செய்வது, சரீரசுகமுமல்லாமல் (இன்ஷா அல்லா) பிள்ளை தரித்தால் ஆண்பிள்ளையாய் இருக்கும்.

“இன்னும் நபிசல்லல்லாஹு அலைஹி வசல்லம் திருவுளமா ஞர்கள், யாதாமொருவன் தன் பெண்சாதி ஹமலாயிருக்கும் போது அவள் வயற்றின்பேரில் அவன் கையைவைத்துக்கொண்டு

بسم الله الاحد الصمد الذي لم يلد ولم يولد

(பிஸ்மில்லாஹில் அஹதிஸ்ஸமதி அல்லதீ லம்யலித் வலம்யூலத்

إني سميت ما في بطني محمدا

இன்னீ சம்மைத்து மாபீ ஹாதல் பத்தினி முஹம்மதன் பிஸ்மி

محمد صلى الله عليه وسلم

முஹம்மதின் சல்லல்லாஹு அலைஹி வசல்லம்)

என்றோதினால் ஆண்பிள்ளையாய் பிறக்குமென்று திருவுளமானார் கள்.

இன்னும் ஆராகிலுமொருவன் (சூறத்துயூசுபை) ஒரு ஹர்பு மழியாமல் எழுதி ஹமலுக்காறி கையில்கட்டினல் அல்லா ஹுத்தஆலாவுடைய பொருத்தமல்லாத செயலை விட்டுக்காக்கப் பட்ட சீதேவியாகிய அழகிய சூறத்தான ஆண்பிள்ளை பெறுவாள் (இன்ஷா அல்லா.)

இன்னும் திடனாக சொல்லப்பட்டிருக்கின்றது, ஹைலை விட் டும் துப்புரவான அன்றையில் ஜிமாவு செய்தால் அதில் தரிக்கும் பிள்ளை ஆண்பிள்ளையாய் விடும். இதுபோல் ஐந்தாநாள் வரையிலும் இனி ஐந்து நாளைக்குப் பின் எட்டுநாள் வரையிலும் பெண்பிள்ளை யாகிவிடுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இன்னும் பெண்பிள்ளைக்கு கருக்குழி திறந்திருக்கும் காலத்தில் ஹைழு துவங்கினதல் முதல் கணக்கெடுத்து ஒற்றைப் பட்ட நாளில் ஜிமாவு செய்து தரித்த பிள்ளை பெண்ணாகவும், இரட்டைப்பட்ட நாளில் ஜிமாவு செய்து தரித்த பிள்ளை ஆணாகவும் பிறக்குமென்று சொல்லப் பட்டிருக்கின்றது.

இன்னும் மூச்சாகிறது சூரிய கலையாகிய வலது நாசியிலிரண்டு மணிநேரமும், பின் சந்திர கலையாகிய இடது நாசியிலிரண்டு மணிநேரமுமாக நடந்து இவ்விதமாக இரவு பகல் இருபத்தி நான்கு மணிநேரத்திற்கும் இரண்டிரண்டு மணிநேரமாய் மாறி மாறி நடக்கும். இவ்விதம் நடக்கும் மூச்சுகளை வலதை இடதிலும் இடதை வலதிலும் சுவாசத் திருப்பி வேண்டியபடியாய் செய்துகொள்ள அறிந்த பெரியோர்களைக் கொண்டு விளங்கி பழகிக் கொண்டு, பெண்சாதியின் சுவாசம் வலதிலோடும்போது இவனுடைய மூச்சையுமதுபோல் வலதில் திருப்பிக்கொண்டு அவளுடைய கருக்குழி திறந்திருக்கும்போது ஜிமாவு செய்வானேயாகில் அப்போதில் தரித்தபிள்ளை யாணாகவும், இடதில் அவளுக்கோடும் போது இவனும் இடதில் ஓடச்செய்து ஜிமாவு செய்வானேயாகில் அப்போ தரித்தபிள்ளை பெண்ணாகவும் பிறக்குமென்று சொல்லப் பட்டிருக்கின்றது.

இன்னும் மணியாகிறது கெர்ப்பவறையில் வலது பாகத்தில் விஷயமானால் கெர்ப்பம் ஆணாகவும் இடதுபாகத்தில் விஷயமானால் கெர்ப்பம் பெண்ணாகவும் தரிக்குமென்றும்.

இன்னும் ஆண்பிள்ளையின் மணி அவனுடைய வலதுபாகத்தில் நின்றும் பெண்சாதியின் வலது பாகத்தளவில் நடந்தால் அந்தப் பிள்ளை ஆண்மை பூரணமான ஆண்பிள்ளையாகவும் அவனுடைய இடதுபாகத்தில் நின்றும் அவளுடைய இடதுபாகத்தளவில் நடந்தால் அந்தப்பிள்ளை பெண் தன்மை பூரணமான பெண்பிள்ளையாகவும் தரிக்குமென்றும்.

இனி அவனுடைய வலது பாகத்தில் நின்றும் அவளுடைய இடது பாகத்தளவில் நடந்தால் அந்தப் பிள்ளை பெண்தன்மை



யுடைய ஆண்பிள்ளையாகவும், அவனுடைய இடது பாகத்தில் நின்றும் அவளுடைய வலதுபாகத்தளவில் நடந்தால் அந்தப் பிள்ளை ஆண் தன்மையுடைய பெண்பிள்ளையாகவும் தரிக்கும். எதுபோலானால், சிலது ஆண்பிள்ளையின் செயல் பெண்களைப்போலவும், சிலது பெண்களின் செயல் ஆண்களைப் போலவு மிருப்பதுபோல்.

இன்னும் ஹாமிலானவள் கெர்ப்பத்திலிருப்பது ஆண்குழந்தையென்றும் அல்லது பெண் குழந்தையென்றுமறிய நாடினால் ஹாமிலானவளுக்கு வலதுமார்பு இடதுமார்பை விட அதிகமாய் விம்மிப் பருத்தலும், வலதுகை இடதுகையைவிட எவ்வகை வேலைகளிலும் முந்துதலும், நடக்கும்போது வலதுகால் இடதுகாலைவிட முந்துதலும் பிண்டம் வலதுபாரிசமாகத்தோன்றுதலும், நல்ல தண்ணீரில் அவளுடைய பாலை யொருதுளி விட்டால் அது பரந்து மிதக்குதலும், கெர்ப்பத்தில் ஆண்குழந்தையிருக்கிறதென்று நம்பவேண்டும். இதுகளெல்லாம் மாற்றமாக இடது பாரிசமாகத் தோன்றினாலும் பால்ஜலத்தில் அமிழ்ந்துவிட்டாலும் கெர்ப்பத்தில் பெண்குழந்தையிருக்கிறதென்று நம்பவேண்டும்.

அழகான பிள்ளை பெறுவதற்கு, வடிவான அழகிய சிறுகுழந்தையின் சூறத்தைப்போல், முகமுடைய ஒரு ரூபஞ்செய்து பெண்சாதிக் கெதிரேயவள் பார்க்கும்படி வைத்து அவளைச் சேர்ந்தால் அதில் தரிக்கும் சிசுவிற்கு மிகுந்த உறப்பும் அந்த சுருபத்துக் கொப்பாகும். (இன்ஷா அல்லா)

---

## 69-ம் பஸ்ல்.

### இது ஹமலுடைய நாளின் கணக்கும் ஒரு சூலில் பெறும் பிள்ளையின் கணக்கும் கூறுவது

ஹமலின் நாளாவது குறைந்தது ஆறுமாதம், நடப்பு ஒன்பது மாதம், கூடியது நாலுவருடம், அதாவது இமாம் ஷாபிசய்றஹ்மு

ஹுல்லா நாலுவருடமும், இமாம் மாலிகி றஹ்மதுல்லா மூன்று வருடமும், ஹமலா யிருந்தார்கள்.

இனி ஒரு சூலில் பெறும் பிள்ளையாவது மிகுந்த வளமை யொருபிள்ளை, குறைந்தவளமை இரண்டுபிள்ளை, அல்லது நாலு பிள்ளை, அதிலும் அதிகமாயு மிருக்கும். ஒரு சூலில் ஐந்து பிள்ளை பெற்றதாக காலீஹுஸைன் பேசி வந்தார்கள். இமாம் ஷாபிஈய் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள் எனக்கு எமன் ராச்சியத்திலுள்ள ஒரு பெரியோர் அவர் தமக்கு ஒரு சூலில் ஐந்து பிள்ளை பிறந்ததென்றும் சொன்னார். இப்னுல் மாஸபான் என்றவர் சொன்னார், அன்பாறென்கிற ஊரில் ஒரு பெண்பிள்ளை ஒரு பைப்போலொன்றைப் பெற்றாள். அதில் 12-பிள்ளை யிருந்ததென்றும் சொன்னார்கள்.

இன்னும் மதல்லெபன்கிறதிதாபில் முஹம்மதிப்னி தீத்தம் பேசி வருகிறார்கள், பகுதாதென்கிற ராச்சியத்தில் ஒரு கல்தாலுண்டாயிருந்தார். அவர் பெண்சாதி பிரசவகால மானதில் ஒரு பைப்போலொன்றைப் பெற்றாள். அதில் நாற்பது பிள்ளையிருந்தது. அந்நாற்பதும் வளர்ந்து தலையெடுத்துக் குதிரைகளிலேறி தகப்பனாருடன் பிஸைபிலுக்குப் போனார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன.

---

## 70-ம் பஸல்.

### இது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குச் செய்த வசியத்துகளைக் கூறுவது.

### நாஹ்லெப்பை ஆலிம் சாஹிபு அவர்கள் பாடியது.

ஆதித்திருத்தூதர் நபியிறசூல்
　அலியார் அவர்களுக் கருளிச் செய்தார்
நீதி மனையாள் தன்னுடனே
　நிதமும் கூடும்போ் கூடாகாளும்.



மாதக் குலக்கீழும் நடுவாலேயும்
　மாதமொடுக்கமும் கூடாதேயும்
நாதனைக்காளில் தரித்த பாலன்
　தவிறு பயித்தியம் வெண்குட்டமும்.

விரைந்து அவளுக்கும் அவள் பிள்ளைக்கும்
　விளையாய் ஹலாக்கு தான்பிடிக்கு மென்றார்
மறந்து லொஹ்றுக்கு பின்னதாக
　மகிழ்ந்து மனையாட்டி யுடன் கூடினால்

பயந்த வேளையில் தரித்த அந்த
　புதல்வன் வைத்தான் தன் தோழனுவான்
அணைந்து இருவரும் முடிந்த பின்பு
　ஆடை துடைப்பதும் வேறே வேண்டும்.

துடைக்கும் பிடைவையை யொன்றாகவே
　துடர்ந்து இருவருந் துடைப்பாராகில்
துடரா யிருவர்க்கும் தொடுக்குஞ் சண்டை
　தொடுக நீக்கிப்போம் தலாகுடனே.

கூடும் மனையாளை நிலைதனிலே
　கூட நின்றுது கூடினக்கால்
தேடுமதில் பாலன் தரித்துதாகில்
　தினமும் விரிப்பினிற் சிறுநீர் செய்வான்.

கூடும் ஹலாலைத்தான் கூடும்போது
　குணமாய் பேசொண்ணாது பேசுகையில்
தேடும் பிள்ளைகளதில் தரித்தால்
　தேடாய் குருடுமையாகுமென்றார்.

ஒலுவுடன் சேரும் மாதுதன்னை
　ஒலுவன்றி சேரில் தரித்தபிள்ளை
ஒலுவன்றி கல்பு குருடு பாய்ந்து
　விஷகேடுந் சேர்ம்பதுண்டா மென்றார்.

புதநாள் அஸ்லையில் விடுகூடி
அது நாள் தன்னிலே தரித்தபாலன்
சதியாம் அநியாய காரனுக்கு
சரீர சகாயஞ்செய் துதவிசெய்வான்.

சனிநாள் அஸ்லையில் விடுகூடி
சனிநாள் தன்னிலே தரித்தபிள்ளை
சமைந்த பிள்ளைகள் செருப்புந்தண்ணீர்
சரிந்த கவரினில் சாவாரென்றார்.

ஒருநாள் தன்னிலும் கூடும்போது
ஒருவ ரபத்தையுங் காணென்றது
குறிநாள் தன்னிலே தரித்தபிள்ளை
குதாவின் வேதனையி லாகுமென்றார்.

ஞாய றுச்சயில் விடுகூடி
ஞாயறுச்சயில் தரித்த பிள்ளை
செறியாகிய தாய் தந்தை சொல்லும்
கெட்டி கட்டபானென் றெனமொழிந்தார்.

பொழுது கிளம்பத்தா னடிக்கும்நேரம்
பூவையுடன் கூடி யணைத்தானாகில்
முழுதுமதில் பாலன் தரித்து தாகில்
முடுகி ஜனங்களை வழிபறிப்பான்.

வாங்கு காமத்து சொல்லும்போது
வாழும் வதுவையை யணைத்தானாகில்
பாங்காயதில் பாலன் தரித்துதாகில்
பகையாய் முகத்தாட்டி முறுபிகாவான்.

வேறே பொருத்தில்லை யாசைவைத்து
வெற்றியுடன் கன்னிதனைக் கூடினால்
வேறு ஆசைபால் விறங்குன்றி
வெறுத்து குன்றுவாய்ப் போகுமென்றார்.



பிறைக்கு முன்னாளும் அமாவாசியும்
பொதிந்த ஹைலிலும் நிபாசிலேயும்
மறந்து சுகியாதே மனையாட்டியை
தொடர்ந்து கூடாதே யாகாதென்றார்.

பொருத்த மில்லாநாள் ஒழிக்கையிலும்
பொதிந்த நசல்களில் சித்திரையில்
பொருந்தி சுகியாதே மனையாட்டியை
புணர்ந்து கூடாதே யாகாதென்றார்.

திங்கட்கிழமையில் தரித்த பாலன்
தெரிந்த ஆலிமும் ஹாபிலாவான்
துங்க செவ்வாயில் தரித்த பாலன்
தவிரும் பொய்புறம் தன்னைக்கொண்டும்.

தரிபாடாகவே யிருப்பா னென்று
தெரிந்த உலமாக்க ளெடுத்துரைத்தார்
தரிக்கும் பிள்ளைகள் வியாழந்தன்னில்
தகுமாய் இல்முடன் பூராயமாம்.

சிறக்கும் ஜும்ஆவில் தரித்தபாலன்
சிறந்த தகீபுமாய் ஆலிமாவான்
சேர்க்கும் பகீஹுமாய் இபாதத்தினில்
சிறப்பும் சாலிஹா யிருப்பானென்றார்.

இந்த செயல்களை யறிந்து நீங்கள்
இதமாய் கூடுங்கள் ஹலா லுடனே
வந்த பிணிகளும் வாராதென
வாழுமென சொன்னார் நபியிறசூல்.

இந்தப்படி சொன்னேன் இமாம்கள் சொல்லே
இதமாய் நூவிஹன்னும் பேரானவர்
சொந்தமா யிதை யறிவதற்குச்
சொன்னார் நபியிறசூலுஞ் சொன்னார்.

## 71-ம் பஸல்.

### இது புருஷன் பெண்ணுக்கிடையில் வரும் பிணக்கத்தைப்பற்றி கூறுகிறது.

அல்லாஹுத்தஆலா குர்ஆனிலே திருவுளமானான். பிணக்கத்தைக் கண்டீர்களே யந்தப் பெண்களாகிறது முதலாவது அவர்களுக்கு வஃளுசொல்லுங்கள், பின்பு அவர்களைப்படுக்கையில்வெறுங்கள், பின்பு அவர்களைக் காயமில்லாமலடியுங்கள். அப்பால்அவர்கள் உங்களில் வழிப்பட்டால் இனி அவர்களைக் குற்றம் பிடிக்க வேறே வழி தேடாதையுங்களென்று திருவுளமானார்கள்.

ஹதீது.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். எந்தப் பெண்பிள்ளையாவது தன் புருஷனுடைய முகத்தில் முகத்தைக் கடுத்து அவன்பேரில் துக்கத்தை வருத்தினால், அவனுடைய முகத்தில் அவள் சிரித்து அவன்பேரில் சந்தோஷத்தை வருத்துகிற வரையில் அல்லாஹுத்தஆலாவுடைய கோபத்திலிருப்பாளென்று திருவுளமானார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், புருஷன் பெண்சாதியை விரிப்பளவில் கூப்பிட அவள் விலகிக்கொண்டதினால் அவன் அவள்பேரில் கோபமாக இராத்தரித்தால் விடிவேறுகுமட்டில் அவளை மலக்குகள் லஃனத்து செய்வார்கள். இன்னும் திருவுளமானார்கள், பெண்சாதி புருஷனைப்பார்த்து நான் உன்னில் நின்றும் அறவே கைறைக் காணவில்லையென்று சொன்னால் அவள் செய்த எழுபது வருடத்து அமல் அழிந்துபோம். இரவெல்லாம் வணங்கிப் பகலெல்லாம் நோன்பிருந்தாலும் சரியென்று திருவுளமானார்கள்.



றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். ஒரு பெண்பிள்ளை புருஷனுக்கு மாறுசெய்தால் அவள் பேரில் அல்லாவுடைய லஃனத்தும் மலக்குகளுடைய லஃனத்துமுண்டாகுமென்று திருவுளமானார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், நான் மிஃறாஜுடைய இரவையில் சில பெண்களைக் கண்டேன். அவளுடைய தலை நாய்த்தலை போலிருந்தது. பாம்பும் கட்டுவாக்காலிகளும் அவளுடைய வாயில் புகுந்து புறப்படுகின்றது. மலக்குகள் அவளுடைய தலையில் நெருப்பு தண்டாயுதங்களைக் கொண்டடிக்கின்றார்களென்று சொன்னார்கள். அப்போதவளாரென்று கேட்டதற்கு சண்டைபோட்டு புருஷனைக் கோபமாக்கினவளென்று சொன்னார்கள்.

பாயிதா.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், எந்தப் பெண்பிள்ளையாவது புருஷனுக்கு வழிப்பட்டு நடந்தால் ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளும், தண்ணீரில் கிடக்கும் மச்சங்களும், வானத்திலிருக்கும் மலக்குகளும், பிறையும், பொழுதும், அவளுக்கு ஆண்டவனிடத்தில் பிழை பொறுக்கத் தேடுமென்று திருவுளமானார்கள்.

## 72-ம் பஸல்.

### இது பெண்ணுக்கு வழிப்படாதிருக்கிறதைப் பற்றிக் கூறுவது.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், பெண்சாதியுடைய அடிமை ஹலாக்கா போவான். இன்னும் திரு

வளமானார்கள், பெண்சாதி ஆசைபடுங் கருமத்தில் புருஷன் பெண்சாதிக்கு வழிப்பட்டால் அவனை அல்லாஹுத் தஆலா நரகத்தில் பிடித்துத் தள்ளிவிடுவானென்று திருவுளமானார்கள். இன்னும் திருவுளமானார்கள், சில ஜனங்களாகிறவர்கள் அவர்களுடைய கருமத்திற்குப் பெண்பிள்ளை காரியஸ்திரியானார்களே யந்த ஜனங்கள் யீடேற்றம் பெறமாட்டார்களென்று திருவுளமானார்கள்.

உமர் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், பெண்களுக்கு மாற்றஞ் செய்யுங்கள். அவர்களுக்கு மாற்றஞ் செய்வதில் பறக்கத்துண்டாயிருக்கின்றது.

ஹிக்காயத்து.

ஒரு வேடன் ஒரு இராஜனுக்கு ஒரு மீன் கொடுத்தான். அவன் அதற்கு நாலாயிரம் திர்ஹம் விலை கொடுத்தான். பெண்சாதி இது கூடாதென்று சொன்னாள். இராஜன் திர்ஹத்தைத் திரும்ப வாங்க என்ன செய்யலாமென்று அவளிடம் கேட்டதற்கு அவள் மீன், ஆணோ பெண்ணோ வென்று கேளும். ஆணென்றால் பெண் வேணும், பெண்ணென்றால் ஆண் வேணுமென்று சொல்லுமெனச் சொன்னாள். இராஜன் வேடனிடத்தி லப்படிக் கேட்கவே வேடன் முழித்துக்கொண்டு ஆணுமில்லை பெண்ணுமில்லை குன்ஸா வென்று சொன்னான். (குன்ஸா வென்றால் ஆணும் பெண்ணு மில்லாததற்குப் பெயர்) இராஜன் சிரித்துக்கொண்டு இன்னம் நாலாயிரம் திர்ஹம் கொடுத்தான். அதிலொரு திர்ஹம் கீழே விழவே வேடன் அதி சீக்கிரத்தில் குனிந்தெடுத்தான். பெண்சாதி இவன் பகீலனென்று ஒன்றுங் கொடுக்கத் தகாதென்று சொன்னாள். இராஜன் வேடனிடத்தில் ஏனப்படிச் செய்தாயென்று கேட்டதற்கு, திர்ஹத்தில் தங்கள் சமுகத்துடைய நாமமிருந்ததால் மண்படாமல் விரைந்தெடுத்தேனென்று சொன்னான். பின்னும் நாலாயிரம் திர்ஹம் கொடுத்துவிட்டுப் பெண்புத்தி கேட்கக்கூடாதென்று



முரசடித்து விட்டான். ஆகையால் அமீருல் முஃமினீன் உண்மை சொன்னார்கள். பெண்புத்தி கேட்டதில் இராஜனுக்கு எண்ணாயிரந் திர்ஹத்துக்கு மோசம் நேரிட்டது.

---

## 73-ம் பசல்.

### இது தலாகின் கெடுதிகளைக் கூறுவது.

றசூல் சலல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், ஹலாலான கருமங்களில் அல்லாஹுத் தஆலாவுக்கு மெத்த கோபமானது தலாகாயிருக்கும். இமாம் குர்த்தபீ றஹிமஹுல்லாஹுத் தஆலா சொன்னார்கள், அல்லாஹுத்தஆலா ஒரு வஸ்த்துவை ஆமாக்கிவிட்டு அதைப் பொருத்தக் கொடவில்லை தலாகையும் வயறு நிறம்ப தின்னுகிறதையுமே யொழியவென்று சொன்னார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், எந்தப் பெண்பிள்ளையாவது புருஷனிடத்தில் தலாகு கேட்டால் அவள் சொர்க்கத்து வாடையை காணமாட்டாளென்று திருவுளமானார்கள்.

இப்னு மஸ்ஊது றலியல்லாஹு அன்ஹு திருவுளமானார்கள், றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் தலாக்கு சொன்னவனையும் அவன் கலியாண முடித்த பின்பு தலாக்கு சொன்னவனையும் லஃனத்துச் செய்திருக்கிறார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அஸ்ஹாபிகளிலொருவருக்குச் சொன்னார்கள், கலியாண முடியும் தலாக்கு சொல்லாதையும். ஏனென்றால் அல்லாஹுத் தஆலா ருசிபார்க்கும் ஆண்பிள்ளைகளையும் ருசிபார்க்கும் பெண்பிள்ளைகளையும் கோபமாவான்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், ஆராகிலுமொருவன் புருஷனுக்கும் பெண்சாதிக்கு மிடையில் பிரிக்கிறதில் முயற்சி செய்தால் அவன் பேரில் துனியாவிலும் ஆகிரத்திலும் அல்லாவுடைய லெஃனத்து உண்டாகும். இன்னும் அல்லாவுடைய முகத்தைப் பார்க்கிறதை யவன்பேரில் அல்லாஹுத் தஆலா ஹறுமாக்குவான். ஒரு ரிவாயத்தில் அவனுக்கும் சொர்க்கத்துக்கு மிடையில் ஆண்டவன் பிரித்து விடுவானென்று திருவுளமானார்கள்.

---

## 74-ம் பஸல்.

### இது ஹைலு நிபாசைக் கூறுவது.

அதில் ஹைலாகிறது யாதொரு பெண்பிள்ளைக்கு ஒன்பது வயதுக்குப் பின்னாலே அபத்தில் இரத்தம் வெளியாகி ஒரு இரவு பகல் அல்லது பதினைந்து இரவுபகல் வரைக்கும் ஓடிக் கொண்டிருந்தால் அவ்விரத்தம் ஹைலாயிருக்கும். எந்த நிறமாயிருந்தாலுமொக்கும். ஹைலில் குறைந்த காலம் ஒரு இரவு பகலென்றும் அதில் மிகுந்த காலம் பதினைந்து இரவு பகலென்றும், இனி ஹைலில் மிகுந்த வளமை ஆறு அல்லது ஏழு இரவு பகலா யிருக்கும், இரண்டு ஹைலுக்கிடையில் துப்பறவில் குறைந்த நாள் பதினைந்து இரவுபகலும் மிகுந்தது ஒரு மாதம். ஆனால் துப்பாவில் மிகுந்ததை மட்டிடக்கூடாது.

இனி நிபாசாகிறது பிள்ளை பிறந்த பின்னர் ஓடுகிற இரத்தத்தை நிபாசென்று சொல்லப்படும். பிள்ளை பிறக்கிறதற்கு முன் காணுகிற இரத்தம் நிபாசல்ல. நிபாசில் குறைந்த காலம் ஒரு நிமை கொட்டாயிருக்கும். அதில் மிகுந்த வளமை நாற்பது இரவு பகலாயிருக்கும். அதிலும் மிகுந்த காலம் அறுபது இரவு பகலாயிருக்கும். இன்னும் ஹைலு பதினைந்து நாளைக்கதிகமும், நிபாசு அறுபது நாளைக்கதிகமும் கண்டதாகில் அதை முஸ்த்தஹாலத்தென்கிற பெரும்பாட்டுக்காரி என்று சொல்லப்படும். அது மட்டுதிட்டமில்லாததாயிருக்கும். அதைப் பெரிய கிதாபுகளில் பார்த்தறிந்து கொள்க.



இன்னும் பெண்பிள்ளை ஹைலை விட்டுத் துப்புறவானவுடன் முழுகிறது அவள்பேரில் வாஜிபாயிருக்கும். பின்னர் இரண்டுநாளையில் மூன்று நாளையில் நாலு நாளையில் துப்புறவாகி ஏழுநாள் அல்லது ஒன்பது நாள் வரையிலும் வழி பார்க்கிறதாகாது. எப்படியென்னில் சிலது மடப்பெண்கள் அப்படி வழிபார்க்கிறதுபோல்.

இன்னும் ஹைலு நிபாசுடைய வேளையில் ஜிமாவு செய்வது பெரும்பாவமா யிருக்கும். யாதொருவன் அவ்வேளை ஜிமாவு செய்வதை ஹலாலென்றானேல் காபிறுவான் (நவூதுபில்லாஹிமின்ஹா.) இன்னும் யாதொருவன் தன் பெண்சாதி ஹைலாயிருப்பதை யறிந்து முரண்டாக ஜிமாவு செய்துவிட்டால் ஹைலின் துவக்கத்திலானால் அரை தங்கக்காசும் ஒடுக்கத்திலானால் கால் தங்கக்காசும் தெண்டமாக சதகா செய்வது சுன்னத்து.

---

## 75-ம் பஸல்.

### முழுக்கை விதியாக்குங் கருமங்களைக் கூறுவது.

அதாவது முழுக்கை விதியாக்குங் கருமங்கள் ஆறுயிருக்கும். அதில் ஆண் பெண்ணிருவருக்கும் பொதுவான காரியம் மூன்று, பெண்பிள்ளைக்கு மாத்திரம் தனதான காரியம் மூன்று. அதில் பொதுவான மூன்று காரியத்தில் ஒன்றாவது கத்னுவரை மட்டில் அபத்துள் மறைகிறது. அது ஹயாத்தானவர்களா யிருக்கிலும் மௌத்தானவர்களா யிருக்கிலும் மிருகம் பட்ஷி மீன் எது வஸ்த்துவின் அபமாயிருக்கிலுஞ் சரி, இரண்டாவது மனிவெளிப்படுகி

றது அது ஒரு சொட்டாயிருக்கினும் இரத்த நிறமாயிருக்கினுஞ் சரி, மூன்றாவது மௌத்து திட்டமாகிறது பிசகில் மௌத்தைத் தவிர. பெண்பிள்ளைக்கு மாத்திரம் தனதான மூன்று காரியத்தில் முதலாவது ஹைளுபத்தறுகிறது. இரண்டாவது பிள்ளைபேற் றடக்கிலும் நிபாசு பத்தறுகிறது. மூன்றாவது பிள்ளைபேற் றிருகிறது. இரத்தக்கட்டி தசைகட்டி விழுந்தாலும் முழுக்கு வாஜிபாகும் என்றறிய வேண்டியது.

---

## 76-ம் பஸல்.

### இது முழுக்கிலுண்டான பறுளு முஸ்த்த ஹப்பாத்துகளைப்பற்றிக் கூறுவது.

அதில் பறுலாவது இரண்டாயிருக்கும். 1-வது நிய்யத்து செய்கிறது. அதெப்படியென்னில், ஜனுபத்து நீக்க முழுகிறேன். அல்லது ஹடக்கு நீக்க முழுகிறேன். அல்லது பறுலான முழுக்கிறுக்கிறேன், அல்லது ஹைளுடைய முழுக்கிருக்கிறேன், அல்லது நிபாசுடைய முழுக்கிறுக்கிறேனென்று நிய்யத்துச் செய்கிறதாயிருக்கும். இந்த நிய்யத்து சரீரத்தில் முந்தின உறுப்பைக் கழுவும்போது செய்யவேண்டும். 2-வது சரீரமடங்கலையும் அதின் ரோமங்கள் ரோமக்கால்கள் காதின் துவாரங்களெல்லாம் கழுவவேண்டும். இது போல்தான் கத்னு செய்யாதவன் கத்னு தோலினுட் புறத்தையும் கழுவவேண்டும். இன்னும் கன்னி பழிந்தவள் கலாஜாஜத்திற்கிருக்கும்போது அபத்தில் எவ்வளவு வெளியாகுதோ அவ்வளவு மட்டும் கழுவவேண்டும்.

இன்னும் முழுக்கில் வாய் கொப்பளிக்கிறதும், நாசிக்குத் தண்ணீர் செலுத்துகிறதும், சுன்னத்தாயிருக்கும். இன்னும் முழுக்கில் நிரம்ப சிறப்பான முழுக்காகிறது அவக்கமாக பிஸ்மில்லா



சொல்லுகிறது, சரீரத்தின்பேரிலிருக்கிற அசுசகளை நீக்கினபின் ஒழு செய்கிறது, காது தொப்புள்போல் சுருக்கமுள்ள இடங்களைக் கையால் நன்றாய்த் தேய்த்துக் கழுவுகிறது, மூன்று விசுத்தம் தலையின் பேரில் தண்ணீரூற்றுகிறது. விரல்களால் தலையின் ரோமங்களை கோதிக் கழுவுகிறது, பின்னர் மூன்றுதரம் வலது தோளின் பேரிலும் மூன்றுதரம் இடது தோளின் பேரிலும் தண்ணீரூற்றுகிறது, கைபெட்டுகிறவிடங்களெல்லாம் நன்றாய்த் தேய்த்துக் கழுவுகிறது, முழுகின பின் கலிமா ஷஹாதத்தும் ஒழுவிற் சொல்லிய துஆவு மோதுகிறது, இப்படிக் குளிக்கிறதாயிருக்கும். இனி முழுக்குக்கு முன்னால் சிறுநீர் செய்யவும்.

இனி பெண்பிள்ளை ஹைளு நிபாசுடைய முழுக்கு முழுகினால் கஸ்தூரி அல்லது எந்த மணமாவது பருசின்பேரில் அல்லது யாதொரு துணியின்பேரில் தடவி அபத்துள் வைக்கிறது முஸ்தஹப்பாயிருக்கும். அதனால் அத்தலம் மணமாவதுடன் கெர்ப்பம் தரித்தலுக்கு மிகு அனுகூலமாயிருக்கும்.

---

## 77-ம் பஸல்.

### இது ஜனுபத்து குளியலின் வரிசையும் கூறுவது.

அல்லாஹுத் தஆலா குருஆனிலே ஜுனுபாயிருந்தால் துப்புரவாக்கி கொள்ளுங்களென்று திருவுளமானார்கள்.

அபூஹுறைறா றலியல்லாஹு அன்ஹு பேசி வந்தார்கள், றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், எந்த ஆண்பிள்ளையாவது பெண்பிள்ளையாவது ஜனுபத்தை விட்டும் குளித்து முடியைக் குடைந்து கழுவுகிறதில்லை, அவனுடைய சிரேசுத்தில் நின்றும் விழுந்த ஒவ்வொரு துளிக்குப்பகரமாக அவனுக்கு

நாறு நன்மையு மெழுதி நாறு துன்மையுமழித்தே யொழிய இல்லை.
இன்னும் அவன் தன்னுடைய பாவத்தைவிட்டும் அன்று பிறந்த
பாலகனைப்போ லாய்விடுவான்.

அலி றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் வந்திருக்கி
றது, றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள்.
ஆராகிலு மொருவன் ஒலு செய்து பின்பு அவன் ஜனுபத்தைவிட்
டுக் குளித்தால் குழைத்த மாவில் நின்றும் ரோமம் பிறப்படுமோ
போல் அவன் தன்னுடைய பாவத்தைவிட்டும் பிறப்படுவான்.

அபூஹுறைறா றலியல்லாஹு அன்ஹு பேசி வந்தார்கள்,
றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், ஒரு
அடியான் ஜனுபத்தை விட்டுக் குளித்து அவனுடைய மேனியும்
ரோமத்தையும் தேய்த்துக் கழுவுவானாகில் அவனுடைய மேனியில்
நின்றும் தெறித்த ஒவ்வொரு துளி யடங்கலுக்கும் ஆண்டவன்
ஒவ்வொரு மலக்கைப் படைப்பான். அந்த மலக்குகள் அவனுக்கு
கியாம நாள் வரையிலும் பிழை பொறுக்கத் தேடுவார்கள். இனி
அவன் குளியலை நிறப்பமாக்கிவிட்டு,

{ அஷ்ஹது அன்லாயி லாஹ இல்லல்லாஹு
வஅஷ்ஹது அன்னமுஹம்மதுர் றசூலுல்லாஹி }

என்று சொன்னால் அவனுடைய வாயில் நின்றும் ஒரு பச்சை
பறவை புறப்படும். அந்தப் பறவை எழுவானையும் படுவானையும்
நிறப்பிப்போடும். பின்பு அல்லாஹுத் தஆலா அந்தப் பறவையை
றஹ்மத்தென்னும் கடலில் மூழ்கச் சொல்வான். மூழ்கி அந்தப்
பறவை சிறகை யுதறும் அந்த சிறகில் நின்றும் தெறித்த ஒவ்
வொரு துளிக்குப் பகரமாக அல்லாஹுத் தஆலா ஒவ்வொரு மலக்
கைப்படைப்பான். அந்த மலக்குக ளடங்கலும் அவனுக்கு கியாம
பரியந்தம் பிழை பொறுக்கத் தேடிக்கொண் டிருப்பார்களென்று
ஆண்டவர்கள் திருவுளமானார்கள்.

---



# 78-ம் பஸல்.

## இது ஜனுபத்துக்குளியலின் தொழுகையுடைய வக்தைவிட்டும் பிற்படுத்துகிறதி லுண்டான வேதனையைக் கூறுவது.

அபூதர்றுல் கப்பாரீ றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள்,
நாவொரு நாள் நபிசல்லல்லாஹு அலைஹி வசல்லமுடனே யிருந்
தேன். அவர்கள் என்னை அபூதர்ரேயென்று கூப்பிட்டு சொன்
னார்கள், நீர் வீடு கூடினால் ஜனுபத்தை விட்டுக் குளித்துப்போடும்.
நீர் ஜனுபத்தோடிருக்க பொழுதுதயமாகப்பயந்து கொள்ளுமென்று
சொன்னார்கள். அப்போ நான் அதேனென்று கேட்டேன்.
அவர்கள் சொன்னார்கள், அபூதர்ரே வலுப்பமான குருஆன்பேரில்
சத்தியமாக எந்த ஆண்பிள்ளையாவது பெண்பிள்ளையாவது ஜனுபத்
துடனே யிருக்க அவர்கள் பேரில் பொழுதுதயமாகிறதில்லை.
அன்றையில் அவர்கள் செய்த வேலையினால் அவர்களுக்கு மூதே
வித்தன மென்னும் முத்திரைகொண்டு முத்திரை போடப்பட்டே
யொழியவென்று திருவுளமானார்கள்.

### ஹிக்காயத்து.

இர்ஷா துல்யாபிக யென்னுங் கிதாபில் வருகின்றது, ஒரு
நாள் இஸ்ஸுத்தீனு புனு அப்துஸ்ஸலாம் அவர்களுக்கு குளிர்கடி
சான இரவில் இஹ்த்திலா முண்டாகி தண்ணீருக்குவந்தார்கள். தண்
ணீர் பனிக்கட்டிபோல் உறைந்திருந்தது. அவர்க ளதை யுடைத்து
அந்தத் தண்ணீர்கொண்டு குளித்தார்கள். குளிருடைய கடுமையி
னால் அவர்களுக்கு றாஹ் போக முடுகிக்கொண்டது. பின்பு இரண்
டாவது இரவிலும் இஹ்த்திலாமாகி தண்ணீரளவில் போய் குளித்
தார்கள். அவர்களுக்குப் போதக் கேடுண்டாயிற்று. அப்போதாகா
யத்தில் அசரீரியாய் ஒரு சப்த முண்டாயினது; ஓய் இஸ்ஸுத்
தீனே நாமுமக்கு இதற்காகத் துனியாவுடைய சிறப்பையும் ஆகிறத்

துடைய சிறப்பையும் பகரத் தருவோமென்று. அதின் பிறகு அவர்களுக்கு இஸ்லாத்தினென்னும் பேருண்டாயிற்று.

### ரிவாயத்து.

றசூல் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் திருவுளமானார்கள், என்னை நபியாக அனுப்பின நாயன் பேரில் சத்தியமாக ஒருவன் ஜனாபத்தை விட்டுக் குளித்து அவசியமாமுடனே சுபுஹு தொழுவானாகில் நானுமவனும் சொர்க்கத்திலிப்படி சோடியா யிருப்போமென் றிருவிரலையும் கூட்டிக் காட்டினார்கள்.

### ரிவாயத்து.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் பூமிக்கு வந்து ஹவ்வா உம்மா அவர்களுடனே ஜிமாவு செய்தபொழுது அவர்களை ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து குளிக்கச் சொல்லவே நானெப்படிக்குளிக்க வென்று கேட்டார்கள். அவர்களுக்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் குளிக்கப் படித்துக் கொடுத்து குளித்து முடியவே நான் குளித்ததற்கென்ன கூலி கிட்டுமென்று கேட்டார்கள். அதற்கு உம்முடைய திரேகத்திலுள்ள ஒவ்வொரு முடிக்கும் பகரமாக ஒரு வருடம் இரவெல்லாம் வணங்கி பகலெல்லாம் நோன்பு பிடித்த தவாபுண்டும். இன்னும் உம்முடைய திரேகத்தில் நின்றும் தெறித்தவொவ்வொரு துளிக்கும் பகரமாக ஆண்டவன் ஒரு மலக்கைப் படைப்பான். அந்த மலக்குகள் கியாமவரையில் தஸ்பீஹும் இஸ்திக்பாறும் செய்வார்கள். அந்தக் கூலி உமக்குண்டும். நீர் ஒரு விடுத்தம் ஜிமாவு செய்தால் உம்மைவிட்டும் பாவம் மறத்தினிலை யுதிருமாப்போல் உதிர்ந்திடுமென்று சொன்னார்கள். அப்போது ஆதம் அலைஹிஸ்ஸலாம் கேட்டார்கள். இந்தக் கூலி எனக்கு மாத்திரமோ அல்லது என் மக்களுக்குமோ வென்று கேட்டதற்கு உமக்கு மும்முடைய மக்களுக்குமென்று ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் சொன்னார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் திருவுளமானார்கள், ஒருவன் பொழுதுதயமட்டும் ஜனாபத்தை வைத்துக்கொண்டிருந்தால் பொழுதை யிழுக்கும் மலக்குகள் இவனைப் பார்த்து



அல்லா உடைய அடியானே உன்பேரில் அல்லா உடைய கோப மிறங்கட்டும். அல்லா உனக்கு றஹ்மத்து செய்யாதிருப்பானாகவு மென்று சொல்வார்கள்.

அலிறலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும் வந்திருக்கின்றது, அவர்கள் சொன்னார்கள், றசூல் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் சொல்லக் கேட்டேன். ஆராகிலுமொருவன் ஜனாபத்தைக் குளியலை விட்டால் அவனுடைய ரூஹு புறப்படும்போது கெட்ட வாடை யுடையதாகப் புறப்படும். இன்னும் அவன் கபுறை விட்டும் புறப்படும்போதும் கெட்டவாடை யுடையவனாகப் புறப்படுவான். அந்த வாடையைக்கொண்டு மஹ்ஷறுடையவர்கள் நோவினையடைவார்கள். இனியவன் நாயனுடைய சமுகத்திற்குப்போனால் நாயன் மலக்குகளுக்குச் சொல்வான், இவனை நரகங்கொண்டு போய்விட்டு விட்டு மாலிக்கிடஞ் சொல்லுங்கள் எந்த அடியானிவது ஜனாபத்தை விட்டும் குளியாதவனாக அவன்பேரில் ஒரு நாள் சென்றிருந்தாலவனுடைய திரேகத்தை முடிவறக் காய்ந்த தண்ணீரைக் கொண்டு நான் குளிப்பாட்டச்சொன்னதாகச் சொல்லுங்களென்று சொல்வான். அவனை ஸபானியாக்கள் மாலிகு என்னும் மலக்கிடங் கொண்டு போவார்கள். அப்போது மாலிகவனைப்பார்த்து நாங்கள் உன்னைவிட்டும் அல்லாவைக்கொண்டு காவல் தேடுகிறோம். இதென்ன நாற்றமென்று சொல்வார். அப்போது ஸபானியாக்கள் சொல்லுவார்கள் இவனொரு மனிதன் துனியாவில் ஜனாபத்தை விட்டும் குளியாமல் ஹபலத்துகளென்னும் மலக்குகளை நோவினை செய்துகொண் டிருந்தான். இவனை முடிவறக்காய்ந்த தண்ணீர் கொண்டு குளிப்பாட்டும்படி ஆண்டவனும்மை யேவினனென்று சொல்வார்கள். அப்போது மாலிகு சபானியாக்களைக் கூப்பிடுவார். சபானியாக்கள் வந்து அரிகண்டங்களைக் கொண்டும் சங்கிலிகளைக் கொண்டும் இவனை யிழுத்து நரகத்துக்குக் கொண்டு போய் அல்லாவுடைய அடியானே நீ கொம்பலமான அதாபை யனுபவியென்று சொல்வார்கள். (சுபுஹானல்லா).

கருமமிப்படியிருக்க நம்முடைய உடப்பிறந்தாமார்களில் அல்லாஹுத் தஆலா நல்லுதவி கொடுத்தானே யந்த சில பேர்களைத்தவிர அனேகர் ஜனுபத்தையுடையகருமத்தில் பொடுபோக்கா யிருக்கின்றார்கள். அப்படி யிருக்கிறதில் அனேகருக்கு சுபுஹு தொழுகை தப்பிப்போகின்றது. சுபுஹு தொழுகை தப்புகிறதைப்பற்றி றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் கடினமான அச்சம் பூட்டுதலாக அச்சம் பூட்டியிருக்கின்றார்கள். இதுவே யொரு மனிதனுக்குப் போதும். அப்படி யிருக்க ஜனுபத்துக் குளியலைப் பிற்படுத்துகிறதாலுண்டான அதாபுகளைப் பற்றி வந்திருக்கிற இத்தனை ஹதீதுகளையும் கவனிக்காமல் நித்திரையுடைய அற்ப சுகத்துக்காக அல்லாவுடைய சொல்லையும் றசூலுடைய சொல்லையும் நாதாக்களுடைய நடத்தையையும் எடுக்கிறார்களில்லை. அப்படி வராமல் அல்லாஹுத் தஆலா நம்மனைவர்களுக்கும் நல்லுதவி தந்து இது விஷயத்தில் பொடு போக்காயிருக்கிறதை விட்டும் சோம்பல் தடுக்கிறதை விட்டும் அல்லாஹுத் தஆலா காப்பாற்றிக் கொள்வானாக. ஆமீன்.

---

## 79-ம் பஸல்.

### இது வினையின் கெடுதியைப்பற்றி கூறுவது

அல்லாஹுத் தஆலா குருஆனிலே நீங்கள் வினைக்கு முடுக வேண்டாம். வினையாகிறது கெட்ட பாவமாகவும் அல்லாவுடைய கோபமாகவு மிருக்கது. இன்னும் வினையாகிறது பாதையால் கெட்டது அது நரகமிழுத்துக்கொண்டு போய்விடுமென்று திருவுளமானான்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள், ஒரு அடியான் வினை செய்தாலவனுடைய ஈமான் அவனைவிட்டும் புறப்பட்டு அவனுடைய தலைமேல் குடையைப்போல் நிற்கும்.



அவனதை விட்டும் மீண்டால் ஈமான் அவனளவில் மீளுமென்று திருவுளமானார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் வினையாகிறது மிடிமையை புண்டாக்கி வீட்டைப் பாழாக்கு மென்று திருவுளமானார்கள்.

### றிவாயத்து.

அஸ்ஹாபிகளிலொருவர் சொன்னார்கள். வினைக்கு முடுகுனருக்கும் அச்சம்பூட்டுகின்றேன். வினையாகிறது ஆறு கருமத்தை வருத்தும். துனியாவில் மூன்று, கியாமத்தில் மூன்று. துனியாவின் மூன்றாகிறது இரணம் குறையும், வாணாள் குறையும், மனிதருக்குக் கோபமுண்டாகும். கியாமத்தின் மூன்றாகிறது, நாயனுடைய கோபம், கேள்வி கணக்கின் குடோரம், நரகம் புகுதுகிறது, ஆகஆறும் சரி.

தம்பாவென்னும் கிதாபில் வருகின்றது, றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். ஆராகிலுமொருவன் முஸ்லிமான நாட்டாமகளை அல்லது வெள்ளாட்டியை வினை செய்தால் அல்லாஹுத் தஆலா நரகத்தில் நின்றும் அவன்பேரில் அவனுடைய கப்ரில் மூன்று லக்ஷம் வாயிலைத் திறப்பான். அந்த வாயிலடங்களில் நின்றும் பாம்புகளும் நட்டுவாக்காலிகளும் நெருப்புப் பந்தங்களும் புறப்படும். அவன் கியாமத்தில் அதில் அதாபு பட்டுக்கொண்டிருப்பானென்று திருவுளமானார்கள்.

ஸபூர் வேதத்தில் வருகின்றது, வினைச் செய்கிறவர்களுடைய அபங்களை யிரும்பு கசைகளாலடிக்கப்படும். அவர்கள் இரக்ஷிக்கத் தேடினால் ஸபானியாக்கள் நீங்கள் அல்லாவில் நின்றும் வெட்கிக்காமல் சிரித்து விளையாடி கொஞ்சும்போது இந்த சப்தமெங்கே போயிருந்ததென்று சொல்வார்கள்.

### றிவாயத்து.

மூசா அலைஹிஸ்ஸலாம் வம்பர்களை வெட்டப்போனபொழுது பல்ஆமுபுனு பாஊறு உடைய கவுமுகள் மூசா உடனே அனேக

சேனைகளிருக்கிறதென்று பல்ஆமிடம் போய் முறையிட்டார்கள். பல்ஆம் சொன்னார், பெண்களை யலங்கரித்து அவர்களை யந்தக் கூட்டத்தில் சரக்கு விற்கவிட்டு தொட்டவனைத் தட்டவேண்டாமென்று சொல்லி யனுப்புங்களென்று சொன்னார். அவர்களிலொருவன் ஜினா செய்தால் உங்களுக்குப் போதுமென்று சொன்னார். அப்படிச்செய்யவே அல்லாஹுத் தஆலா மூஸா அலைஹிஸ்ஸலாமுடைய கவுமுகளில் வபாவை யனுப்பினான். ஒரு நாளில் எண்பதினாயிரம்பேர் இறந்தார்கள். ஏனென்றால், ஜினா ஒரு கவுமுகளில் மிகுந்தால் அவர்களில் வபாவு மிகுக்கும்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள் பாவமாகிறது குப்றுக்குத் தூதாயிருக்கும். இமாம்கள் சொல்லுகின்றார்கள், இஜ்மாயின்படி பழிக்குப் பிறகு ஜினா மெத்த பெரும்பாவமாயிருக்கும். ஒரு சொற்படி. பழியைக் காண ஜினா மெத்த பெரும் பாவமா யிருக்கும்.

---

## 80-ம் பசல்.

### இருகைகண்ணுடைய ஜினாவைப்பற்றிக் கூறுவது.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். எல்லா ஒரு காலையிலும் இரண்டு மலக்கு சப்தமிடுகின்றார். பெண்பிள்ளைகளில் நின்றும் ஆண்பிள்ளைகளுக்குக் கேடு, ஆண்பிள்ளைகளில் நின்றும் பெண்பிள்ளைகளுக்குக் கேடென்று சப்தமிடுகிறாரென்று திருவுளமானார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். இரண்டு கண்ணும் ஜினா செய்யும், கண்ணுடைய ஜினாவாகிறது பார்க்கிறதா யிருக்கும். இரண்டு கையும் ஜினாசெய்யும் கையையுடைய ஜினாவாகிறது பிடிக்கிறதாயிருக்கும், இரண்டுகா



லும் ஜினா செய்யும் காலுடைய ஜினாவாகிறது நடக்கிறதா யிருக்கும், வாயும் ஜினா செய்யும் வாயுடைய ஜினாவாகிறது முத்துகிற தாயிருக்கும்.

ஹதீது குதுஸியில் வருகின்றது, அல்லாஹுத் தஆலா சொல்லுகிறான், பார்வை ஷைத்தானுடைய அம்பிலொரு அம்பா யிருக்கும். ஆராகிலுமொருவன் எனக்கு பயந்து பார்வையை விட்டாலவனுடைய கல்பில் இன்பத்தைக் காணும்படிக்குள்ள ஈமானை அவனுக்கு பகரமாக்குவே னென்று திருவுளமானான்.

சூபியாக்கள் சொன்னார்கள், கண்ணாகின்றது ஹலாக்குக்கு சபபாயிருக்கும், கண்ணை அவிழ்த்துவிட்டவன் ஹலாக்கை வேட்டையாடிக் கொள்வானென்று சொன்னார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். கியாமத்தில் கண்ணடங்கலும் அழும். ஹறாமை விட்டும் மூடின கண்ணும், அல்லாவுடைய பாதையில் முழித்த கண்ணும் அவனை நினைந்து அழுத கண்ணும் தவிரவென்று திருவுளமானார்கள்.

றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். கியாமத்தில் மனிதர் கேள்வி கணக்குடைய அமளியிலிருக்கும் போது மூன்று பேர் அல்லாவுடைய அர்சின்னிழலி லிருப்பார்கள், அவர்கள் அல்லாவுடைய கருமத்தில் பழித்தவனுடைய பழிப்பிற்குப் பயப்படாதவன், தனக்கு ஹலாலில்லாத தளவில் கைநீட்டாதவன், அல்லாஹுத் தஆலா ஹறுமாக்கிய தளவில் பாராதவனென்று திருவுளமானார்கள்.

ஆகையால் இக்குவான்களே ஜினாவால் வரும் கெடுதிகளுக்காகவும், ஜினாவை விடுவதால் கிடைக்கும் பதவிகளுக்காகவும் வந்திருக்கின்ற இந்த ஹதீதுகளைச் சற்று நோட்டமிட்டு ஜினாவை விட்டுவிடவும். அதை விடுவதால் தரும் பலனை பெற்றுக்கொள்ளவும் அல்லாஹுத் தஆலா நம்மனைவர்களுக்கும் நல்லுதவி தந்தருள்வானாக. ஆமீன் ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

---

## 81-ம் பஸல்.

### இது சுக்கிலத்தை நஷ்டப்படுத்துகிற வியாதிகளைப்பற்றி கூறுவது.

அதாவது மனிதர்களின் நிலைமைக்கும் அவுலாதுகளின் விர்த்திக்கும் மூலாதாரமாகி சுக்கிலத்திற் குண்டாகும் வியாதிகளை விவரிக்கு முன், துர்நடத்தையினால் ஜனனேந்திரியங்களி லுண்டாகும் விஷவாய்வு, விஷநீர் சம்பந்தமான பிரமேகம், கொருக்கு, முதலிய மேக ரோகங்களு முண்டாவதின் காரணம் லட்சணம் முதலியவைகளை சொல்லிவிட்டுப் பின்பு சுக்கில நஷ்டத்தைப்பற்றி விவரிக்கப்படும். ஏனென்றால் மேக நீரானது சரீரத்திலிருக்கும் பட்சத்தில் தாதுபுஷ்டிக்காக எவ்வகையான உயர்ந்த அவிழ்தங்களைச் சேகரித்து பொசித்தபோதிலும் குணப்படாமல் குணக்கேட்டையே மிகுதி புண்டாக்குவதினாலும், இன்னும் மேகநீரானது சரீரத்தில் தொந்தித்திருக்கில் தாங்களும் அவைகளினால் விளைவிக்கப்படும் அனேக ரோகங்களினால் வருந்துவதோடும், தங்களுக் குதிக்கும் அவுலாதுகளுக்கும் அவ்வியாதிகள் தொடர்ந்து பற்றிக் கொண்டு வரும் ஆதலால் நமதூர்களிலுள்ள ஸ்திரீ புருஷர்களில் பெரும்பாலார் இவ்வியாதிகளினால் அதிக தொந்திரவடைகிறபடியாலும், முன்னமே யிருதரத்தாருக்கு முண்டாகும் மேகசம்பந்தமான வியாதிகளைப்பற்றி சிலதைக் கூறிப் பின்னர் தாதுநஷ்டத்தைப்பற்றி விவரிக்கப்படும்.

---

## 82-ம் பஸல்.

### இது மேகரோகம் பிரமேக ரோகத்தின் குணமும் நிவர்த்தியும் கூறுவது.

பிரமேக ரோகமானது, சீழ்மேகம், வெள்ளை, வெட்டை, பிரமியம், மேகக்காங்கை, அல்லது மேகச்சூடு என்று சொல்லப்படும். புருஷனுக்கு நீர்த்தாரையிலும், பெண்களுக்கு அபத்தியத்திலிருந்து சீழ்போல் வெளுத்த மேகநீர் வடிதலுக்கு வெள்ளையென்று பெயர். இவ்வியாதியி னாரம்பத்தில் நீர்த்துவாரத்தில் நமைச்சலெடுத்து ஜலம் வடியும். அதை யுடனே கண்டிக்கா விட்டால் சீழாகிவிடும். அந்தச் சீழானது மூத்திரப்பை, சளிச்சவ்வு, ஆண்குறி முதலிய பாகங்களிலுண்டாகும் புண்ணினாலுண்டாகின்றது. அது வெள்ளை, பச்சை, மஞ்சள், சிகப்பு ஆகிய இந்நிறங்களாயிருக்கும். கோசமும் மூத்திரத் துவாரத்தின் சளிச்சவ்வும் வீங்கி நீரானது சிறுதாரையாய்ச் சிலருக்கு இரண்டு பிரிவுகளாய் முக்கலுடன் அதிக வேதனையோடிறங்கும். நீர்த்துவாரத்தில் எரிச்சலுமிருக்கும். இராத்திரியில் ஆண்குறி விம்மவிட்டு வளைந்து அதிக நோவெடுத்து நித்திரைக் கெடுதி யுண்டாகும். வியாதி நாட்பட்டு விட்டால் கோசமெல்லாம் கனிந்து வடிகிற நீர் மூக்குச் சளிபோல மாறிவிடும். அதற்கு தந்திமேகம் என்று பெயர். இந்த வியாதியில் மூத்திரத் துவாரத்திலிருந்து இரத்தம் வடிந்தால் அதற்கு இரத்தப்பிரமேகம் என்றும், முழங்கால் முதலிய மூட்டுகள் வீங்கினால் அதற்கு பிரமேக வாதரோக மென்றும், அரையில் வீக்கி நெறிகட்டினால் அதற்கு பிரமேகத்திரகூதி அல்லது அரையாப்பு என்றும் பெயர்.



இதில் சிலருக்கு கோசத்தின் தோல் சுருங்கி விடுவதும் சிலருக்குப் பீசம் வீங்கிவிடுவதுமுண்டு. இந்த ரோகம் சிலருக்குக்கண்டால் சீழ் வடியாமல் நீர் இறங்கும்போது எரியும் கடுப்பும் நீர்த்துவாரம் வீங்கிச் சிவந்து மிருக்கும். அது வறட்சிமேகம் அல்லது நாளாவர்த்தி வாதரோக மென்று சொல்லப்படும். வெள்ளை அடிக்கடிக்கண்டால் நீரடைப்பு காணும். ஸ்திரீகளில் நிதம்பங்கள் பெண்மைத்தலம் கருப்பையின்வாய் ஆகிய இவ்விடங்களிலிருந்து மேகநீர் ஜனிக்கும் அவர்களுக்கு மெத்த உபத்திரவமிராது. நீர் எரிச்சலும், நடந்தால் வேதனையும், உட்கார வருத்தமாயும், அரையில் நெறிக்கட்டியும், ஜனன உறுப்புகள் வீங்கியுமிருக்கும். சீழும் சளியும் கலந்த மேகநீர் வடியும்.

இன்னும் சதா போகத்தினாலும் மாதவிடையான பெண்ணைப் போகிப்பதினாலும், வெறும் வயற்றில் லாகிரியுடைய வஸ்துவை யருந்துவதினாலும், வெப்பமுள்ள மருந்துகள், ஆகாரங்கள் போசிப்பதினாலும், வெயிலில் அதிகமாய் நடப்பதினாலும், சுண்ணாம்பில் சிறுநீருக் கிருப்பதினாலும், போகத்தில் விந்து வெளிப்படுவதற்கு முன் ஸ்திரீயை விட்டு நீங்கி விடுவதினாலும், அடிக்கடி சிறுநீரை யடக்குவதினாலும், மோகத்துடன் பட்டினியா யிருப்பதினாலும், ஸ்தம்பனைச் சூட்டினாலும், வெள்ளைக்காண்பது முண்டு. அது பிரமேக ரோகமல்ல. வியாதியுடைய ஸ்திரீயைப் புணர்ந்து சுமார் நாலைந்து நாளையில வெளிப்படுவதே பிரமேக வியாதியாகும். சிலருக்கு இரண்டொரு வாரங்களுக்குப் பின்பு வெளிக்காண்பதுண்டு. ஆகையினால் புணர்ந்த மூன்றுநாளிலிருந்து பதினைந்து நாளைக்குள் வெள்ளை காணுமென்றும் பொதுவாய் சொல்லலாம்.

இதற்காகத்தான் ஸ்திரீயைப் புணர்ந்த உடனே சிறுநீருக் கிருந்து விட்டு தகரை ஜலம்விட்டு நன்றாய்க் கழுவிவிட்டால் நன்று.

இன்னும் பிரமேகத்திற்கு வேண்டிய காரியம் மூன்று விதமுண்டு முதலாவது ஆண்குறியிலிருக்கிற வெப்ப குணத்தை நீக்க வேண்டும். இரண்டாவது நீர்த்தாரையில்போய் பத்திப்பிடிக்கிற அவிழ்தங்களைப் போசிக்க வேண்டும். மூன்றாவது வடிகிற சீழ் நிற்கும்படி தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகையால், இதற்குரிய முக்கியமான மருந்துகளை எழுதுவதில் ஆரம்பமாகின்றேன். வியாதிகளுக்குத் தகுந்த முறைகளைக் கண்டறிந்து செய்துண்டு பலன் பெறுவீர்களாக.

## முக்கிய கவனிப்பு

இந்தப் பிரமேக சிகிச்சைகளெல்லாம் ஆரம்பத்தில் மலத்தைக் கழித்துக்கொண்டுதான் பின் மருந்துகள் பிரயோகஞ் செய்ய



வேண்டுமென்று ஹுகமாக்களால் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், இதன் கீழ் வரியப்பட்ட அவிழ்தங்களைக்கொண்டு மலத்தைக் கழித்துவிட்டுப் பின் வியாதிக்கு நேர்பாடாகிய அவிழ்தங்களை யுட்கொள்ளவும்.

## இலகுபேதி, அவிழ்தங்கள்.

சூரத்து நிலாவரையைப் பசுவின்பாலில் போட்டு 30 நாழிகை ஊறவிட்டெடுத்து உலர்த்தி யிடித்த சூரணம் விராகனெடை 2 அல்லது 3, மிளகுச்சூரணம் விராகனெடை ½ இவைகளைக் காலாழாக்கு கையாந்தகரைச் சாற்றிற் கலந்து கொடுக்க இலகுபேதியாம்.

சாரப்பருப்பு, பிஸ்தாப்பருப்பு இவற்றிலொன்றை முக்கால் பலம் முதல் ஒண்ணரை பலம்வரை தேன்விட் டரைத்துப் புசிக்க இலகுபேதியாம்.

ஒரு பலம் பன்னீர் வரையில் கற்கண்டு பொடி கூட்டிக் குடிக்க குளிர்ச்சியான இலகுபேதியாம்.

ஆல்பகோருபழம் 16-முதல் 32-வரையில் கொஞ்சம் குல்கந்துடன் சேர்த்துச் சாப்பிட குளிர்ச்சியான இலகுபேதியாம்.

நான்கு பலம் வெள்ளாட்டுப்பால் அல்லது பசுவின் பாலில் அரைபலம் தேன் கலந்து கொடுக்கக் குளிர்ச்சியான இலகுபேதியாம்.

## நீர்க்கடுப்பு எரிவிற்கு நிவர்த்தி.

சுருள்ளரிச்சார் நாழியரைக்காலில் வெண்காரம் விராகனெடை பொரித்துப்போட்டு 3-நாள் 6-வேளை சாப்பிடத் தீரும்.

இளநீரைக் கண்திறந்து அதில் சீரகம், சர்க்கரை, பாசிப்பயறு வகைக்கு விராகனெடை 1 போட்டு ஓரிரவு வைத்துக் காலையில் மருந்தை யெடுத்தரைத்து இளநீரில் கரைத்து சாப்பிடவும். இந்தப்படி 3-நாள் 6-வேளை சாப்பிடத் தீரும்.

கடுக்காய், சுக்கு, சீரகம் வகைக்கு விராகனெடை 1 அரைத்து எருமைத் தயிரில் கலக்கி 3-நாள் கொடுக்கத் தீரும்.

## இரத்தம்போல் நீரிறங்குவதற்கு நிவர்த்தி

எருமைப்பால் படி 2-ல் பொன்னாங்கண்ணிவேர், எலுமிச்சங்காய் அளவு அரைத்துக் கலக்கி காச்சி பிரைக்குத்தி கடைந்து வெண்ணெய் எடுத்து அதை 3-நாள் சாப்பிட்டு மோரைத் தாகத்திற் கருந்தவும்.

மாம்பட்டை, அத்திப்பட்டை, ஆவாரம்வேர்பட்டை இவைகளை ஓர் நிறையாய் எடுத்திடித்துத்தண்ணீரில் ஊறவைத்துக் கொண்டு வேளை ஒன்றிற்கு அரைக்கால்படி வீதம் எடுத்து அதில் கொஞ்சம் பசுவின் நெய் கலந்து 3-நாள் சாப்பிடத் தீரும். (இச்சா பத்தியம்.)

---

## வெள்ளை நிவர்த்தி சூரணங்கள்.

| | |
|---|---|
| சந்தனக்கட்டை | அதிமதுரம் |
| அகிற்கட்டை | கார்போகவரிசி |
| ஏலம் | வெட்பாலரிசி |
| லவங்கப்பட்டை | தேத்தாங்கொட்டை |
| கிராம்பு | அறுகம்வேர் |
| சோம்பு | சித்தாமுட்டிவேர் |

இவைகளை ஓர் நிறையா யெடுத்து வெயிலிற் காயவைத்து இடித்து வடிகட்டி சமனெடை கற்கண்டு பொடி கூட்டி சரீரத்திற்குத் தக்கபடி அரை ரூபா யெடை முதல் ஒரு ரூபாயெடை வரையில் காலை மாலை இருவேளையும் வெண்ணெயில் குழைத்து ஒரு மண்டலம் சாப்பிட, நாள்பட்ட வெள்ளை, நீரெரிச்சல் முதலியன தீரும். கார பதார்த்தங்கள் தள்ளவும், (இச்சா பத்தியம்) புஷ்டியான ஆகாரம் சாப்பிடவும்.

### வேறு.

| | | |
|---|---|---|
| நன்னாரிவேர் | பங்கு | 1 |
| வால்மிளகு | ,, | 4 |
| பரங்கிச்சக்கை | ,, | 2 |
| கொத்தமல்லி | ,, | 2 |



இவைகளின் தூள்களை ஷை பங்கு கணக்காய் சேர்த்து அதில் 1-விராகன் அல்லது 2-விராக னெடுத்துத் தேனில் கலந்து தினம் 3, 4 தடவை சாப்பிட்டுவர பிரமேகம் வசப்படும்.

### வேறு.

படிகாரத்தைப் பொரித்துப் பொடித்து அதற்குச் சமன் கற்கண்டும் உலர்ந்த நெல்லிக்காயின் மேல்தோலும் பொடித்துப்போட்டு வேளைக்கு 2-விராக னெடையாக நாளொன்றிற்கு 3-வேளையும் பசுவின் மோரில் கரைத்துச்' சாப்பிடவும். இப்படிக்கு 7-நாள் கொள்ள தீராதவெள்ளை நீர்கடுப்பு இவை தீரும். (இச்சாபத்தியம்) ஒரு சமயம் இருமல் காணுமாகில் பசுவின்பால் கறந்தவுடன் நுரையோடு சாப்பிடவும்.

### வேறு.

| | | |
|---|---|---|
| மூங்கிலுப்பு | பங்கு | 1 |
| வெள்ளை காசிகட்டி | ,, | 1 |
| வால்மிளகு | ,, | 2 |
| சர்க்கரை | ,, | 3 |

இவைகளை ஷை பங்கு கணக்காய்ச் சேர்த்து பொடித்து வேளைக்கு 2-விராகனெடை வீதம் 2-ஆழாக்கு பசுவின் பாலிலிட்டு தினம் 2-வேளை சாப்பிடவும். புளியும், வாய்வு பதார்த்தங்களும் நீக்கவும்.

## லேகியம்.

| | | |
|---|---|---|
| மூங்கிலுப்பு | விராகனெடை | $1\frac{1}{2}$ |
| மரமஞ்சள் | ,, | $2\frac{1}{2}$ |
| படிகாரம் | ,, | 1 |
| சீமை நெல்லி முள்ளி | ,, | 1 |

இவைகளைச் சேர்த்து கட்டித் தேன்விட் டரைத்து உருட்டி வேளைக்குக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் இருவேளையும் சாப்பிட்டு வரவும். (இச்சாபத்தியம்.)

வேறு.

| | | |
|---|---|---|
| பொன்னுங்கரணி ரசம் | படி | 1 |
| பசுவின் பால் | ,, | 1 |
| நெய் | ,, | 2 |
| எலுமிச்சம்பழ ரசம் | ,, | ½ |

இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்து அதில் அதிமதுரம், கோரோசனம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி இவைகளின் தூள்வகைக்கு 1-விராகனெடை, சர்க்கரை 8-விராகனிடைச் சேர்த்து கலந்துகொண்டு தினம் 1-தோலா முதல் 2-தோலா வரை இருவேளையும் சாப்பிட்டு வரவும். பழுபதாகாது.

## வெள்ளைக் கண்டவர்களின் மூத்திரச்சுருக்கிற்கு நிவர்த்திக் கியாழம்.

| | |
|---|---|
| நிலப்பனங்கிழங்கு | துளசிவிரை |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | ஆளிவிரை |
| ஆனைநெருஞ்சி | நத்திவேர் |
| சிறுபடை | |

இவைகளைத் தனித்தாவது, சேர்த்தாவது கியாழ மிட்டுச் சாப்பிடவும் தீரும்.

எண்ணெய்.

| | | |
|---|---|---|
| பறங்கிச்சக்கை | பலம் | 3 |
| பிச்சங்கன்வேர் | ,, | 2 |
| பூமிசர்க்கரைக்கிழங்கு | ,, | 1 |
| நரிமிரட்டிவேர் | ,, | 1 |
| மிளகறணைவேர் | ,, | 1 |
| சுக்கு | ,, | 1 |
| தான்றிக்காய் | ,, | 1 |
| கருஞ்சீரகம் | ,, | 1 |
| முதல்தரம் சந்தனம் | ,, | ½ |
| ஆடுதின்னாப்பாளை | ,, | 1 |
| மாவிலங்கப்பட்டை | ,, | ½ |



இவைகளை யுலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து பத்து பலம் சித்தாமணக்கெண்ணெயில் கலந்து அடுப்பேற்றி மெழுகு பதமாய்க்காய்ச்சி யிறக்கும்போது,பூரம் 2-விராகனெடை யெடுத்து நெடி எண்ணெய் விட்டரைத்துக் கலக்கி வைத்துக்கொண்டு வேளைக்குக்கரண்டி வீதம் 3-அல்லது 5-அல்லது 7-நாள் சாப்பிடவும். பத்தியம் கொள்ளு, எள்ளு, பூசனி, அகத்தி, மீன் கருவாடு, லாகிரி, புகை,போகம் இவை யாகாது. கடும்பத்தியம். மறுபத்தியமும் இவ்வாறிருந்து ஓமம் தேய்த்துத் தலை முழுகவும், எவ்வித வெள்ளையும் தீரும்.

இனி வெள்ளை கண்டிருக்கும்போது இரவில் ஆண்குறி அதிக தாபனத்தினால் முறைத்து சகிக்கக்கூடாத வேதனை உண்டானால் இரவில் ஆண்குறியில் எண்ணெய் துணியாவது, குளிர்ந்த ஜலத்தில் நனைத்துப் பிழிந்த துணியாவது மேலே சுற்றிவைக்கலாம். நீர் துவாரத்தின் மேல் எரிச்சலுண்டானால் விளக்கெண்ணெய் தடவிவரலாம்.

---

# 83-ம் பலல்.

## இது பிரமேகவாத ரோகத்தின் குணமும் நிவர்த்தியும் கூறுவது

---

### குணம்.

பிரமேகவாத ரோகத்தின் குணமாவது:—கைகால் பிடிப்பு, முடக்கு வாதம், சூலைக்கட்டு, மேக வாய்வு, மேகவாதம், மேக பிடிப்பு, சந்திவாதம், சந்திவாய்வு என்று பல பெயர் சொல்லப் படும். அதில் மூழிகள் வீங்கி ஜுரமும் காயும். கை கால்களை யசைக்கக்கூடாமையா யிருக்கும். வீக்கத்தின்மேல் துணி சமேதம் படக்கூடாத வேதனையா யிருக்கும். துர்நாற்றமும், கத்தாழை

விச்சமுடைய வியர்வை காணும். நாடி பூரணமாய் தீவிர கதியி லிருக்கும். மலம் பந்தப்படும். இந்த வியாதியில் சிலருக்கு வேதனை யானது இடம் விட்டு இடம் மாறும்படியான ஓர் விசேஷ தன்மை யுண்டு. எப்படி யென்னில் ஒரு மூட்டிலிருக்கிற தாபிதம் ஒரு நொடியில் அதைவிட்டு மற்றொரு மூட்டை அனுசரிக்கும். பிறகு முந்தின தலத்திற்கே வருவதுமுண்டு. ஆகையால் இதற்குரிய முக்கிய மருந்துகளும், பற்றுகளும் இதின் கீழ் வரையப்படுகின்றன. தங்கள் மனதிற்குப் பொருந்தியதைப் பாகப்படுத்தி யருந்துவது நன்று.

## பிரமேக வாதரோக நிவாரணைக்கு எண்ணெய்.

| | |
|---|---|
| முடக்கொத்தான் | நன்னாரிவேர் |
| வெள்ளருகு | அமுக்கனங்கிழங்கு |
| நிலப்பனங்கிழங்கு | |

இவைகள் வகைக்கு 5-பலத்தை 2-படி ஆற்றுநீரில் போட்டு ஒரு படியாகச் சுண்டக் காச்சிக்கொண்டு அத்துடன்,

| | | |
|---|---|---|
| சித்தாமணக்கெண்ணெய் | படி | 1 |
| கத்தாழை ரசம் | ,, | $\frac{1}{2}$ |
| பொன்னாங்கரணி ரசம் | ,, | $\frac{1}{2}$ |
| வெங்காயம் ரசம் | ,, | 1 |
| கையாந்தகரை ரசம் | ,, | 1 |
| கடுக்காய்ச் சூரணம் | சேர் | $\frac{1}{2}$ |
| பறங்கிப்பட்டை சூரணம் | ,, | $\frac{1}{2}$ |

| | |
|---|---|
| சீரகம் சூரணம் | வகைக்கு சேர் அரைக்கால் |
| கருஞ்சீரகம் சூரணம் | |
| சோம்பு சூரணம் | |
| அதிமதுரச் சூரணம் | |
| மிளகு சூரணம் | |
| தாளிச்சபத்திரி சூரணம் | |

இவைகள் யாவு மொன்றாய்க் கலந்து அடுப்பேற்றி மெதுவா யெரித்து பதத்தில் யிறக்கி வடித்து ஒரு பாத்திரத்துள் வைத்து



சீலைமண் செய்து பூமிக்குள் நான்குநாள் புதைத்து வைத்துப்பின் னெடுத்துக்கொண்டு காலையில் மட்டும் சரீரத்திற்குத்தக்கபடி சுமார் 1-பலம் வீதம் 5-நாள் சாப்பிடவும். உப்பில்லா பத்தியம், 6-வது நாள் முதல் 5-நாள் வரையில் வறுத்த உப்பு கூட்டிக்கொள்ளவும். 11-ம் நாள் நெய் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும். இதனால் மேக வாதம், மேகவிரணம், அரையாப்பு, பிரமேகம் முதலிய சகல மேக மும் போகும்.

### வேறு.

| | | |
|---|---|---|
| சித்திரமூலம் வேர் | பலம் | 50 |
| ஆலம்பட்டை | ,, | 25 |
| சங்கம்வேர் | ,, | 25 |

இவைகளை நறுக்கி 16-படி ஜலத்தில் போட்டுக்காச்சி 2-படி யாக வற்றவைத்து வடித்த கியாழத்தோடு நல்லெண்ணெய் படி 1, பசுவின் வெண்ணெய் பலம் 1, மிளகு பலம் 1, வேப்பெண்ணெய் படி $\frac{1}{4}$, இதில் மிளகை யிடி எண்ணை வார்த்தரைத்து எல்லா மொன்று சேர்த்துக் காச்சி பதத்தில் வடித்து முழுகிவர சர்வ சூலைக ளும் போம்.

### வேறு.

| | | |
|---|---|---|
| உலர்ந்த பொதினா | பங்கு | 1 |
| இச்சிலிக்கிழங்கு | ,, | 1 |
| கோஷ்டம் | ,, | 1 |
| அமுக்கனங்கிழங்கு | ,, | 1 |
| நிலக்கடம்பு | ,, | 1 |
| வசம்பு சுட்டக்கரி | ,, | 1 |
| குங்குமப்பூ | ,, | 2 |
| ஓமம் | ,, | 2 |
| குக்கில் | ,, | 2 |
| ரூமிமுஸ்தகி | ,, | 2 |
| சீமை மருதோன்றி விரை | ,, | 2 |
| தான்றிக்காய் | ,, | 4 |

| | | |
|---|---|---|
| கின்று அரிசுன் | பங்கு | 2 |
| பிஞ்சு கடுக்காய் | ,, | 4 |
| சீமை நெல்லி முள்ளி | ,, | 4 |

இவைகளைச் சேர்த்து சதாப்பிலை சார்விட்டரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து வேளைக்கு 1, 2, மாத்திரை விதம் 2, 3 நாளைக்குச் சாப்பிட்டுவர சூலை, வீக்கம், வாய்வு, அஜீரணம் முதலியதுந் தீரும்.

வேறு.

2-படி சோத்து நீரைப் புதுப்பானையிலிட்டு வேடுகட்டி வெய்யிலில் 3-நாள் பானை மாற்றி மாற்றி காயவைத்தெடுத்துக் கொள்ளவும். சூரத்து நில ஆவாரை புதிதானதா யெடுத்துச் சுத்தப்படுத்தினது பலம் 12, சுக்கு பலம் 3 இவைகளைச் சூரணித்துக் கற்கண்டு பொடி பலம் 6 சேர்த்துக்கொண்டு தினம் காலையில் ஷை சூரணம் 4 விராகனெடை முதல் 6-விராகனெடைவரை சரீரத்திற்குத் தக்கபடி சாப்பிட்டு ஷை நீராகாரம் 1 ஆழாக்கு சாப்பிடவும். இவ்விதம் 10, 12 நாள் சாப்பிட நாள்பட்ட சூலை, மேக வாய்வு முடக்கு முதலியனவும் தீரும். புளி நீக்கி இருந்தால் நலம்.

## கைகால் பிடிப்பு முடக்கு வாதத்திற்குப் பற்று.

2-பலம் போஸ்துகாயும், 1-பலம் துத்திபிலையும், ஒருபடி தண்ணீரிலிட்டு அரை நாழிகை வரையில் காய்ச்சி வடிகட்டிக் கொண்டு தகுமான சூட்டோடு துணியில் நனைத்து மூட்டு வேதனையில் ஒத்தடமிடவும். வலிசமனமுண்டாகும்.

வேறு.

| | | |
|---|---|---|
| எருக்கன்பால் | படி | $\frac{1}{4}$ |
| ஆட்டுப்பால் | ,, | $\frac{1}{4}$ |
| கருநொச்சிலைச்சார் | ,, | $\frac{1}{4}$ |
| புளியிலைச்சார் | ,, | $\frac{1}{4}$ |
| நல்லெண்ணெய் | ,, | 1 |



மிளகு
கடுகு
மஞ்சள்
} சூறணம் வகைக்கு பலம் 1

இவையெல்லாம் ஒன்று சேர்த்து பதமாய் காச்சி வடித்து கொண்டு வாதநோயுள்ள விடங்களிற் தேய்க்க பலந்தரும்.

(வேறு) கடுகை முருங்கப்பட்டை ரசம் வார்த்தரைத்து போட சவுக்கியமாம்.

(வேறு) முருங்கொழுந்து, சாமந்திப்பூ, கருஞ்செம்பாயிலை, கஞ்சாயிலை, மாசிபத்திரியிலை, இவைகளை தனித்தாவது சேர்த்தாவது ஒற்றடமிடவும்.

(வேறு) கருஊமத்தம் இலைச்சார் பலம் (12) தேங்கா யெண்ணை பலம் (24) சேர்த்து காய்ச்சி சுண்டிவரும்போதும் (1)பலம் ஓமச் சூறணஞ் சேர்த்து மெழுகு பதமாய் வரும்போது வடித்து அதில் ஒரு பலம் கற்பூரம் சேர்த்து கரைத்துக்கொண்டு வாத நோயுள்ள இடங்களில் தடவி வெந்நீர்விட்டு உருவச்செய்யும்.

(வேறு) தும்பயிலைரசம், வெலிப்பருத்தியிலை ரசம், எருக்கன் பால் முதலியவற்றை தடவுகிறது, சுக்கு, பெருங்காயம், மான் கொம்பு, அபினி, இவைகளை சாயருத்திலரைத்து பற்றுப் போடுவது, ஊமத்தன் யிலையை வதக்கி கட்டுவதும் நன்று.

---

# 84-ம் பஸல்.

## இது பிரமேகத்திரட்சி ரோகத்தின் குணம் நிவர்த்தி இவற்றைக் கூறும்

---

குணம்.

பிரமேகத்திரட்சியானது பிரமேகக்கட்டி, அல்லது அரையாப்பு கட்டி யென்று சொல்லப்படும். இது அரையில் காண்கிற கட்டி இரண்டு விதப்படும். அரையின் மடிப்புக்கு மேல் அரை

யாப்பு கட்டிகாணும். அது ஒரே நெறியைமாத்திரம் பற்றியிருக்கும் அலரியின் மடிப்புக்குகீழ் இரண்டு மூன்று மாமிஸ கிரந்திகள் வீக்கி கோவெடுத்தால் அதற்கு நெறியென்று சொல்லப்படும். நெறிக்கும், துஷ்ட வியாபாரத்தினால் காண்கிற அரையாப்பிற்கும் இருக்கிற வித்தியாசம் இதுதான். வியாதியுடைய பெண்ணைப் போகித்து அதின் காரணத்தினால் அரையாப்பு கட்டியுண்டாகும் தனம், காயம், முதலியவைகளால் நெறிகட்டி காணும். அரையாப்பு சிலருக்கு சிறுத்து அமிழ்ந்து விடும். சிலருக்கு பெருத்து உடைந்து பெரிய இரணமாகி சீக்கிரத்தில் ஆறமாட்டாது. இதற்கு கட்டி விருத்தியாகாமல் உள்ளமுந்தும்படியான மருந்துகளும், கட்டிவளர்த்துவிட்டால் சீக்கிரம் புழுக்கச் செய்யும் மருந்துகளும், இரணத்தை ஆற்றும் களிம்புகளும், உட்கொள்ளுமவிழ்தங்களும் கீழ்வரையப்படுகிறது. வியாதிகளுக்கு தக்கபடி செய்துகொள்க.

ஆகையால் இந்த அரையாப்பிற்கு ஆரம்பத்தில் கட்டி கரையும்படி வழி தேடவேண்டும். மீறிவிட்டால் புழுக்கச்செய்து சீழ் சிறை வெளிப்படுத்த களிம்புபோட்டு ஆற்றவேண்டும். மருந்துகளும் உட்கொள்ளவேண்டும்.

## பிரமேகத்திறகிக்கி நிவர்த்தி லேகியம்.

| | |
|---|---|
| சங்கம் வேர் | சங்கங் குப்பிவேர் |
| கொடி வேலிவேர் | நிலப்பனங் கிழங்கு |
| அமுக்கறாங் கிழங்கு | நீர் குமிளம்வேர் |
| நிலக்குமிழம் வேர் | நெருஞ்சி வேர் |
| பூவரசம் பட்டை | செங்கத்தாரி பட்டை |

இவைகளின் சூரணம்வகைக்கு பலம் (1)

| | |
|---|---|
| திரிகடுகு | ஓமம் |
| கோஷ்டம் | சிறு நாவற்பூ |
| அரத்தை | இஞ்சி |
| சிறுலவங்கப்பட்டை | லவங்கம் |

லவங்கப்பத்திரி இவைகளின் சூரணம் வகைக்கு அரைப்பலம்.

| | |
|---|---|
| பரங்கிச்சக்கை சூரணம் | 5-பலம் |
| சர்க்கரை | 10-பலம் |



இவைகளைச்சேர்த்து போதுமான நெய்தேன் சேர்த்து பிசைந்து வைத்துக்கொண்டு கழற்சிக்காய் பிரமாணம் மாலையில் ஒரு மண்டலம் சாப்பிடமேகத்தா லெடுத்த சர்வரோகங்களும் தீரும்.

### வேறு.

| | |
|---|---|
| சுக்கு | இலவங்கப்பட்டை |
| திப்பிலி | பேரேலக்காய் |
| சிற்றேலக்காய் | குங்குமப்பூ |

இவைகள் வகைக்கு விராகனிடை 1.

| | |
|---|---|
| லவங்கம் | அதிற்கட்டை |
| ஜாலப் | |

இவைகள் வகைக்கு விராகனிடை அரை. இவைகளை சூரணித்து. தேன்பலம் 1½ காய்ச்சி அதில் விட்டுப்பிசைந்துகொண்டு வேளைக்கு 1 விராகனிடை வீதம் காலையில் மாத்திரம்உட்கொண்டு வர மலங்கழிந்து அசுத்த நீர் வெளியாகும்.

### வேறு.

| | |
|---|---|
| திரிகடுகு | அந்திப்பூ |
| சீரகம் | கறுவேப்பிலை |
| பெருங்காயம் | சூரத்தாவரை |

இவை வகைக்குப் பலம் 1
பூரம் விராகனிடை 1

இவைகளைப் பொடித்து இரவில் படுக்கைக்குப்போகும்போது பசுவின்நெய்யில் ஒரு விராகனிடைமுதல் ஒண்ணரை விராகனிடை வரையில் உட்கொண்டு வர மலமுளைதந்து கட்டியின்வலுகுறையும்.

## அரையாப்புக்கட்டி கறைவதற்குப்பைத்து.

அரைபடி ஜலத்தில் மூன்று விராகனிடை நவாசாரத்தைக் கரைத்து அதில் துணியை நனைத்து கட்டியின்மேல் போட்டு நனைத்துக்கொண்டுவர கட்டி கரையும்.

### வேறு.

| | |
|---|---|
| வெங்காயம் | வெள்ளுள்ளி |
| அமுக்கிராங் கிழங்கு | |

இவை சமனு யரைத்துப்போட கறையும்.

வேறு.

| | |
|---|---|
| விராலி இலை | பத்திராட்சியிலை |
| புகையிலை | |

இவை சமனாய்ச்சேர்த் தரைத்துப்போட கட்டிகரையும்.

வேறு.

| | |
|---|---|
| வெள்ளைப்பூண்டு | எருக்கன்பிஞ்சு |

ஓர் நிறையாய் உமிக்கிண்ணத்தில் வெதுப்பி அரைத்துப்போட கட்டிகரையும்.

வேறு.

சித்திர மூலம் வேரை எலுமிச்சம் பழரசம் விட்டரைத்துப் பூசினாலும் சரி. அல்லது பச்சை சித்திரை மூலவேர் பட்டையை சாதத்துடனரைத்து துணிமேல் தடவி கட்டிமேல்வைத்துக்கட்டி அரைமணிநேரம் வைத்திருந்து பிறகு எடுத்து விட்டாலும் சரி சருமம் கன்றி விஷநீர் முறிந்து கட்டி புண்ணாகும். பிறகு வாழை யிலையைவைத்து கட்டிக்கொண்டு வந்தால் இரணம் ஆறி கட்டி கரையும்.

இதுவிஷயங்களில் கட்டி கரையாமல் மீறிவளுத்து தானால் பழுத் துடையுமப்படியான மருந்துகளைப்போடவும்.

---

## அரையாப்புக்கட்டி பழுத்துடைவதற்கு

கற்பூரத்தோடு சாம்பிராணி சேர்த்தரைக்க மெழுகாகும். அதைத்துணிமேல் தடவி கட்டிமேல் போட்டு வந்தால் கட்டி பழுத்துடையும்.

வேறு.

| | |
|---|---|
| வெண்டைக்காய் | ஆமணக்கிலை |
| முள்ளுக்கீரை | புளிச்சக்கீரை |
| சேப்பங்கிழங்கு | |

இவைகளில் ஒன்றை வதக்கி கட்டிக்கொண்டு வந்தால் கட்டி பழுத்துடையும்.

வேறு.

புளித்த சோத்தை யாவது எள்ளையாவது அரைத்துக்கட்டி வர கட்டி பழுத்துடையும்.



## உடைந்த அரையாப்பு இரணத்தை ஆற்றுங்களிம்பு.

| | | |
|---|---|---|
| கெந்தகம் | (விராகனிடை) | 2 |
| இரசம் | ,, | 2 |
| மிருதார்சிங்கு | ,, | 4 |
| நற்சீரகம் | ,, | 4 |
| கருஞ்சீரகம் | ,, | 12 |
| பால்துத்தம் | ,, | 1 |

இவைகளை வெண்ணெயிலிட்டு மைப் போலரைத்துக்கொண்டு சர்வமேகப்புண் அரையாப்பிற்கு போட குணந்தரும்.

வேறு.

| | |
|---|---|
| மிருதார்சிங்கி | கடுக்காய் |
| லிங்கம் | வெள்ளைகுங்கிலியம் |
| இரசம் | மாசிக்காய் |
| பூரம் | காசுகட்டி |
| தான்றிக்காய் | (வகைக்கு சமனிடை) |

இவைகளை எடுத்து பசுவின் வெண்ணெயில் மைப்போல ரைத்துருட்டி ஒருநாள் ஜலத்தில் மிதக்கவிட்டு பின்பெடுத்து சகலமேக ரணம் அரையாப்பு முதலியவைகட்குப் போட சுகந்தரும்.

வேறு.

| | | |
|---|---|---|
| இரசம் | (விராகனிடை) | 2 |
| துருசு | ,, | 4 |
| கெந்தகம் | ,, | 4 |
| நீறடிமுத்து | ,, | 4 |

இவைகளை வெற்றிலைச்சாற்றா லரைத்து கால்படி நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி வடித்து புண்களின்மேல் தடவிவர சர்வமேகப்புண்களும் ஆறும்.

(வேறு.) 2 விராகனிடை இரசகர்ப்பூரத்தை (7) விராகனிடை ஆட்டுக்கொழுப்போடு சேர்த்தரைத்து போட சகலமேக இரணங்களும் ஆறும்.

(வேறு) இரசகர்ப்பூரம் 1-பங்கும், சுண்ணாம்பு ½ பங்கும் மெழுகுசவிம்பும், தேங்கா எண்ணெயும், தேன் மெழுகும் சமன் சேர்த்துருக்கிக்கொண்டதில் 6 பங்கும், ஆக இவையெல்லாமொன்றுசேர்த்தரைத்துப் போட சர்வ இரணமும் ஆறும்.

---

## 85-ம் பஸல்.

---

### மேகவிரண ரோகத்தின் குணமும் நிவர்த்தியும் கூறுவது.

---

மேகவிரண ரோகத்திற்கு மேகப்புண், கொருக்கு, குய்யவிரணம், பறங்கிப்புண், என்று சொல்லப்படும். வியாதியுடைய மனைவியை போகித்த உடன் ஆண்குறிமேல் காண்கிற இரணத்திற்கு மேக விரணமென்று சொல்லப்படும். இந்த விரணம் தகருடையமலரின் மேலாவது, சுந்நு செய்யாதவர்களுடைய மலரை மூடிக்கொண்டிருக்கும் தோலுக்குள்ளாவது, காண்பது வழக்கம் போகிக்கும் போது அபத்திலிருக்கும் மேகவிரண விஷநீரானது தகரின் மேல் எவ்விடத்தில் படுகின்றதோ அத்தலத்தில் விரணம் பிறக்கும். புணர்ந்த 3 நாள் முதல் 10 நாளைக்குள் விரணம் வெளிப்படும் சிலருக்கு (1) மாதம் (40) நாளைக்குப் பின்னும் காணுமென்றும் சில ஹகீம்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

இன்னும் பெண்பிள்ளைகளுக்கு மேகவிரணம் அதிக உபத்திரவப்படுத்தாது. அபத்தின் வெகுதூரத்தில் விரணமிருந்தால் கண்ணுக்ககப்படாது. அவர்களுக்கு அதிக தொந்திரவை கொடாது பெண்களுக்கு மேக விரணத்தில் நான்கு விதமுண்டு. அதாவது சிலருக்கு இரணத்தின் கடியில் கட்டியாய் கல்லுபோலிருக்கும், சிலருக்கு விரணம் மிருதுவா யிருக்கும். சிலருக்கு சீக்கிரத்தில் பரவிவிடும். சிலருக்கு இரணம் அழுகிதுர்மாமிஷ முண்டாகும்.



இனி புருஷனுடைய மேக வியாதி பெண்சாதிக்கு தொடர்ந்திருக்கும்போது அவள் கெர்ப்பமானால் அந்த சிசுவிற்கும் இந்த வியாதி அநுசரித்து (4-5) மாதத்திற்குள் பிண்டம் வெளிப்பட்டு போவது முண்டு. அவ்வியாதியுடைய மாதர்களுக்கு அடிக்கடி கருவழிந்து போவது வழக்கம், ஒருவேளை கெர்ப்பம் நிறம்பி பிள்ளை பிறந்து ஜீவித்திருந்தாலும், சரீரம் மிக மெலிந்தும் ஆண்குறி பெண்குறி இவ்விடங்களில் தாம்பிர நிறமான றணங்களும் வாயில்துத்தி ரோகமும் காணப்படும், குழந்தை சௌக்கியமாய் பிறந்தபோதிலும் ஒருமாதத்தின் பிறகாவது மேல்கண்ட ரோகங்கள் காணப்படும். தாயாருக்கு அபத்தில் மேகவிறணமிருந்தால் குழந்தை பிறக்கும்போது அதின்பேரில் ஷை விஷநீர்பட்டு அதற்கும் ஷை ரோகம் பிறக்கும். அன்றியும் பால் கொடுக்கிற தாதியானவளுக்கும் குழந்தையின் மூலமாய் வியாதிதொடர்ந்து முலைக்காம்பில் இரணம் காணும். பிறகு தேகமெங்கும் மேகச்சிறங்கும் படைகளு மெழும்பும்.

ஆகையால், மேக விஷநீரைப்போல் இரோகத்தைக் கெடுப்பது வேறொன்று மில்லை. அது சகல தாதுகளையும் உள்ளுறுப்புகளையும் கெடுத்து விடுகிறது, ஜனங்களுக்கு திருத அசௌக்கியத்தை கொடுப்பதற்கு இந்த வியாதியே மூலகாரணமாம்.

இன்னும், மேக விஷநீரானது இரத்தத்தில் பரவி அடியிற்கண்ட வியாதிகளை யுண்டுபண்ணுகின்றது. அவைகளாவது, மேகசூலை, மேகச்சொறி, மேகச்சிறங்கு, மேகவெட்டை, மேக ஊரல், மேகப்படை, கிரந்தி, அஸ்திரோகம், ஆண்மலடு, பெண் மலடு, கருவழிவு, கண்டவிறணம், ஜிக்வாரோகம், முதலியவைகளாம். இன்னும், இதனாலேயே கல்லடைப்பு, தசையடைப்பு, நீரிழிவு, குஷ்டம், முதலிய ரோகங்களு முண்டாகிற தென்று ஹகீமாக்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் மேகநீர் சம்பந்தமான சகல ரோகங்களுக்கும் உட்பிரையோக வெளிப்பிரையோக முதலியவைகளைப் பார்த்து விளங்கி முறைபோல் செய்துண்டு பலன் பெறுவீர்களாக.

## மேகவிரண ரோகநிவர்த்தி லேகியம்.

| | | |
|---|---|---|
| ஜாதிக்காய் | (பலம்) | 1 |
| ஏலரிசி | ,, | 1 |
| வால்மிளகு | ,, | 1 |
| லவங்கம் | ,, | 1 |
| சீரகம் | ,, | 5 |
| அக்கருகாரம் | ,, | 5 |
| பறங்கிச்சக்கை | ,, | 10 |
| குங்குமப்பூ | ,, | ¼ |
| கோரோசனை | ,, | ½ |
| வெள்ளைசர்க்கரை | ,, | 20 |
| நெய் | ,, | 20 |

சக்கரை நெய் தவிர மற்றவைகளை சூரணித்துக்கொண்டு 40 எலுமிச்சம் பழச்சாற்றில் சர்க்கரையை கலந்து வடிகட்டிக்கொண்டு நெய்யை ஒரு சட்டியிலிட்டு குங்குமப்பூ கோரோசனை நீங்கலாக மற்ற சரக்குகளை நெய்யில் தூவி கொஞ்சம் வேகவிட்டு பின் மேற்படி பழச்சாற்றை கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் கிண்டி பதமாயிறக்கி மேற்படி குங்குமப்பூ கோரோசனைகளை பொடித்துப் போட்டு கிண்டிவைத்துக்கொண்டு தினம் காலை மாலை களற்சிக்காயளவு சாப்பிட்டுவர சகலமேகமும் தீரும்.

(வேறு.) லிங்கம் பலம் (½) விளக்கெண்ணை சேர் (1½) அதில் லிங்கத்தை முலைப்பாலில் 3-நாள் ஊரைவைத்து எடுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு கொஞ்சம் எண்ணைவிட்டு (1½) ஜாமம் அரைத்து மேற்படி எண்ணெயில் கலந்து 3-நாள் சூரியப்புடம் வைத்தெடுத்துகாலையில் ½ பலம் வீதமாக 7-நாள் அல்லது 10-நாள் சாப்பிடவும். மேகப்படை, கரிமேகம், வெள்ளை, சுருக்கு முதலியதும் தீரும் (கடும்பத்தியம்.)

(வேறு.) சித்தாமணக்கெண்ணை பலம் (5), மிளகுபலம் (1), பூரம் விராகனிடை ½, முலைப்பால் ஆழாக்கு (1), பூரமும் மிளகும் முலைப்பால் விட்டரைத்து யாவும் ஒன்றாய் கலந்து 10-நாள் சூரி



யப்புடம் வைத்து வேளைக்கு கறண்டிவீதம் சாப்பிடவும் (இச்சா பத்தியம்.) சிரங்கு மேக சூடு முதலானதும் தீரும்.

---

## மேகப்படை மேகப்புண் இவைகளுக்கு மேல் பூசுங் களிம்பு.

பறங்கிசாம்பிராணி, மஞ்சள்மெழுகு, நல்லெண்ணெய் சமனிடைசேர்த்து சிறதீயிட்டுருக்கி வடிகட்டிக்கொண்டு மேகவிரணம் அரையாப்பு முதலான வைகட்கு களிம்பாக உபயோகப்படுத்தலாம்.

வேறு.

| | |
|---|---|
| கர்ப்பூரம் | நீரடிமுத்துபருப்பு |
| இரசகர்ப்பூரம் | காட்டுசீரகம் |
| கெந்தகம் | கார்போகவரிசி |
| தாரிசு | கஸ்தூரி மஞ்சள் |
| இரசம் | ஏலம் |
| மிருதார்சிங்கு | துத்தம் |

இவைகள் வகைக்கு விராகனிடை (½). இவைகளை நன்றாய் பொடித்து ஒருபடி தேங்காய்ப் பாலிலிட்டு மிருதுவாகச் காய்ச்சி பதத்தில் வடித்துக்கொண்டு சர்வமேக விரணத்திற்கும் மேல் உபயோகப்படுத்தலாம்.

(வேறு.) கரிய பனிமுக்கோடு ஆமிரமுள்ளதகி சமன் சேர்த்து சமன் வெண்ணையிலிட்டு அரைத்துப்போட சர்வபுண்களும் ஆறும்.

(வேறு.) வேண்டிய குங்குலியத்தை சமன் ஆட்டுக்கொழுப்பும் மஞ்சள்மெழுகும் உருக்கி அதில் போட்டுக்காச்சித் தடவிவர சகல மேக விரணமும் காயும்.

(வேறு) பிறமர்தண்டு ரசம்படி (½), நாகமல்லிரசம், சிமை அகத்திரசம் வகைக்கு படி (அரைக்கால்), நல்லெண்ணை படி (¼) குங்குலியம் பலம் (1) இவைகளைச் சேர்த்துபதமாய் காய்ச்சி வடி

த்து மேல் தடவி வர கருமேகம், மேகத்தடிப்பு, மேகப்புண், முதலியதும் தீரும்.

இன்னும் இதற்கு வேண்டிய களிப்புகள் அரையாப்பு றணத்தை ஆற்றும் களிப்புகளையும் பிரயோகிக்கலாம்.

---

## 86-ம் பலல்.

### இது பலவிதத்தாலுண்டாகும் இந்திரிய நஷ்டங்களின் காரணங்களும் அதற்கு புஷ்டி முறைகளும் கூறும்.

---

காரணமாவது.

நித்திரை பங்கத்தினாலும், எப்போதும் துக்கம் அல்லது, சந்தோஷத்திலேயே யிருந்து அதே கவலையாய் விடுவதினாலும், நீடித்த வியாதியினாலும், அதிகமாய் பசித்திருப்பதினாலும் புணர்ச்சியில் மிதமிஞ்சி இன்பத்தை அனுபவிப்பதினாலும் வெய்யிலில் அதிக சஞ்சாரஞ் செய்வதினாலும், மேகச் சூட்டினாலும், மனம் அறிவு முதலியவைகள் உரையும் ஸ்தானமாகிய மூளை, இருதயம் ஆகிய இவைகளிலுள்ள ஆண்மை சக்திகுறைந்து பலயீனப்பட்டு உடனே தாது நஷ்டமுண்டாகும்.

குணமாவது.

இப்படிப்பட்டவர்களுக்கு போகத்தில் விருப்பந் தராது, சில வேளை விருப்ப மிருந்த போதிலும் துரிதத்தில் இந்திரியம் வெளிப்பட்டு விடுதல், போகத்தின் ஆரம்பத்திலேயே கோசந்தளர்ந்து விந்து வெளிப்படுதல் ஆண்குறியில் உணர்ச்சி குறைந்து போகம் இன்பமாய் தோற்றாமல் போதல், சிலருக்கு இருதய திடிப்பு தாகம் இவைகளுண்டாயிடுதல் இதுபோல் கொற்ற குறிகள் சிலதாவது பலவாவது, காணப்படும். இப்படிப்பட்டவர்கள்



மூளையிருதயத்திற்கு வலுவைக்கொடுக்கும் வஸ்துகளை உபயோகிப்பதோடும் இதின் கீழ் வரையப்பட்ட அவிழ்தங்களிலொன்றை பாகப்படுத்தி யுட்கொண்டும் இதின் கடைசியில எழுதப்பட்ட கோசத்தளர்ச்சி லேபனங்களிலொன்றை பூசியும்வர மனோதைரியம் அறிவு, ஆண்மைசக்தி, முதலியவைகளுண்டாகும். மறதி, சோம்பல் அசதி, துர்ப்பலன், முதலிய வைகள் நீங்கும்.

### இதற்கு தாது விர்த்தி லேகியங்கள்.

| | | |
|---|---|---|
| சாலாமிஸ்ரீ | பங்கு | 8 |
| சாரப்பருப்பு | ,, | 2 |
| ஜாதிக்காய் | ,, | 2 |
| லவுங்கம் | ,, | 2 |
| ரூமுமுஸ்த்தகி | ,, | 2 |
| கிராக்ஷபூம் | ,, | 8 |
| கசகசா | ,, | 4 |
| வாதுமைபிசின் | ,, | 2 |
| முருங்கைவிரை | ,, | 2 |
| குங்குமப்பூ | ,, | 1 |
| 60—நாழிகை ஜலத்தில் ஊறவைத்து | | |
| 7-தரம் கழுவி யுலர்த்திய கஞ்சா | | 5 |
| சற்கரை | ,, | 76 |
| பால் தேவையானது | ,, | ,, |

முதலில் சரக்குகளை ஷை பங்கு கணக்காய் நிறுத்தெடுத்து பால் விட்டரைத்து மற்றபாலின் கரைத்து பிறகு சற்கரை சேர்த்து காச்சி லேகியப் பதத்திலிறக்கி ஆறின பிறகு 5-பங்கு தேனும் 10 பங்கு நெய்யும் விட்டு தேவையான வெள்ளி ரேக்கு சேர்த்து கலந்துகொண்டு வேளைக்கு ½ விராகனிடை முதல் 1 விராகனிடை வரை இரு வேளையும் கொள்ள மூளை, இரைப்பை, யிருதயம், ஈரல், ஆண்குறி முதலியவைகளுக்கு பலனுண்டாகி விந்துரி. போக சக்தி ஞாபகசக்தி, முதலானவைகளுண்டாகும்.

வேறு

| | |
|---|---|
| இனிப்புமாதுளம்விரை | கோதுமைநொய் |
| சுக்காஸ் அரிசி | தேத்தாங்கொட்டை |
| வெட்பால அரிசி | துத்திவிரை |
| கொப்பறை தேங்காய் | தாமரைகொட்டைபருப்பு |
| பருத்திவிரை பருப்பு | பொதினு |
| சித்திரத்தைத் | நீர்முள்ளிவிரை |
| வெங்காயவிரை | சல்கம்விரை |
| முள்ளங்கிவிரை | கசகசா |
| சந்தனவிரை | எள்ளு |
| செவ்வகத்திவிரை | நத்தச்சூரிவிரை |
| ஆலம்விரை | பஹ்மனே சுபைது |
| பஹ்மனே சுருக் | தூதரிசுபைது |
| தூதரிசுருக் | முருங்கைவிரை பருப்பு |
| அக்ரோட்டு பருப்பு | பாதாம் பருப்பு |
| பிஸ்தக் பருப்பு | சீமைத்தண்ணீர் விட்டாங் கிழங்கு |

[illegible] சரக்குகள் வகைக்கு விராகனிடை 2.

| | |
|---|---|
| லவங்கம் | லவங்கப்பட்டை |
| மிளகு | பால் சாய்[illegible] |
| சடாமாஞ்சி | கோஷ்டம் |
| கோரைக்கிழங்கு | வால் மிளகு |
| ஜாதிக்காய் | ஜாதிபத்திரி |
| ரூமி முஸ்தகி | அரிசி திப்பிலி |
| பூலாங்கிழங்கு. | |

இவை வகைக்கு விராகனிடை ($1\frac{1}{4}$)

இவைகளில் முதலில் பருப்பினங்களைச் சேர்த்து பன்னீர் விட்டரைத்து பால்போல் வடிகட்டி அதோடு 15-பலம் அப்பட்ட தேனை சேர்த்து காய்ச்சி பாகு பதத்தில் மற்ற சரக்குகளின் சூரணத்தைக் கொட்டி கிளரி யிறக்கின உடனே பன்னீர் விட்டரைத்து வைத்திருக்கும். குங்குமப்பூ விராகனிடை ($1\frac{1}{4}$) அம்பர் விராகனிடை அரையேயரைக்கால், கஸ்தூரி விராகனிடை ($\frac{1}{2}$), வெள்ளிரேக்கு (20), தங்கரேக்கு (10), ஆகயிவ்வளவு சரக்குகளை



யும் சேர்த்துப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளைக்கு (1) பலம் வீதம் இருவேளையும் சாப்பிட்டு வர மனோதைரியம், இந்திரிய விர்த்தி, இந்திரியக் கட்டு, தேக புஷ்டி, இரத்த விர்த்தி, தேகவஜ்ஜிரம், போகசக்தி, ஞாபக சக்தி, கோசவெழுச்சி, முதலிய பல மேன்மையான குணமுண்டாகும். ரேக்குகளை மாத்திரம் அரைக்காமல்கடைசியில் லேகியத்தில் போடவும்.

வேறு.

| | |
|---|---|
| நிலப்பனங்கிழங்கு | சன்னலவங்கப் பட்டை |
| லவங்கம் | அக்கருகாரம் |
| சுக்கு | சித்தாத்தை |
| சாலாமிசிறி | ஜாதிக்காய் |
| பெருவெங்கப்பட்டை | |

வகைக்கு விராகனிடை (1)

| | |
|---|---|
| பிஸ்தாபருப்பு | சாரப்பருப்பு |
| பாதம்பருப்பு | அக்ரோட்டுபருப்பு |

இவை வகைக்கு பலம் [3]

முதல் பருப்பினங்களை மைபோலரைத்து வைத்துக்கொண்டு மற்றவைகளை சூரணித்து பின்பு ஒருபடிபசுவின்பாலை ஒரு பாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றி சிறுதீயிட்டு ஒரு அகப்பையினால் கைவிடாமற் துழாவிக்காச்சி பால்திரளும் பக்குவத்தில் சீனி (20) பலத்தைக் கொட்டி துழாவி கரைந்த பின்பு பதத்தில் மேலே சித்தப்படுத்தி வைத்திருக்கும் சூரணத்தைக் கொட்டிகிளரி வைத்துக்கொண்டு தினங் காலையில் (1) பலம் முதல் (2) பலம்வரை சாப்பிட்டு வர ஈரல் இரைப்பை, மூளை, இருதயம் யிவைகளுக்கு வலுவேறி இந்திரிய விர்த்தி, போகசக்தி, ஞாபகசக்தி, முதலிய பல நன்மைகளுண்டாகும்.

வேறு.

| | | |
|---|---|---|
| ஸாலாமிஸ்ரி | (பலம்) | 1 |
| பேரஜ்தான்மிஸ்ரி | ,, | 1 |
| சுக்கு | ,, | 1 |
| சீமைதண்ணீர் விட்டாங்கிழங்கு | | 1 |
| பெருங்காயம் | ,, | 1 |

| | | |
|---|---|---|
| சில்கூஜாபருப்பு | (பலம்) | 2 |
| ஆளிவிரை | ,, | 2 |
| நாயுருவி விரை | ,, | 2 |
| சிறு பூனைக்காலிவிரை | ,, | 2 |
| தேன் பலம் | ,, | 2 |
| சற்கரை | ,, | 2 |
| தேங்கா யெண்ணெய் | ,, | 2 $\frac{1}{2}$ |

இவைகளில் பருப்பினங்களை நைய அரைத்து மற்ற சரக்குகளையும் சூரணித்து வடிகட்டியும் சேர்த்து நெய் எண்ணெய் விட்டுப் பிசைந்து பின் தேனையும் சீனியையும் கலந்த பாகை அதில் விட்டு கிண்டிவைத்துக் கொண்டு வேளைக்கு (1) துலா விதம் இருவேளையும் சாப்பிட்டுவர ராஜ உறுப்புகளுக்கு வலுவேறி விந்து, போகம், இன்பம், முதலான, நன்மையுண்டாகும்.

வேறு

| | |
|---|---|
| திருகடுகு | ஏலம் |
| கசகசா | சாரப்பருப்பு |
| கிரும்பு | கோரை நீர் |
| ஜடாமாஞ்சி | ஜாதிக்காய் |
| ஜாதிபத்திரி | லவங்கப்பத்திரி |
| சன்னலவங்கப்பட்டை | |

60 நாழிகை ஜலத்தில் ஊறவைத்து 7 தரம் பிசைந்து கழுவி யுலர்த்திய கஞ்சா

ஆக இந்த (12) சரக்குகளிலும் வகைக்கு விராகனிடை (2) விழுக்காடு நிறுத்தெடுத்து சூரணித்துக்கொண்டு, (4) படி பசுவின் பாலை அடுப்பேற்றி சிறுதீயிட்டு அகப்பையால் கைவிடாமல் துழாவிக்கொண்டிருந்து சிறைந்து வரும்போது (20) பலம் சீனியும் (20) பலம் கோழிமுட்டையும் விட்டு பாகுபதத்தில் மேற்படி சூரணங்களை கொட்டி கிண்டியிறக்கி பசுவின் நெய்யும் தேனும் வேண்டியது விட்டுக் கிளறி வைத்துக்கொண்டு வேளைக்கு நெல்லிக்காய் பிரமாணம் இருவேளையும், சாப்பிட்டுவர வீரிய விர்த்தி, போகசக்தி, கோசஉருதி மனோ தைரியம், முதலான பிரயோசன முண்டாம்.

(வேறு) நல்ல துளையிடாத ஆணிமுத்து இஷ்டமானதை ஒரு சிறியகலயத்திலிட்டு அதின்மேல் (4) அங்குலம் நிற்கும்படி



பசுப்பால் விட்டு மூடி சீலைமண்செய்து கரிநெருப்பில் வைத்து பால்சுண்டுகிற வரையில் ஊதி யெடுத்து ஆறின பின் பன்னீர் விட்டரைத்து உலர்த்திய முத்துச் சுண்ணாம் விராகனிடை ($\frac{1}{2}$) நற்பவழம் தேவையானதை துண்டு செய்து எலுமிச்சம் பழச்சாற்றி லூறவிட்டு பின்பெடுத்து முன்போலொரு கலசத்திலிட்டுப் பால் விடாமல் சீலைமண்செய்து ஜாமநேரம் கரியோட்டில் வைத்து ஊதி யெடுத்து முன்போலரைத்து உலர்த்திய பவழச்சுண்ணாம் விராகனிடை (1), தங்கரேக்கு விராகனிடை ($\frac{1}{4}$)

| | |
|---|---|
| முருங்கவிரை | ஆவாரம்விரை |
| மகிழவிரை | நெரிஞ்சிவிரை |
| நீர்முள்ளிவிரை | பருத்திவிரைபருப்பு |
| ஜாதிக்காய் | ஜாதிபத்திரி |

வகைக்கு விராகனிடை (1)

| | |
|---|---|
| கிரும்பு | |
| அபின் | விராகனிடை $\frac{1}{2}$ |

இவைகளைச் சேர்த்து மைபோல் தேன் விட்டரைத்து வேளைக்கு சுண்டைக்காய் பிரமாணம் இருவேளையும் சாப்பிட்டு பசுவின் பாலில் முருங்கை பூவை போட்டுக்காச்சி சாப்பிட்டு வர எவ்வகை தாது நஷ்டமும் தீரும் மகா மேன்மையான குணம் செய்யும் அனுபோகத்தி லறிவீர்களாக.

வேறு

| | | |
|---|---|---|
| முருங்கைவேர்சார் | (படி) | 1 |
| பசுவின்பால் | ,, | 1 |
| முருங்கைப்பூ | ,, | 1 |
| கருங்குருவை அவல் | ,, | 1 |
| ஆலம் விழுது சூரணம் | ,, | $\frac{1}{4}$ |
| சீனி | (வீசை) | 1 |
| நெய் | ,, | $\frac{3}{4}$ |
| தேன் | ,, | $\frac{1}{2}$ |

| | | |
|---|---|---|
| அபினி | (தோலா) | 2½ |
| ஜாதிக்காய் | ,, | 1½ |
| குங்குமப்பூ | ,, | ½ |

இவைகளில் முருங்கைப் பூவை நிழலிலுலர்த்தி நெய்யில் வருத்துக்கொண்டு அவலையும் அவ்வண்ணமே செய்க. பின் பாலையும் சற்கரையும் கலந்து அதில் ஷை சரக்குகளை பாவிலரைத்துப் போட்டு அடிப்பேற்றி கைவிடாமல் கிண்டி மெழுகு பதத்தில் மீதி நெய்யும் தேனையும் விட்டுக் கிளரி வேளைக்கு தோலா (1) முதல் (2) வரையில் இருவேளையும் கொள்க. விருத்திக மூறும் விந்து கட்டும், போக சக்தி, கோசளழுச்சி அதிகப்படும், அபினை யிஷ்டப்படிக்குறைத்துக் கொள்ளலாம்.

வேறு

| | |
|---|---|
| ஜாதிக்காய் | ஜாதிபத்திரி |
| கிராம்பு | நீர்முள்ளி விரை |
| இஸ்பகோல் விரை | சிறுபூனைக்காலிவிரை |
| நிலப்பனங்கிழங்கு | முருங்கைவிரை |
| ஜாதிலிங்கம் | கருவாப்பட்டை |
| சிறுநாவற்பூ | வால்மிளகு |
| கஞ்சா | அபினி |

இவைகள் வகைக்கு விராகனிடை (3) இவைகளைப் பசுவின் பால் விட்டரைத்து முத்தின தேங்காயை கண்திறந்து ஜலத்தை நீக்கி அதற்குள்ளடைத்து மேல் சாணிதடவி வோடு வேகும்படி புடம்வைத்து ஷை மருந்தை மாத்திரம் எடுத்து சமன்சற்கரையும் கலந்து 4 ஜாமமரைத்து வைத்துக்கொண்டு சுண்டைக்காய் பிறமாணம் இருவேளையும் சாப்பிட்டு வர தாதுவிர்த்தி, மனம் உச்சாகம், போகசக்தி, கோசவலுவு, இந்திரியக்கட்டு, முதலான உபயோக முண்டாம்.

## முக்கிய கவனிப்பு.

இதுவரை சொல்லிவந்த லேகியங்களடங்கலுக்கும் (இச்சாபத்தியம்) பால் நெய்யோடு புஷ்ட்டியான ஓஜீபனம் தின்னவும்.



# 87-ம் பஸல்.

## இது அஜீரணக் குறைவாலுண்டாகும் தாது நஷ்டங்களின் காரணமும் குணமும் நிவர்த்தியும் கூறுவது.

### காரணம்.

அதாவது மிதத்திற்கதிகமாய் சாப்பிடுதல், பக்குவ தப்பிதமான பதார்த்தங்களைப் பொசிக்குதல், பதார்த்தங்களை செவ்வையாய் மெல்லாமல் விழுங்குதல், சரீரப்பிரயாசை, அதிகவாசிப்பு, அதிக யோசனை, அதிக மனக்கவலை, மூளை, நுரையீரல் கருப்பை முதலியவைகளில் வியாதி, சுரம், வாந்தி, ஆகிய இவைகளால் இரத்தத் தூஷியம் பிரித்தல் முதலிய காரணங்களினால் இரைப்பைக்கும் குடலுக்கும் பலயீன முண்டாய் அதனால் ஆகாரம் மட்டிட இரத்தமும் இரத்தத்தின் சாரமாகிய சுக்கிலமும் குறைவுபட்டு தாது நஷ்டமுண்டாகும்.

### குணம்.

இப்படிப்பட்டவர்களுக்கு பசிமந்தம், மேல்வயற்று பள்ளத்தில் வேதனை அஜீரணம், மலம் ஜலமாகியவைகள் இறைச்சி கழுவின ஜலம் போலிருக்கல், பளுவுடன் வயற்றில்வாய்வு சேர்ந்திரைபுதல் தேகம் வெளுத்தல், அல்லது மஞ்சவர்ணமாதல், காதிறங்குதல், குமட்டல், வாந்தி, மலபந்தம், வாய்நாற்றம் இருதய துடிப்பு, இடுப்புவலி, கைகால்களில் வேதனை, பித்தவாந்தி, புளியேப்பம், குலை எரிவு போகத்தில் சொர்ப்பவிருப்பம், துரிதத்தில் விந்து வெளிப்படுதல், விந்து விளைவு குறைவு, போகத்தின் பின் ஆயாசம், அசதி முதலியன உண்டாயிருக்கல் முதலியவைகளில் சிலதேனும் பலவேனும் காணப்படும்.

ஆகையால் இவ்வற்றில் முதலில் இவ்வியாதிகளை யுண்டுபண்ணின காரணங்களைக் கண்டறிந்து அதுகளை நீக்கி அதற்குப் பின்

இதின்கீழ் வரையப்பட்ட அவிழ்தங்களில் தங்கள் மனதிற்கு பொருந்தியதை பாகப்படுத்தி சாப்பிட்டுவர நல்லரத்தம் விர்த்தி யுண்டாய் சுக்கிலம் பெருகி தேகசக்தி, போகசக்தி, ஆண்மை சக்தி, முதலியன பெருகும்.

## அஜீரண குறைவாலுண்டாகும் தாது நஷ்டத் திற்கு புஷ்டி முறைகள்.

| | | |
|---|---|---|
| பிஸ்த்தாபருப்பு | (பலம்) | 5 |
| கோதுமை நொய் | ,, | 20 |
| கசகசா | ,, | 20 |
| வாதுமை பருப்பு | ,, | 10 |

இவைகளை தண்ணீர்விட்டு மைபோலரைத்து ஷை தண்ணீரிலேயே கலக்கி வடிகட்டி அதோடு (1½) வீசை சர்க்கரை சேர்த்து கரைத்து காய்ச்சி மெழுகு பதத்தில் வேண்டுமான நெய்விட்டு இறக்கி குங்குமப்பூ விராகனிடை (1), கஸ்தூரி விராகனிடை (½) இவைகளைப் பன்னீரி லரைத்துப் போட்டு கிண்டிவைத்துக் கொண்டு வேளைக்கு (1) பலம் அல்லது (1½) பலம் சாப்பிட்டு வர மூளை இருதயம், இரைப்பை யீரல், இவைகளுக்கு வலுவும், இரத்தம் இந்திரியம், சந்தான விர்த்தி, ஆகிய இவைகளும் தேகபலனும், போகசக்திபு முண்டாகும்.

வேறு.

| | | |
|---|---|---|
| பூமி சர்க்கரைக் கிழங்கு | (துலா) | 10 |
| அமுக்கராங் கிழங்கு | ,, | 2 |
| சிறுபூனைக்காலி விரை | ,, | 2 |
| நீர்முள்ளி விரை | ,, | 2 |
| துத்திவேர் | பஹ்மனே சுபைது | |
| சிருநாவற்பூ | வெள்ளை குண்டுமணி பருப்பு | |
| ஜாதிக்காய் | ரூமி முஸ்தகீ | |
| ஜாதிபத்திரி | சீமை தண்ணீர் விட்டான் கிழங்கு | |
| லவங்கம் | சாலாமிஸ்ரி | |
| லவங்கப்பட்டை | வெந்தயம் | |



| | | |
|---|---|---|
| ஏலரிசி | வால்மிளகு | |
| கருவேலம்பிசினி | இலவம்பிசினி | |
| இவைகள் வகைக்கு | (துலா) | (1) |
| குங்குமப்பூ | (மாஷா) | (2) |

இவைகளைச் சூரணித்து செல்லுமான தேனைக்காய்ச்சி நுரை நீக்கிவிட்டுப் பிசைந்துக்கொண்டு வேளைக்கு சுண்டைக்காய் பிரமாணம் இருவேளையும் சாப்பிட்டு அதின்மேல் காச்சிய ஆவின் பால் சாப்பிடவும். விந்துாரி, போகசக்தி, ஞாபகசக்தி, அவுலாது விர்த்தி, சரீரசக்தி முதலியதுண்டாகும்.

வேறு.

| | | |
|---|---|---|
| பனைவேர் | (பலம்) | 2 |
| மிளகு | ,, | ¼ |
| நிலப்பனங்கிழங்கு | ,, | 2 |
| நீர்முள்ளிவிரை | ,, | 2 |
| சன்னலவங்கப்பட்டை | ,, | 2 |
| சுத்திசெய்த கஞ்சா | ,, | 1 |
| கரிவேலம் பிசினி | ,, | 1 |
| ஜாதிக்காய் | (விராகனிடை) | 1 |
| ஜாதிபத்திரி | ,, | 1 |
| கிராம்பு | ,, | 1 |
| சந்தனம் | ,, | 1 |
| சோம்பு | ,, | 1 |

இவைகளைச் சூரணித்து அரைப்படி பசுவின்பாலில் (2) பலம் கோதுமை மாவும் (10) பலம் சீனியுங்கலந்து பாகுசெய்து அதில் ஷை சூரணத்தைக் கொட்டி கிண்டி தேவையான நெய் தேன் பேரீத்தம்பழம் முந்திரிகை பருப்பு கூட்டி பிசைந்துக்கொண்டு வேளைக்கு நெல்லிக்காய் பிரமாணம் இருவேளையும் சாப்பிட்டுவர ஆத்மசக்தி அதிகரித்து போகவிருப்பம், ஆனந்தம் வீரிய விர்த்தி அவுலாது விர்த்தி முதலியன உண்டாகும்.

வேறு.

| | |
|---|---|
| திரிஜாதம் | ஏலம் |
| ஓமம் | சீரகம் |
| திரிகடுகு | கோரைக்கிழங்கு |
| உளுந்து | நெல்லிமுள்ளி |
| அதிமதுரம் | இலவம்பிசினி |
| அமுக்கராங்கிழங்கு | சிறுபூனைக்காலி விரை |
| நிலப்பனங்கிழங்கு | கசகசா |
| நெருஞ்சிவேர் | லவங்கம் |
| வாய்விளங்கம் | சுத்திசெய்த கஞ்சா |

வகைக்கு பலம் ($1\frac{1}{2}$) சூரணித்து ஒருபடி பசுவின்பாலை குருகக் காச்சி அதில் (12) பலம் சீனியைக் கலந்து பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தைக் கொட்டி கிண்டி வேண்டுமான தேன் நெய் விட்டு பிசைந்துக்கொண்டு வேளைக்கு சுண்டைக்காய் வீதம் இருவேளையும் சாப்பிட்டுவர மேற்கூறிய பலனைக்கொடுக்கும். அபினி பலம் ($\frac{1}{2}$) சேர்த்துச் செய்வதும் சரியே.

வேறு.

| | | |
|---|---|---|
| தாளிச்சபத்திரி | (பலம்) | 1 |
| சுக்கான் கீரை விரை | ,, | 4 |

| | |
|---|---|
| புளிமாதுளன் விரைவத்தல் | கரியுப்பு |
| கடுக்காய்தோல் | இந்துப்பு |
| திப்பிலி | நெல்லிமுள்ளி |
| ஏலக்காய் | ரோஜாப்பூ |
| சோம்பு | |

இவைகள் வகைக்கு பலம் (2)

சேர்த்துச் சூரணித்து கடைசியில் ஜரிஷ்க் பழம் பலம் (4) மைபோலரைத்து அதில் கலந்துக்கொண்டு வேளைக்கி ($\frac{1}{2}$) துலா முதல் (1) துலாவரை இருவேளையும் சாப்பிட்டுவர இறைப்பை யீரல் இவற்றிற்கு வலுவேறி ஜீரணசக்தி வீரிய விர்த்தி முதலானதுண்டாம்.



வேறு

| | |
|---|---|
| சூரத்துக் கடுக்காய்தோல் | சீரகம் |
| மஞ்சள் கடுக்காய்தோல் | சோம்பு |
| சீமைநெல்லிமுள்ளி | ஓமம் |
| கொத்தமல்லி | |

வகைக்கு பங்கு (2)

| | |
|---|---|
| நவாச்சாரம் | பொரித்த வெங்காரம் |

இவை வகைக்கு பங்கு 1

இவைகளை பங்கு கணக்காய்ச் சேர்த்து எலுமிச்சம்பழச்சார் வார்த்து 4 ஜாமம் மைபோலரைத்து வைத்துக்கொண்டு சுண்டைக்காய்பிரமாணம் மாத்திரை செய்து வர்த்தி வேளைக்கி மாத்திரை 1 அல்லது 2 வீதம் தினம் இருவேளையும் உட்கொண்டு வர ஈரல் இரைப்பை யிவற்றிற்கு பலமேறி அஜீரணம், புளியேப்பம், வயறூதல், முதலியன தீரும்.

வேறு

| | | |
|---|---|---|
| உலர்ந்த புதினாயிலை | (பலம்) | 10 |
| சடாமாஞ்சி | ,, | 8 |
| ஓமம் | ,, | 6 |
| ரூமிமுஸ்தகி | ,, | 4 |
| கிராம்பு | ,, | 2 |

இவைகளை, சூரணித்துக்கொண்டு வேளைக்கி துலா $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ வீதம் இருவேளையும் தேனில் சாப்பிட்டுவர இரைப்பை பலப்பட்டு ஜீரணசக்தியுண்டாகும்.

வேறு

| | |
|---|---|
| திரிகடுகு | ஓமம் |

சயிந்தியலவணம் இவைகளின் தூள் வகைக்குபங்கு (1)
சீரகத்தூள் பங்கு (2)

இவைகளை பங்குக்கணக்காய் எடுத்துக்கலந்து (20) உளுந்து நிறை காலை மாலை சாப்பிட்டுவர அஜீரணம், வாய்வு, வயற்று பொருமல், பசிமந்தம் வாடதீருதல், முதலியன தீரும்.

(வேறு) (10) பலம் வில்வச்சதையை ஒருபடி நீரிலிட்டுமுக்கா படியாக சுண்டக்காச்சிப் பிசைந்து தெளிவா யிருத்துக்கொண்டு அதில் 10 பலம் பனைவெல்லம் சேர்த்து காச்சி பாகு பதத்தில்,

| | |
|---|---|
| திரிகடுகு | சீரகம் |
| அதிமதுரம் | இந்துப்பு |

| | | |
|---|---|---|
| வகைக்கு | (பலம்) | 1 |
| திரிசுகந்தம் | ,, | ½ |
| ஏலம் | ,, | ¼ |
| லவங்கப்பட்டை | ,, | ½ |
| குங்குமப்பூ | (விராகனிடை) | 1 |

இவைகளைச் சூரணித்து தூவி, செல்லுமான தேன் சேர்த்துப் பிசைந்துக்கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு (1; 2) விராகன் சாப்பிட்டு வர மேற்காட்டிய ரோகங்களோடு வயற்று வலியும் போம்.

வேறு

| | | |
|---|---|---|
| பிறண்டைரசம் | (படி) | 1 |
| இஞ்சி ரசம் | ,, | ¼ |
| வெல்லம் | (பலம்) | 10 |

இவைகளைக் கலந்து பாகுசெய்துக்கொண்டு அதில்

| | |
|---|---|
| திரிகடுகு | ஓமம் |
| வெள்ளுள்ளி | பஞ்சலவணம் |

| | | |
|---|---|---|
| இவை வகைக்கு பலம் | | 1 |
| திரிப்பிலை | ,, | 2 |
| சீரகம் | ,, | 2 |

இவைகளின் சூரணங்களை கொட்டிக் கிண்டி வேண்டுமான தேன் விட்டு பிசைந்து இருவேளையும் வேளைக்கு (1) விராகனிடை முதல் (1½) விராகனிடைவரை சாப்பிட்டு வர மேற்சொல்லிய ரோகங்களோடு குன்மம், மூல மூலம், முதலியதுந் தீரும்,



வேறு

| | | |
|---|---|---|
| ஏலம் | (பலம்) | 6 |
| லவங்கப்பட்டை | ,, | 6 |
| முந்திரிப்பருப்பு | ,, | 6 |
| திப்பிலி | ,, | 6 |
| அதிமதுரம் | ,, | 3 |
| சர்க்கரை | ,, | 3 |
| கொட்டைநீக்கிய பேரீத்தம் பழம் | | 3 |

முதலில் சரக்கினங்களைச் சூரணித்து அத்துடன் சர்க்கரை பேரீத்தம்பழம் முந்திரிப்பருப்பு இவைகளைச்சேர்த்து ஒரு ஜாமம் உரலில் இடித்துக்கொண்டு வேளைக்கு களர்ச்சிக்காய் பிரமாணம் இருவேளையும் சாப்பிட்டு வர பித்தம், வாய் நீரூறல், அக்கினி மந்தம், வயற்றுவலி, முதலியன தீரும்.

வேறு

பாலில் வேகவைத்து கழுவியுலர்த்திய கஞ்சா

| | |
|---|---|
| திரிகடுகு | தாளிச்சபத்திரி |
| சிருநாகப்பூ | சோம்பு |
| சீரகம் | அரத்தை |
| அதிமதுரம் | |

இவைகளின் சூரணம் வகைக்கு பலம் (1)

| | | |
|---|---|---|
| திரிபலாஷம் வகைக்கு | (பலம்) | 2 |
| பரிமள பஞ்சகம்வகைக்கு | ,, | ¼ |
| சர்க்கரை | ,, | 20 |
| செவ்விள நீர் | ,, | 10 |

இவைகளைச் சேர்த்து சர்க்கரையை பாகுசெய்து அதில் போட்டுக் கிண்டி கடைசியில் (1) பலம் கசகசாவைச் சேர்த்துப் பிசைந்துக்கொண்டு வேளைக்கி (1) விராகனிடை முதல் (2) விராகனிடைவரை இருவேளையும் சாப்பிட்டுவர மந்தபேதி, வயற்றிரைச்சல், உஷ்ணவாய்வு உஷ்ணபேதி, பசியில்லாமை, அஜீரணம், வயறாதுதல், முதலியன தீரும்.

---

177



## 88-ம் பஸல்.

### இது மூத்திரப் பிண்டங்களின் சீர்க்கேட்டினலுண்டாகும் இந்திரிய நஷ்டங்களின் காரணம் குணம் பரிகாரங்களைப்பற்றி கூறும்.

---

காரணமாவது

முதிர்ந்த வயதுடைய ஸ்திரீயைப் புணர்வதினலும், அதிக நடையுண்டாவதினலும், அதிக வாந்திபேதி உண்டாவதினலும், குதிரை முதலியவைகளில் முரட்டுத்தனமாயேறி சவாரி செய்வதினலும், மேகச்சூட்டினலும், மூத்திரபிண்டங்கள் பெலயீனப் பட்டு மெலிந்து இரத்தத்தையும், சுக்லத்தையும், சுத்தி செய்யும்படியான சக்தியை யிழந்து போவதால், விந்து விளைவுகுறைந்து உடனே தாதுநஷ்ட முண்டாகும்.

குணமாவது.

இப்படிப் பட்டவர்களுக்கு சிறுநீர் வெளுத்தவர்ணமா யிருக்கல், போகசக்தியும் சிறுநீருக்கிருக்கும் சக்தியும் குறைவுபட்டிருக்கல், இடுப்பின் பின் பக்கத்தில் எப்போதும் வலியுண்டாயிருக்கல், சில வேளை இறைச்சி கழுவின நீரைப்போல் நீரிறங்கல், நீரில் வண்டல் படிதல், நீரில் நுரையுண்டாகல், அசதி விந்து நீருப் வெண்மையாகா திருக்கல், கோசம் தளர்தல், முதலிய குறிகளில் சிலதாவது பலவாவது காணப்படும். இவற்றிற்கு முதலில் இவ்வியாதிகளை யுண்டாக்கின செயலை நீக்கியபின் இதின் கீழ் வரையப்பட்ட அவிழ்தங்களில் உங்கள் மனதிற்குப் பட்டதி லொன்றைத்தெரிந்து முறைபோல் செய்து அருந்தி வந்தால் மேற் கூறிய வியாதிகளைத் தும் நீக்கி சுவாப நிலையடியலாம்.

---



### ஷை வியாதிகளுக்கு தாதுவிர்த்தி அவிழ்தங்கள்.

ப்ஹமனே சுபைது — பஹமனே சுருக்
தூதரிசுபைது — தூதரிசுருக்
சித்தரத்தை — ஆளிவிரை
லவுங்கப்பட்டை — உலர்ந்தபொதினு
சுக்கு

இவைவகைக்கு விராகனிடை (?)

இடித்து வஸ்திரகாயஞ் செய்துக்கொண்டு

பிஸ்தாபருப்பு — பாதம்பருப்பு
சில்கூஜாபருப்பு — அக்ரோட்டுபருப்பு
பிந்தக்பருப்பு — சாரப்பருப்பு
கொப்பரை தேங்காய்

இவைகள் வகைக்கு பலம் 2 நய்ய இடித்துக்கொண்டு

28-பலம் தேனையும் 28-பலம் சீனியும் கலந்து பாகு செய்து அதில் ஷை சூரணத்தைக் கொட்டிக்கிண்டி பிறகு பருப்பினங்களையும் போட்டுக் கிண்டி யிறக்கிவைத்துக்கொண்டு வேளைக்கு 1-தோலாவிதம் இருவேளையும் சாப்பிட்டுவர நீர்ப்பையின் சீர்கேடுகள் நீங்கி விந்து அதிகமா யூறி போகசக்தி பெருகும்.

(வேறு) கொட்டைக்கிழங்கை மேல்தோல் சீவி உலர்த்தி இடித்து வடிகட்டிய சூரணத்தை பாலில் பிட்டவியில் செய்து உலர்த்தி பின்னும் அவ்விதம் 2 தடவை பிட்டவித்து உலர்த்தியது பங்கு 1, தண்ணீர் விட்டாங்கிழங்கை பாலில் வேகவைத்து உலர்த்தி இடித்த சூரணம் பங்கு $\frac{1}{4}$, தேன் பங்கு $2\frac{1}{4}$, இவற்றை ஷை கணக்காய் எடுத்துப் பிசைந்துக்கொண்டு வேளைக்கி $\frac{1}{2}$ பலமுதல் 1-பலம்வரை இருவேளையும் சாப்பிட்டுவர விந்தூறும், தாதுகட்டும், தேகம் வலுக்கும், இடுப்பிற்கு வலுவேறும், மூளைக்கி அதிக சக்தியை யுண்டாக்கி மனதைரிய முண்டாக்கும்.

(வேறு) மஞ்ச முள்ளங்கிச்சார் 1-பங்கும் தேன் 2-பங்கும் சேர்த்து சர்பத்து செய்துக்கொண்டு வேளைக்கு 1-தோலா விதம்

இருவேளையும் சாப்பிட்டுவர இடுப்பு நோவு நீங்கி, மூத்திரப்பை இவைகளில் பலமேறித் தாதுவிர்த்தி இந்திரியக்கட்டுண்டாகும்.

(வேறு) உள்நரம்பு மேல்தோல் முதலியன போக்கிய மஞ்ச முள்ளங்கி 6-சேரை பசும்பால் விட்டரைத்து மூன்றுசேர் பசுவின் நெய்யில் நன்றாய் வறுத்தெடுத்து அதோடு சாரப்பருப்பு பலம் 3, தேங்காய் பலம் 2, பாதம்பருப்பு பலம் 2, இவைகளை நன்றாய் அரைத்துச்சேர்த்து, 3-சேர் சர்க்கரையை பாகுசெய்து அதில் விட்டு கிண்டி வைத்துக்கொண்டு வேளைக்கு 1-தோலாவீதம் இருவேளையும் சாப்பிட்டுவர மூளை இருதயம், ஈரல் முதலிய இராஜ உறுப்புகளுக்கு பலமேறி தேகபலம் வீரிய விர்த்தி முதலியன உண்டாகும்.

## 89-ம் பலல்.

### இது சூடு மிகுப்பதா லுண்டாகும் தாது நஷ்டங்களின் குணங்களும் மலட்டின் குணங்களும் பரிகாரங்களும் கூறுவது.

#### தாது நஷ்டத்தின் குணம்.

இந்திரிய கருவிகளில் சூடு அதிகரித்து விடுவதினாலும் தாது நஷ்டமுண்டாகும். அந்த சூட்டில் 3-வகையுண்டு. 1-வது சாத்விக சூடுடையவர்களுக்கு விந்தானது நீர்த்து மஞ்சணித்து சாந்தமாய் வெளிப்படும். 2-வது தீவிர சூடுடைய வர்களுக்கு போகமும்போக சக்தியும் சுக்கிலமுங் குறைந்த அளவாயிருக்கும் 3-வது உக்கிர சூடுடையவர்களுக்கு இந்திரியம் குறைந்த அளவாயிருந்தபோதிலும் போகமும் போகசக்தியும் மிகுதியாயிருக்கும். இன்னும் சூடு அதிகரிப்பதினால் சொப்பனத்தில் விந்து வெளிப்படுதல், நித்திரையில் விந்து வெளிப்படுதல், போகத்தில் அதிக துரிதத்தில் விந்து வெளிப்படுதல், சாதாரண காலங்களிலும் விந்து கொஞ்சங்கொஞ்சமாய் வெளிப்படுதல் ஆக இவைகளுண்டாகும்.



#### மலட்டின் குணம்.

அதாவது சுக்கிலத்தில் சூடு அதிகரித்து விடுவதினால் அந்த விந்துவானது பலவீனப்பட்டு நாதத்தோடு கூடி கருப்பிடிக்கும்படியான தனது சக்தியை யிழந்துபோகும். இப்படிப்பட்டவர்களுக்கு மேலே குறிக்கப்பட்ட இந்திரிய நஷ்டங்களின் குணங்களோடு விந்தானது துர்வாடை வீசுதல், வெளிப்படும்போது எரிவுண்டாகுதல், விந்து மஞ்சநிறமாகத் தோற்றல், விந்து நீர்த்திருத்தல், முதலிய குறிகள் காணப்படும். ஆகையால், அதற்கு குளிர்ச்சி அதிகரிக்கும்படியான பதார்த்தங்கள் போசித்து வருவதோடு இதின் கீழ் வரையப்பட்ட அவிழ்தங்களி லொன்றை ரோகங்களுக்கு தகுந்தது போல் தெரிந்துக்கொண்டு பாகப்படுத்தி சாப்பிட்டுவர சரீரமும் இந்திரிய கருவிகளும் தகுமான குளிர்ச்சியடைந்து வீரிய விர்த்தி, போகசத்தி, இந்திரியக் கட்டு, தேகபலம், ஆயுலாதுவிர்த்தி, முதலியன உண்டாகும்.

### ஷை வியாதிகளுக்கு புஷ்டி அவிழ்தங்கள்.

தர்பூசாவிரைபருப்பு, வெள்ளரிவிரைபருப்பு, முலாம்பழம் விரைபருப்பு, சீமை வெள்ளரி விரைபருப்பு, சுரைவிரைபருப்பு, கழுவி யுலர்த்திய எள்ளு.

இவை வகைக்கு பலம் (2)

| | | |
|---|---|---|
| பூமிசர்க்கரைக்கிழங்கு | பலம் | 1½ |
| சாலாமிஸ்ரி | ,, | 1½ |
| தருஞ்சபீன் | ,, | 10 |
| கஸகஸா | ,, | 15 |
| சர்க்கரை | பலம் | 20 |
| தேன் | ,, | 10 |

இவைகளில் கஸகஸாவை ஓரிரவு கொஞ்சம் ஜலத்தில் ஊற வைத்து காலையி லரைத்து ஷை ஜலத்தில் கரைத்து வடிகட்டி அதில் சர்க்கரை, தருஞ்சபீன், தேன் இவற்றை விட்டு பாகு செய்து அதில் மீதிசரக்குகளை அரைத்துச் சேர்த்து மாஜூன் செய்துக்கொண்டு வேளைக்கு (1) தோலா வீதம் இருவேளையும்

சாப்பிட்டுவர கூடு அதிகரிப்பதினுலுடாகும் எவ்வகை தாது நஷ்டமும் நீங்கும்.

வேறு.

| | |
|---|---|
| பிஸ்த்தாபருப்பு | பிக்தக்பருப்பு |
| அக்ரோட்டுப்பருப்பு | பாதம்பருப்பு |
| தேவதாருவிரைபருப்பு | கசகசா |
| தேங்காய் | கழுவினஎள்ளு [தம்பழம் |
| நாயுருவிவிரை | கொட்டைநீக்கியபேரீத் |
| சுக்கு | மஞ்சமுள்ளங்கிவிரை |
| தூதரிசுபைது | தூதரிசுருக் |
| பஹமனேசுபேத் | பஹமனேசுருக் |
| சித்கரத்தை | சிறுநாவற்பூ |
| அலிசிவிரைபருப்பு | கீரைவிரை |
| அரிசிதிப்பிலி | லவுங்கைப்பட்டை |

இவைகள் வகைக்கு பலம் (½) தேன் பலம் (30) ஷை சரக்குகளை சூரணித்து தேனைக்காய்ச்சி நுரைநீக்கி சூரணத்தைக் கொட்டிக்கிண்டி கொண்டு வேளைக்கு (1) தோலாவிதம் இருவேளையும் சாப்பிட்டுவர கூடு அதிகரிப் பதினுலுண்டாகும் எவ்வகையான தாது நஷ்டமும் தீரும்.

வேறு.

| | | |
|---|---|---|
| நெய்தற்கிழங்கு உலர்ந்தது பலம் | | 2½ |
| சாலாமிஸ்ரி | ,, | 2½ |
| சீமைதண்ணீர்விட்டான்கிழங்கு | ,, | 2½ |
| தூதரிசுபைது | ,, | 1½ |
| தூதரிசுருக் | ,, | 1¼ |
| சீமைநீர்முள்ளிவிரை | ,, | 1½ |
| மாசிக்காய் | ,, | 1⅛ |
| ரூமிமுஸ்த்தகி | ,, | 1½ |
| சீனி | ,, | 20 |

இவைகளை சூரணித்து ஒன்று கலந்து வேளைக்கு தோலா (1) விதம் இருவேளையும் சாப்பிட்டுவர எவ்வகையான தூரிதஸ்கலிதமும் சொப்பன ஸ்கலிதமும் தீரும்.



வேறு.

| | | |
|---|---|---|
| வாலை ரசம் | (கழஞ்சு) | 3 |
| லிங்கம் | | 1 |
| வெண்காரம் | இரும்பு | |
| கஞ்சா | முருங்கவிரை | |
| ஜாதிக்காய், | ஜாபத்திரி | |
| கோரைக் கிழங்கு | அபினி | |
| சிறுபூனைக்காலிவிரை | சாரப்பருப்பு | |
| பூமிசர்க்கரைக்கிழங்கு | | |

வகைக்குப் பலம் ⅛

இவைகளைச் சூரணித்து ஒரு பருத்த முத்தின தேங்காயைக் கண்திறந்து ஜலத்தை நீக்கிவிட்டு அதனுள் சூரணத்தைப் போட்டு வாயிக்கி முளையடித்துவிட்டு தேங்காயின்மேல் சாணிப் பூசி 20 எருவில் ஓடு வேகிறவரையில் புடம் போட்டெடுத்து ஓடு நீக்கி எல்லாவற்றையும் முறுங்கைப்பூ சாற்றால் (3) ஜாமமரைத்து களர்ச்சிக்காய் பிரமாணம் உண்டை செய்து வைத்துக்கொண்டு இருவேளையும் வேளைக்கு ஒரு உண்டையை பொடித்து சமன் சர்க்கரை கூட்டி உண்ணவும். புளிதள்ளி சாப்பிடவும். பால் சர்க்கரை அதிகம் சேர்க்கவும். அதிக உஷ்ணம், சொர்ப்பன ஸ்கலிதம், தூரிதஸ்கலிதம், இந்திரிய இழிவு, ஆண்மலடு, கோச மெலிவு, கோசத்துவளல், முதலியன நீங்கி, தாது புஷ்டியும், போகசக்தியுமுண்டாகும்.

வேறு.

| | |
|---|---|
| இலந்தைக் கொழுந்து | கருவேலங்கொழுந்து |
| முள்ளிலவம்பட்டை | பூமாதுளம்பூ |
| கடுக்காய்தோல் | கஞ்சாவிரை |
| பால் சாம்பிராணி | ரூமிமுஸ்தகி |

இவைகளை நிழலுலர்த்தி இடித்து வடிகட்டிக்கொண்டு வேளைக்கு (3) விராகனிடை விதம் இருவேளையும் உண்டுவர இந்திரிய ஒழுக்கு, தூரிதஸ்கலிதம், முதலியன தீர்ந்து, தாதுபுஷ்டி, அவுலாது விர்த்தி, யுண்டாகும்.

---

## 90-ம் பஸ்ல்.

### இது குளிர்ச்சி மிகுப்பதா லுண்டாகும் இந்திரிய நஷ்டத்தின் குணங்களையும் மலட்டின் குணங்களையும் அதற்குப் பரிகாரங்களையும் கூறுவது.

---

#### இந்திரிய நஷ்டத்தின் குணங்கள்.

அதாவது இந்திரிய கருவுகளில் குளிர்ச்சி அதிகரித்து விடுவதினாலும் தாது நஷ்டமுண்டாகும். அந்த குளிர்ச்சியில் 3 விதமுண்டு, அதில் (1) வது சாத்மிக குளிர்ச்சியுடையவர்களுக்கு விந்தானது வெளிப்படவேண்டில் நீண்ட நேரம் ஆண்குறியை அயரச்செய்து அதிக வருத்தத்தோடு வெளிப்படும், விந்து குறைவாயிருப்பதோடு தடிப்புற்று உறைந்துமிருக்கும். (2) வது தீவிர குளிர்ச்சியுடையவர்களுக்கு மூத்திரம் தடித்தும், வெண்மையாயும் விந்து அதிக வழுவழுப்புள்ள தாயும் அதிகமாயும், இன்னும் சீக்கிரத்தில் வெளிப்படுவதாயும், ஆண்குறி தளர்வாயு மிருக்கும், (3) வது உக்கிர குளிர்ச்சியுடைய வர்களுக்கு போகம் போகசக்தியும் குறைவாயிருப்பதோடு சுக்கிலமும் நீர்த்து அதிகமாக வெளிப்படும். இன்னம் இந்த குளிர்ச்சி அதிகரிப்பதினாலேயே சொர்ப்பனத்திலும் துரிதத்திலும் வெளிப்படும் இந்திரிய இழிவாகிய இவைகளுண்டாவது முண்டு.

#### மலட்டின் குணங்கள்.

அதாவது இந்திரிய கருவிகளில் குளிர்ச்சி அதிகரித்து விடுவதினால் விந்தானது கருப்பையில் தங்காமல் விழுந்து விடும் இதனால் கருபத்தாமற் போய்விடும். இப்படிப்பட்டவர்களுக்கு சுக்கிலம் தடித்திருக்கல், அளவிற்குக் குறைதல் அல்லது அதிகமாகுதல், அதிக வழுவழுத்திருக்கல், முதலிய குறிகள் காணப்படும். ஆகையால் துர்ப்பலனாகி இந்த தாது நஷ்டங்கள் மலட்டு குணங்



கள் முதலானவைகளுக்கு சூடான பதார்த்தங்களைச் சாப்பிடுவதினாலும், சூட்டை அதிகரிக்கும்படியான செயல்களை கையாண்டு வருவதினாலும், இதின் கீழ்வரையப்பட்ட அவிழ்த முறைகளில் ரோகத்திற்குப் பொருந்தியதை பாகப்படுத்தி சாப்பிடுவதினாலும், சரீரமும் இந்திரிய கருவிகளும் கிரமமான சூட்டை யடைந்து, வீரிய விர்த்தி, அவுலாது விர்த்தி, போகசக்தி, இந்திரியக் கட்டு, தேகபலன், சரீர ஆரோக்கியம் முதலான நன்மையுண்டாகும்.

#### ஹை வியாதிகளுக்கு தாதுவிர்த்திப் போதனைகள்.

(4) ஜாயம் பன்னீரிலரைத்துலர்த்திய துளையிடாத நல்ல முத்து, மூங்கிலுப்பு, சஹ்ருபா, கல்ஜபாஸ் என்று சொல்லப்பட்ட சீமை கத்தாழை, குமேலே அருமணி, இவைகள் வகைக்கு விராகனெடை (2), கஸ்த்தூரி விராகனெடை (1) இவைகளைச் சேர்த்து தேன் விட்டரைத்து வேளைக்கு ½ விராகனெடை வீதம் இருவேளையும் சாப்பிட இந்திரியக் கருவிகளிக் குளிர்ச்சி அதிகரித்ததினா லுண்டான எவ்வகை தாது நஷ்டமும் போம்.

வேறு.

| | |
|---|---|
| அம்பர் | குங்குமப்பூ |
| யானைகோரோசனை | கஸ்தூரி |
| சாலாமிஸ்ரி | லவுங்கம் |
| ரூமிமுஸ்த்தகி | வகைக்கு சமனிடை |

இவைகளைச் சேர்த்து ஜலம் விட்டரைத்து மிளகுபிரமாணம் மாத்திரை செய்து நிழலுலர்த்தி வேளைக்கு (1) மாத்திரை வீதம் இருவேளையும் சாப்பிட்டுவர குளிர்ச்சியினா லுண்டான எவ்வகை தாதுநஷ்டமும் தீர்ந்து விந்து விளைவு இந்திரியக்கட்டு போகசக்தி முதலானதுண்டாகும்.

வேறு.

| | |
|---|---|
| விரைநீக்கிய பேரீத்தம்பழம் | [illegible]பலம்) 12 |
| இத்திப்புபாதம்பருப்பு | [illegible]ப்பருப்பு |

சிமைதண்ணீர் விட்டாங்கிழங்கு பிஸ்தாப்பருப்பு

இவை வகைக்கு (தோலா) 10

| | |
|---|---|
| பஹ்மனே சுபேத் | பஹ்மனே சுருக் |
| தூதரிசுபேத் | தூதரிசுருக் |
| திப்பிலி | லவங்கம் |
| ஏலரிசி | சுக்கு |
| லவுங்கப்பட்டை | |

வகைக்கு விராகனிடை (3)

இவைகளைச் சூரணித்து வைத்துக்கொண்டு உலர்த்தின நெய்தற்கிழங்கு, வெண்மையான கருவேலன் பிசினி, இவை வகைக்கு பலம் (12) டை தனித்தனி சூரணித்துக்கொண்டு, எல்லா சூரணங்களையும் 12 பலம் பசுநெய்யில் கொட்டிக்கிண்டி வேளைக்கு (1) தோலா முதல் (2) தோலாவரை இருவேளையும் சாப்பிட்டு வரவும். இதனால் மேக சம்பந்தத்தினா லுண்டாகிய துரிதஸ்கலிதம் இந்திரியஇழிவு சொர்பன ஸ்கலிதம் முதலியன தீர்ந்து வீரியவிர்த்தி போக சக்தி முதலான துண்டாகும். இது மிகமேன்மை யானதாகயிருக்கும்.

வேறு.

(1) படி ஆவின்பாலைச் சுண்டக்காய்ச்சிய பின் பெடுத்து, பறங்கிப்பட்டை பலம் (10), நிழலிலுலர்த்திய ஆலம்விழுது, சிமைதண்ணீர் விட்டாங்கிழங்கு, கற்கண்டு, இவை சமனெடுத்து சூரணித்து அவற்றிற்கு நிகர் சர்க்கரையைப் பாகு செய்து யாவற்றையும் போட்டுக் கிளரி வேளைக்கு (2) விராகனிடை முதல் (3) விராகனிடை வரை இருவேளையும் சாப்பிட்டுவர மேற்சொல்லிய ரோகங்களோடு ஆண்மலடு நீங்கி வீரியவிர்த்தி போக சக்தியுண்டாகும்.

வேறு.

| | |
|---|---|
| உலர்த்தின பாக்குபிஞ்சு | வால்மிளகு |
| ரூமி முஸ்தகி | சாலாமிஸ்ரி |
| லவங்கம் | ஜடாமாஞ்சி |
| ஓமம் | இவைவகைக்கு பங்கு (1) |



இவைகளை யெடுத்து சூர்ணித்து தேன் (10) பங்கிலிட்டு காய்ச்சி நுரைநீக்கி பதத்தில் மேற்படி சூரணங்களைக் கொட்டிக்கிண்டிக் கொண்டு வேளைக்கு (2) விராகனிடை வீதம் இருவேளையும் சாப்பிட்டுவர அதிக குளிர்ச்சியினாலுண்டாகிய துரிதஸ்கலிதம், சொர்ப்பன ஸ்கலிதம், இந்திரிய இழிவு, ஆண்மலடு; முதலியவைகள் தீர்ந்து தாது புஷ்டியுண்டாகும்.

வேறு.

| | |
|---|---|
| தேத்தாங்கொட்டை | முருங்கப்பட்டை |
| முருங்கைவிரை | முருங்கைப்பிசினி |
| அதிமதுரம் | திப்பிலி |
| கருவேலம்பிசினி | துத்திவிரை |
| வெண்சந்தனம் | சுரைவிரைபருப்பு |
| தேங்காய் | சீனி |

இவை வகைக்கு சமன்சேர்த்து தண்ணீர் விட்டாங்கிழங்கு சார் விட்டரைத்து இராத்திரியில் போஜனத்தின் பின் (1) விராகனிடை முதல் (2) விராகனிடை வரை சாப்பிட்டு பின் முருங்கைப்பூவும் கற்கண்டும் சேர்த்துக் காய்ச்சிய பசம்பால் சாப்பிட்டுவர எவ்வகை இந்திரிய ஸ்கலிதமும் தீர்ந்து விந்து கட்டிமணியாகும். புளி போகம் நீக்கவும்.

வேறு.

| | | |
|---|---|---|
| சாம்பிராணி | (பலம்) | 1 |
| சிறுநாவற்பூ | ,, | 1 |
| சன்னலவங்கப்பட்டை | ,, | 1 |
| நிலஆவரை | ,, | 2 |
| பனைவெல்லம் | ,, | 8 |
| சுத்திசெய்த கஞ்சா | ,, | 8 |
| நெய் | ,, | 8 |

இவைகளில் கஞ்சாவை நெய்யிலிட்டு கொஞ்சம் ஜலம் சேர்த்து வெந்தபின் நெய்யை இருத்து அதில் மேற்படி சரக்குகளைச் சூரணித்துப் போட்டு வெல்லத்தையும் சேர்த்துப் பிசைந்து வேளை

க்கு சுண்டைக்காய பிரமாணம் இருவேளையும் சாப்பிட்டுவர குளிர்ச்சியினு லுண்டாகும் இந்திரிய இழிவு, துரிதஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், ஆண்மலடு முதலியன தீர்ந்து தாதுவிர்த்தி போக சக்தி முதலான பல நன்மைகளுண்டாகும்.

வேறு

| | |
|---|---|
| மதனகாமப்பூ | அபினி |
| இரும்பூ | ஜாதிக்காய் |
| சாம்பிருணி பதங்கம் | மருட்டி மொக்கு |
| முருங்கவிரை | ஆலம் விரை |
| அசரம்விரை | அத்திவிரை |
| அதிமதுரம் | தங்கரேக்கு |

இவைகளை வகைக்கு சமன்கூட்டி, முருங்கப்பூ சாற்றுலரைத்து, சிறு சுண்டைக்காய் விதம் மாத்திரை செய்து வேளைக்கு ஒரு மாத்திரை விதம், இருவேளையும் முருங்கைப்பூ போட்டு காய்ச்சியபசுவின் பாலில் கரைத்துக்கொண்டு சாப்பிட்டுவர குளிர்ச்சியா லுண்டாகும் இந்திரிய இழிவு, துரிதஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், ஆண்மலடு, முதலியன தீர்ந்து, தாதுவிர்த்தி, போக சக்தி அவுரா விர்த்தி, முலான நன்மைகளுண்டாகும்.

சாம்பிராணி பதங்கமவது:—ஒரு சேர் பால் சாம்பிருணியை தூள் செய்து ஒரு வாயகன்ற புது சட்டியில் போட்டு தளமான காகிதத்தை கோபுறம்போல டொப்பி செய்து சட்டியின் வாயில் ஒட்டி பின் ஒரு சட்டியை கவிழ்த்து மூடி இருசட்டியின் வாயும் ஒன்று சேர்த்து சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி (2) நாழிகை விளக்கெண்ணெய் திரியைக்கொண்டு தீபாக்கினியாயெரித்தால் காகிதத்தின் மேல் பதக்கம் படிந்திருக்கும். பின் ஆறவிட்டெடுத்துக் கொள்ளவும், அக்கினி யதிகமானுல் பதக்கம் கரைந்துப் போம். இப்பதங்கத்தை இன்னும் சுரம், மஞ்சாக்காமாலை மூத்திர தோஷங்கள், முதலியவைகளுக்குக் கொடுக்கலாம்.

வேறு

| | |
|---|---|
| அதிமதுரம் | சிறுநெருஞ்சிவிரை |
| சிறு பூனைக்காலிவிரை | கிலப்பனங் கிழங்கு |



| | |
|---|---|
| தண்ணீர் விட்டாங்கிழங்கு | முள்ளிலவம் பிசின் |
| சக்கரை | தேன் |

இவைகளைச்சமன் சேர்த்துப் பிசைந்துகொண்டு கொட்டைப் பாக்குப் பிரமாணம் இருவேளையும் சாப்பிட்டுவர இந்திரியக் கட்டுண்டாகும்.

வேறு

| | |
|---|---|
| என்ளு | உளுந்து |
| அமுக்கிறுங்கிழங்கு | தண்ணீர்விட்டாங்கிழங்கு |
| சாட்டறணை | சக்கரை |
| தேன் | |

இவைகளை வகைக்கு சாமன்சேர்த்துப் பிசைந்து முன்போல் சாப்பிட்டுவர முன்கண்ட குணமுண்டாகும்.

வேறு.

| | |
|---|---|
| கடுக்காய்த் தோல் | சுக்கு |
| மஞ்சள் | கஸ்தூரிமஞ்சள் |

இவைகளை நருக்கி அரைப்படி ஜலத்தில் (30) நாழிகை ஊற வைத்து எட்டொன்றாய் சுண்டக்காச்சிய கியாழத்தோடு கொஞ்சம் தேன்விட்டு சாப்பிடவும். தினந்தம் காலை, மாலை, இருவேளையும் சாப்பிட்டுவர இந்திரிய இழிவும் தாது நஷ்டமும் தீர்ந்துதாது புஷ்டி, போகசக்தி, முதலான அனேக நன்மைகளுண்டாகும்.

## 91-ம் பஸல்.

### இது கோசத்தின் மெலிவு கோசத்தளர்ச்சி முதலானவைகள் நீங்கும்படி பூசும் மூலாம்களைக் கூறுவது.

எட்டிக்கொட்டை அமுக்கறுங்கிழங்கு, வசம்பு, சமனிடைச் சேர்த்து பசுவின் வெண்ணெயிலரைத்து ஆண்குறியின்மேல் காலை மாலை ஒருவாரம் பூசிவர கோசம் வலுத்து கெட்டிப்படும்.

(வேறு) நாபி, புனுகு, சவுக்கார்ரம், படிகாரம், வெண்காரம், அதிமதுரம், அகில் கட்டை, திப்பிலி, நன்னாரிவேர், மதனகாமப்பூ இவைகளைச் சமன்கூட்டி சங்கங் பழச் சாற்றாலாட்டி இலேசாக ஆண்குறிமேல் பூசிவர, கோசத்தளர்ச்சி மாறும்.

(வேறு.) அக்கருகாரம், மருதோன்றிவிரை, அபினி சமனிடையாக தேனிலரைத்து, 15 நாள் லிங்கத்தின்மீது பூசிவர லிங்கம் வலுக்கும்.

(வேறு) மாதுளம்பழத் தோல் பலம் (4) கால்படி ஜலத்திலிட்டுக்காச்சி, (4) பலம் பிழிந்து வடித்து நல்லெண்ணெய் பலம் (2) லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, புருவி விரை, முள்ளங்கி விரை. வெங்காயவிரை, அக்கருகாரம், கோஷ்டம், வெள்ளலரிப்பூசெடி வேர்பட்டை, செவ்வலரி வேர்பட்டை, வகைக்கு தோலா (½) கூட்டிக் காய்ச்சி வடித்து, 15 நாள் கோசத்தின் மீது பூசிவர சோர்வு நீங்கி வலுவுகொடுக்கும்.

(வேறு.) சிவந்த நிறமான பசுவின்பால் படி ஒன்றில் வெள்ளெருக்கன்பூ (60) போட்டு காய்ச்சி குழைந்த உடன் வடிக்கட்டி எடுத்துவிட்டு பின் நன்றாய் பாலை காய்ச்சி புரை குத்தி கடைந்தெடுத்த வெண்ணெயோடு சமன் புனுகு, பச்சை கர்ப்பூரம், கோரோசனை கூட்டி லிங்கத்திற்பூசி புணற விந்திறங்காது போகம் நீடிக்கும்.

(வேறு) தாளகம், லிங்கம், காட்டெள்ளு, ஜாதிபத்திரி, இவை சமனிடை எடுத்து சாருயம் வார்த்து ஒரு நாளரைத்து வைத்துக் கொண்டு நிணமுங்கோசத்தின் மேல் கொஞ்சந்தடவி ஆமணக்கு இலையாவது கர்ப்பூர வெற்றிலையாவது சுற்றிக்கட்ட வேணும், இப்படி கால், அரை, மண்டலஞ் செய்ய கோசம் துவளல் மெலித்ல் முதலியன தீரும்.

(வேறு.) தாளகம், மனோசிலை, அக்கருகாரம், குங்குமப்பூ, இவை சமனிடை எடுத்து நல்லெண்ணெய் விட்டு 4-ஜாமமரைத்து



வைத்துக்கொண்டு மாலையில் கொஞ்சம் ஆண் குறியில் தடவி ஆமணக்க இலைவைத்துக்கட்டி, காலையில் வென்னீர் விட்டு நன்றாய் கழுகவேண்டும். இவ்விதம் 20-நாள் செய்து வர எவ்வகை சோர்வும் தீரும்.

(வேறு.) உலர்ந்த வெள்ளலரிவேர் பட்டை, வெள்ளை குண்டுமணி பருப்பு, வகைக்கு பலம் ($1\frac{1}{2}$) நேர்வாளப்பருப்பு, கோஷ்டம் வகைக்கு தோலா (1) இவைகளை சேர்த் தரைத்து 4 படி எருமை பாலில் கலக்கிக் காச்சி புரை குத்தி காலையில் கடைந்தெடுத்த வெண்ணெயை யுருக்கி நெய்யாக்கி வைத்துக் கொள்க. மோர் கொடிய விஷமாகையால் உடனே பூமியில் கவிழ்த்து விடவும். ஷை நெய்யில் குன்றியிடை எடுத்து வெற்றிலையில் தடவி காலையில் மட்டும் தின்று வருவதோடு தகறிலும் பூசி வெத்திலை சுத்திலும் கட்டிவர வேண்டும். இவ்விதம் (10) நாள் செய்து வர சர்வ கோச மெலிவும் சோர்வும் நீங்கும்.

(வேறு.) வெள்ளலரி, செவ்வலரி, இவைகளின் வேர்பட்டை உலர்ந்தது வகைக்கு பலம் (1), ஜாதிக்காய் விராகனிடை (5) அபின் விராகனிடை (4), உடும்பு கொழுப்பு அல்லது முதலைகொழுப்பு விராகனிடை (12), இவைகளைச் சேர்த்து ஒரு நாளரைத்து பின் கருஊமத்தன் சார் வார்த்து ஒரு நாளரைத்து மாத்திரை செய்துலர்த்திக் கொண்டு ஷை மாத்திரைகளில வேண்டியதை சாருயத்தில் இழைத்து ஆண் குறியில் பூசி மேலே வெத்திலையை சுற்றிலும் பட்டி கட்டவும். இவ்வண்ணம் தினம் புதிசாக அரை மண்டலம் கட்டிவர முஷ்டிமைதுனத்தினாலும் மற்ற எந்த காரணத்தினாலு முண்டாகும் கோச மெலிவு, தொவளல் தீர்ந்து ஆண்மை அதிகரிக்கும்.

(வேறு.) அக்கருகாரம், லவங்கம், லவங்கப்பட்டை, நாக்குப் பூச்சி, மழை காலத்திலூறும் செம்பூச்சி, இவை வகைக்கு பங்கு(1) ஆமணக்கெண்ணெய், எருமை பால், இவை வகைக்கு பங்கு (3) இவைகளை ஷை பங்கு கணக்காய் யெடுத்து பாலையும், எண்

ணையையும் சிறுக சிறுக விட்டு 4-ஜாமமரைத்து வைத்துக்கொண்டு லிங்கத்தின் மேல் பூசிவர தளர்ச்சி, மெலிவு, முதலியன தீரும்.

(வேறு.) புனுகு, சவ்வாது, அம்பர், இவை வகைக்கு குண்டு மணி பெடை (3) எடுத்து கரு ஊமத்தன் இலை ரசத்தில் மத்தித்து தடவி மேல் சித்தாமணக்கன் இலையை கட்டவும். இவ்விதம் (10) (15) தினஞ் செய்ய எவ்வித சோர்வும் நீங்கி கோசம் விம்மி லேபனசக்தி யுண்டாகும்.

ஆகையால் இப்போது சொல்லிவந்த முலாம்களை வெளிப் பிரயோகம் செய்வதோடும் உட்பிரயோகமாகிய ஔஷதங்களை தாது புஷ்டி பாடங்களில் சொல்லிவந்த பிரகாரம் உட்கொண்டு வந்தால் அல்லாஹுத் தஆலாவி னுதவியால் சர்வ இல்லத்துகளும் நீங்கி தாதுபுஷ்டி, வீரியவிர்த்தி, போக சக்தி, சந்தான விர்த்தி முதலான அனேக நன்மைகளுண்டாகும்.

---

## 92-ம், பஸல்.

### இது பெண்களுக்கு சூதக கட்டுண்டாவதின் காரணங்கள் லக்ஷணங்கள் பரிகாரங்கள் இவற்றைக் கூறுவது.

---

சூதககட்டின் குணங்கள்

பெண்பிள்ளைகளுக்கு மாதமாதம் வெளிப்படுகிற உதிரமானது முற்றிலுமாவது அல்லது சிலபாகமாவது மறிப்பட்டு வெளிப் படாமற் போவதை சூதகக்கட்டென்றும், சூதக பந்தமென்றும், சூதகவாயுவென்றும், அல்லது இரத்த குன்மசூலை யென்றும் சொல்லப்படும். இந்த சூதக கட்டானது சந்தான உர்ப்பத்தியை தடை செய்வது மாத்திரமல்ல, ஸ்திரீகளுக்குண்டாகும் மற்றும் அனேக வியாதிகளுக்கும் மூலகாரணமா யிருக்கின்றது.



இதுகளில் பெரும்பாலும் கருப்பாசயத்தைச் சார்ந்த வியாதிகளாகிய சூதகஜன்னி, கருப்பாசய வீக்கம் முதலியவைகளும், இரைப்பை, ஈரல் ஆகிய வைகளைச்சார்ந்த வியாதியாகிய வாய் குமட்டல், வாந்தி, குன்மம், அஜீரணம், பசிமந்தம், அதிதாகம் முதலியவைகளும், நுரையீரலைச்சார்ந்த ரோகங்களாகிய இளைப்பு, இருமல், சுவாசகாசம் முதலியவைகளும், மூளையைச் சார்ந்த வியாதிகளாகிய தலைவலி, ஒரு தலைநோய், கிறுகிறுப்பு, புத்தி தெளிவின்மை, மறதி, பைத்தியம், காக்கைவலி முதலியவைகளும், இரத்தத்தைப் பற்றிய வியாதியாகிய பாண்டுரோகமும், இன்னும் கழுத்து வலி, முதுகு முள்ளந்தண்டு வலி, பிடரி இழிவு, ஜன்னி பாதசுரங்கள், நாசி செவி நயனம் முதலிய பஞ்சேந்திரிய வியாதிகள், முதலியவைகளுமாம். சூதக் கட்டுடையவர்களுக்கு மேலே சொல்லிய ரோகங்கள் முழுதும் காணப்படவில்லையே யென அனேகர் மயங்கக்கூடும். அதற்கு காரணம் என்னவெனில் சூதகக்கட்டுண்டாகி அதை கவனியாமல் நாள் நீடித்துவிட்டால் சிலகாலத்துள் மேலே காட்டிய ரோகங்களிற் சிலதும் நாட் செல்ல செல்ல பலதும் காணப்படுமென்பதே காருக்தாயிருக்கின்றது.

### 30-வயது வரை ருதுவாகாமலிருந்தாலுண்டாகும் சூதக கட்டின் காரணம் லெக்ஷணம் நிவர்த்தி.

காரணமாவது.

கருப்பாசயத்தில் அதிக உஷ்ணம், அல்லது அதிக குளிர்ச்சி மிகுத்து விடுவதினாலும், அடிக்கடி நித்திரையில்லாமல் விழித்திருக்கும்படி நேரிடுவதினாலும், மிதத்திற் கடினமாகிய உழைப்பினாலும், உஷ்ணம் அல்லது சீதளத்தை அதிகப்பிக்கும் படியாகிய ஆகாரங்களை மிகுதிப்படுக்கொள்வதினாலும், அடிக்கடி பட்டினியாயிருக்கும்படி நேரிடுவதினாலும், எந்தக்காரணத்தினாலாவது இரத்தம் அடிக்கடி அதிக அளவில் வெளிப்பட்டுக்கொண் டிருப்பதினாலும், தேகத்தை இளைக்கப்பண்ணும் பலவித வியாதிகளினாலும், அதிக வாந்தி மலம் ஜலம் மிகுப்பதினாலும், இன்னும் இவை

போன்ற காரணங்களினாலும் (30) வயது வரை சூதகம் வெளிக் காணுமல் சூதகக்கட்டுண்டாகும்.

### குணம்.

இப்படிப்பட்டவர்களுக்கு தேகம் வெளுத்து அசதி யுண்டாயிருக்கல், முள்ளந்தண்டு, இடுப்பு, அல்குல், முதலியவைகளில் வலியுண்டாயிருக்கல், அஜீரணம் மலபந்தம் ஆகியவைகளுண்டாயிருக்கல், முதலியவைகள் ஆரம்பத்தில் தோன்றி நாட் செல்லச் செல்ல, பாண்டு, மகோதரம், இவைகளை உடையவர்கள் சரீரம் போலாய் முகம் வெளுத்து பின் மஞ்சள் வர்ணமாய் தீவிரமாகிய சுவாசம், பாதங்களில் வீக்கம், முதலிய குறிகளும் கண்டு சூதக ஜன்னியின் லெட்சணங்களில் சிலதும் காணப்படும். இதற்கு முதலில் இந்தவியாதிகளை யுண்டுபண்ணின காரணங்களைக் கண்டறிந்து அச்செயலை நீக்கிவிட்டு நல்ல ஊட்டமாகிய ஆகாரங்களை சாப்பிட்டு வருவதோடு, இதின் கீழ்கண்ட அவிழ்தங்களிலொன்றை பாகப்படுத்தி அருந்திவர அவ்வியாதிகள் நீங்கி சௌக்கியமுண்டாகி ருதுவாகக்கூடும். (இன்ஷா அல்லா.)

### நிவர்த்திகள்.

சித்தாமணக்கெண்ணெய் படி ($\frac{1}{2}$)

| | |
|---|---|
| விழுதி | திருகுகள்ளி |
| பேய்தும்மட்டி | அவுரி |
| ஆடாதோடை | கய்யாந்தகரை |
| முடக்கொத்தான் | கழர்ச்சிவேர்பட்டை |

இவைகளின் சார் வகைக்கு படி ($\frac{1}{2}$)

| | |
|---|---|
| சதுரக்கள்ளிச்சார் | எருக்கன் பழுப்புச்சார் |
| வெள்ளாட்டுகோமியம் | வகைக்கு படி ($\frac{1}{2}$) |

ஆகியவைகளை கலந்து அதில்

| | |
|---|---|
| பொரித்த வெண்காரம் | யவாச்சாரம் |
| நவாச்சாரம் | சத்திச்சாரம் |
| பஞ்சலவணம் | திரிகடுகு |



| | |
|---|---|
| திப்பிலி | மரமஞ்சள் |
| கருஞ்சீரகம் | திப்பிலிமூலம் |
| வாய்விளங்கம் | கடுகுரோகணி |

இவை வகைக்கு பலம் ($\frac{1}{2}$).

இவைகளை பசுவின்பால் விட்டரைத்து போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு மண்டலம் தானியப்புடம் வைத்து தேகத்திற்கு தக்கபடி கால்பலம் முதல் அரைபலம் வரை (3) நாள் காலையில் கொடுத்து (5) நாள் உப்பில்லாமல் பத்தியம் வைக்கவும். சர்வ சூதகக்கட்டும் நீங்கும். முதல் நாள் பேதி அதிகமானல் மறுநாள் குறைத்துக்கொள்ளவும். மற்றும் எவ்விதமான சூதகக்கட்டிற்கும், மலக்கட்டிற்கும், வீட்டு விலக்கானது முதல் (3) நாள் கொடுத்திடவும். (2) மாதங்களின் பின்னும் ஒரு முறை கொடுக்கவும்.

வேறு. ஆற்றுத்தும்மட்டி காய்கள் ஒவ்வொன்றின் மேலும் வாயின் வைக்கோலை சுத்தி பின்னும் கீழும் மேலும் வைக்கோலையே போட்டு கொஞ்சம் எரித்து பின் எடுத்து இடித்து பிழிந்த ரசம் படி ($\frac{1}{2}$), ஈரவெங்காயச்சார் படி ($\frac{1}{2}$), இவைகளைச் சேர்த்து (1) பலம் பனவெல்லத்தை கரைத்து காய்ச்சி பாகு பதமாய் வருகிறபோது அதில் இந்துப்பு, கரியுப்பு, வெண்காரம், ஏலம், சுக்கு, வால்மிளகு, சீரகம், கடுகுரோகணி, வறுத்த பெருங்காயம், இவைகள் வகைக்கு விராகனிடை (1) சூரணித்துப்போட்டு கிண்டி மெழுகுபோ லெடுத்துக் கொள்ளவும். வேளைக்கு ($\frac{1}{2}$) விராகனிடை முதல் (1) விராகனிடை வரை காலையில் மட்டும் சிறிதுநாள் கொடுத்துபின் அடியில் வரும் ஔஷதத்தை கொடுக்க சூதகங் காணும்.

### வேறு.

| | | |
|---|---|---|
| நல்லெண்ணை | (பலம்) | 18 |
| குங்குமப்பூ | ,, | $\frac{1}{3}$ |
| அரசிபவழம் | ,, | $\frac{1}{2}$ |
| நிலவேம்பு | ,, | $\frac{1}{4}$ |
| காட்டுசீரகம் | ,, | $\frac{1}{4}$ |

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | பலம் | ¼ |
| குங்கிலியம் | ,, | ½ |
| கோஷ்டம் | ,, | ¼ |
| சன்னலவுங்கப்பட்டை | ,, | ¼ |

இவைகளை நன்றாயரைத்து ஷை எண்ணெயிலிட்டு தினமும் கலக்கி (10) தினம் வெயிலில் வைத்து பின் அதோடு (½) படி சுத்தஜலம் சேர்த்து நீர் வத்தக்காச்சி வைத்துக்கொண்டு சரீரத்திற்கு தக்கபடி (1) தோலா முதல் (3) தோலாவரை பாலிற் கலந்து காலையில் மட்டும் சாப்பிட்டு ஷை எண்ணெயை அடிவயற்றிலும் பூசிவர சர்வ சூதகக்கட்டும் விலகும்.

---

## 93-ம் பஸல்.

### இது கெர்ப்பப் பையில் சூடு அதிகரிப்பதாலுண்டாகும் சூதகக்கட்டின் குணங்களையும் மலட்டின் குணங்களையும் அதற்கு பரிகாரங்களையும் கூறுவது

---

#### குணங்களாவது.

கெர்ப்பாசயத்தில் சூடு அதிகரிப்பதினால் இரத்தக்கொதிப்புண்டாய் இறத்தங் கெட்டு சூதகம் தீய்ந்து வரும், சூதகநரம்புகளின் வாய் அடைப்பட்டு சூதகபந்த முற்றவர்களுக்கு மாதாந்திரம் ருதுவானது கருத்து கலங்கலாயிருக்கல், தேகம் மெலிந்திருக்கல், அல்குல், கருப்பை, நாசி, இவைகள் வறண்டிருக்கல் கண்ணெரிவு, நாவு, சுரசுரத்திருக்கல், தலை கிறுகிறுப்பு, தாகம் வாயுலருதல், சிறுநீர், கண், சருமம் இவை மஞ்சணித்திருக்கல் முதலிய குறிகள் காணப்படும்.

#### மலட்டு ரோகங்களாவது.

கெர்ப்பாசயத்தில் சூடு அதிகரித்து விடுவதினால் நாதமும் அதிகசூட்டை யடைவதோடு அதில் சேரும் விந்துவை மிதத்



திற் கதிகமாய் உஷ்ணிக்கச்செய்து கருப்பிடிக்கும் நிலைமையை யிழந்து விடும், அப்படிப்பட்டவர்களுக்கு நாடி படபடத்திருக்கல், இமிர் முறித்தல், கண்ணெரிவு, அல்குல் வறட்சி, முதலிய குறிகள் காணப்படும். இப்படிப்பட்டவர்கள் குளிர்ச்சியான பதார்த்தங்களையும் ஆகாரங்களையும் உட்கொண்டு வருவதோடு இதின் கீழ்வரையப்பட்ட அவிழ்தங்களி லொன்றை பாகப்படுத்தி அருந்திவர அவ்வியாதிகள் நீங்கி சரீரம் நன்றாகி ஹமல் உர்ப்பத்தியாகும் (இன்ஷா அல்லா.)

#### பரிகாரங்களாவது.

| | | |
|---|---|---|
| சித்தாமணக்கெண்ணை | (படி) | ½ |
| கய்யாந்தகரைச்சார் | ,, | ½ |
| கருநொச்சியிலைச்சார் | ,, | ½ |
| நல்லெண்ணெய் | ,, | ¼ |
| பசுவின் நெய் | ,, | ¼ |
| எலுமிச்சம்பழரசம் | ,, | ¼ |
| சீரகம் | (பலம்) | ¼ |
| நெருஞ்சிவிரை | ,, | ½ |
| தண்ணீர்விட்டாங்கிழங்கு | ,, | ½ |
| வாய்விளங்கம் | ,, | ½ |

இவைகளை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து காலையில் மட்டும் தேகத்திற்கு தக்கபடி (1) தோலாவீதம் சாப்பிட்டு வரவும் புளிநீக்கவும் வியாதி தீர்ந்து ஹமலுண்டாம்.

#### வேறு.

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | (படி) | 1 |
| அவுரியிலைச்சார் | ,, | ½ |
| வசம்பு | பூண்டு | |
| கடுகுரோகணி | சீரகம் | |
| கொத்தமல்லி | ஏலம் | |
| இந்துப்பு | | |

வகைக்கு பலம் (¼)

இவைகளை யரைத்துச் சேர்த்து காய்ச்சி வடித்துக்கொண்டு பெண்பிள்ளை ஹைறலானது முதல் காலையில்மட்டும் (½) தோலாமுதல் (1) தோலாவரை சரீரத்திற்கு தக்கபடி கூட்டியும் குறைத்தும் (5,

7, 10) நாள்வரையில் உப்பு புளி நீக்கி சாப்பிட்டு வரவும் வியாதி நீங்கி ஷமனுண்டாகும். (இன்ஷா அல்லா.)

---

## 94-ம் பஸல்.

### இது பெண்களுக்கு கெர்ப்பப்பையில் குளிர்ச்சி அதிகரித்து விடுவதா லுண்டாகும் சூதகக் கட்டின் குணங்களையும் மலட்டின் குணங்களையும் அதற்கு பரிகாரங் களையும் கூறுவது.

---

குணங்களாவது.

கெர்ப்பாசயத்தில் குளிர்ச்சி யதிகரிப்பதினால் இரத்தத்தின், அசுத்த சத்துகளடைந்து அதனால் சூதகக் கட்டுண்டானவர்களுக்கு மாதாந்திரம் ருதுவானது சிவந்து தெளிவாயிருக்கல், தேகம் வெளுத்திருக்கல், நீர் அதிகமாயிறங்கல், அக்கினிமந்தம், இரத்தம் வெளிப்படல், தெளிவாயிருக்கல், சோம்பல், நித்திரையின் பின் தேகம் கனமாயிருக்கல், முதலியகுறிகள் காணப்படும்.

மலட்டின் குணங்களாவது.

கெர்ப்பப்பையில் குளிர்ச்சி அதிகரித்துவிடுவதினால் அதில்சேரும் விந்து உலர்ந்து போக அதனால் ஷமல் தடைப்படும், இப்படிப்பட்டவர்களுக்கு மல ஜலம் கண், நாக்கு, சருமம், இவைகருத்திருக்கல், சோம்பல், அஜீரணம், அதிக நித்திரை, மலபந்தம், அல்லது மலப்போக்கு, முதலிய குறிகள் காணப்படுவதோடு முன்சொன்ன குணங்களில் சிலதும் காணப்படும். இப்படிப்பட்டவர்கள் சூடான பதார்த்தங்களையும் ஆகாரங்களையும் உட்கொண்டு வருவதோடு இதின் கீழ் வரையப்பட்ட அவிழ்தங்களிலொன்றை பாகப்படுத்தி சாப்பிட்டுவர இம்மகா துர்க்குணம் நீங்கி தேகம் சுத்தப்பட்டு ஷமனுண்டாகும் (இன்ஷா அல்லா.)



பரிகாரங்களாவன.

| | | |
|---|---|---|
| சித்தாமணக்கெண்ணெய் | (படி) | 1 |
| தேங்காய்பால் | ,, | ½ |
| வெங்காயரசம் | ,, | ½ |
| பேய்குமட்டிச்சார் | ,, | ¼ |
| திரிகடுகு | கடுகு | |
| ஓமம் | உள்ளி | |
| வாய்விளங்கம் | மஞ்சள் | |
| சீரகம் | கடுகு ரோகணி | |
| அரத்தை | கடுக்காய் | |
| சிறுநாகப்பூ | கோஷ்டம் | |
| சன்னலவுங்கப்பட்டை | இந்துப்பு | |

வகைக்குவிராகனிடை (1¼)

இவைகளை யரைத்து மேற்படி எண்ணெய் பால் ரசம் முதலியதில் கலக்கி பதமாய்காய்ச்சி வடித்து இருவேளையும் வேளைக்கி (½) தோலாமுதல் (1) தோலாவரை புளி நீக்கி சாப்பிட்டு வர கர்ப்பப்பையில் குளிர்ச்சி வாதம் சிலேத்துமம் ஆகியவைகள் அதிகரித்துண்டான சூதகரோகம் நீங்கி ஷமனுண்டாகும். (இன்ஷாஅல்லா)

---

## 95-ம் பஸல்.

### இது கெர்ப்பப் பையில் வாத சத்து அதிகரிப்பதினாலுண்டாகும் சூதகக்கட்டின் குணங்களையும் மலட்டின் குணங்களையும் அதற்குப் பரிகாரங்களையும் கூறுவது

---

குணங்களாவது.

கெர்ப்பாசயத்தில் வாதசத்து அதிகரித்து அதனால் சூதகபந்தமுண்டானவர்களுக்கு மாதாந்திரம் ருதுவானது கருத்திருக்கல், தேகம் மெலிதல், தேகமெங்கும் நோய், தேகம்நடுக்கல்,

துர்ப்பலம், நித்திரைபங்கம், தைரியக்குறைவு, பசிமந்தம், சோம்பல், இல்நோய், வாந்தி, முதலிய குணங்களுண்டாம்.

## மலட்டின் குணங்களாவது.

கெர்ப்பப்பையில் வாதசத்து அதிகரித்து விடுவதினால் அதில் சேரும் வித்துவை யேற்றுக்கொள்ளாமல் வெளியில் தள்ளிவிடும் அதனால் கெர்ப்பமுண்டாகாது இப்படிப் பட்டவர்களுக்கு தைரியக் குறைவு, வயறூதல், முதலிய குறிகள் காணப்படும். இவ்விரு தாரத்தாரும் வாய்வு பதார்த்தங்களைநீக்கி புஷ்டியான ஆகார மருந்தி வருவதோடு இதின் கீழ் வரையப்பட்ட அவிழ்தங்களிலொன்றை பாகப்படுத்தி சாப்பிட்டு வர சகல துர்ப்பலமும் நீங்கி சரீர சவுக்கிய மடைந்து அவுலாது உற்பத்தியுண்டாகும்.

## அவிழ்தங்களாவது.

(1) படி பேய்க்குமட்டிக்காய் சாற்றைக் கட்டியாக குழம்பாய்காய்ச்சிகல்வத்திலிட்டு அதில் (1) பலம் பெருங்காயத்தூளும் வெண்காரம், இந்துப்பு, கடுகு ரோகணி, வால்மிளகு, கருஞ்சீரம் இவைவகைக்கு பலம் (¼) பொடித்து போட்டு (2) ஜாமமரைத்து, சிமிழிலடைத்துக் கொண்டு சரீர பிரகிருதியறிந்து ஷைலானது முதல் கொண்டு பனவெல்லத்தில் சுமார் குன்றி பிரமாணம் காலையில் மட்டும் மூன்று நாள் சாப்பிடவும். பேதி அதிகமானால் மறுநாள் குறைத்துக் கொடுக்கவும். வியாதி அதிகமானால் (2-3) மாதம் ஷைஹு காலத்தில் கொடுத்து வரவும் சூதக சூலை, குன்மம் முதலியன தீர்ந்து ஹமலுண்டாகும்.

திராட்சி பழக்காடியில் (60) நாழிகை ஊரவைத்துலர்த்திய சீரகம் பலம் (1¼), ரூமிமுஸ்தகி, உலர்ந்த சதாப்பிலைவகைக்கு பலம் (1¼) வசம்பு, ரோஜாயிதழ், பூங்காவி, ரூமி, சோம்பு, பிரசதாவோடு, ஓமம் இவை வகைக்கு பலம் (½) இவைகளை சூரணித்து (15) பலம் தேனைக்காச்சி நுரைநீக்கி அதில் கோட்டி மாஜூன் செய்து வேளைக்கு தோலா (½) அல்லது (1) வீதம் சாப்பிட்டு வரவும் இதனால் சர்வகெட்ட வியாதிகளும் நீக்கி ஹமலுண்டாகும்.



சதாப்பிலைரசம் பலம் (2); சித்தாமணக்கெண்ணெய்பலம் (1) இவ்வற்றை நன்றாய் மத்தித்து ஷைலானது முதல் வியாதிக்கு தக்கபடி (3,5,7) நாள் வரையில் சாப்பிட்டு வரவும். சூதகக்கெடுதிகள் நீங்கி ஹமலுண்டாகும்.

# 96-ம் பஸல்.

## இது கெர்ப்பப்பையில் பித்தசத்து அதிகரித்து விடுவதாலுண்டாகும் சூதகக்கட்டின் குணங்களையும் மலட்டின் குணங்களையும் அதற்குப் பரிகாரங்களையும் கூறுவது.

### குணங்களாவது.

கெர்ப்பாசயத்தில் பித்தசத்து அதிகரித்து அதனால் சூதக பந்த முற்றவர்களுக்கு வெளிப்படும் மாதாந்திர ருதுவானது மஞ்சளித்து அல்லது நீல நிறமாயிருக்கல், சரீரமிளைக்கல், அதிக பசி, தேகம் கைகால் இவைகாந்தல், அல்பநித்திரை, தாகம், தலை சுழட்டல், வாயுலறல், வாய்கசக்கல், கண் நாவு சருமம், சிறுநீர், மலம், ஆகியவைகள் மஞ்சநிறமாயிருக்கல், முதலிய குறிகள் காணப்படும். இன்னும் பித்தத்தை அல்லது சூட்டை அதிகரிக்கும்படியான பதார்த்தங்களினால் தீங்குண்டாகும்.

மலட்டின் குணங்களாவது கருப்பாசயத்தில் பித்தசத்து அதிகரித்து விடுவதினால் சூடுண்டாகி அதில்; சேரும் வித்துவை யெரித்துக் கரித்துவிடும். அதனால் கெர்ப்பமில்லாமல் போய்விடும் இப்படிப் பட்டவர்களுக்கு அதிக பசி, கைகால், குறி இவை காந்தல், மலம் ஜலம் மஞ்சளித்திருக்கல் முதலிய குறிகள் காணப்படும். ஆகையால் அவ்விரண்டு தாரத்தாரும் பித்தத்தையும் சூட்டையும் அதிகரிக்கும்படியான பதார்த்தங்கள் ஆகாரங்கள் ஆகியவைகளை நீக்கி பித்த சமனத்தையும் குளிர்ச்சியையும் இரத்த விர்த்தியையும் கொடுக்கும்படியான பதார்த்தங்களையும் ஆகாரங்களையும் உட்கொண்டு வருவதோடு இதின் கீழ் குறித்த அவிழ்

தங்களி லொன்றையும் உட்கொண்டு வந்தால் மேல் சொன்ன ரோகங்கள் நீங்கி ஹமலுண்டாகும்.

## பரிகாரங்களாவது.

| | |
|---|---|
| சுரவிரை | காசினிவிரை |
| கெக்கரிவிரை | மூலாம்பழவிரை |
| வெள்ளரிவிரை | சோம்பு |
| நெருஞ்சிமுள் | |

இவை வகைக்கு பலம் (1)

| | |
|---|---|
| அனிசூன் | அதிமதுரம் |
| பநப்ஷாப்பூ | சீமை நந்திவிரை |
| சடாமஞ்சி | தருபில் |
| காசினிவேர்தோல் | மாசிபத்திரி |
| கௌசுபான் | |

இவை வகைக்கு பலம் ($\frac{1}{2}$)

இவைகளை இடித்து (2) படி ஜலத்தில் (60) நாழிகை ஊற வைத்து அதில் (4) பலம் திராட்சிபழத்தை போட்டு, (1) படியாக சுண்டக்காய்ச்சி பின் (40) பலம் சீனியைபோட்டு பாகு பதத்தி லிறக்கிக்கொண்டு வேளைக்கு தோலா (1) அல்லது (2) சாப்பிட்டு வர பித்தசூடு முதலியவைகள் அதிகரித்ததினா லுண்டான சூதகபந்தம் நீங்கி கெர்ப்பமுண்டாகும்.

### வேறு.

மரமஞ்சள், சதகுப்பை, கருஞ்சீரகம், மைன் சேர்த்து சூரணித்து அதற்கு (3) பங்கு பனைவெல்லம் சேர்த்து வேளைக்கு (1) விராகனிடை முதல் (2) விராகனிடை வரை சோம்பு கியாழத்தில் கலந்து ஹைதுவரா (3) தினத்திற்கு முன்னிருந்து கொடுத்துவர மேல்கண்ட குணமுண்டாகும். (2-3) முறை கொடுத்து வரலாம்.

### வேறு.

| | | |
|---|---|---|
| பொரித்த வெண்காரம் | (பலம்) | 2 |
| முதிர்ந்த வேம்பின்பட்டை | ,, | 4 |
| சுக்கு | ,, | 1 |
| பனைவெல்லம் | ,, | 8 |

இவைகளைச் சேர்த்து நன்றாக இரு ஜாமமாட்டி வேளைக்கு விராகனிடை ($\frac{1}{2}$) அல்லது (1) வீதம் இருவேளையும் ஹைதுக்கொ



ருமுறை (3) மாதம் சாப்பிட சகல சூதகக்கட்டும் நீங்கி ஹமலுண்டாகும்.

---

## 97-ம் பஸல்.

### இது கெர்ப்பப்பையில் சிலேத்தும சத்து அதிகரிப்பதினா லுண்டாகும் சூதகக்கட்டின் குணங்களையும் மலட்டின் குணங்களையும் அதற்குப் பரிகாரங்களையும் கூறுவது.

### குணங்களாவது.

கெர்ப்பப் பையில் சிலேத்துமசத்து அதிகரிப்பதினால் சூதகபந்தமுண்டானவர்களுக்கு மாதாந்திரம் ருதுவானது வெளுத்திருக்கல்; தேகபாரிப்பு, தேகம் வெளுத்தல், தேகமெங்கும் வேதனை, பசிமந்தம், சுவாச இரைப்பு, வாயில் தித்தித்தல் நீரூறல், இருமல் குளிர்ச்சி முதலிய குறிகள் காணப்படும்.

மலட்டின் குணங்களாவது கெர்ப்பப்பையில் சிலேத்தும சத்து அதிகரித்து விடுவதினால் அதில் சேரும் விந்துவை யேற்கிற்கொள்ளும் சக்தியைக் கெர்ப்பப்பை யிழந்து கெர்ப்பம் தரிக்காது. இப்படிப் பட்டவர்களுக்குத் தேகம் இல்லிட்டிருக்கல், இருமல், கபம், உமிழ் நீர் இனித்தல், பசிமந்தம் முதலிய குறிகள் காணப்படும். இப்படிப் பட்ட இருதாரத்தார்களும் குளிர்ச்சியான பதார்த்தங்களையும், நீர் அதிகமான பதார்த்தங்களையும் நீக்கி, உஷ்ணமான பதார்த்தங்களையும், கிரிகைகளையும் அனுசரித்து வருவதோடு இதின் கீழ் கண்ட ஔஷதங்களைப் பாகப்படுத்தி சாப்பிட்டு வர சகல குணங்களும் நீங்கி கெர்ப்பம் தரிக்கும். (இன்ஷா அல்லா)

### நிவர்த்திகள்.

கசப்பு நார்த்தங்காய் சார் படி $1\frac{1}{2}$, காடி படி $\frac{1}{2}$ இவற்றை கலந்து அதில் துருவுள்ள 10-பலம் இரும்பைப் போட்டு 8-நாள் ஊறவிட்டு இரும்பை எடுத்துவிட்டுப் பின்பதில் கய்யாந்தகரை;

பொன்னுங்கண்ணி, அவுரி, பிரமி, சாரணை, ஆகியவைகளின் சார் வகைக்குப் படி $\frac{1}{2}$ விட்டுக் கலந்து அவற்றோடு கடுக்காய், சுக்கு, ஓமம், பூண்டு, சீரகம், சதகுப்பை, கழற்சிப்பருப்பு, திப்பிலி, கச்சோலம், கடுகு, அதிவிடயம், அதிமதுரம், நெல்லிமுள்ளி, மிளகு, சாத்திரவேதி, தான்றிக்காய், கருந்துட்டி வேர், சாரணை வேர், ஏலம், இந்துப்பு, வெடியுப்பு, பெருங்காயம் வகைக்குப் பலம் $\frac{1}{4}$, சீனக்காரம், அரப்பொடி, மண்டூரம், வகைக்குப் பலம் 1, கடுக்காய் 10, இவைகளை ஷை சாற்றாலரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் நெய், தேங்கா எண்ணெய், நல்லெண்ணெய் இவைகலந்து வேண்டுமானது விட்டு லேகியம்போல் கிண்டிவைத்துக்கொண்டு தேகத்திற்குத் தக்கப்படி கொட்டைப்பாக்களவு காலையில் மட்டும் $\frac{1}{4}, \frac{1}{2}, 1$, மண்டலம் சாப்பிட்டு வர எவ்வகை சூதக ரோகமும், வாய்வு, திரட்சிகட்டு, பெருவயிறு, சூலை, குன்மம், காமாலை, நீர்கட்டு முதலானதும் நீங்கி ஷமனுண்டாகும்.

---

## 98-ம் பஸ்ல்.

### இது பெரும்பாட்டு ரோகத்தின் குணமும் நிவர்த்தியும் கூறுவது.

---

குணங்களாவது.

பெண்களுக்கு மாதமாதம் வெளிப்படுகிற உதிரமானது அளவிலும் காலத்திலும் மிகுதியா யிருப்பதற்குப் பெரும்பாடு என்றும் பெயர். சூதகபந்தத்தினால் மாதர்களுக்குப் பலரோகம் உண்டாவது போலே பெரும்பாட்டினாலே பல ரோகங்கள் தொடர்ந்து மாதர்களுக்குச்சரீர கஷ்டத்தை யுண்டாக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு இதின் கீழ் வரையப்பட்ட அவுஷதங்களிலொன்றைப் பாகப்படுத்தி அருந்தி வரச்செய்ய சகல பெரும்பாடும் நீங்கி சௌக்கியத்தை யடைவார்கள்.



(பெரும்பாட்டுக்கு நிவர்த்தி)

| | |
|---|---|
| பசுவின் நெய் | நெல்லிக்காய்சார் |
| கரும்பஞ்சார் | எலுமிச்சம்பழரசம் |

வகைக்குப் படி 1 சேர்த்து, அதில்

| | |
|---|---|
| நிலப்பனங்கிழங்கு | ஏலம் |
| அதிமதுரம் | கிராம்பு |
| அரத்தை | ஜாதிக்காய் |

இவைகளைத் தேங்காய்ப்பால் விட்டரைத்து ஷை சாற்றில் போட்டுப் பதமாய் காய்ச்சி வடித்து வேளைக்குப் பலம் $\frac{1}{2}$ அல்லது 1 வீதம் இருவேளையும் சாப்பிட்டு வர உஷ்ணம் அதிகரித்துண்டான பெரும்பாடு வெள்ளை முதலியன தீரும்.

வேறு.

| | |
|---|---|
| ஓதியம்பட்டை. | இலந்தம்பட்டை |
| அரசம்பட்டை | அத்திப்பட்டை |
| மாம்பட்டை | நாவற்பட்டை |
| வேலம்பட்டை | |

இவைகளை உலர்த்தித் தனித்தனி சூரணித்து சமன் கூட்டி அதற்குச் சமன் பச்சரிசிமாவுங்கூட்டி பால்விட்டுப்பிசைந்து புட்டு செய்து பனைவெல்லமும் வெண்ணெயுஞ் சேர்த்து $\frac{1}{2}$ மண்டலம் சாப்பிட தீராத பெரும்பாடு தீரும்.

வேறு.

| | |
|---|---|
| திரிபலை | மாசிக்காய் |
| படிகாரம் | பூங்காவி |
| காசுக்கட்டி | கடுகுரோகணி |
| கற்றகாம்பு | |

இவை சமன் கூட்டி வேளைக்கு $\frac{1}{2}$ விராகன் வீதம் இருவேளையும் வெண்ணெயில்கொள்ள சகல பெரும்பாடும் நிற்கும்.

(வேறு.) நாவற்பட்டையை புளித்த எருமைமோர் விட்டிடித்துப் பிழிந்த ரசம் ஆழாக்கு $\frac{1}{2}$ யில் பொரித்த படிகாரம் விராகனெடை $\frac{1}{4}$, அரைத்த சந்தனம் விராகனெடை 1, நுணுக்கிய கடுக்காய் தூள் விராகனெடை $\frac{1}{4}$ சேர்த்துக் காலையில் மட்டும் 3 நாள் கொடுக்கவும். தேகத்திற்குத் தக்கபடி கூட்டியுங்குறைத்தும் கொடுக்கலாம். பெரும்பாடு நீங்கும்.

(வேறு) ஆலம்விழுது, ஆலங்கொழுந்து, ஆலம்பூ, ஆலம்வேர், ஆவாரம்வேர் பட்டை இவைகளைச் சேர்த்து பசுவின்பால் விட்டிடித்த ரசம் ஆழாக்கு (¼, ½, ¾,) வரையில் காலையில்மட்டும் சாப்பிட்டுவர இரத்தப்பெருக்கு நிற்கும்.

(வேறு) இன்னும் குளிர்ப்பான ஜலங்களில் உட்கார்ந்திருக்கலும், ஷை ஜலங்களை அந்தி சந்தி இடுப்பு அல்குல், அடிவயறு, இவற்றில் விட்டு கழுவுதலும், ஷை ஜலங்களில் மெல்லிய துணியை நனைத்து அல்குலில் வைத்திருப்பதும் இரத்தத்தைக் கட்டும்.

(வேறு) 2 திராம் படிகாரத்தை 3 ஆழாக்குப் பாலில் போட்டுப் காய்ச்சி வடிகட்டிக் குளிர்ந்த பிறகு வேளைக்கு ¼ ஆழாக்கு விதம் தினம் 3 தரம் கொடுத்துவர பெரும்பாடு இரத்த வாந்தி முதலியன தீரும்.

(வேறு) 1 பலம் நாட்டுசர்க்கரையில் கொஞ்சம் ஜலம் விட்டுப் பாகு செய்து அதில் நெய்யில் வறுத்து சூரணித்த கருவேலம் பிசினி சூரணம், நெல்லிமுள்ளி சூரணம், சிறு நெருஞ்சிமுள்ளி சூரணம், இவை வகைக்கு பலம் 1 போட்டு கிளறியிறக்கி பசுவின் நெய் பலம் ½ விட்டுக்கிண்டி காலையில் பாதிபாகமும் மாலையில் பாதிபாகமும் சாப்பிட்டு விடவும். இவ்விதம் தினமும் புதிதாய் செய்து உபயோகித்து வர எவ்வகையான பெரும்பாடும் தீரும்.

வேறு

| | |
|---|---|
| விளாம்பிசினி (பலம்) 1 | |
| உலர்ந்த பூமாதுளம்பூ | வெண்சந்தனம் |
| செஞ்சந்தனம் | கருவேலம்பிசினி |
| நிலவேம்பு | மூங்கிலுப்பு |
| பூங்காவி | சக்கரன் கீரை விதை |
| ரோஜாமொக்கு | |

இவை வகைக்குப் பலம் ½

இவைகளைச் சூரணித்து 12 பலம் சீனியைப் பாகு செய்து அதில் கொட்டிக் கிளறிக்கொண்டு வேளைக்குப் பலம் ½ விதம் இருவேளையும் சாப்பிட்டுவர எவ்வகை இரத்த ஒழுக்கும் தீர்ந்து சுபாவ நிலை யறியலாம்.



# 99-ம் பஸல்.

## இது பெண்பிள்ளைகள் மலடாய் விடுவதின் காரணங்களும் அடையாளங்களும் பரிகாரங்களும் கூறுவது.

---

### காரணங்களாவது.

ஹலரத்நபி சுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் மலட்டுப் பெண்களெல்லாம் சேர்ந்து சென்று அல்லாவுடைய றசூலே எங்களுக்குப் பிள்ளையில்லாமல் போன காரணங்களைத்தாங்கள் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று விரும்பிக் கேட்டார்கள், அப்போது நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பரிகுலப்பெண்களை வரவழைத்து இவ்விஷயத்தின் காரணத்தைக் குறிக்கும்படி உத்திரவு செய்தார்கள். அதுபோலவே பரிகுலப்பெண்கள் அதின் காரணத்தையும் சூக்ஷத்தையும் சொல்லத் தொடங்குகிறார்கள்.

அதாவது மானிடப்பெண்களுடைய தேகத்தில் 7 விதமாகிய இல்லத்து என்னும் வியாதிகளுண்டா யிருப்பவர்களுக்கு அவுலாது யில்லாமல் போகின்றது. அதில் 1 வது கெர்ப்பப்பை பின்னப்படுவது. அதற்குக் காரணம், பாலிகாய் இளம்பருவமா யிருக்கிற காலத்தில் தாட்டிகமான புருஷன் அவளுடன் புணர்ச்சி செய்வதுகொண்டும் கெர்ப்பப்பை பின்னப்பட்டுக்கருத்தரிக்காமல்போகின்றது. 2 வது கெர்ப்பப்பையிலே வாய்வு உண்டாவதைப்பற்றி அந்தப் பையின் வாயானது திரும்பிப்போவதால் பிந்து அதனுள் செல்லாமல் போவதைக் கொண்டு கெர்ப்பம் தரிக்காமல் போகின்றது. 3 வது கெர்ப்பப்பையிலே அல்லது அதன் வாயிலே சதை வளர்ந்து போவதைக்கொண்டு கெர்ப்பந் தரிக்காமல் போகின்றது. 4 வது கெர்ப்பப் பையிலே புழுக்கள் உண்டாவதைக்கொண்டு விந்தைத் தங்கவிடாமல் அப்பூச்சிகள் தின்று விடுவதால் கெர்ப்பம் தரிக்காமல் போகின்றது. 5 வது கெர்ப்பப்பையிலே அதிக உஷ்

னைம் உண்டாவதால் சூடுபட்ட பாத்திரத்தில் வெண்ணெய்உருகிப் போவதுபோல் வித்தானது உருகி தண்ணீராய் ஓடி வெளிப்பட்டு போகின்றமையால் கெர்ப்பந் தரிக்கிறதில்லை. 6 வது கெர்ப்பப்பையிலே அதிக சீதளம் உண்டாவதால் வித்துதங்காமல் போகின்றது. 7 வது புருஷனும் பெண்சாதியும் புணரும்போது ஷைத்தான் தேவு பறி வித்தை கொண்டுபோய் விடுவதால் கெர்ப்பந்தரிக்காமல் போகின்றது.

(குறிகளும் பரிகாரங்களும்.)

1 வது நாயகியுடன் புணர்ந்தபின் நாயகிக்குத் தலை வலித்த தானால்கெர்ப்பப்பை பின்னப்பட்டதென்று அறிந்துகொள்ளவேண்டும். அதற்குப்பரிகாரமாவது பருத்திக்கொட்டையைவாதுடைய பித்திலே நன்றுயரைத்து பிறுதுவாகிசீ சீலையிலே தடவி ஹைஷலில் விட்டும் துப்புரவான உடன் கெர்ப்பப்பையிலே படிம்படி அபத்துள் வைத்து சிலநேரம் சென்றெடுத்து விட்டுப்பின் புருஷன்புணர்ந்தால் (இன்ஷா அல்லா) ஆண்டவன் விரும்புவானாகில் கெர்ப்பந் தரித்துப் பிள்ளை யுண்டாகும்.

2 வது புணர்ச்சிக்குப் பின் இரைப்பைக்கும் வலிக்குமானால் கெர்ப்பப்பையில்வாய்வு உண்டா யிருக்குதென்று அறிந்துகொள்ள வேண்டும். அதின் பரிகாரம் உயர்ந்த பெருங்காயத்தை நல்லெண்ணெயில் இழைத்து ஹைஷலில் விட்டும் துப்புரவான பின் பெண்மைத் தலத்திலே கெர்ப்பப்பையிலே படிம்படி பூசிக்கொண்டு புருஷன் புணர்வதால் (இன்ஷா அல்லா) ஆண்டவன் விரும்புவாரானாகில் கெர்ப்பந் தரித்துப் பிள்ளை யுண்டாகும்.

3 வது புணர்ச்சிக்குப்பின் மார்பு வலிக்குமானால் கெர்ப்பப் பையிலே சிதளமுண்டாயிருக்குதென்று அறிந்து கஸ்தூரி, கோழியின் பித்து, வால்மிளகு, இந்த வஸ்துகள்சேர்த்து நன்றுயரைத்து ஹைஷலில் விட்டும் துப்புரவான பின் பெண்மை தலத்திலே கெர்ப்பப்பையில் படிம்படியாகப் பூசிக்கொண்டு புருஷபோகம் செய்வதால் (இன்ஷா அல்லா) ஆண்டவன் விரும்புவானாகில் கெர்ப்பந் தரித்துப் பிள்ளை யுண்டாகும்.



4 வது புணர்ச்சிக்குப் பின் இடுப்பு புட்டம் இவைகள்வலிக்குமானால் கெர்ப்பப்பையிலே சதை வளர்ந்து அல்லது கொழுப்பு அடர்ந்து இருக்குதென்றறிந்து வெள்ளை சீரகம், யானையின் நகம் இவைகளை நெய்யிலே அரைத்து ஹைஷலவிட்டும் துப்புரவானபின் பெண்மை தலத்திலே கெர்ப்பப்பையிலே படிம்படியாக பூசிக்கொண்டு புருஷபோகம் செய்வதால் (இன்ஷா அல்லா) ஆண்டவன் விரும்புவானாகில் கெர்ப்ப தரித்துப்பிள்ளை யுண்டாகும்.

5 வது புணர்ச்சிக்குப் பின் கெண்டைக்கால் வலிக்குமானால் கெர்ப்பப்பையிலே புழுக்களுண்டா யிருக்குதென்று அறிந்துக் கொள்ளவும். அதின் பரிகாரம் சௌக்கார தண்ணியிலே பிஞ்சு கடுக்காய் அல்லது பெரிய கடுக்காயை நன்றுயரைத்து. ஹைஷலவிட்டும் துப்புரவானபின் பெண்மை தலத்திலே கெர்ப்பப்பையிலே படிம்படி பூசிக்கொண்டு புருஷ போகம் செய்வார்களாகில் (இன்ஷா அல்லா) ஆண்டவன் விரும்புவானாகில் கெர்ப்பந்தரித்துப்பிள்ளை யுண்டாகும்.

6 வது புணர்ச்சிக்குப் பின் கெர்ப்பப்பை வலிக்குமானால் கெர்ப்பப்பையில் உஷ்ணமுண்டாயிருக்கு தென்று அறிந்துகொள்ளவும். அதற்குப் பரிகாரம் சிட்டுக்குருவியின் பித்தைத் தேனிலே இழைத்து ஹைஷல விட்டும் துப்புரவான பின் பெண்மைத் தலத்திலே கெர்ப்பப்பையிலே படிம்படியாகப் பூசிக்கொண்டு புருஷபோகம் செய்வதால் ஆண்டவன் விரும்புவானாகில் கெர்ப்பந் தரித்துப் பிள்ளை உண்டாகும்.

மேலே சொல்லிய பரிகாரங்கள் 3-நாள்வரை தொடாய் செய்ய வேண்டும். அதின் பிறகும் வலியுண்டா யிருக்குமானால் வலிநின்று போகிறவரை தொடாய் அதுவே மருந்து செய்யவேண்டும். வலி நின்றமாத்திரத்தில் கெர்ப்பம் தரித்ததென் றறிந்து கொள்ள வேண்டியது.

7 வது மேலே விவரித்த தலங்களல்லாமல் வேறு இடங்களில் வலிக்குமானால் ஷைத்தான் தேவபரியுடைய காற்றுபட்டிருக்கிறதென் றறிந்துகொள்ளவேண்டும். அதற்குத் தகுந்த ஆமில்களைக்கொண்டும் தவீது களைக்கொண்டும் பார்த்து அந்த வலி தீர்ந்த மாத்திரத்தில் கெர்ப்பம் தரித்துப் பிள்ளை பெறுவாள். (இன்ஷா அல்லா)

## 100-ம் படலம்.

### இது பரிபாஷைகளைக் கூறுவது.

திரிகடுகு: சுக்கு, மிளகு, திப்பிலி.
திரிபலை: கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல்.
திரிகந்தம்: சந்தனம், அகில்கட்டை, தேவதாரு.
திரிசுகந்தம்: ஜாதிக்காய், ஜாபத்திரி, லவங்கம்.
திரிமதுரம்: பால், நெய், தேன்.
திரிமஞ்சள்: மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள்.
திரிமூலம்: திப்பிலிமூலம், சித்திரமூலம், கண்டுமூலம்.
திரிபத்திரி: லவங்கபத்திரி, ஜாபத்திரி, தாளிசபத்திரி.
திரிவேம்பு: [illegible]வேம்பு, கறிவேம்பு.
திரிசாதம்: [illegible], லவங்கப்பட்டை, நாககேசரம்,
சதுர்சாதம்: [illegible] லவங்கப்பட்டை, நாககேசரம், ஏலம்.
மஹாபஞ்சமூலம்: வில்வவேர், முன்னைவேர், [illegible], பாதிரி [illegible] குமிழ்வேர்ப்பட்டை.
லகுபஞ்சமூலம்: கண்டங்கத்திரி, [illegible], சிறுதாமரை, [illegible]தாமரை, நெருஞ்சி[illegible].
திருணபஞ்சமூலம்: [illegible] தர்ப்பை வேர், கரும்புவேர், [illegible]வேர், வெண்ணாணல் [illegible]வேர்.
பஞ்சகோலம்: சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம்.
பஞ்சவாசம்: [illegible]லம், கற்பூரம், ஜாதிக்காய், தக்கோலம்.
அஷ்டமூலம்:—முத்தக்காசு, விஷ்ணுகிரந்தி, பேய்ப்புடல்வேர், சீந்தில் கிழங்கு, கருசாகோரை, ஆடாதொடைவேர், கருந்துளசி, பாடகம்.
முக்கூட்டெண்ணெய்: நெய், எள்ளெண்ணெய், ஆமணக்கெண்ணெய்.
முக்காலம்: காலை, உச்சி, மாலை.
முப்பழம்: வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம்.
பஞ்சாமிர்தம்: பால், நெய், சர்க்கரை, தேன், வாழைப்பழம்.

முற்றும்.